31237
27337

உ

அருட்பெருஞ்ஜோதி

# திரு அருட்பா

## மூலமும்-உரையும்

## மகாதேவமாலை



உரையாசிரியர்

மகாவித்வான்-சித்தாந்த ரத்நாகரம், அரன்வாயல்

**வேங்கடசுப்புப்பிள்ளை அவர்கள்.**

சென்னைச் சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,

56. சாமிப்பிள்ளை தெரு, சூளை, சென்னை.

காப்பிரைட்] ஆங்கீரசஹு வைகாசிமீ 11உ [விலை அணா-8

**1932**

உ

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவ காருண்யமே கடவுள் வழிபாடு.



திருச்சிற்றம்பலம்

இராமலிங்கம்

திரு அருட்பிரகாசவள்ளலார் கையெழுத்து.

சென்னை } பிரஜோற்பத்தி தை பூசம் { 36, சாமிப்பிள்ளை தெரு,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவருட்பா

## மஹாதேவமாலை விருத்தியுரை.

உரையாசிரியர் குருதுதி வெண்பா.

பொய்ப்பொருளை நீக்கிப் புறச்சமயத் தோர்காணு
மெய்ப்பொருளை நன்கு விளக்கியொளிர் - கைப்பொருளா
நின்றருளி ராமலிங்க நின்மலனுந் தேசிகன்றன்
பொன்று வருளெம் புகல்.

காப்பு.

திருச்சிற்றம்பலம்.

அறுசீர்க்கழிநெடிலடி லாசிரியவிருத்தம்.

கருணைநிறைந்தகம்புறமுந் துளும்பிவழிந்துயிர்க்கெல்லாங்களைகணுகித்
தெருணிறைந்தவின்பநிலை வளர்க்கின்றகண்ணுடையோய்சிதையாஞானப்
பொருணிறைந்தமறையமுதம்பொழிகின்றமலர்வாயோய்பொய்யனேன்றன்
மருணிறைந்தமனக்கருங்கற்பாறையுமுட்கசிந்துருக்கும்வடிவத்தோயே.

(பதவுரை.) கருணை நிறைந்து-காருண்யம் அல்லது தயவு நிரம்பி, அகம் புறம் உம் - உள்ளும் புறம்பும், துளும்பி - ததும்பி, வழிந்து - பெருகிப்பாய்ந்து, உயிர்க்கு எல்லாம்-சர அசர உயிர்கள் அனைத்தினுக்கும், களைகண் ஆகி-ஆதாரமாகி, தெருள் நிறைந்த - தெளிவு நிரம்பிய, இன்பம் நிலை - நித்தியமான சுகநிலையத்தை, வளர்க்கின்ற - பாதுகாக்கின்ற, கண் உடையோய் - அருளாகிய கண்ணை யுடையவனே! சிதையா - அழியாத, ஞானப் பொருள் - ஞானார்த்தம், நிறைந்த-நிரம்பிய, மறை அமுதம் - வேதாகமங்களாகிய அமிர்தத்தை அல்லது தேனை, பொழிகின்ற - பெய்கின்ற, மலர்வாயோய் - செந்தாமரை மலர்போன்ற திருவாயினை யுடையவனே! பொய்யனேன்தன்-பொய்யனாகிய எனது, மருள்-அஞ்ஞானம், நிறைந்த-நிரம்பிய, மனம் - நெஞ்சமாகிய, கரும்கல் பாறையும் - உரத்த கல்லறையும். உள்கசிந்து-உள்ளேநெகிழ்ந்து உருக, உருக்கும் - உருகச்செய்யும், வடிவத்தோயே - அருட்டிருமேனியுடையவனே! எ - று.

(விசேஷவுரை.) கருணைநிறைந்து, துளும்பி, வழிந்து, ஆகி, விளக்குகின்ற கண்ணும்; சிதையாத, நிரம்பிய, பொழிகின்ற மலர்வாயும்; கசிந்து, உருக்கும் வடிவமும் உடையவனே! (நீ அடியேற்கு அருள்) எனக்கூட்டிமுடிக்க.

இத்திருவிருத்தத்தால், தன்னை அடைந்தவர்களாலும் அடையாதவர்களாலும் அறிதற்கரிய பரிபூரணானந்த சிவம் தன்பேருளாற்றிருமேனிகொண்டு பரமாசாரியராக எழுந்தருளிவந்த முறைமையும், சட்சுதீக்கையானும் வாசக தீக்கையானும் சஞ்சிதமாதி கன்ம மலநாசம் பண்ணி, மாயைத்திரையை யறுத்து, மூலமலமாகிய ஆணவ இருளினின்று விடுவித்துத் திருவடித்தீக்கையால் அருளாகநின்று இரண்டறத் தன்னொடு கலந்து பேரின்பப்பெருவாழ்வடைய அனுக்கிரகித்த முறைமையும்

உணர்த்துகின்றார். கேவலாவத்தையினின்று நீங்கி அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசங்களாகிற யோனிகளிற் றோன்றிச் சகலாவத்தையை யடைந்து வாழ்கின்ற அளவிறந்த சீவகோடிகளுக்குப் பகற்பொழுதைச் செய்யும் செங்கதிராகியும், இராப்பொழுதைச் செய்யும் வெண்கதிராகியும், அவற்றின் ஊனக்கண்கள் விளங்க விளக்கியும், அவற்றைத் தொழிற்படுத்தியும், அவற்றின் இச்சா ஞானக்கிரியாசத்திகள் தோன்றத் தோற்றியும், இன்பத்துன்பப் போகங்கள் நுகர நுகர்வித்தும் வருதலின் சலிப்புறுதும், தடைபடாதும், இடைவிடாதும், மேலுமேலும் பெருகும் இயல்புடையதாய், இமைப்போதாயினும் உபகாரமன்றி அபகாரஞ்செய்யாத பேரருள் காட்டி, யெப்பிறப்பினும் பிரிவின்றி அவற்றுடன்பொருந்தி ஆதாரவாய் நிற்பதனால் "உயிர்க்கெல்லாம் களைகணாகி" யெனவும்; அவ்வுயிர்களின் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என்னும் பக்குவங்களையுணர்ந்து, அருளவத்தையாகின்ற சுத்தாவத்தையில் அடைவித்து, அவற்றின் பக்குவங்களுக்கியைய ஞானநோக்கம் புரிந்து, ஞானப்பிரகாசத்தைச் செய்து, அதனுள் விளங்குவதாகிய சிவப்பிரகாசத்தைத் தற்போதமற்றிருந்துணர வுணர்த்தாதுணர்த்தி, அவைகளைத் தன்னிகரில்லாத சிவானந்த அனுபவத்தில் இருத்தி வாழ்விப்பதனால், "தேருணிறைந்த முன்பநிலை வளர்க்கின்ற" எனவும்; இங்ஙனம் உயிர்கட்குப் பாசபந்த நிலையிலும், பந்த நீக்கமாகிய மோக்கநிலையிலும், உபகரிப்பனவாகிய சோம சூரிய நேத்திரங்களின் பெருமையும், அழற்கண்ணாகிய ஞான நேத்திரத்தின் பெருமையும், அத்தகைய முச்சுடர்க்கண்களை இறைவன் உடைமையுந் தோன்றக் "கண்ணுடையோய்" எனவுங் கூறினர். கூறவே, இறைவன் தானே பரமாசாரியராக வெழுந்தருளிப்புரிந்த சட்சுதீக்கையை விளக்கினாராயிற்று.

அழிவினையுடைய அஞ்ஞானப் பொருளின் வேறாகி, என்றும் அழிவில்லாத சத்தியஞானப்பொருளாதென்பார், "சிதையாஞானப்பொருணிறைந்த" எனவும்; அது பரமரகசியம், அது வேதம் வேதாந்தம், அது ஆகமம் ஆகமாந்தம், அது அபக்குவர்க்கு உபதேசிக்க மறுக்கப்படுவதென்பார் "மறை" எனவும்; அது நரைதிரை மூப்பு மரணங்களை நீக்கி, உண்பவரை நித்திய சரீரிகளாக்க வல்ல இனிய பொருளென்பார் "அமுதம்" எனவும்; வண்டுகளுண்டபொழுதே குறைவடைந்து தேனைப் பொழிதலில்லாத பல வுலகத்தாமரைமலர்போல்வதன்றாய்ப் பக்குவமுற்றிய சீவன் முத்தர்கள் உண்டு தேக்கெறிய எக்காலும் இடைவிடாது அமுதம் பொழியும் தெய்வீகமுடைய தாமரையென்பார் "பொழிகின்ற மலர்வாய" எனவுங் கூறினர். இங்ஙனங் கூறவே, இறையவன் பரமாசிரியராக வெழுந்தருளி வாசக தீக்கை புரிந்த முறைமையை விளக்கியவாறாயிற்று.

அநித்தியவத்துவையே நித்தியவத்துவாக வுணர்கின்ற பொய்யுணர்வும், பொய்யொழுக்கமும், பொய்யுலக வாழ்க்கையின் வாஞ்சையும் உடைய பெத்தநிலையினேன் என்பார் "பொய்யனேன்" எனவும்; அருட்பிரகாசமின்றி மருட்பிரகாசம் பெற்றநெஞ்சென்பார் "மருணிறைந்தமனம் எனவும்; அது தீயில் உருகும் பொன் போல்வதன்று; வெண்ணெய், மெழுகுபோல்வதன்று; உருக்கினும் உருகாத்தன்மையுடைய வயிரக்கல்லறையென்பார் "கருங்கற்பாறை" எனவும்; அத்தன்மையுடைய மனக்கருங்கற்பாறையும் தீயிற்பொன்போலும் வெண்ணெயு மெழுகும் போலும் கசிந்து உருகும்படி உருக்கவல்ல வல்லபமுடைய அருள்வடிவினையுடையோய் என்பார் "உட்கசிந்துருக்கும் வடிவந்தோய்" எனவுங் கூறினர் இங்ஙனங் கூறவே, பொய்யுணர்விற் சிறந்த மருள் வடிவினதாகிய திண்ணிய மனத்தையுருக்கி, அது அருளேக்க முடையதாகி, அருட்பிரகாசத்தின் மூழ்கி, அருண்மயமாகி

மருட்போதமற்று நிற்கும் வண்ணம் பரமாசாரியர் அத்த மத்தக சையோகமும் திருவடித் தீக்ஷையும் புரிந்து, தம்மை யாண்டருளிய முறைமையும் விளக்கிய வாறாயிற்று.

கருணைநிறைந்து உயிர்க்கெல்லாங் களைகண் ஆகி இன்பநிலை வளர்க்கின்ற கண்ணும், மறையமுதம் பொழிகின்ற மலர்வாயும், உருக்கும் வடிவமும் உடையோய் என்றதனால், மஹாதேவர் கொண்டருளிய திருமேனி மாயையினாக்கப்பட்டதோர் வடிவமன்றெனவும், திருவருளாற்றோன்றியதாமெனவும், அத்திருமேனியிற் கண்ணும் வாயும், ஏனைய கர.சரணங்களுமாகிய பிரத்தியங்கங்களும் அருளெனவும்; உயிர்க்கு ஆதாரமாகி நிற்றலும், இன்பநிலையை வளர்த்தலும், அமுதம் பொழிதலும், உள்ளத்தை யுருக்குதலும் ஆகிய தொழில்களும் அருட்டொழில்களெனவும்; இத்தகைய அருட்டிருமேனியான் முதல்வர்க்கு விளையும் பயன் யாதொன்றுமின்று எனவும்; உயிர்களைச்சனன சாகரத்தினின்று கடத்தி, முத்திக்கரையேற்றி வாழ்விக்கும் உபகார நிமித்தமாகக் கொள்ளப்பட்டதெனவும் விளக்கியவாறு காண்க.

கருணையாலே திருவுருக்கொண்டு ஆண்டமைக்குப் பிரமாணம்: தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருத்தாண்டகம்:—

"அத்தாவுன் னடியேனை யன்பாலார்த்தா யருணோக்கிற் றீர்த்தநீ ராட்டிக் கொண்டாய், எத்தனையு மரியநீ யெளியையானா யெனையாண்டு கொண்டிரங்கி யேன்றுகொண்டாய்,பித்தனேன் பேதையேன் பேயேனாயேன் பிழைத்தன வெத்தனையும் பொறுத்தாயன்றே, யித்தனையு மெம்பரமோ வையவையோ வெம்பெருமான் றிருக்கருணையிருந்த வாறே." அன்றியும்,

திருவுந்தியாரில்.—"அகளமா யாருமறி வரிதப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற" எனவும்,
"ஏகனு மாகி யனேகனு மானவன்
நாதனு மானானென் றுந்தீபற
நம்மையே யாண்டானென் றுந்தீபற" எனவும்

கூறப்பட்டமை காண்க.

"மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோ யென்பதற்குப் பிரமாணம்,

திருமந்திரத்தில்: —"வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே." எனவும்

சிவஞான சித்தியாரில்:— "ஆரண மாகமங்க ளருளினா லுருவுகொண்டு
காரண னருளானாகிற் கதிப்பவ ரில்லையாகு
நாரணன் முதலாவுள்ள நரர்சுரர் நாகர்க்கெல்லாஞ்
சீரணி குருசந்தானச் செய்தியுஞ் சென்றிடாவே" எனவும்

கூறப்பட்டமை காண்க.

மஹாதேவர் கொண்டருளுந் திருமேனியும், அதன் பிரத்தியங்கங்களும் தொழில்களும் அருளேயென்பதற்கும், அருட்டிருமேனிகொண்டருள்வது நம்மைச் சனன சாகரத்தினின்று கடத்தி, வாழ்விக்க வென்பதற்கும் பிரமாணம்,

"உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற்றோன்றுங்
கருமமு மருளரன்றன் கரசர ணாதிசாங்கம்

தருமரு ளுபாங்கமெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னசித்த னன்றே." எனவும்,

" உருமேனி தரித்துக்கொண்ட 'தென்றலு முருவிறந்த
வருமேனி யதுவுங்கண்டோ மருவுரு வானபோது
திருமேனி யுபயம்பெற்றோஞ் செப்பிய மூன்றுநந்தங்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே.' எனவும்.

சிவஞானசித்தியாரிற் கூறப்பட்டமை காண்க.

அன்றியும் "உயிர்க்கெல்லாங்களைகணாகி" என்றதனால் முதல்வன் அருளே ஆதாரமும், உயிர்கள் ஆதேயமுமாகி நிற்பதும்; "அகமும் புறமும் கருணைநிறைந்து" என்றதனால் அவ்வுயிர்களின் அகமாகிய ஆன்மாவிலும், அகப்புறமாகிய சீவனிலும், புறமாகிய மனத்திலும், புறப்புறமாகிய இந்திரியங்களிலும், அவன் அருட்பிரகாசம் நிறைந்து விளங்குவதும்; அவ்வுயிர்களின் கருமத்தளவாகத் தனுகரணங்களைப் படைக்கும் பிரமன், அளிக்குந்திருமால், அழிக்குஞ் சங்கரன், திரோபவிக்கு மகேசன், அனுக்கிரகிக்குஞ் சதாசிவனாகிய பஞ்சகர்த்தர்களினகத்தும் புறத்துங்கூடி வாணியாகியும், திருமகளாகியும், சங்கரியாகியும், மகேசையாகியும், மனோன்மணியாகியும் சிவசத்தியானது நீங்காமற்பொருந்திப் பஞ்சகிருத்தியங்களைச் செய்வதும்; "தளும்பி வழிந்து ஆகி வளர்க்கின்ற" என்றதனால் சீவர்களிடத்தும் தேவர்களிடத்தும் முதல்வன் கருணை அனாதிகாலந் தொட்டு இன்று வரையும் நிலைபெற்றோங்குவதும்; "கண்ணுடையோ" யென்றதனால் சீவர்கள் தேவர்கள் உள்ளத்தில் நிகழ்கின்ற நினைவுகளையுந்தொழில்களையும் முதல்வன் அருட்கண்ணாற்கண்டுணர்கின்ற சர்வசீவசாட்சியாதலும்; அன்னோர்க்கு முறை பிறழாது பஞ்ச கிருத்தியங்களைச் செய்து போதரு நெறியினை நோக்கியிருத்தலும் குறிப்பாக விளங்குதல் காண்க.

முதல்வன் திருவருளே யுயிர்க்கெல்லாம் ஆதாரம் என்பதற்குப் பிரமாணம்:—

திருமந்திரம்:—"தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே." என்பதாம்.

முதல்வன் உயிர்கடோறும் அகம்புகுந்து நிற்பதற்குப் பிரமாணம்.

திருமந்திரம்:—"பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா வருடந்த மாதவ நந்தி
யறவாழி யந்தண னாதிப் பராபர
னுறவாகி வந்தென் னுளம்புகுந் தானே" எனவும்,

ஷை "அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே
அகம்புகுந் துந்தெரி யானரு ளில்லோர்க்
ககம்புகுந் தானந்த மாக்கிச் சிவமா
யகம்புகுந் தானந்தி யானந்தி யாமே" எனவும்,

"அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளி லழிந்திளைப் பாறி மறைந்திட்
டருளான வானந்தத் தாரமு தூட்டி
யருளா லென்னந்தி யகம்புகுந் தானே." எனவும்,

கூறியவாற்றானுணர்க.

முதல்வன் அருளே ஐந்தொழிலுஞ் செய்து சர்வ ஜீவசாட்சியாய் விளங்குவ தென்பதற்குப் பிரமாணம்:—

திருமந்திரம்:—"தானே படைத்திடுந் தானே யளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனுமாமே." எனவும்,

"அருளெங்கு மான வளவை யறியார்
அருளை நுகரா ரமுதான துந் தேரார்
அருளின் கருமத் ததிசூக்க முன்னூர்
அருளெங்குங் கண்ணான தாரறி வாரே" எனவும்.,

கூறிய வாற்று னுணர்க.

மேல்விளக்கப்பட்டவைகட்கெல்லாம் வேதசிரசாகிய சுவேதாசுவதர வுபநிடதம் ஆறுவது அத்தியாயத்தில், கக-வது மந்திரம்:—

"𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌃, 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚𑍇𑌤𑌾𑌃 𑌕𑍇𑌵𑌲𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚." "ஏகோதேவ: சர்வபூதேஷு கூட: சர்வ வ்யாபீ சர்வ பூதாந் தராத்மா, கர்மாத்யக்ஷ: சர்வபூதாதிவாச: சாக்ஷி சேதா: கேவலோ நிர்க்குணஸ்ச்ச" என்னும் உபநிடதப்பிரமாணம் காண்க.

அன்றியும் இத்திருவிருத்தத்தில், "உயிர்க்கெல்லாங் களைகணாகி" என்றதனால் முதல்வன் தன்வயத்தனாதலும், 'வடிவத்தோய்' என்றதனால் தூய வுடம்பினனாதலும், 'சிதையாஞானப் பொருணிறைந்த' என்றதனால் இயல்பாகப் பாசங்களி னீங்கின னாதலும், 'மறையமுதம்பொழிகின்ற மலர்வாயோய்' என்றதனால் இயற்கையுணர்வு முற்றுணர்வுகளை யுடையனாதலும், 'கருணைநிறைந்து துளும்பி வழிந்து, என்றதனால் பேரருளுடையனாதலும், 'பொய்யனேன்றன் மருணிறைந்த மனக்கருங்கற்பாறையு முட்கசிந்துருக்கும்' என்றதனான் முடிவிலாற்றலுடையனாதலும், 'இன்பநிலைவளர்க்கின்ற கண்ணுடையோய்' என்றதனால் வரம்பி லின்பமுடையனாதலும் விளங்குவன காண்க.

அன்றியும் இத்திருவிருத்தத்தில், 'சிதையாஞானப் பொருள்' என்றதனான் முதல்வன் சத்தாகி நிற்றலும், 'கருணை துளும்பி வழிந்து மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்' என்றதனால் அருட்சித்தாய் விளங்குதலும், 'தெருணிறைந்த இன்ப நிலை' யென்றதனால் ஆனந்த சொரூபமுடையனாதலும், 'வளர்க்கின்ற கண்ணுடையோய்' என்றதனால் அனாதி நித்தப்பொருளாதலும், 'நிறைந்து உருக்கும வடிவத்தோய்' என்றதனால் பூரணனாகிப் பொலிதலும் விளங்குவன காண்க.

அன்றியும் இத்திருவிருத்தத்தில், கருணைநிறைந்து என்பது தொடங்கி மலர் வாயோய் என்பதுகாறும் இறைவனது தடத்த விலக்கணமும், உருக்கும் வடிவத்தோய் என்றதனாற் சொரூப விலக்கணமும் உணர்த்தப்பட்டமை காண்க.

அன்றியும், இத்திருவிருத்தம் 'சிதையாஞானப்பொருள்' என்பதில் சிகாரப் பொருளாகிய சிவத்தையும், 'கருணைநிறைந்து......வளர்க்கின்ற கண்மலர்வாய்...... வடிவத்தோய்' என்பதில் வகாரப்பொருளாகிய அருட்சத்தியையும், 'உயிர்க்கெல் லாம்' என்பதில் யகாரப்பொருளாகிய ஆன்ம வர்க்கத்தையும், 'களைகணாகி' யென்பதில் ஆன்மாக்கட் கின்பத்துன்பங்களை அருத்தி மலபரிபாகம் பிறக்குமளவும் உட

ணிற்கும் நகாரப்பொருளாகிய திரோதான சத்தியையும், 'பொய்யனேன்றன் மருணிறைந்தமனக்கருங்கற்பாறை' யென்பதில் மகாரப்பொருளாகிய பாசத்தையும் விளக்கி விளங்குதல் காண்க.

அன்றியும் இத்திருவிருத்தத்தில் "உயிர்க்கெலாங்களைகண்" என்னுந் தொடர்மொழி, ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டியுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாகிய இருவகைப்பிரபஞ்சத்தொகுதி உற்பத்தி, திதி, நாசம் என்னு முத்தொழிலும் உடையதெனவும், அது நித்தமாயுள்ள உள்பொருளெனவும், அது தோன்றி இருந்து, பின் ஒடுங்கச்செய்வோனொரு கருத்தா வுளனெனவும், அவன் உற்பத்தி திதிகளைச்செய்யுங் கருத்தர்களையும் தன்னுளொடுக்குஞ் சங்கார காரணனெனவும், அவனே பிரபஞ்ச முதற்பொருள் எனவும் உணர்த்தும்,

> "அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
> றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
> அந்த மாதி யென்மனார் புலவர்" என்னும்

சிவஞானபோதத்தின் முதற்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"ஆகி" என்னும் ஒருமொழி, சங்கார காரணனாகிய முதல்வன் உயிர்களுடன் கூடி நிற்குங் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாகியும், பொருட்டன்மையாற் கண்ணும் சூரியனும்போல் அவற்றின் வேறாகியும், உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண்ணொளியும் ஆன்ம போதமும்போல உடனாகியும், தன்பால் முன்னொடுங்கிய உயிர்கள் மீளப்பிறத்தல் இறத்தல்களைச் செய்தற்கேதுவாக முற்செய்த புண்ணிய பாவகருமங்கள் அவற்றின்கட்சென்றடைய அடைவிக்குந் தனது சிற்சத்தியாகியும், அச்சத்தியினின்றும் பிரிவில்லாச் சமவேதமாகியு நிற்குமுண்மையுணர்த்தும்,

> "அவையே தானே யாயிரு வினையிற்
> போக்கு வரவு புரிய வாணையி
> னீக்கமின்றி நிற்கு மன்றே" என்னும்

சிவஞானபோதத்தின் இரண்டாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"பொய்யனேன்" என்பது ஆன்மா சூனியமே, தூலதேகமே, இந்திரியமே, சூக்கும தேகமே, பிராணனே, விஞ்ஞானமே, மாயாகாரிய சமுதாயமே யெனச்சாதிக்குஞ் சூனியான்மவாதி முதலியோரை மறுத்து, உடலின் வேறாக அது வுளதென்றுணர்த்தும்,

> "உளதில தென்றலி னெனது டலென்றலின்
> ஐம்புல னொடுக்க மறிதலிற் கண்படில்
> உண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
> மாயா வியந்திர தனுவினு ளான்மா" என்னும்

சிவஞானபோதத்தின் மூன்றாஞ்சூத்திரப் பொருளை விளக்குவதாம்.

"பொய்யனேன்றன் மருணிறைந்த மனக்கருங்கற்பாறை" என்னுந் தொடர்மொழி, ஆன்மா மனம் புத்தி யகங்காரஞ் சித்தமாகிய அந்தக்கரணங்களுடன் கூடி அரசனும் மந்திரிகளும்போல நிற்குமாறும், அந்தக்கரணங்களுள் ஒன்றாகாமல் அவற்றின் வேறு விளங்குஞ் சித்தாகுமாறும், சித்தாயினும் செம்பிற் களிம்புபோல, ஆணவமலந் தன்னோடு சகசமாகக்கூடி, ஞானத்தை மறைத்து நிற்றலின், தானே ஒன்றை யுணராது, கருவிகளுடன் கூடிநின்று உணருமாறும், அந்நெறியிற் சாக்கி

ரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னப்பட்ட ஐந்தவத்தை யுட்படு மாறும் உணர்த்தும்,

"அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே." என்னும்

சிவஞானபோதத்தின் நான்காஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"கருணைநிறைந் தகம் புறமுந் துளும்பி வழிந்து" என்னுந் தொடர்மொழி மேற் கூறப்பட்ட ஆன்மாவின் அகத்தும் புறத்தும் முதல்வன் சிற்சத்தியாகிய கருணை கலந்து நின்று உணர்த்தி யுபகரிக்கு முண்மையை யுணர்த்தும்,

"விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே." என்னும்

சிவஞானபோதத்தின் ஐந்தாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"சிதையாஞானப்பொருள்" என்னுந் தொடர்மொழி அறிவாற் சுட்டி யுணரப் பட்ட பிரபஞ்சம் நீரில் எழுத்தும், கனவிற்கண்ட காட்சியும், கானற்சலமு மாதல் போல அசத்தாகாமல், முதல்வன் பாசஞானத்தானும் பசுஞானத்தானும் உணரப் படாத சத்துப்பொருளாய் ஆன்மாவோடு கூடிநிற்கு முண்மையை யுணர்த்தும்,

"உணருரு வசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையி னிசைக்குமன் னுலகே." என்னும்

சிவஞானபோதத்தின் ஆறாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"தெருள்" என்னும் ஒருமொழியானது மேற்சொல்லப்பட்ட ஆன்மா அசத் தான்விளங்கி அசத்தினை யுணருமிடத்து அசத்தின்பாலும், சத்தான்விளங்கிச் சத்தி னை உணருமிடத்துச் சத்தின்பாலும், அது அதுவாயழுந்தும் இயல்பினையுடைய சதசத்தாதலை யுணர்த்தும்,

"யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியாது
இருதிற னறிவுள திரண்டலா வான்மா." என்னும்

சிவஞானபோதத்தின் ஏழாஞ்சூத்திரப் பொருளை விளக்குவதாம்.

"மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்" என்னுந் தொடர்மொழி ஆன்மா தான் முன்னே செய்துகொள்ளப்பட்டபுண்ணியமிகுதியாற்றனக்குஅந்தரியாமியா யிதுகாறும் உள்ளே மறைந்து நின்றுணர்த்திவந்த பரம்பொருளாகிய முதல்வனே இப்பொழுது குருவடிவமுங்கொண்டெழுந்தருளிவந்து,சிவதீக்கைசெய்து,ஞானோப தேசத்தினால் மன்னவ குமாரனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருட்பட்டு நின் பெருந் தகைமை யறியாது இடர்ப்பட்டாய். உன் பெருந்தகைமையானது இன்ன இயல்பினை யுடையதென்று அறிவுறுத்த, அறிந்த வளவிலே அவ்வேடரை விட்டு நீங்கி, அம்முதல்வனுடன் அநன்னியமாக நின்று, திருவடியை யணைவதாகிய உண் மையை யுணர்த்தும்,

"ஐம்புலவேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்

டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே." என்னும்
சிவஞானபோதத்தின் எட்டாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"கண்ணுடையோய்" என்னுந் தொடர்மொழி ஆன்மா ஞானக்கண்ணாகிய பசுபாச ஞானங்களாலுணரப்படாத முதல்வனை அவனது ஞானக்கண்ணாற் கண்டு தூய்மை யடையுமாறு உணர்த்தும்,

"ஞானக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண் ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே." என்னும்

சிவஞானபோதத்தின் ஒன்பதாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"வளர்க்கின்ற"என்னும் ஒருமொழியானது ஆன்மா தற்போதமிழந்து, முதல்வனோடொற்றுமைப்பட்டு, அம்முதல்வன் பணியின் வழுவாது நின்று, மலமாயை கன்மங்களை யொழித்துத் தூய்மையுறச் சிவஞான நெறியில் வைத்து வளர்க்கின்ற வாறு உணர்த்தும்,

"அவனே தானே யாகிய வந்நெறி
யேகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே." என்னும்

சிவஞானபோதத்தின் பத்தாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"இன்பநிலை" என்னுந் தொடர்மொழியானது, ஆன்மா பாசநீங்கியவழி சிட்டைகூடி, அருள்விளக்கமும் ஆனந்த விளக்கமும் அடைந்து, சுவானுபூதிமானாதலை யுணர்த்தும்,

"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டுகாட்டலின்
அயரா வன்பி னரன்கழல் செலுமே." என்னும்

சிவஞானபோதத்தின் பதினொன்றாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

"உட்கசிந்து உருக்கும் வடிவத்தோய்" என்னுந் தொடர்மொழி மனவாக்குக் கெட்டாத அசிந்திதனாய்நின்ற முதல்வனைச் சுவானுபூதியை யடைந்த சீவன்முத்தர்கள் குருலிங்கசங்கம வடிவங்களுடைய சிந்திதனாகக்கண்டு வழிபடுமாறுணர்த்தும்,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானு மரனெனத் தொழுமே." என்னும்

சிவஞானபோதத்தின் பன்னிரண்டாஞ்சூத்திரப்பொருளை விளக்குவதாம்.

அன்றியும், இத்திருவிருத்தம் கருணை, நிறைந்து, அகம், புறம், உம், துளும்பி, வழிந்து, உயிர்க்கு, எல்லாம், களைகண், ஆகி, தெருள், நிறைந்த, இன்பம், நிலை, வளர்க்கின்ற, கண், உடையோய், சிதையா, ஞானம், பொருள், நிறைந்த, மறை, அமுதம், பொழிகின்ற, மலர், வாயோய், பொய்யனேன், தன், மருள், நிறைந்த, மனம், கருங்கல், பாறை, உம், உள், கசிந்து, உருக்கும், வடிவத்தோய், ஏ எனநின்ற நாற்பது சொற்களையுடையதாய்ப் பிருதிவிமுதல் நாதமீறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களும், அவற்றின்மேலுள்ள ஆன்மாவும், ஆன்மாவிற்குப் பெத்த நிலையில்

தோன்றாது நின்று உபகரிக்குந் திருவருளும், முத்திநிலையில் தோன்றிநின்று அனுக்கிரகிக்கும் அருண்மூர்த்தமும், மூர்த்திமானாகிய சச்சிதானந்த சிவமும் தோன்றும் வண்ணம் ஆக்கப்பட்டதும்; ஆகமங்கள் இருபத்தெட்டும், வேதங்கள் நான்கும், சாத்திரங்கள் ஆறும், அவற்றாற் புகழ்ந்தேத்தப்படும் முதல்வராகிய சத்தியொடு கூடிய சிவமும், தன்னுள் விளங்கும் பொருள் எனவும் விளக்காநிற்பது காண்க.

அன்றியும், இத்திருவிருத்தம் ஆறுசீர் கொண்ட நான்கடிகளை யுடையதாயிருத்தலின், வேதாந்தம், சித்தாந்தம், கலாந்தம், யோகாந்தம், போதாந்தம், நாதாந்தம் என்னும் ஆறந்த நிலைகட்கும் பொதுவாய் ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் நாலாம் பாதத்து நான்கு வகைகளையும் பயப்பதாகிச் சிறந்து விளங்குதலும் காண்க.

அன்றியும், "கருணை நிறைந்து அகம்புறமுந் துளும்பி வழிந்து உயிர்க்கெல்லாங் களைகண் ஆகி" என்னும்முதலடி, இரண்டாமடியில் "வளர்க்கின்றகண்ணுடையோய்" மூன்றாமடியிற் "பொழிகின்ற மலர்வாயோய்," நான்காமடியில் "உருக்கும் வடிவத்தோய்" என்னு மூன்றுபெயரெச்சத்தொடர்மொழிகளையுந் தழுவி விளக்குகின்ற முதனிலைத் தீவகமாகி விளங்குதல் காண்க. கண்ணுடையோய், வாயோய், வடிவத்தோய் என்பன விளியுருபேற்ற பெயர்கள். இம்மூன்று பெயர்களும் குறிப்பு வினையாலணையும் பெயர்களாய்க் குணமாகிய அருளும், குணியாகிய சிவமும், உடலும் உயிரும்போலக் கூடிநின்று, உயிர்க்கு உபகரிக்கு முறைமையைக் குறிப்பாக உணர்த்துகின்றன. இத்திருவிருத்தம் சுருங்கச்சொல்லலும், விளங்க வைத்தலும், நவின்றோர்க்கு இன்பந்தருதலும், நன்மொழி யுணர்த்தலும், சந்தவின்ப முடைத்தாதலும், ஆழம் உடையதாதலும், காரணகாரியமுறைப்படி வைத்தலும், உலகவழக்கொடு மாறுபடாதிருத்தலும், சிறப்பாகிய பொருளைத்தருதலும், உதாரணத்தையுடையதாதலும் ஆகிய பத்து அழகினையும் உடையதாய், *குன்றக் கூறன்முதலிய பத்துக் குற்றங்களையு மிகந்து விளங்கி, ஆசிரியர் "திருவருட்பிரகாச வள்ளலார்" திருவாய் மலர்ந்தருளிய மகாதேவமாலைக்குக் காப்பாகி, அருளிறை வணக்கமாய், அருண் மணங்கமழும் †அருட்பாவெனப் பொலிந்தோங்குமாறு காண்க. இன்னும்விரிப்பிற் பெருகும்.

திருச்சிற்றம்பலம்.

மஹாதேவமாலைக் காப்புத் திருவிருத்தத்துக் விருத்தியுரை முற்றுப்பெற்றது.

---

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

1. உலகநிலைமுழுதாகி யாங்காங்குள்ள வுயிராகியுயிர்க்குயிரா மொளிதானாகிக்
கலகநிலையறியாத காட்சியாகிக் கதியாகிமெய்ஞ்ஞானக் கண்ணதாகி
யிலகுசிதாகாசமதாய்ப் பரமாகாச வியல்பாகியிணையொன்று மில்லாதாகி
யலகிலறிவானந்த மாகிச்சச்சி தானந்தமயமாகி யமர்ந்ததேவே.

(பதவுரை) உலகம் - புவனங்கள், நிலை-நிலைத்திருக்கு நிலைகளாகிய தத்துவங்கள், முழுது ஆகி-அனைத்தும் ஆகியும், ஆங்கு ஆங்கு - அந்த அந்தப்புவனங்களில்,

---

* பத்துக்குற்றங்கள்:—குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியதுகூறல், மாறுகொளக் கூறல், வழூஉச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்றுபயனின்மை. (பவணந்தி முனிவர்.)

† இதனை' ஐயாண்டுச்சென்று அரைப்பாச் சொலினும், தெய்வஞ்சேராப்புலமையின்றே" என்பர் ஆசிரியனார் அகத்தியனாரும்.

உள்ளஉயிர் ஆகி-இருக்கின்ற ஆன்மாக்களாகியும், உயிர்க்கு-அந்த ஆன்மாக்களுக்கு, உயிர் ஆம் ஒளிதான் ஆகி - பரமான்மாவாகின்ற சோதியாகியும், கலகம்-அமைதி யின்மையின், நிலை அறியாத-நிலைதோன்றாத (அஃதாவது அமைதி நிரம்பிய), காட்சி ஆகி - ஞானமாகியும், கதி ஆகி - ஞேயமென்னும் முத்தியாகியும், மெய் - நித்த மாகிய, ஞானம் கண் அது ஆகி - ஞானநேத்திரம் ஆகியும், இலகு - விளங்குகின்ற, சித் ஆகாசம் அதுஆய் - ஞானவெளியாகியும், பரம ஆகாச இயல்பு ஆகி - மேலாகிய பரவெளியின் இயற்கையாகியும், இணை ஒன்றும் - நிகராகிய வொருபொருளும்; இல்லாது ஆகி-உடைத்தாயிராததாகியும், அலகு இல்-அளவில்லாத, அறிவு ஆனந் தம் ஆகி - ஞானானந்தம் ஆகியும் (அஃதாவது அனந்த ஞானானந்த சொரூபியாகி என்றபடி), சத் சித் ஆனந்தமயம் ஆகி - நித்தியமாயுள்ள பொருளென்னும் சத்தின் மயமும், முற்றுமுணர்ந்ததென்னும் சித்தின்மயமும், வரம்பிலின்பமுடைமை யென் னும் ஆனந்தமயமுமாகியும், அமர்ந்த-பொருந்திய, தேவே-மஹாதேவனே. எ-று.

(விசேஷவுரை) நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந் தியாதீத கலையாகிய பஞ்ச கலைகளிலுள்ளும் நிறுத்தப்பட்ட பிருதிவி முதல் நாதம் ஈறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களாகிய நிலைகளில் உள்ள இருநூற்றிருபத்து நான்கு புவனங்களுமென்பார் "உலகநிலைமுழுதாகி" யென்றும்; ஆன்மாக்கள் தமது புண்ணிய பாப கருமங்களுக்கீடாக இன்பத்துன்பப் போகங்களை யனுபவித்தற் கேற்ற தனுகரணங்களுடன்கீழ்நிலைப் புவனங்களினும் மேனிலைப் புவனங்களிலும் தோன்றியுள்ளன வென்பார் "ஆங்காங்குள்ளவுயிராகி" யென்றும்; ஆன்மாவே சிற்சபையாகவீற்றிருந்து, அவைகட்கு உணர்வு விளங்கவுணர்த்தியும், இச்சை செயல் கள் நிகழச்சங்கற்பித்தும், அசைத்தும், உபகரிக்கும் பரஞ்சோதியென்பார் "உயிருக் குயிராம் ஒளி" யென்றும்; ஆன்மாக்களின் அறிவு இச்சை செயல்களைச் சிறிதுந் தடையின்றிக் காணும் ஞாதுருவென்பார் "தானாகி" யென்றும்; மாயை மலகன்மங் களாற் கலக்கமுறாத ஞானமென்பார் "கலகநிலையறியாத காட்சியாகி" யென்றும்; பக்குவான்மாக்கட்கு இன்பநிலையாகிய ஞேயம் என்பார் "கதியாகி" யென்றும்; தம் மையுந் தலைவனையும் உணரும்பொருட்டு ஞானாசிரியரால் அருளப்படும் அருட் கண்ணுடையதென்பார் "மெய்ஞ்ஞானக்கண்ணதாகி" என்றும்; பளிங்கையொத்த களங்கமற்ற ஆன்மாவும் பரமும் விளங்கும் வெளிகளென்பார் "சிதாகசமதாய்ப் பரமாகாசமதா" யென்றும்; எல்லா வான்மாக்களின் உணர்வும் இன்பமும் தன் னுடையவாகக்கொண்டுள்ளதென்பார் "அலகில் அறிவானந்தமாகி" என்றும்; உள் பொருளாகி யழிவற நிற்றலிற் "சத்"தென்றும்; யாண்டும் ஞானவிளக்க முடைமை யிற் "சித்"தென்றும்; துன்பமறியாததாய்த் தன்னையடைந்தார் மாட்டுத்துன்பந் தொடைத்துப் பேரின்பந்தருதலின் "ஆனந்த"மென்றும்; எங்கணும் நீக்கமற நிறை ந்துள்ளதாகலின் "அமர்ந்ததேவே" யென்றுங் கூறினர். இயல்பாகியென்றது நிருவிகாரியாக நிற்கும் சுபாவநிலையை. "இணையொன்றுமில்லாதாகி" யென்றது தன்னோடொப்பாரும் தன்னின் மிக்காரும் இன்மையை நோக்கியென்க.

"இல்லாது" தொகுத்தல் விகாரம்; எதிர்மறைக்குறிப்பு வினையாலணையும் பெயர். இத்திருவிருத்தம் மாதேவனது தூல சூக்கும காரண சரீரங்களை யுணர்த்து முகத்தாற் போந்த தடத்த லக்கணமும், மஹாகாரண சொரூபமுணர்த்து முகத் தாற்போந்த சொரூப லக்கணமும் விளக்கியதென்க.

இதனானே இறைவன் கண்டனும் அகண்டனும், ஏகனும், அநேகனும், சிந்தி தனும் அசிந்திதனுமாயினமை பெற்றாம். இதற்குப்பிரமாணம்:--

சிவஞானசித்தியார்:—"உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரார்
உலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரார்
உலகினுக் குயிருமாகி யுலகுமாய் நின்றதோரார்
உலகினி லொருவ னென்ப ருருவினை யுணராரெல்லாம்."

மேற்கோள்; ஈசாவாஸ்யோபநிடதம், "ईशावास्यमिदं सर्वं यत्किंच जगत्यां जगत् । तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥" ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்சித் ஜகத்யாம் ஜகத்; தேநத் யக்தேந புஞ்ஜீதா மாக்ருதஃ கஸ்யஸ்வித்தனம்" என்பதாம். உலகநிலை முழுதாகி யென்றதனாற் புவனத்துவாவும் தத்துவாத்துவாவும் பெறப்பட்டன. (க)

---

**2.** உலகமெலாந் தனிநிறைந்த வுண்மையாகி யோகியர்தம் மனுபவத்தி னுவப்பா யென்றுங், கலகமுறு வுபசாந்த நிலையதாகிக் களங்கமற்ற வருண்ஞானக் காட்சி யாகி, விலகலுறு நிபிடவானந்தமாகி மீதானத் தொளிர்கின்ற விளக்கமாகி, யிலகு பரா பரமாய்ச்சிற் பரமாயன்ப ரிதயமலர் மீதிருந்த வின்பத்தேவே.

(பதவுரை) உலகம் எல்லாம்-எல்லாவுலகங்களிலும், தனி-ஏகமாய், நிறைந்த-வியாபித்த, உண்மை ஆகி-என்றும் உள்ள பொருளாகியும், யோகியர்-சிவயோகிகள், தம்-தமது, அனுபவத்தின்-சுவானுபூதியிலுதிக்கின்ற, உவப்பு ஆய்-மகிழ்ச்சியாகியும், என்றும்-எக்காலத்தும், கலகம்-குழப்பம் அல்லது மலைவு, உறு-அடையாத, உபசாந்தம் நிலை யது ஆகி - தொழிலற்ற விசிராந்தி நிலையினை யுடையதாகியும், களங்கம் அற்ற - குற்றம் நீங்கிய, அருள் ஞானம் - பதிஞானத்தினையுடைய, காட்சி ஆகி - சேவை யாகியும், விலகல் உறு - நீங்குதலில்லாத, நிபிடம் ஆனந்தம் ஆகி-பதமுத்தி யின்பங் கடந்த பரமுத்தியின்பமாகியும், மீதானத்து-ஆதாரங்களைக் கடந்த விடத்தில், ஒளிர்கின்ற-பிரகாசிக்கின்ற, விளக்கம் ஆகி-இயற்கை விளக்கமுடையதாகியும், இலகும்-விளங்காநின்ற, பராபரம் ஆய்-பராபர வத்துவாகியும், சித்பரம் ஆய் - ஞானசொரூபமுடைய பரமாகியும், அன்பர்-அன்புடைய அடியாரது, இதயமலர் மீது-மனமாகிய தாமரையின்மேல், இருந்த - எழுந்தருளியிருந்த, இன்பம்தேவே —இன்பசொரூபியாகிய மஹாதேவனே. எ-று.

(விசேஷவுரை) "உலகம் எல்லாம்" என்றது சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சங்களை. "எல்லாம்"என்பது உயர்திணை அஃறிணை யிரண்டிற்கும் பொதுவான பன்மைச்சொல். 'தனி'யென்றதனால் பதிப்பொருள் ஒன்றேயென்பதும், 'நிறைந்த' என்றதனால் அதன்சர்வ வியாபகமும்,'உண்மை'யென்றதனால்ஒருகாலத்திருந்தது, ஒரு தேசத்திருந்தது, ஒரு வத்துவாயிருந்தது, பின்னர் இராதொழிந்ததென்னு மாறின்றி, எக்காலத்திலும் எத்தேசத்திலும் எல்லாவத்துவிலும் அழிவுறாது நிற்கின்ற உள்பொருளாதலும் விளங்குகின்றன.

சிவஞானயோகியர் தங்கள் சுவானுபூதியிற் சகத்தவர் காண்பதற்கரிய அகண்ட ஞானக்கண்ணும், ஞானவாதிக்கத்திற்கு ஏதுவாகிய கேள்வியும், சிவபோகமும், கூடுதற்கரிய சிவயோகமும், நாதாந்த நல்லொளியை யுணர்கின்ற ஞானமும், மகிழ்ச்சிக்கிடனாகை நிற்றலின் "யோகியர்தம்மனுபவத்தினுவப்பாய்" என்றார்.

இவ்வுண்மை:— "காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்
கோணாத போகமுங் கூடாத கூட்டமு

நாணுத நாணமு நாதாந்த போதமுங்
காணு யெனவந்து காட்டின னந்தியே." என்னும்
திருமூலர் திருமந்திர முணர்த்துமாறு காண்க.

கருவிகரணங்களோய, ஆணவ விருணீங்க, அருளினுலே ஆன்மரூப உணர்வுற்று, அதனைத்தரிசித்து, அது தூய்தாகப் பெற்று, வாதனைகணீங்கி, சாக்கிராதீத நிலையில் தன்னிழப்புற்றுச் சிவத்தில் வியாப்பியமாகித் திரையற்ற நீர்போற்றெளிந்த சிந்தையினிலையாதலின் "கலகமுறு வுபசாந்த நிலைய தாகி" யென்றுர். இதற்கு,

திருமந்திரம்:—" ஆரு றமைந்தா ணவத்தையுண் ணீங்குதற்
பேருன தன்னை யறிதற் பின் நீர்சுத்தி
கூருத சாக்கிரா தீதங் குருபரன்
பேரும் வியாத்தம் பிறழுப சாந்தமே." என்னும்
திருமூலர் திருவாக்கானுணர்க.

குற்றமகலாத பசுஞான பாசஞானங்களினுற் காணக்கிடையாத காட்சியென்பார் "களங்கமற்ற வருண்ஞானக்காட்சியாகி" யென்றுர். 'மீதானம்' என்றது ஆதார நிராதாரங்களின் மேலுற்ற நிலையை 'இலகுபராபரயாம்' என்றது ஆதியோடந்தமிலாத பொருளாகி, எல்லாவுலகங்களையுந்தாங்கி, சர்வவியாபகமுடையதாய்ப் பெருவெளியிற் பெறற்குரிய தொன்றுயிருத்தலை நோக்கி யென்க. இதற்கு,

திருமந்திரம்:—" பராபர ஞகிப் பல்லூழிக டோறும்
பராபர ஞயிவ் வகலிடந் தாங்கித்
தராபர ஞய்நின்ற தன்மை யுணரார்
நிராபர ஞகி நிறைந்து நின்றுனே." என்னும்
திருமூலர் திருவாக்கானுணர்க.

'சிற்பரம்' என்றது ஞானப்பரஞ்சோதியாய் நிற்குநிலையை "தனிநிறைந்தவுண்மை" என்பது: "𑌤𑌸𑍍𑌯 𑌹 𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌤𑍍𑌯𑌂" "தஸ்யை ஹவா ஏதஸ்ய ப்ரம்ஹணே நாம ஸத்யம்" என்னும் சாந்தோக்கிய உபநிடதத்தில் எட்டாவது பிரபாடகம், மூன்றுவது கண்டம், நான்காவது மந்திரத்திற் கூறப்பட்டபடி, 'சத்தியம்' என்னும் சுத்தப்பிரமத்தின் நாமத்தை விளக்குவதென்றுணர்க.

மாதேவர் பராபர வெளியினுள் வெளியாயிருத்தலின் அவரது நாமம் சாந்தோக்கியோபநிடதம், எட்டாவதுபிரபாடகம், பதினன்காவது கண்டம், ஓராவது மந்திரம்.

"𑌆𑌕𑌾𑌶𑍋 𑌵𑍈 𑌨𑌾𑌮 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌹𑌿𑌤𑌾 𑌤𑍇 𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌾 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑌮𑍃𑌤𑌂" "ஆகாஸோவை நாம நாம ரூபயோ: நிருவஹிதா: தேயதந்தரா தத் ப்ரம்ஹ தத் அம்ருதம்." ஆகாசம் என்றும், அவரே நாமரூபப் பிரபஞ்ச முழுதுந் தாங்கு நிருவாகமுடையவரென்றுங் கூறுவது காண்க. நிபிடம்- வடசொல்; மிகப்பெரியதென்னும் பொருளது. (உ)

---

3. வித்தாகி முளையாகி விளைவதாகி விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனுகிக் கொள்வோனுகிக் குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி யின்பமாகிச் சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்க மாகித்தெய்வ முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே.

(பதவுரை.) வித்து ஆகி-(மாயையாகிய) விதையாகியும், முளை ஆகி-(உலகமாகிய)அங்குரமாகியும், விளைவு அது ஆகி-தோன்றுகின்ற (இருதிணை யைம்பான் மூவிடங்களுக்குரிய) சராசரப்பொருளாகியும், விளைவிக்கும் பொருள் ஆகி-தோற்றுவிக்கும் ஆற்றலுடைய சத்தியாகியும், மேலும் ஆகி-அந்தச் சத்தியுடனின்ற சிவமும் ஆகியும், கொத்து ஆகி-ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதை யென்னும்ஐவகைப் பாசக்கொத்தாகியும், பயன் ஆகி - (தனுகரணங்களுடன் கூடிப்புவனங்களிலிருந்து அனுபவிக்கப்படும்) இன்பத்துன்பப் போகங்களாகியும், கொள்வோன் ஆகி - இருவினைப்பயன்களையும் அனுபவிக்குஞ் சீவனுகியும், குறைவு ஆகி-குறைவினையுடையதாகியும், நிறைவு ஆகி-எங்குநிறைகின்ற பரிபூரணமாகியும், குறைவு இலாத-தனது சுபாவத்திற் குறைதலில்லாத, சத்து ஆகி-சத்துப்பொருளாகியும், சித்து ஆகி-வியாபகவிளக்கமுடைய சித்துப்பொருளாகியும், இன்பம் ஆகி-ஆனந்தப்பொருளாகியும், சதாநிலையாய் - சதாநிலையாக வுள்ளதாகியும், எவ் உயிருக்கும் - எல்லாவுயிர்களுக்கும், சாட்சி ஆகி-அவற்றினுள்ளிருந்து அவற்றின் இச்சைகளையும் தொழில்களையும் காண்கின்ற சாட்சியாகியும், முத்து ஆகி-முத்தினை யொப்பதாகியும், மாணிக்கம் ஆகி-மாணிக்கத்தினை மாகியும், தெய்வம்-தெய்வீகமுடைய, தனி-ஒப்பற்ற, முழு வயிரம் மணி ஆய் - தொளைக்கப்படாத வச்சிரமணியாகியும், முளைத்த-தானே தோன்றிய அல்லது சுயம்புவான, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷவுரை) உலகத் தோற்றத்திற்கு மாயை முதற்காரணமாதலால் 'வித்தாகி' யென்றும், அம்மாயையினின்றுந் தோன்றும் உலகம் வித்தின் முளைபோலத் தோன்றுதலால் 'முளையாகி' என்றும், சராசரப்பொருள்கள் அதில் விளைவதால் 'விளைவதாகி' யென்றும், உலகத்தைத் தோற்றுவித்தலிற் சிவசத்தி துணைக்காரணமாகநிற்றலால் 'விளைவிக்கும் பொருளாகி' யென்றும், துணைக்காரணமாகிய சத்தியொடு நிமித்த காரணமாகிய சிவம் நிற்பதனுல் 'மேலுமாகி' யென்றும் கூறினர்

பாசங்கள் ஐந்தும் ஒரு கூட்டமா யொன்றி நிற்றலிற் "கொத்தாகி" யென்றும், வியாப்பிய வியாபகமாக நிற்பதாற் "குறைவாகி நிறைவாகி" என்றும், எவ்வகையாலுங் கேடுபடாமை நோக்கிக் "குறைவிலாத சத்தாகி சித்தாகி இன்பமாகி" என்றும், உயிர்கள் தோன்றியகாலந்தொட்டு வீடு அடையுங்காறும் அவற்றினுள்ளத்தினீங்காது, அவற்றின் அறிவிச்சைசெயல்களையும் அவத்தைகளையும், அவற்றின் சனன மரணங்களையும் சர்வகாலமும் உறங்குதலின்றிக் கண்டு நிற்கும் சாட்சியாகவிருத்தலிற் "சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாட்சியாகி" யென்றுங் கூறினர்.

விந்துவு நாதமும்போல வெள்ளொளியுஞ் செவ்வொளியும் இயற்கையிற் பெற்று விளங்குதலானும், யாவரும் விரும்பிக்கொள்ளும் சீர்மையும் நீர்மையும் உடைமையானும் "முத்தாகி" யென்றும் "மாணிக்கமாகி" யென்றுங்கூறினர். தான் ஒருவராலும் கேடுபடாததாய் நிற்றலின், "தெய்வ முழுவயிரத் தனிமணியாய்" என்றும், தன்னைப்படைக்குங் கடவுளின்றித்தானே தோன்றுதலின் "முளைத்ததேவே" என்றுங் கூறினர்.

வித்துமாயை யென்பதற்கும், முளை உலகமென்பதற்கும் மேற்கோள்:—
சிவஞானபோதம் முதற்சூத்திரம் இரண்டாம் அதிகரணம்.

> "வித்துண்டா மூல முளைத்தவா தாரகமாம்
> அத்தன்று ணிற்ற லவர் வினையால்-வித்தகமாம்
> வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
> கூட்டானே மண்போற் குளிர்ந்து."

முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணமாகிய மூன்று காரணங்களால் உலகம் தோன்றுதற்குப் பிரமாணம்:—

திருமந்திரம் :—"புவனம் படைப்பா னொருவ னொருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திர ரைவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்ப்
புவனம் படைப்பானப் புண்ணியன் றானே." எனவும்,

"புண்ணிய னந்தி பொருந்து முலகெங்கு
மண்ணியல் பாகி வளர்ந்திடுஞ் சத்தியுந்
தண்ணியல் பாகித் தரணி முழுதுமாய்க்
கண்ணியல் பாகிக் கலந்தெழும் பூவிலே." எனவும்,

"வித்தினி லன்றி முளையில்லை யம்முளை
வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை
வித்துமுளையு முடனல்ல வேறல்ல
அத்தன்மை யாகு மரனெறி தானே. எனவும்,

திருமூலர் திருவாக்கானுணர்க.

"விந்தாகி...மேலுமாகி" என்ற முதலடியினால் சுத்த மாயையாகிய விந்து, அசுத்த மாயையாகிய மோகினி, பிரகிருதி மாயையாகிய மான் என்னும் உபாதானங்களும், அம்மூவகை மாயா புவனங்களிலும் நிகழும் பஞ்ச கிருத்தியங்களும், அவற்றை நடத்துந்துணைக்காரணங்களாகிய சத்தி பேதங்களும், பிரமனாதி கர்த்தர் பேதங்களும், நிமித்தகாரணனாகிய பரசிவனும்; "நேர்ந்தாகி ..கொள்வோனாகி" என்ற இரண்டாமடியாற் பாசக்கொத்தும், பயன்களும், கொள்வோனாகிய உயிரும்பெறப் படுதலால் முதல்வன் செயல்களெல்லாம் தன்பொருட்டல்ல, உயிர்களின் பொருட்டேயாம் எனவுணர உணர்த்தியவாறு காண்க.

மகாதேவர் உலகங்களைப் படைத்தவர் என்பதற்கும் எல்லாவுயிர்களின் இருதயங்களிலிருப்பவர் என்பதற்கும் மேற்கோள்,

சுவேதாசுவதர உபநிடதம் "ஏஷ தே³வோ விஶ்வகர்மா மஹாத்மா, ஸதா³ ஜநாநாம் ஹ்ருத³யே ஸந்நிவிஷ்ட:" "ஏஷ தேவோ விஶ்வ கர்மா மஹாத்மா, சதா ஜனனாம் ஹ்ருதயே சந்நிவிஷ்ட:" என்று கூறுவது காண்க.

'மேலும்' இதிலுள்ள உம்மை, இறந்தது தழீஇய வெச்சஉம்மை; 'எவ்வுயிர்க்கும்' இதிலுள்ள உம்மை முற்றும்மை; விளைவிக்கும் பிறவினைப்பெயரெச்சம். (௩)

---

4. வேதாந்த நிலையாகிச்சித்தாந்தத்தின் மெய்யாகிச்சமரசத்தின் விவேகமாகி
நாதாந்த வெளியாகி முத்தாந்தத்தி னடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாந்தாங்கிநின்ற முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக்கமையாதென்றுமௌனவியோமத்தினிடைவயங்குந்தே (வே.

(பதவுரை.) வேதம் அந்தம - வேத முடிபிலுள்ள, நிலைஆகி - சாசுவதப்பொருளாகியும், சித்தாந்தத்தின் - ஆகமத்தின், மெய் ஆகி-சத்தியப்பொருளாகியும், சமரசத்தின் - சமரச நெறியினுடைய, விவேகம் ஆகி - ஞானமாகியும், நாத தத்துவத்தின் முடிவில், வெளிஆகி - ஆகாசமாகியும், நாதம் அந்தம் - முடிபில், நடுஆகி - நடுவி லிருப்பதாகியும், முத்தி அந்தம் - முத்திகும், நவம் நிலைக்கும் - ஒன்பதுவகை நிலைகட்கும், நண்ணுததாகி - பொருந்தாது மேறபட்ட தாகியும், மூது அண்டம் கோடி எல்லாம் - பழமையாயுள்ள அண்ட கோடிகள் அனைத்தையும், தாங்கி நின்ற-பாதுகாத்து நிற்கின்ற, முதல் ஆகி - பதியாகியும், மனம் அதீதம் - மனதிற்கு அகோசர

மான, முத்தி ஆகி - பேரின்ப வீடாகியும், வாது ஆண்ட - ஒன்றோடொன்று மாறுபட்டுத்தருக்கஞ்செய்கின்ற, சமயம் நெறிக்கு - சமய சன்மார்க்கங்களுக்குள், அடையாது-அமைந்திராததாகியும், மௌனம்-மவுனமாகிய, வியோமத்தின் இடை-வெளியினடுவில், வயங்கும் - விளங்காநிற்கும், தேவே-மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) தொம்பதமாகிய சீவனையும், தற்பதமாகிய பரனையும், அசிபதமாகிய சிவத்தினையும், தொம்பதமும் தற்பதமும் அசிபதத்தொடுகூடி ஐக்கிய மடைதலையும் தொந்தத்தசியாகும் *"தத்வமசி"மகாவாக்கியத்தால்விளக்கும் உபநிடதங்களினிலையென்பார் "வேதாந்தநிலையாகி" என்றும்; பிருதிவி முதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களும் தனக்கு வேறாக வுள்ளனவென்றும், சடமென்றும், தான் நித்தியமாயுள்ள அறிவென்றும், தன்னையும் அவற்றையும் வேறுபிரித்துக் காணாவண்ணம் மறைத்து நின்றது ஆணவ மலமென்றும், அருள் உணர்த்த வுணர்ந்து, தன்னுருவைக்கண்டு, தரிசித்து, யான் எனதென்னும் பற்றொழிந்து, சுட்டுப்போதங் கழன்று நிற்பதாகிய தூய்மை யடைந்து, சிவத்தினுண்மையு முதன்மையுந் தன்னுளுணர்ந்து, கண்டு, கூடிப்பின் சிவபோகியாய் ஆன்மா வென்றும் விளங்க விளக்கியருளும் பசுபதியாகிக் காமிகமாதி சிவாகமங்களின்மேனின்ற மெய்ப்பொருளென்பார் "சித்தாந்தத்தின் மெய்யாகி" என்றும்; வேதாந்த சித்தாந்த சமரசம், நாதாந்த போதாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம் எனவும், இவையன்றி ஷடாந்த சமரசமெனவும், இவற்றின்மேற் சுத்த சமரசமெனவும் கூறுவார் "சமரசத்தின்" என்றும்; சமரசத்தொடு கூடிய சன்மார்க்க ஞானமென்பார் "சமரசத்தின் விவேகமாகி" என்றும் அருளிச்செய்தனர்.

"நாதாந்தவெளி" என்றது ஞானநிருத்த மன்றத்தை. "முந்நாந்நத்தினடுவாகி"யென்றது பதமுத்தி முடிபுகளி னடுநிற்பதான பரத்தை. "நவநிலை"யாவன:- விந்து, நாதம், பரவிந்து, பரநாதம், அபர விந்து, அபர நாதம், திக்கிராந்தம் அதிக்கிராந்தம், அருள். "மனாதீதமுத்தி"=சீவன்முத்தி பரமுத்திகளின் மேற்பட்ட சிவமுத்தி; அஃதாவது ஆனந்தம். தெய்வம் ஒன்றேயென்றுணரும் உணர்வில்லார் எஞ்சமயமே உயர்ந்தது, எமது தெய்வமே தலைமைத்தெய்வம், எமது சமய நூல்களே மெய்ந்நூல்கள் என ஒருவரோடொருவர் பிணங்கிச்செய்யுந் தருக்கநெறிக்குத் தூரமாயுள்ளதென்பதை விளக்க, "வாதாண்ட சமயநெறிக்கமையா" தென்றார். ஞான வரம்பாகிய மோனநிலையில் சிவம் விளங்குதலின் "மௌன வியோமத்தினிடை வயங்குந்தேவே" என்றார்.

"வேதாந்தத்தின் முப்பதங்களால் விளங்குநிலை" யென்பதற்குப் பிரமாணம்:—

"வேதாந்தந் தன்னி லுபாதிமே லேழ்விட
நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பத

---

* "தத்துவமஸி"=தத் - அந்த பிர்ம்மம், த்வம்-நீ, அஸி - ஆயிருக்கிறாய். நீயே அந்தப் பிர்ம்மமாயிருக்கிறாய். அகம் பிரம்மாஸ்மி=நானே பிர்மமாயிருக்கின்றேன். இவைகள் வேதவாக்கியங்கள். அதாவது அவித்தியோபாதிகளும், கர்த்ருத்வ போக்த்ருவத்தாதி அபிமானியாயும், கிஞ்சிக்ஞனுமிருக்கிற நீ, மாயோபாதிகராயும் அகர்த்தருத்வ அபோக்தருத்துவராயும், ஸர்வஞ்ஞத்வ ஸர்வேசுவரத்வ ஸர்வாந்தர்யாமித்வாதி அநந்த கல்யாண குண பரிபூரணராயுமிருக்கிற ஈஸ்வரன் என்பது பொருள். இதில் விருத்தங்களும் ஏகதேச அம்சங்களாயுமுள்ள அவித்தையையும், அவித்யாகாரியங்களான கிஞ்சிக்ஞத்வாதி குணங்களையும், மாயையும், மாயாகாரியங்களான சர்வஞ்ஞத்வாதி குணங்களையும் விட்டு விட்டு, முக்கியாம்சமும், அவிருத்தாம்சமுமான அவித்யாதிஷ்டான கூடஸ்த சைதன்யமே மாயாதிஷ்டான சைதன்யமான பிர்ம்மம் (ஆத்ம, பகவான்) என்று ஜஹத ஜஹல்லக்ஷணையால் (விட்டும் விடாதலக்ஷணை, பாகத்யாகலக்ஷணை) அங்கீகரித்து, சற்குரு சந்நிதானத்தில் உபதேச பூர்வமாக விசாரணை செய்து தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம்.

மீதாந்த காரணே பாதியேழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி யென்பவே." (திருமந்திரம்.)

"அனாதி சீவனைம் மலமற்றப் பாலா
யனாதி யடக்கித் தனைக்கண் டானாய்த்
தனாதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே." (திருமந்திரம்.)

"சித்தாந்தத்தின் மெய்யாகி" என்பதற்குப்பிரமாணம்:—

"நித்தம் பரனோ டுயிருற்று நீண்மனஞ்
சத்தமுத லைந்துந் தத்துவத் தானீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்
தத்தன் பரன்பா லடைதல்சித் தாந்தமே." (திருமந்திரம்.)

"சமரசத்தின் விவேகமாகி" யென்பதற்குப்பிரமாணம்:—

"கருது மவர்தங் கருத்தினுக் கொப்ப
அரனுரை செய்தரு ளாகமந் தன்னில்
வருசம யப்புற மாயைமா மாயை
யுருவிய வேதாந்த சித்தாந்த வுண்மையே." (திருமந்திரம்.)

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம்யோ காந்தம் பொதுஞேயம்
நாதாந்த மானந்தஞ் சிரோதய மாகு
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே." (திருமந்திரம்.)

"நாதாந்தத்தில் நிருத்தம்புரியு மன்ற" மென்பதற்குப்பிரமாணம்:—

"நாடுமி னாதாந்த நம்பெரு மானுகந்
தாடு மிடந்திரு வம்பலந் தானே." (திருமந்திரம்.)

"நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தே." ( ஷை )

"நாதமோ டாடின னாதாந்த நட்டமே." ( ஷை )

மனாதீதமுத்தி யென்பதற்குப் பிரமாணம்:— தைத்திரிய உபநிடதம், ஆனந்த வல்லி. நான்காவது அனுவாகம். முதலாவது மந்திரம்:—"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந." "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸாஸஹ ஆநந்தம் ப்ரம்மணோ வித்வாந் நபிபேதி குதஶ்சந." என்பதாம். முத்தி அந்தம்=முத்தாந்தம் என்றுயது மரூஉ.

(ச)

5. தோன்றுதுவிதாத்துவித மாய்விசிட்டாத் துவிதமாய்க்கேவலாத்துவிதமாகிச்
சான்றசுத்தாத்துவிதமாய்ச்சுத்தந்தோய்ந்த சமரசாத்துவிதமுமாய்த்தன்னையின்றி
யூன்றுநிலைவேறொன்று மிலதாயென்றுமுள்ளதாய்நிரதிசய வுணர்வாயெல்லா
மீன்றருளுந்தாயாகித்தந்தையாகி யெழிற்குருவாய்த்தெய்வதமாயிலங்குந்தேவே.

(பதவுரை) தோன்று துவிதம் அ துவிதம் ஆய் - வெளிப்பட்ட துவித நெறியாகியும் அத்துவித நெறியாகியும், விசிட்டம் அ துவிதம் ஆய் - விசிட்டாத்துவித நெறியாகியும், கேவலம் அ துவிதம் ஆகி - கேவலாத்துவித நெறியாகியும், சான்ற-குணமிக்க, சுத்தம் அ துவிதம் ஆய் - சுத்தாத்துவித நெறியாகியும், சுத்தம் தோய்ந்த-சுத்தம்பொருந்திய, சமரசம் அ துவிதம் ஆய்-சமரசாத்துவித நெறியாகியும், தன்னை அன்றி-தன்னை யல்லாமல், ஊன்றும் நிலை-எவ்வுயிர்களும் ஊன்றுதற்

கான ஆதாரம், வேறு ஒன்றும் இலது ஆய் - பிறிதொருபொருளும் இல்லாததாகி யும், என்றும் - எக்காலத்திலும், உள்ளது ஆய் - நிலைத்துள்ள பொருளாகியும், நிர் அதிசயம் - எப்பொருளையுங்கண்டு அதிசயித்தலில்லாத, உணர்வு ஆய் - அறிவாகி யும், எல்லாம் - எல்லாவுயிர்களையும், ஈன்று அருளும் - படைத்தருள்கின்ற, தாய் ஆகி - மாதாவாகியும், தந்தை ஆகி - பிதாவாகியும், எழில் - அழகினையுடைய, குரு ஆய் - ஆசாரியனாகியும், தெய்வதம் ஆய் - வழிபடுகடவுளாகியும், இலங்கும் - விளங் காநின்ற, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) ஒற்றுமை நயத்தால் உடலும் உயிரும் ஒன்றெனத்தோன்றி னும், சித்தின் இலக்கணமுடைய உயிர் அசித்தின் இலக்கணமுடைய உடலின் வேறாய், அதனை யாள்கின்ற தன்மையான் மேம்படுதல்போல, உயிரும் உயிர்க்குயி ராகிய பரனும் ஒற்றுமையால் ஒன்றெனத் தோன்றினும், உயிர் மலத்தடையாற் சிற்றுணர்வினனாகியும், அறிவிக்கப்படுபவனாகியும், பாதந்திரனாகியும், பரன் மலத் தடையில்லாத முற்றுணர்வுடையனாகியும், அறிவிப்பவனாகியும், சர்வ சுதந்தரனாகி யும், உயிர்களை யெல்லாம் ஆள்பவனாகியு நிற்றலால் உயிர் வேறு பரன் வேறெனப் பிரித்துணர விளங்கு நெறியதென்பார் "தோன்று துவிதம்" எனவும்; நீரும் நிழலும் போலவும், பாலு நீரும்போலவும், எள்ளும் எண்ணெயும் போலவும், ஆகாயம் காற்றும் போலவும், பண்ணும் இசையும் போலவும், அப்பும் உப்பும் போலவும், சூரியனும் அவன்முன் சந்திரனும் போலவும், கண்ணொளியும் கதிரொளியும் போலவும், பகலும் விளக்கும் போலவும், உச்சிக்கதிரும் படிகமும் போலவும், முதல்வன் உயிருடன் பேதாபேதமாய்க் கலந்து நிற்கும் இரண்டற்ற கலவியை யுணர்த்து நெறியதென்பார் * "அத்துவிதமாய்" எனவும்;

'அசித்' எனப்பட்ட பிரபஞ்சத்திற் கருமத்தாற் றோன்றியுள்ள 'சித்' எனப்படும் உயிர்கட்கு ஈஶ்வரன் நிரேதுக வருளினாலே † நித்தியா நித்தியவஸ்து விவேகமுதிக் கச்செய்து, தம்மையும் தலைவனையும் அறிய வறிவித்துத் தொண்டுகொண்டு, விரசை நதிப்புனலில் ஆட்டிச்சாரூப்பியமளித்துத் தினது பிரம பதத்தில் என்றும் இருத்துவ தாகிய விசிஷ்டமார்க்க மென்பார் "விசிட்டாத்துவிதமாய்" எனவும்; வியவகாரத்திற் சகம் சீவன் பரம் ஆகிய முப்பொருளும் நித்தியப்பொருள்களாக வெண்ணப்படுவன

---

* ஜனன மரணரகிதமான மோக்ஷத்தை யடைவதற்குச் சங்கல்பங்களினுடையநாசமும், வாசனைகளினுடைய நாசனமே முக்கிய மென்று சுருதிகள் கோஷிக்கிறபடியால், அப்படிப் பட்ட சங்கல்ப வாஸனா நாசமானது ஐக்கியத்தினாலல்லது வேறெந்த வழியாலும் அடைய முடியாது. அந்தஸ்திதி வருமேயானால் அதுவே அத்துவைதம். அப்படியானால் பெரியோர் களால் இயற்றப்பட்டிருக்கிற விசிஷ்டாத்வைத, துவைத பாஷ்யங்களுக்குப் பிரயோசன மென்னவெனில்:— சாதனமின்றி யொருகாரியத்தைச் சாதிப்பாரொருவருமில்லை யாகை யால்,முதலில் துவைதானுஷ்டானத்தையும், அந்தத் துவைதானுஷ்டானத்தில் மனது நன்றாய் நிலைத்தபிறகு விசிஷ்டாத்வைதானுஷ்டானத்தையும், பிற்பாடு வேதாந்தமென்று சொல்லப்ப டும் அத்துவைதானுஷ்டானத்தையும் அப்பியசிக்கலா மாகையால், விசிஷ்டாத்வைத, துவைத பாஷ்யங்கள் அப்பிரயோஜனமென்று சொல்லக்கூடாது. அவைகளும் அத்துவைதத்தைப் போல் சாதனங்களென்றே கிரகித்துக் குரோதம், வைஷம்யம் முதலான த்வேஷங்களினின் றும் நிவர்த்தியாகி, இம்மூன்று பாஷியங்களும் பரமசுகமான மோக்ஷசாதனங்களே என்று சம புத்தியாய்க் கிரகிக்கிறதே சிரேஷ்டமென்று தெரிந்து கொள்ளவும்.

† இது சாதனசதுஷ்டயங்கள் நான்கனுள் முதன்மையது. நாம் பார்க்கிறவும் கேட்கிறவு மான எல்லாவற்றையும் சாஸ்திரோக்தமாய் விசாரணைசெய்து, அவற்றில் நித்தியமான வஸ்து எது என்று தெரிந்துகொண்டு, நித்தியமில்லாத வஸ்துவில் உண்டாகும் சத்திய (நிஜ) புத்தி யைத்திருப்பிச் சத்தியமாயுள்ள நித்திய வஸ்துவிலேயே மனதினை நிறுத்தல். மற்ற மூன்றின் விபரம் திருவருட்பா அரும்பதவுரை 84 - ம் பக்கம் பார்க்க.

வென்றும்,பரமார்த்தத்தில் அவை முயற்கொம்பு போலவும் கானற்சலம் போலவும் பொய்யாயொழிவனவென்றும், *"அகம்ப்ரம்மாஸ்மி" நானே பிரமமாயிருக்கிறேன் என்றும், ஆன்ம சொரூபத்தைத்தவிர இரண்டாவது பொருள் பிறிதொன்றில்லை யென்றுங்கூறும் நெறியதாகி யென்பார் "கேவலாத்துவிதமாகி" யென்றும் கூறினார். சீவன் இல்லை, சிவம் ஒன்றே யுள்ளதென்னும் ஒன்றாகாமலும், சீவனும் சிவனும் வெவ்வேறாகவுள்ள இருபொருள்கள் என்னும் இரண்டாகாமலும், அந்த ஒன்றும் இரண்டும் இன்றாகாமலும் விளங்கும் வைதிக சைவ சுத்தாத்துவித நெறியென்பார் "சான்ற சுத்தாத்துவிதமாய்" எனக்கூறினார். வேதாந்த சித்தாந்த சமரசத்தினும், ஷடாந்த சமரசத்தினும் மிக்கதோர் அத்துவிதப்பொருள் என்பார் "சுத்தந்தோய்ந்த சமரசாத்துவிதமுமாய்" என அருளிச்செய்தார். "தன்னையன்றியூன்று நிலை வேறொன்றுமிலதாய்" என்றது சர்வ பரிபூரண வகண்ட தத்துவமான நிலையென்க. அதிசயக்காட்சி முழுதுங்கடந்த பேரறிவாகலின் "நிரதிசயவுணர்வாய்" என்றார். எல்லாவுயிர்களுக்கும் அம்மையும் அப்பனும் ஆரியனும், ஆதிபகவனும் தானேயாகி விளங்குந் தெய்வமென்பார் "எல்லாமீன்றருளுந்தாயாகித்தந்தையாகி யெழிற்குருவாய்த்தெய்வதமாயிலங்குந்தேவே" யென்று அருளினார்.

சமரசாத்துவிதமுமாய் என்பதிலுள்ள உம்மை எச்சவும்மை. வேறொன்றும் என்பதிலுள்ள உம்மை முற்றும்மை. ந - துவிதம் என்பன அத்துவிதம் என்றாயது வடமொழிப்புணர்ச்சி. துவிதநெறியே அத்துவித ஞானத்தை யுண்டுபண்ணு மார்க்கமாதலால் முன்னர்த் துவித மதத்தையும், அதன் பின்னர் அத்துவிதம், அதன் பின்னர் விசிட்டாத்துவிதம், கேவலாத்துவிதம், சுத்தாத்துவிதம் என்னும் மதங்களையும் வரிசையாக நிறுவி, அவற்றின்மேன் மதாதீதமான சுத்த சமரசாத்துவித நெறிவிளங்கலான் அதனை இறுதியில் வைத்தார். துவிதம் அத்துவிதம் - துவிதாத்துவிதம்; தீர்க்க சந்தி. விசிட்டாத்துவிதம், கேவலாத்துவிதம் சமரசாத்துவிதம் என்னுஞ் சொற்றொடர்களும் தீர்க்க சந்திகளாம் (ரு)

---

6. பரமாகிச் சூக்குமமாய்த் தூலமாகிப் பரமார்த்த நிலையாகிப்பதத்தின்மேலாஞ்
சிரமாகித் திருவருளாம் வெளியா யான்ம சிற்சத்தியாய்ப்பரையின் செம்மையாகித்
திரமாகித் தற்போத நிவிர்த்தியாகிச் சிவமாகிச் சிவா நுபவச்செல்வ மாகி
யரமாகி யானந்த போதமாகி யானந்தாதீதமதா யமர்ந்த தேவே.

(பதவுரை) பரம் ஆகி - அவ்யாக்ருதனென்னும் சர்வசங்கார காரணனாகியும், சூக்குமம் ஆய்-இரணிய கருப்பனாகியும், தூலம் ஆகி-விராட்புருடனாகியும், பரமார்த்தம் நிலையாகி-இயற்கையுண்மைப்பரசொரூபமாகியும், பதத்தின்-தத்பத தொம்பத அசிபதங்கட்கு, மேல் ஆம் - மேலாகிய, சிரம் ஆகி - முடிவிலுள்ள சிவ துரியப் பொருளாகியும், திருவருள் ஆம் - திருவருளாகின்ற, வெளி ஆகி - ஆகாசமாகியும், ஆன்ம சித் சத்தி ஆகி-ஆன்மாவின் ஞானசத்தியாகியும்,பரையின்-பராசத்தியினது, செம்மை ஆகி - நடுநிற்கும் பெருமை யுடையதாகியும், திரம் ஆகி - நித்தியமாகியும், தற்போதம் நிவிர்த்தி ஆகி-தற்போதநீங்கின விடமாகியும், சிவம் ஆகி-சர்வமங்களாகாரப் பொருள் என்னும் சிவமாகியும், சிவஅநுபவம் செல்வம் ஆகி-சிவானுபவமாகிய மகைசுவரியமாகியும், அரம் ஆகி-பாசங்களை யரிப்பதாகியும், ஆனந்தபோதம் ஆகி - ஆனந்தஞானசொரூபமாகியும், ஆனந்த அதீதம் அது ஆய் - வரம்பில்லாத இன்பமுடைய பொருளாகியும், அமர்ந்த-பொருந்திய, தேவே-மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) பரம் சூக்குமம் தூலம் ஆகியென்றது பரனது காரண வுடலையும், சூக்குமவுடலையும், தூல வுடலையும், அவற்றை யபிமானித்த பரனது அபிமான

---

* 17-ம் பக்கம் விரித்துரைக்கக் காண்க.

நாமங்களையும் உணர்த்துகின்றது. இது தத்பதமுக்கியம். பரமார்த்த நிலையென்றது பர சாக்கிரம், பர சொப்பனம், பர சுழுத்தியாகிய மூன்று அவத்தைகளையும் கடந்த பர துரியநிலை. இது தற்பதலட்சியம். பதத்தின் மேலாஞ்சிரம் என்றது சிவதுரிய நிலை. அரமாகி என்றது இரும்பு முதலிய தாதுப்பொருள்களைப் பொடிபடுத்தும் வன்மையுடைய அரம்போன்று, வலிய பாசங்களைச் சிதைக்கும் அருள்வன்மை யுடைமை நோக்கி யென்க.

சுகவெளியினும் பெருஞ்சுகவெளியினும் விளங்கும் சுகசொரூபி யாதலின் "ஆநந்தபோதமாகி; ஆனந்தாதீதமதா" யென்றனர்.

"பரையின் செம்மையாகி" என்னும் தொடர் ஆதியுமந்தமு மில்லாத பராபரத்துக்கும் போதமதாகப் புணரும் பராபரைக்குமுள்ள தாதான்மியக்கலப்பை யுணர்த்தும் சொற்றொடராய்க் குணமாகிய அருளையும், குணியாகிய சிவத்தையும் விளக்குதல் காண்க. (௬)

---

**7.** இந்தியமாய்க் கரணாதி யனைத்துமாகி யியல்புருடனாய்க்கால பரமுமாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமாயப்பாற் பரம்பரமாய் விசுவமுண்ட பான்மையாகி
வந்தவுப சாந்தமதாய் மவுனமாகி மகாமவுன நிலையாகி வயங்காநின்ற
வந்தமி றொம்பதமாய்த் தற்பதமாயென்று மசிபதமா யதீதமாயமர்ந்த தேவே.

(பதவுரை) இந்தியம் ஆய்-ஞானேந்திரிய கன்மேந்திரியங்களாகியும், கரணம் ஆதி அனைத்தும்ஆகி - மனமுதலிய அந்தக்கரணங்களும் பிறதத்துவங்களெல்லாமு மாகியும், இயல்-பொருந்திய, புருடன் ஆய் - சர்வஞ்ஞத்துவ முதலிய வுபாதிகளை யுடைய விராட்புருடனாகியும், காலபரமும் ஆகி - சர்வ சிருட்டிமுதலிய உபாதிகளை யுடைய இரணியகர்ப்பனென்னும் காலபரமும் ஆகியும், பந்தம் அற்ற - பாசத்தளை யகன்ற, வியோமம் ஆய் - சர்வ சங்காரமாகிய வோருபாதியுடைய பர சுழுத்தி யபிமானியென்னும் அவ்யாக்ருதனாகியும், பரம் ஆய் - துரியாதீதத்தில் விளங்கும் அதுவென்னும் பர வத்துவாகியும், அப்பால்-அந்நிலையின்மேல், பரம்பரம் ஆய்-பிரபஞ்சப்பற்று முழுதும் அற்ற பரத்தின்மேற்பட்ட சிற்சொலிதையென்னும் பரம்பர மாகியும், விசுவம்-சகமுழுதும், உண்ட - விழுங்கிய, பான்மை ஆகி-தன்மையுடைய விசுவக்கிராச நிலைக்குரிய பிரசாபத்தியனாகியும், வந்த-முறையாக வந்த, உபசாந்தம் அது ஆய்-பரமாதீதமாய்ச் சாந்தப்பமெ சிவசுழுத்தியாகியும், மவுனம் ஆகி-மனமிறந்த மவுன நிலையாகியும், மகா மவுனம் நிலைஆகி-மௌனாதீத நிலையாகியும், வயங்காநின்ற - விளங்காநின்ற, அந்தம் இல் - முடிவில்லாத, தொம்பதம் ஆய் - நீ யென்னும் சீவனை யுணர்த்தும் தொம்பதமாகியும், அதீதம் ஆய் - அது என்னும் பரத்தை யுணர்த்தும் தற்பதமாகியும், ஒன்றும் - ஐக்கியப்படுகின்ற, அசி பதம் ஆய் - சிவம் ஆனாய் என்னும் பொருளையுணர்த்தும் அசிபதமாகியும், அதீதம் ஆய்-வாக்குமனாதீத மாகியும், அமர்ந்த-முத்தியுலகிற்பொருந்திய, தேவே-மஹாதேவனே. எ - று.

(விசேஷஉரை.) இத் திருவிருத்தம் வேதாந்த மெய்ப்பொருளை யுணர்த்து கின்றது.

**ஞானேந்திரியங்கள்:**—சோத்திரம் (செவி), தொக்கு (மெய்), சட்சு (கண்), சிங்குவை (நாக்கு), ஆக்கிராணம் (மூக்கு) ... என 5.
**கன்மேந்திரியங்கள்:**—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என 5.
**ஞானேந்திரிய விஷயங்கள்:**—சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் ... என 5.
**கன்மேந்திரியவிஷயங்கள்:**—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என 5.
**அந்தக்கரணங்கள்,**—மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ... என 4.

ஆக 24.

இந்த அசித்துருவத் தத்துவங்கள் இருபத்து நான்குடன், சிவோயாதிகளை யுந்தழுவி "இந்தியமாய்க்கரணாதி யனைத்துமாகி" என்றார். சித்துருவத்தத்துவங் கள்:—புருடன், காலபரம், வியோமம், பரம் என நான்காம். இத்தத்துவங்கள் இருபத்தெட்டும் சகசிவ பரமாக விளங்கும். "இந்தியமா ..யனைத்துமாகி" என்பது சகம். இயல்புருடன் என்பது முதல் வியோமமாய் என்பதுவரையும் சீவன்; பர மாய் என்பது பரம். "இந்தியமாய்க் கரணாதியனைத்துமாகி" யென்பது சீவான்மா வசிக்கும் தூலசூக்கும காரண சரீரங்களையும் உபாதிகளையுமுணர்த்துவதாம்.

இயல்புருடன் என்பது பரனுக்குத்தூல தேகமாய்ப் பரசாக்கிர நிலையையும், காலபரமுமாய் என்பது பரனுக்குச் சூக்குமதேகமாய்ப் பரசொப்பன நிலையையும், பந்தமற்ற வியோமமாய் என்பது பரனுக்குக்காரண தேகமாய்ப் பரசுழுத்தி நிலை யையும் உணர்த்தி, இம்மூன்று சொற்றொடர்களும் தொம்பதத்துக்குரிய சீவன் பரனுக்குத் தேகமாய் நிற்பதை விளக்கின. பரமாய் என்பது பாதுரியத்துப் பர சொரூபம் சிவத்துக்கு அங்கமாதலையும்; அப்பாற் பரம்பரமாய் என்பது சிவசாக்கிர நிலையையும்; விசுவமுண்ட பான்மையாகி என்பது சிவசொப்பன நிலையையும்; வந்த உபசாந்தமதாய் என்பது சிவசுழுத்தியையும் உணர்த்தி, இம்மூன்று சொற்றொடர் களும் சிவத்துக்குப் பரன் மூவகைத் தேகமாய் நிற்பதை விளக்கினமை காண்க. மௌனம் என்பது சிவதுரியமாகிய குருபதம்.

"வேதாந்த தத்துவம் இருபத்தெட்"டென்பதற்குப்பிரமாணம்:—

"நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்
வேறான வையைந்து மெய்ப்புருடன் பரங்
கூறா வியோமம் பரமெனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்த தத்வமே." (திருமந்திரம்.)

"பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமு முள்ளுணர் காலமும்
மெய்த்த வியோமமு மேலைத் துரியமும்
தத்துவ நாலே ழெனவுன்னத் தக்கதே." (திருமந்திரம்.)

"**துரிய பதம் மூன்**" றென்பதற்குப்பிரமாணம்:—

"சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பாதுரி யத்தினிற் றற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பதம்
ஓவி விடுந்தத்துவமசி யுண்மையே." (திருமந்திரம்.)

அனைத்தும் என்பதிலுள்ள உம்மை முற்றும்மை. பரமும் இதில் உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை. இயல் புருடன் - வினைத்தொகை. (எ)

---

**8.** சின்மயமா யென்மயமா யொன்றுங் காட்டா நிராமயமாய் நிருவிகற்பநிலை யாய் நிமலமாய், தன்மயமாய்த் தற்பரமாய் விமலமாகித் தடத்தமாய்ச் சொரூப மாய்ச் சகசமாகிச், சின்மயமாய்ச் சிற்பரமா யசல மாகிச் சிற்சொலித மாயகண்ட சிவமா யெங்கு, மன்மயமாய் வாசகா தீத மாகி மனாதீத மாயமர்ந்த மௌனத் தேவே.

(பதவுரை, சின் மயம் ஆய்-சினது நீ யென்னும் பொருண்மயமாகியும், என் மயம் ஆய் - எனது யான் என்னும் பொருண்மயமாகியும், ஒன்றும் காட்டா - தன க்கு அன்னியமாக வொருபொருளையுங் காட்டாத, நிர் ஆமயம் ஆய் - நோயற்ற வாழ்வுடைப்பொருளாகியும், நிர்விகற்பம் நிலை ஆய்-விகற்பமில்லாத நிலையாகியும்,

மேல் ஆம் - மேன்மையுடையதாகின்ற, தத் மயம் ஆய் - அதுவென்று தியானிக்கப் படுந் தியேய மயமாகியும், தத்பரம் ஆய் - (தற்பதத்தாலுணர்த்தப்படும்) அதுவென்னும் பரவத்துவாகியும், விமலம் ஆகி - மலரகிதப்பொருளாகியும், தடத்தம் ஆய் - தடத்த லக்ஷணமுடையதாகியும், சொரூபம் ஆய் - (தடத்தின் வேறாகிய) சொரூப லக்ஷணமுடையதாகியும், சகசம் ஆகி - இயற்கையில் விகாரமற்றதாகியும், சித்மயம் ஆய்-ஞான மயமாகியும், அசலம் ஆகி-சலனமற்றதாகியும், சித் சொலிதம் ஆய் - சிற்சொலிதை யென்னும் சிவசாக்கிர அபிமான நாமமுடையதாகியும், அகண்டம் சிவம் ஆய் - சர்வ பரிபூரண சிவமாகியும், எங்கும் - சராசரப் பிரபஞ்ச முழுதும், மன்மயம் ஆய் - (தலைமைபெற்ற) பதி மயமாகியும், வாசகம் அதீதம்ஆகி-சொல்லுக்கெட்டாததாகியும், மனம் அதீதம் ஆய் - மனதிற் கெட்டாததாகியும், அமர்ந்த - பொருந்திய, மவுனம் - மவுன நிலையையுடைய, தேவே-மஹாதேவனே. எ - று.

(விசேஷஉரை) தன்மைமுன்னிலைப் பொருண்மயமாகியும், அவையல்லாததாகியும், சனனமரண நோயடையாததாகியும் உள்ளபொருளென்பார் "நின்மயமா யென்மயமா யொன்றுங்காட்டா நிராமயமாய்" எனவும்; பெயர் சாதி குணம் கன்மம் பொருள் என வைந்தையும் பிரித்துணரும் விகற்ப வறிவினைக் கடந்த வுணர்வினிலையென்பார் "நிருவிகற்பநிலையாய்" எனவும்; தத்துவாதீதமாகிய தியேயம் (தியானிக்கப்படும்பொருள்) அது வென்பார் "தன்மயமாய்" எனவும்; ஆதிமத்தியாந்த ரகித சுயஞ்சோதிப் பொருளென்பார் "தற்பரமாய்" எனவும்; உயிர்களைப்பந்திக்கும் ஆணவம் மாயை கன்மமென்னு மும்மலத்தடையுமற்ற புனிதமுடையதென்பார் "விமலமாகி" எனவும்; கதிரோனுங்கதிருமபோலச் சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சர்வ வியாபியாய்ப் பொதுமையினின்று புறப்பொருளாகிய சகத்தினை நோக்கியருளும் பொதுவிலக்கணமும், புறப்பொருளை நோக்காமல் அறிவு மாத்திரையாக நிற்கும் சிறப்பிலக்கணமும், பேரறிவாய சைதந்நியம் ஒன்றே யுடையதென்பார் "தடத்தயாய்ச் சொருபமாய்" எனவும்; நிர்விகார சுபாவமுடையதென்பார் "சகசமாகி" எனவும் கூறினர். அனந்த ஞானமயமாகி நின்று சர்வானுபவங்களையு மனுபவியாம லனுபவித்து விளங்குவதென்பார் "சின்மயமாய்ச் சிற்பரமாய்" எனவும்; மலைபோல எக்காலத்தும் அசைவின்றி, எல்லாப் பொருட்கும் ஆதாரமாகியும், இலக்குகளிற் சிறந்த இலக்காகியும் விளங்குதலின் "அசலமாகி" எனவும் கூறினர்

அகண்ட வாக்கியத்தா லுணரப்படுதலின் "அகண்டசிவம்" எனப்பட்டது; பரர்களு மன்னவரொப்ப விதிவிலக்குகளை மன்னுயிருணர்ந்துகொள்ளுமாறு வேதாகமங்களை யருளித் தன் ஆணையிலாண்டு விளங்குஞ் சிவராஜமயமாகி யிருத்தலின் "மன்மயமாய்" என்னப்பட்டது. ஆன்மபோத பரபோதங்களுக் கதீதமான மௌனநிலைப் பொருளாகலின் "வாசகாதீதமாகி மனாதீதமாயமர்ந்த மௌனந் தேவே" யெனப்பட்டது.

"நினது நீ என்பனவும் எனது யான் என்பனவுங் கடந்தநிலை நிராமயம்" என்பதற்குப்பிரமாணம்:—

"எனதென்பதும்போயானெனல்போ யெல்லாமிறந்தவிடங்காட்டி
நினதென்பதும்போய்நீயெனல்போய் நிற்குநிலைக்கேநேசித்தேன்
மனதென்பதுமோவென்வசமாய் வாராதையசின்னருளோ
தனதென்பதற்குமிடங்காணேன் தமியேனெவ்வாறுய்வேனே." (தாயுமானவர்.)

"'தற்பரம் சிற்பரம்" என்பவைகட்குப்பிரமாணம்:—

"தற்பரந்தானே தனிமுதற்பேரொளி
சிற்பரந்தானே செகமுண்ணும் போதமும்
தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச்சோதிபுக்
கப்புறமற்றதிங் கொப்பில்லைதானே." (திருமந்திரம்.)

"அகண்டவாக்கியத்தாலுணர்த்தப்படும் சிவம்" என்பதற்குப்பிரமாணம்:—

"ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டுவிடாத விலக்கணைத்
தாருப சாந்தமே தொந்தத் தசியென்ப
வாகிய சீவன் பரன் சிவனுமே." (திருமந்திரம்.) (௩)

---

௨. அளவிறந்த நெடுங்காலஞ் சித்தர்யோக ரறிஞர்மல ரயன்முதலோரனந்த வேதங், களவிறந்துங் கரணாதியிறந்துஞ் செய்யுங் கடுந்தவத்துங் காண்பதரிதாங் கடவுளாகி, யுளவிறந்த வெம்போல்வா ருள்ளத்துள்ளே யூறுகின்ற தெள்ளமுத வூற லாகிப், பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந்தானாய்ப் பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே.

(பதவுரை) அளவு இறந்த - எல்லை கடந்த, நெடுகாலம் - நீண்ட காலம், சித்தர் - சித்தர்களும், யோகர் - யோகிகளும், அறிஞர் - விவேகிகளும், மலர் - தாமரை மலர்மேல் வசிக்கும், அயன் முதலோர் - பிரமன்முதலாகிய தேவர்களும், அனந்தம் வேதம் - அனந்தமாகிய வேதங்களும், களவு இறந்தும் - குற்றங்களை விட்டகன்றும், கரணம் ஆதி இறந்தும் - அந்தக்கரண முதலிய கருவிகள் நசிக்கப் பெற்றும், செய்யும் - செய்கின்ற, கடும் தவத்தும் - கடுமையான தவத்தினாலும், காண்பு அரிது ஆம் - காண்பதற்கு அருமையுடையதாகின்ற, கடவுள் ஆகி - பரவஸ்துவாகியும், உளவு-உபாயம், இறந்த-நீங்கிய, எம்போல்வார் - எளிய தொண்டராகிய எம்மையொப்பவருடைய, உள்ளத்து உள் ஏ - மனத்தினுள்ளே, ஊறுகின்ற-சுரக்கின்ற, தெள் தெளிந்த, அமுதம் ஊறல் ஆகி - அமுதத்தின் ஊற்றாகியும், பிளவு இறந்து-நீக்கமின்றி, பிண்டம் அண்டம் முழுதும் தான் ஆய்-பிண்டகோடி அண்டகோடி முழுதுந் தானிறைந்ததாகியும்,பிறங்குகின்ற-விளங்காநின்ற,பெரும்கருணை-பெரியதாகிய கருணையையுடைய, பெரிய தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை) தற்போதத்துடன் செய்யுங் காமிய தவத்தை யுடையவர் எத்துணைச் சிறப்பினையுடையவராயிருப்பினும் அவர் காணுவண்ணம் கரந்து நிற்பவனாகலின்,"சித்தர் முதலியோர் கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவுளாகி" யெனவும்; தற்போதத்தையும், அதனோடு சாதிக்குந் தவங்களையும், யாகங்களையும், பிற உபாயங்களையுங் கைவிட்டு, இறைவன்சரணமே நமக்குச் சரணம் எனத் தொண்டு பூண்டு, புறப்பற்று அகப்பற்று நீக்கி, அன்புசெய்து, கசிந்துருகித் தோத்திரம் புரிந்து, திருவருளையே நாடி நிற்கும் அடியாருள்ளத்தில் இனிக்கும் பொருளாய்த் தோன்றி யருளுந் தொண்டர்க் கெளியவனாகலின் "உளவிறந்த வெம்போல்வாருள்ளத்துள்ளே யூறுகின்ற தெள்ளமுதவூறலாகி" யெனவுங் கூறினார்.

பிண்டமும் அண்டமுந் தானேயாகியும், அவற்றுடனாகியும், அவற்றின் வேறாகியும் கலந்து நீக்கமற நிறைகின்ற பரிபூரணனாகவும்,அவ்வண்டபிண்டங்களுணிறைந்த மன்னுயிர்க்குபகரிக்குந் தன்னொப்பில்லாத கருணாநிதியாகவும், மகாதேவன் இருத்தலின் "பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந்தானாய்ப் பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரியதேவே" என்றார்.

பிண்டாண்டம் வடமொழித்தொடர்; தீர்க்க சந்தி. சித்தராவார் - ஞானசித்தி யடைந்தோர். யோகராவார்:—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யெனப்படும் அட்டாங்க யோகப்பயிற்சி யுடைய சகமார்க்கிகள். அறிஞராவார்:—அறிவிற்சிறந்த இருடிகண் முனிவராதியோர். அயன் முதலோர் :—பிரம விஷ்ணு ருத்திர மகேச சதாசிவர்கள்; அன்றியும் இந்திரன் முதலிய திக்குப்பாலகரும் பிறருமாம். வேதம்:—இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னு நான்கு வேதங்கள்.

கடுந்தவமாவது:—உண்டி சுருக்கி, கானகம் மலைக்குகை முதலிய விடங்களில் வசித்து, புனலும் சருகும் வாயுவும் உணவாக வுட்கொண்டு, நித்திரையின்றி, பனி வெயின் மழை முதலியவற்றின் கொடுமைகளைச்சகித்து, பஞ்சாக்கினிமத்தியிலசைவறவிருந்து, மனத்தைப் புருவமத்தி நாசிநுனி முதலிய தானங்களில் நிறுத்தி, உடலாதியை யொறுத்துச் சித்திபுத்திகளை விரும்பிச்செய்யுந் தவமென்க.

"கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவுள்" என்பதற்குப் பிரமாணம்:—

"புற்று மாய்மர மாய்ப்புனல் காலேயுண்டி யாயண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணு மன்னவென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றி னாய் பதையேன் மனமிகவுருகேன்பரிகி லேன்பரி யாவுடறன்னைச்
செற்றிலேனின்னுந் திரிதருகின்றேன் றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே."
(திருவாசகம்.)

"அன்ப ராகிமற் றருந்தவ முயல்வாரயனு மாலுமற் றழலுறு மெழுகா
மென்ப ராய்நினை வாரெனைப் பலர் நிற்கவின்றெனை யெற்றினுக்காண்டாய்
வன்பராய்முரு டொக்குமென்சிந்தை மரக்க ணென்செவி யிரும்பினும்வலிது
தென்பராய்த்துறை யாய்சிவலோகா திருப்பெருந்துறை மேவியசிவனே."
(திருவாசகம்.)

"தெள்ளமுதவூறல்" என்பதற்குப் பிரமாணம்:—

"அருட்பெருந்தீயி னடியோமடிக்குடில்
ஒருத்தரும்வழாமை யொடுக்கினன்
தடக்கையினெல்லிக் கனியெனக்காயினன்
சொல்லுவதறியேன் வாழிமுறையோ
தரியேனாயேன் றானெனைச்செய்தது
தெரியேனுவா செத்தேனடியேற்
கருளியதறியேன் பருகியுமாரேன்
விழுங்கியு மொல்லகில்லேன்
செழுந்தண்பாற் கடற்றிரைபுரைவித்
துவாக்கடலுள்ளுநீ ருள்ளகந்ததும்ப
வாக்கிறந்தமுத மயிர்க்கால்றோறுந்
தேக்கிடச் செய்தனன்." எனவும்,

ஆன்றோர் கூறியவாற்றாற்காண்க.

"வேதங்களும் வானோரும் மாதவரும் பிறரும் சிவத்தை வழிபட்டனர்" என்பதற்குப் பிரமாணம் :—

"சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கு
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
விதுகண் ணிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொளுங்கருத் தாலே." (தேவாரம்.)

"வானோர்மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத்த விருந்தீ யென்கொல்
கானார் நடுவே யுளனா கருத்தே." (தேவாரம்.)

எனத் திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளின திருமறைக்காட்டுத்தேவாரத்திற் காண்க.

கடுந்தவத்தும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்பு. களவிறந்தும் கரணாதியிறந்தும் இவற்றிலுள்ள உம்மைகள் இறந்ததும் எதிரதுந் தழீஇய எச்சவும்மைகள். முழுதும் இதில் உம்மை முற்றும்மை. பெரிய பண்படியாகப்பிறந்த குறிப்பு வினைப்பெயரெச்சம். (கூ)

---

10. வாயாகி வாயிறந்த மௌனமாகி மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய்மற்றைக் கருவிகரணாதிகளின் கலப்பாய்ப்பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித் தானாகி நானாகிச் சகலமாகி
யோயாத சத்தியெலா முடையதாகி யொன்றாகிப் பலவாகி யோங்குந்தேவே

(பதவுரை.) வாய் ஆகி - வாக்குகளாகியும், வாய் இறந்த - வாக்குகளுக்கெட்டாத, மௌனம் ஆகி - சும்மாவிருக்கும் மௌனநிலையாகியும், மதம் ஆகி - மதங்களாகியும், மதம் கடந்த -மதங்களுக்கு அதீதமான, வாய்மை ஆகி-மெய்ப்பொருளாகியும், காய் ஆகி - காயாகியும், பழம் ஆகி - கனி ஆகியும், தரு ஆய் - விருக்கமாகியும், மற்றை - இவற்றின் வேறாகிய, கருவி - ஞானகருமேந்திரியங்கள், கரணம் - அந்தக்கரணங்கள், ஆதிகளின் - முதலிய தத்துவங்களினோடு, கலப்பு ஆய் - கூடுங்கலப்பினையுடையதாகியும், பெற்ற - ஈன்ற, தாய் ஆகி - அன்னையாகியும், தந்தை ஆய் - பிதா ஆகியும், பிள்ளை ஆகி - சந்ததியாகியும், தான் ஆகி - தான் என்னும் பொதுப்பெயர் ஆகியும், நான் ஆகி - நான் என்னுந் தன்மைப் பெயராகியும், சகலம் ஆகி - நாம ரூபப்பிரபஞ்ச முழுதுமாகியும், ஓயாத - அடங்காத, சத்தி எல்லாம் - எல்லா வல்லப சத்திகளும், உடையது ஆகி - உடைத்தான பொருளாகியும், ஒன்று ஆகி - ஏகமாகியும், பல ஆகி - அனேகமாகியும், ஓங்கும் - நீண்டு வளர்கின்ற, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) காரணசரீரத்தினுள் ஞானத்திற் கேதுவாகிவிளங்குஞ் சோதிவடிவினதாகி, அழிவுறாது, தன்னை த்தரிசித்தவர்க்குப் பேரறிவும் முதன்மையும் சனனமரணமில்லாத வாழ்வுந் தருகிற சூக்குமையும்; பஞ்சவன்னங்களையும் தன்னுள்ளடக்கி நிற்கும் மயின்முட்டையிற் சலம்போலப் பல வெழுத்துக்களையுந் தன்னுள்ளடக்கிக்கொண்டு, சூக்கும வடிவொடு பிரகாசிக்கும் நிருவிகற்ப வுணர்விற்கு ஏதுவான பைசந்தியும்; சவிகற்ப வுணர்வினுக்குக் காரணமாகியும், ஒலிவடிவு பெறும் அக்கரமயமாகியும், உதானவாயுவாற் செலுத்தப்பட்டுத் தன்னுள் உணரும் ஓசையாகியுங் கண்டத்தினிற்கும் மத்திமையும்; நினைந்தபொருளைச் சொல்லும் சொல்லாகித் தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவதாகியும், பிராணவாயுவாற் செலுத்தப்பட்டு வாயினாற் சொல்லப்படுவதாகியும் காரியப்படும் வைகரியும்; ஆகிய நான்கு வாக்கும் எனக்கூறுவார் "வாயாகி" என்றார்.

வாயிறந்த மௌனம் - சொல்லிறந்த மௌனநிலை. மதமாகி யென்றது பல கோடிகளாகப்பிரிந்த மதங்களை. மதங்கள்:—சைவம், பாசுபதம், காளாமுகம், வயிரவம், வாமம், மாவிரதம் எனவும்; ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கிராந்தவாதி, ஈச்வர அவிகாரவாதி, நிமித்தகாரணபரிணாமவாதி எனவும்; உலகாயுதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்

டாவாதி, பட்டாசாரியம், பிரபாகரம், ஆசீவகமதம், சத்தப்பிரமவாதி, மாயாவாதி, பாஞ்சராத்திரம் எனவும் பலவாக விரிந்தனவாம். "மதங்கடந்த வாய்மை" யென்றது மதாதீத சமரச சுத்த சன்மார்க்க லட்சிய மெய்ப்பொருளென்க.

கருவாகியும், அதனிடத்துக் காய்த்தும் பழுத்துமுள்ள காயாகியும், பழமாகியுமிருப்பதென்றதனால் முதல்வன் தன்னை நன்குணராத சமயிகளின் சாதனைகளுக்கும் பரிபாக நிலைகளுக்குமேற்றபடிகாயாகிச் சுவையின்றியும், சுவை நிரம்பியும், இனியாமலும், இனித்தும் நிற்கின்ற தன்மை விளங்குதல் காண்க.

முதல்வன் அகம் ஆகிய ஆன்மாவிற் கூடி நிற்பதுபோல அகப்புறமாகிய சீவனிலும், புறமாகிய மனசிலும், புறப்புறமாகிய இந்திரியங்களிலும் கரணங்களிலும் கூடிநின்று விடையங்களை முன்பு தான் கண்டும், காட்டியும், உணர்ந்தும், உணர்த்தியும் விளங்குதலால் "கருவிகரணாதிகளின் கலப்பாய்" என்றார்.

"பெற்றதாயாகித் தந்தையுமாய்" என்றது கேவலாவத்தையுற்றிருந்த ஆன்மாக்களைச் சகலாவத்தைக்குக் கொணர்ந்து, தனுகரண புவனபோகங்களை யளித்து, வளர்த்துக் கருணை செய்து நீங்காது உயிர்த்தாயாகியும் தந்தையாகியும் முதல்வன் கூடி நிற்கும் உரிமையை நோக்கி யென்க.

எவ்வுயிர்க்குந் தந்தையும் தாயுமாயினான் தானே சந்ததிபெருகத் தருவோனாகி நிற்றலாற் "பிள்ளையாகி" எனக்கூறினர்.

"தானாகி" யென்றது முதல்வன் இருதிணை ஐம்பான்மூவிடங்களுக்கும் பொதுவாய், அவன்தான், அவள்தான், அவர்தான், அதுதான், அவைதான், நான்தான், நீ தான் எனக்கூடியும், அவையே தானாகியும் நிற்கும் பரிபூரணநிலையைக் குறிக்கின்றது. "சகலமாகி" யென்பது பஞ்ச கலைகளுக்குள் வைக்கப்பட்ட புவனங்களுள் விந்து மோகினி மான் என்னு மூவகை மாயைகளினுடலாதிபெற்ற விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்களையுந் தழுவுவது; முடிவிலாற்றலுடைமை தோன்ற "ஓயாத சத்தியெலாமுடையதாகி" எனப்பட்டது. தேவர் இருவர் அடிமுடிதேடிய நாளிற் கீழ்மேலு நீண்டுவளர்ந்த மாதேவன் என்பது தோன்ற 'ஓங்குந்தேவே' யென்றார்.

"வாக்குகள் நான்கு" என்பதற்குப் பிரமாணம்:—சிவஞான சித்தியார் சுபக்கம் முதற் சூத்திரம்.

**சூக்குமை வாக்கு :—**

"சூக்குமை வாக்கதுள்ளே சோதியா யழிவதின்றி
யாக்கிடு மதிகாரத்திற் கழிவினை தன்னைக்கண்டால்
நீக்கமி லறிவானந்த முதன்மைநித் தியமுடைத்தாய்ப்
போக்கொடு வரவிளைப்பும் விகாரமும் புருடனின்றும்."

**பைசந்தி வாக்கு :—**

"வேற்றுமைப் பட்டவன்னம் வெவ்வேறு விபாகமாகித்
தோற்றுத லடைவொடுக்கிச் சொயம்பிர காசமாகிச்
சாற்றிய மயிலினண்டந் தரித்திடுஞ் சலமேபோன்றக்
காற்றவே யுடையதாகிப் பைசந்தி யமர்ந்துநிற்கும்."

**மத்திமை வாக்கு :—**

"உள்ளுணர் ரோசையாகிச் செவியினி லுறுதல்செய்யா
தொள்ளிய பிராணவாயு விருத்தியை யுடையதன்றித்
தெள்ளிய வக்கரங்கள் சேர்ந்திடுஞ் செயலதின்றி
மெள்ளவே யெழுவதாகு மத்திமை வேறதாயே."

வைகரி வாக்கு :—

"வைகரி செவியிற்கேட்ப தாயத்த வசனமாகி
மெய்தரு முதானவாயு மேவிட விளைந்தவன்னம்
பொய்யற வடைவுடைத்தாய்ப் புந்திகா ரணமதாகி
யையமில் பிராணவாயு வடைந்தெழுந் தடைவுடைத்தாம்."

"மதம் அல்லது சமயநெறிகள் பல" வென்பதற்கும், "சமயாதீதப்பொருள்" என்பதற்கும் பிரமாணம் :—

"நூறுசமய முளவா நுவலுங்கால்
ஆறுசமய மவ்வாறுட் படுவன
கூறுசமயங்கள்கொண்ட நெறிநில்லா
நீறுபரநெறி யில்லாநெறி யன்றே." (திருமந்திரம்.)

"ஆறுசமயமுங் கண்டவர்கண்டிலர்
ஆறுசமயப்பொருளும் பயனில்லை
தேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின்
மாறுதலின்றி மனைபுகலாமே." (திருமந்திரம்.)

"பழமாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"ஒன்றுகண் டீருலகுக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீருலகுக் குயிராவது
நன்றுகண் டீரினி நமசி வாயப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்தவாறே." (திருமந்திரம்.)

"கருவிகரணாதிகளின் கலப்பா" யென்பதற்குப் பிரமாணம் :—

"இருதயந் தன்னி லெழுந்த பிராணன்
கரசரணாதி கலக்கும்படியே
வரதனமன்றினுண் மாணிக்கக்கூத்தன்
குரவனா யெங்கணுங்கூத் துகந்தானே." (திருமந்திரம்.)

"தாயாகித் தந்தையாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"அம்மையப்பரேயுலகுக் கம்மையப்பரென் றறிக
அம்மையப்பரப்பரிசே வந்தளிப்பர் - அம்மையப்பர்
எல்லாவுலகிற்கு மப்புறத்தா ரிப்புறத்தார்
அல்லார்போ னிற்பாரவர்." (திருக்களிற்றுப்படியார்.)

"பிள்ளையாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"ஆன்மாவே மைந்த னாயின னென்பது
தான்மா மறையறை தன்மை யறிகிலர்
ஆன்மாவே மைந்த னரனுக் கிவனென்றல்
ஆன்மாவு மில்லையா லையைந்து மில்லையே." (திருமந்திரம்.)

"தானாகிய நானாகிய முதல்வனிருத்தற்கு" ப்பிரமாணம் :—

"பெருந்தன்மை தானெனயானெனவேறா
யிருந்ததுமில்லைய தீசனறியும்."

"நானிது தானென நின்றிவ னாடொறு
மூனிதுதானுயிர் போலுணர் வானுளன்." (திருமந்திரம்.)

"வல்லபசத்தி" யுடைமைக்குப் பிரமாணம் :—

"இல்லதுசத்தி யிடந்தனிலுண்டாகிக்
கல்லொளிபோலக் கலந்துள்ளிருந்திடும்

வல்லதுவாக வழிசெய்தவப்பொருள்
சொல்லதுசொல்லிடிற் றூராதிதூரமே." (திருமந்திரம்.)

"ஒருவ னொருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டு மெல்லாம் விளைக்கும்
பருவங்க டோறும் பயன் பலவான
திருவொன் றிற்செய்கை செகமுற்று மாமே." (திருமந்திரம்.)

"ஒன்றாகிப் பலவாகி" யென்பதற்குப்பிரமாணம்:—

"புவனா பதிமிகு புண்ணிய னெந்தை
யவனே யுலகி லடர்பெரும் பாகன்
அவனே யரும்பல சீவனு மாகும்
அவனே யிறையென மாலுற்ற வாறே." (திருமந்திரம்.)

"ஓங்குந்தேவே" யென்பதற்குப்பிரமாணம்:—

"நின்றா னிலமுழு தண்டத்து னீளியன்
அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றா ரிருவர் திருவடி மேற்செல
நன்றாங் கழலடி நாடவொண் ணாதே." (திருமந்திரம்.)

"காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தயனுங் காணாவண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்றதொல்லைத்
திகழொளி யைச்சிந்தைதனை மயக்கந் தீர்க்கு
மேரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு
மேழுலகுங் கடந்தண்டத் தப்பா னின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே." (தேவாரம்.)

எனத்திருநாவுக்கரசுநாயனா ரருளிய திருத்தாண்டகத்தாலுங் காண்க. (௧0)

---

11. அண்டங்கள் பலவாகி யவற்றின்மேலு மளவாகி யளவாத வதீதமாகிப், பிண்டங்க ளனந்தவகை யாகிப்பிண்டம் பிறங்குகின்ற பொருளாகிப் பேதந்தோற்றும், பண்டங்கள் பலவாகி யிவற்றைக்காக்கும் பதியாகி யானந்தம் பழுத்துச் சாந்தங், கொண்டெங்கு நிழல்பரப்பித் தழைந்தஞானக் கொழுங்கடவுட் டருவாகிக் குலவுந்தேவே.

(பதவுரை.) அண்டங்கள் - அண்டங்கள், பல ஆகி - அனேகமாகியும், அவற்றின்மேலும் - அவைகளின்மீதும், அளவு ஆகி - பரிமாணமாகியும், அளவாத - அளக்கப்படாத, அதீதம் ஆகி - மேலானதாகியும், பிண்டங்கள் - உடல்கள், அனந்தம் வகை ஆகி - முடிவில்லாத வகுப்புகளாகியும், பிண்டம் - உடலினுள், பிறங்குகின்ற - விளங்குகின்ற, பொருள் ஆகி - பூதமுதலிய தத்துவங்கள் ஆகியும், பேதம் தோற்றும் - வேற்றுமை தோன்றுகின்ற, பண்டங்கள் - பதார்த்தங்கள், பல ஆகி - அனேகமாகியும், இவற்றை - இவைகளை, காக்கும் - இரட்சிக்கின்ற, பதி ஆகி - முதல்வனாகியும், ஆனந்தம் பழுத்து - பேரின்பப்பழம் பழுத்து, சாந்தம் கொண்டு - குளிர்ச்சியடைந்து, எங்கும் - எவ்விடத்திலும், நிழல்பரப்பி - நிழல் அல்லது சாயையைப் பரவச்செய்து, தழைந்த - நெருங்கித்தழைத்த, ஞானம் - ஞானத்திருமேனியுடைய, கொழு கடவுள் தரு ஆகி - மதர்த்த தேவதரு அல்லது கற்பகமாகியும், குலவும் தேவே - வியாபிக்கு மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) பிரமனண்டங்கள் முதலாகத் திருமாலண்டங்கள், உருத்திர னண்டங்கள் மகேசரண்டங்கள், சதாசிவாண்டங்களீறாகப் பலகோடி யண்டங்க ளுள்ளனவென்பார் "அண்டங்கள் பலவாகி" என்றும்; இவ்வண்டங்களின் பரிமா ணங்கள் ஒருவாறு அறிந்தபெரியோரால் அளவிடப்பட்டன வென்பார் "அளவாகி" யென்றும்; அவற்றின்மேல் அளவுக்கெட்டாது விளங்குவதென்பார் "அளவாத அதீத மாகி" என்றும்; சராசரவுயிர்களின் உடல்கள் அனந்தகோடி வகையினவாகத்தோற் றலின் "பிண்டங்களனந்தவகையாகி" யென்றும்; அப்பிண்டத்துள் வாழ்கின்ற உயிர்களும் பிற தத்துவங்களு மென்பார் "பிண்டம்பிறங்குகின்ற பொருளாகி" யென்றும் கூறினர். "பண்டங்கள்" என்றதனால் விலையுயர்ந்த நவமணிகளாகியும், பொன் முதலிய தாதுக்களாகியும், பல தேக சித்திகளுக்குரிய இரதம் கெந்தகம் முதலிய பாடாண வகைகளாகியும், மற்றும் மெய்யறிவு உதிப்பதற்கேதுவான கலை களாகியும் முதல்வன் அருளால் விளங்கி நிற்பதைக்கூறினர். "பதியாகி" என்றது தன் அருள் வெளியில் விளங்குவனவாகிய அண்டகோடிகட்கும் பிண்டகோடிகட்கும் பிற பொருள்கட்கும் தலைமைவாய்ந்த பரசிவத்தினை.

துன்பக்கனிபழுத்து, வெம்மைபடைத்து, எங்கும்வெயிலைப்பரப்பும், அஞ்ஞான ரூபமாகிய சமுசார விருட்சத்தினை யடைந்து வாடாமல், தன்னை யடைந்தவர்க்குப் பேரானந்தக்கனியையளித்துப் பிறவிவெயிலின் வெப்பத்தைத் திருக்கருணையாகிற குளிர்நிழலாற் போக்கியருளு ஞானவடிவுடைய கற்பக தருவா யுலகமுழுதும் வியாபித்து விளங்குதலின் "பேரானந்தம்பழுத்துச்சாந்தங்கொண்டோங்குநிழல் பரப்பித்தழைந்தஞானக் கொழுங்கடவுட்டருவாகித் தலவுந்தேவே" என்றார்.

"பலகோடி அண்டங்க" ளென்பதற்குப் பிரமாணம் :—

"ஒம்பறுபதி ரண்டம் பேதித்த வண்டம்
எறிகட லேழின் மணலள வாகப்
பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்
செறியுமண் டாசனத் தேவர் பிரானே." (திருமந்திரம்.)

"அளவாகி யளவாத அதீதமாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"ஆனந்த தத்துவ மண்டா சனத்தின்மேல்
மேனியைந் தாக வியாத்தமுப் பத்தாறுய்த்
தானந்த மில்லாத் தத்துவ மானவை
யீனமிலா வண்டத் தெண்மடங் காமே." (திருமந்திரம்.)

"பிண்டங்களனந்த வகை" யென்பதற்குப்பிரமாணம் :—

"அண்ட மெழுகோடி பிண்ட மெழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைக ளெழுகோடி
எண்டிசை சூழ்ந்த விலிங்க மெழுகோடி
அண்ட னடஞ்செயு மாலயந் தானே." (திருமந்திரம்.)

"பிண்டம் பிறங்குகின்ற பொருளாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"பிண்டத்திற் பிறந்ததொரு பொருளை மற்றைப் பிண்டத்தைப் படைத்த தனைப் பெரியவேதத், துண்டத்திற் பணிபொருளைச் சுடரேயாகிச் சுழல்காலாய் நீரா கிப் பாராயிற்றைக், கண்டத்திற் றீதுஞ்சமுதுசெய்து கண்மூன்று படைத்த கரும் பைப்பாலை, யண்டத்துக் கப்புறத்தார் தமக்கு வித்தை யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே." (தேவாரம்.)

"பண்டங்கள் பலவாகியும் பதியாகியு முள்ளார்" ளென்பதற்குப் பிரமாணம்:—

"தானே திசையொடு தேவருமாய்நிற்குந்
தானேயுடலுயிர் தத்துவமாய்நிற்குந்

தானேகடன்மலை யாதியுமாய்நிற்குந்
தானேயுலகிற் றலைவனுமாமே." (திருமந்திரம்.)

"உடலா யுயிரா யுலகம தாகிக்
கடலாய்க் கார்முகி னீர்பொழி வானாய்
இடையா யுலப்பிலி யெங்குந் தானாகி
யடையார் பெருவிழி யண்ண னின்றானே.' (திருமந்திரம்.)

"கடவுட்டருவாகித் தலவுந்தேவே" யென்பதற்குப் பிரமாணம் :—

"கருவே யென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்." (தேவாரம்.)

"கஞ்சனூர்க் கற்பகத்தைக் கண்டேனானே."
(திருவாவடுதுறைத் திருத்தாண்டகம், தேவாரம்.)

"சேர்ந்திருந்தேன் சிவனுவடுதண்டுறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியினீழலில்." (திருமந்திரம்.)

என்னும் ஆன்றோர் வாக்கானுணர்க. (கக)

---

**12.** பொன்னாகி மணியாகிப் போகமாகிப் புறமாகி யகமாகிப் புனிதமாகி, மன்னாகி மலையாகிக் கடலுமாகி மதியாகி ரவியாகி மற்றுமாகி, முன்னாகிப் பின்னாகி நடுவுமாகி முழுதாகி நாதமுற முழங்கியெங்கு, மின்னாகிப் பரவியின்ப வெள்ளந்தேக்க வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந் தேவே.

(பதவுரை.) பொன் ஆகி - பொருளாகியும், மணி ஆகி - இரத்தினமாகியும், போகம் ஆகி - வினைவாகியும், புறம் ஆகி - வெளியிடமாகியும், அகம் ஆகி - உள்ளிடமாகியும், புனிதம் ஆகி - தூய்மையாகியும், மன் ஆகி - நிலைபேறுடையதாகியும், மலை ஆகி - மலையாகியும், மதி ஆகி - சந்திரனாகியும், ரவி ஆகி - சூரியனாகியும், மற்றும் ஆகி - பிறவொளிப்பொருள்களாகியும், முன் ஆகி - ஆதியாகியும், பின் ஆகி - அந்தமாகியும், நடுவும் ஆகி - மத்தியமாகியும், நாதம் உற - ஓசையுண்டாக, முழங்கி - ஒலித்து, எங்கும் - எவ்விடத்தும், மின் ஆகி - மின்னலாகி, பரவி - பரந்து, இன்பம் - ஆனந்தமாகிய, வெள்ளம் - பிரவாகமானது, தேக்க - நிறையும்படி, வியன்கருணை - பெருமையுடைய அருண்மழையை, பொழி - பொழிகின்ற, முகில் ஆய் - மேகமாகியும், விளங்கும் - துலங்குகின்ற, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) களங்கமின்றி, ஒளியுடைத்தாய், யாவரும் விரும்பிக்கொண்டு போற்றுந் தகைமினதாய், தன்னையின்றி யுலகர்வாழ்க்கை மேம்படாது தாழ்வடையக் காரணமாய் நிற்கின்ற பொன்னேபோல இறைவன் விளங்குதலால் "பொன்னாகி" யென்றும்; கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரேரியம், வைரம் எனப்படும் நவமணிகள்போலப் பிரம விஷ்ணு ருத்திர மகேச சதாசிவ விந்துநாத சத்தி சிவங்களாகிய நவபேதங்களை யுடையனாகி விளங்குதலான் "மணியாகி" யென்றும்; ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம் எனப்படும் போகபூமிகளிற் பெறப்பட்ட போகங்களனைத்தும் கீழாக மேற்பட்டுத் தேவரும், சித்தரும், ஞானிகளும், பிறரும் அனுபவிக்க நாடும் பேரின்ப சுகமளிக்கும் சாசுவத சிவபோகமாதலின் "போகமாகி" என்றும்; தன்னையன்றிப் புறமும் அகமும் இன்மையால் "புறமாகி யகமாகி" யென்றும்; மலரகிதப்பொருளாகி, வழிபடுவாரைப் புனிதராக்குந் தன்மை யுடைமையாற் "புனிதமாகி" என்றும்; எவற்றினுக்கும் தலைமை படைத்து நித்தியமாகி நிலைபெறுதலான் "மன்னாகி" என்றும்; எக்காலும் குறைவுறா வளமுடைமையானும், மாட்சிமையுற்றோங்குதலானும், உலகிற்காதாரமாய்ச் சூழ்ந்துள்ளமையானும்,

அருட்பெருக்குடைமையானும் "மலையாகிக்கடலுமாகி" யென்றும்; உலகிற்கு இரண்டு விளக்காகியும், கண்களாகியும், உடலாகியும், உயிராகியும் நிற்றலான் "மதியாகி ரவியாகி" என்றும்; உடலுயிரோடு சூழ்ந்த தத்துவங்கள்போலத் தாராகணமாகி விளங்குதலான் "மற்றுமாகி" என்றும் கூறினர்.

'மூன்றாகி' யென்றதனுன் "மூன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருள்" ளாயினமையும், 'பின்னாகி'யென்றதனாற் "பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியன்" ஆயினமையும் பெற்றாம். "நடுவாகி"என்றது எவ்வுயிருக்கு மிறைவன் இதய புண்டரீக மத்தியிலிருப்பவன்; அன்றியும் நடுநாடியினின்று விளங்குபவன் என்னும் உண்மையைத் தெரிவிக்குஞ் சொற்றொடர். சருவ வியாபியாயும், சருவசுதந்தரனாகியும், அகண்டாகார வத்துவாகியும் இருத்தலின் "முழுதாகி" யென்னப்பட்டது.

மேகமானது மழைபொழிவதன்முன் இடிமுழக்கஞ் செய்து மின்னி ஆகாய முழுதும்பரவிப் பிரவாகமுண்டாகப் பொழிதல்போல, மஹாதேவரும் பரநாதமுழக்கஞ்செய்து, பரவிந்துவின் ஒளியைக்காட்டி, அடியார்கள் மனவெளியெங்கும் நிறைந்து, ஆனந்தவெள்ளம் நிரம்பிப்பாயக் கருணைமழையைப் பொழிந்து விளங்குதலான் "நாதமுற முழங்கியெங்கு மின்னாகிப்பரவியின்ப வெள்ளந்தேக்க வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந்தேவே" என்றார். கருணை யென்பது மழையையுணர்த்திற்று. "பொன்னாகி மணியாகி" யென்பதற்குப் பிரமாணம்:—

"நின்னாவார்பிறரின்றி நீயேயானாய் நினைப்பார்கண்மனத்திற்கோர் வித்துமானாய், மன்னானாய்மன்னவர்க்கோ ரமுதமானாய் மறைநான்குமானா யாறங்கமானாய், பொன்னானாய் மணியானாய் போகமானாய் பூமிமேற்புகழ்தக்க பொருளேயுன்னை, யென்னானாயென்னானாயென்னினல்லா லேழையேனென்சொல்லியேத்துகேனே." (தேவாரம்.)

"புறமாகி யகமாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"புறத்தின ரகத்துளார் போற்றிநின் றழுதெழு மன்பர்சிந்தைத்
திறத்தின ரறிவிலாச் செதுமதித் தக்கன்றன் வேள்விசெற்ற
மறத்தினர் மாதவர் நால்வருக் காலின்கீ ழருள்புரிந்த
வறத்தின ரரிவையோ டிருப்பிட மம்பர் மாகாளந்தானே."(தேவாரம்.)

"புனிதனாகி" யென்பதற்குப் பிரமாணம் :—

"தூயவன்காணீறு துதைந்தமேனித்
துளங்கும்பளிங்கனைய சோதியான்காண்." (தேவாரம்.)

"குழைவார்சிந்தை, புக்கிருந்துபோகாத புனிதன்றன்னைப்
புண்ணியனையெண்ணருஞ்சீர்ப் போகமெல்லாந்
தக்கிருந்த தலையாலங் காடன்றன்னைச்
சாராதேசாலநாள் போக்கினேனே." (தேவாரம்.)

என்னும் சிரபுரத்தாண்டகம், தலையாலங்காட்டுத் திருத்தாண்டகம் பொலிக் கூறுமாறு காண்க.

"மலையாகிக்கடலுமாகி மதியாகி ரவியாகி" யென்பதற்குப் பிரமாணம் :— ஏழைத்திருத்தாண்டகம்.

"மந்திரமு மறைப்பொருளு மானான்றன்னை மதியமுஞாயிறுங் காற்றுந்தீயும்
அந்தரமுமலைகடலு மானான்றன்னை யதியரைய மங்கை யமர்ந்தான்றன்னைக்
கந்தருவஞ்செய்திருவர் கழல்கைகூப்பிக் கடிமலர்கள் பலதூவிக் காலைமாலை
யிந்திரனும்வானவருந்தொழச்செல்வானையேழையேனான் பண்டிகழ்ந்தவாறே"
(தேவாரம்.)

எனப்பேரறிவாளர் கூறியவாற்றானுணர்க. (௧௨)

**13.** அரிதாகி யரியதினு மரியதாகி யநாதியா யாதியா யருளதாகிப், பெரிதாகிப் பெரியதினும் பெரியதாகிப் பேதமா யபேதமாய்ப் பிறங்காநின்ற, கரிதாகி வெளிதாகிக் கலைகளாகிக் கலைகடந்த பொருளாகிக் கரணுதீதத், தெரிதான வெளிநடுவி லருளாம்வண்மைச் செழுங்கிரணச் சுடராகித் திகழுந்தேவே.

(பதவுரை.) அரிது ஆகி - பெறுதற்கரிய பொருளாகியும், அரியதின் உம் - அரியபொருளைப்பார்க்கிலும், அரியது ஆகி - மிக அருமையுடைய தொன்றாகியும், அநாதி ஆய் - அநாதியாகியும், ஆதி ஆய் - ஆதியாகியும், அருளது ஆய் - அருளுடையதாகியும், பெரிது ஆகி - பெரிய பொருளாகியும், பெரியதின் உம் - பெரிய பொருளைப்பார்க்கினும், பெரியது ஆகி-மிகப்பெரியதொருபொருளாகியும், பேதம் ஆய்-பேதமாகியும், அபேதம் ஆய் - பேதமில்லாததாகியும், பிறங்காநின்ற-விளங்காநின்ற, கரிது ஆகி - கருமையுடைய பொருளாகியும், வெளிது ஆகி - வெண்மையுடைய பொருளாகியும், கலைகள் ஆகி - ஞானநூல்களாகியும், கலைகடந்த - ஞானநூல்களைக்கடந்த, பொருள் ஆகியும் - வத்துவாகியும், கரணம் அதீதம் - அந்தக்கரணங்களோய்ந்தவிடத்து, தெரிது ஆன - விளங்குவது ஆன, வெளிநடுவில் - ஆகாசமத்தியில், அருள் ஆம் - கருணையாகிய, வண்மை-வளமுடைய, செழு கிரணம் - செழித்த கிரணத்தையுடைய, சுடர் ஆகி - ஞானபானுவாகி, திகழும் - விளங்கும், தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை) மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் உணர்ந்தோதுதற்கும் தேடியடைதற்கும் முடியாத அரியபொருளாயிருத்தலின் "அரிதாகி யரியதினு மரியதாகி" யென்றும்; முன்னைப்பழம்பொருளாகியும் அதனினும் பழம்பொருளாகியும் காலாதீதமாயிருத்தலின் "அநாதியா யாதியாய்" என்றும்; அருட்சத்தியைத் தனது குணமாகப்படைத்துள்ள குணியாக நிற்றலின் "அருளதாகி" என்றும்; மகத்தாகியும் மகத்துக்கு மகத்தாகியு மேம்பட்டிருத்தலின் "பெரிதாகிப் பெரியதினும் பெரியதாகி" என்றும்; ஒளியும் இருளும்போல் வேற்றுமையும், பொன்னும் பணியும்போல் வேற்றுமை யின்மையும் உடைத்தாயிருத்தலின் "பேதமாய்பேதமாய்" என்றும்; தாமதத்திற்றோன்றிய அஞ்ஞானமாகியும், சத்துவகுணத்திற் றோன்றிய ஞானமாகியு நிற்றலின் "கரிதாகிவெளிதாகி" என்றும்; அபரஞானமாயும் பரஞானமாயும் விளங்குதலின் "கலைகளாகிக் கலைகடந்த பொருளாகி" என்றும்; தத்துவச் சேட்டைகள் சிறிதுந்தோன்றாது நிற்கும் உபசாந்த வெளி நடுவில் துரியாதீத வத்துவாகிய சிவஞானபானு துரிசற்ற அருட்கிரணங்களை யெறிந்து சதோதயமாகப் பிரகாசித்தலின் "கரணுதீதத்,தெரிதான வெளிநடுவிலருளாம் வண்மைச்செழுங்கிரணச் சுடராகி" என்றும், இப்பெற்றியொடு விளங்கு மஹாதேவனே யென்பார் "திகழுந் தேவே" என்றுங் கூறினர்.

கரிதாகி என்பதற்கு ஆவரணசக்தி அல்லது அவித்தை யெனவும், வெளிதாகி என்பதற்கு விக்ஷேபசக்தி அல்லதுவித்தையெனவும் பொருள்கூறுவாருமுளர். கரிதாகியென்பதை அசுத்த மாயையாகி யெனவும், வெளிதாகி யென்பதைச் சுத்த மாயையாகி யெனவும் ஒருசாரார் பொருளுரைப்பர். தெரிதான என்பது தொகுத்தல் விகாரம்.

"அரிதாகி" என்பதற்குப்பிரமாணம்:—தேவாரம் - கோயிற்றிருத்தாண்டகம்.

"அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை" எனவும், "யார்க்குந் தெரியாத தத்துவனை" யெனவும், "காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங் கடிக்கமலத் திருந் தயனுங் காணாவண்ணம், சீரொளிய தழற்பிழம்பாய் நின்றதொல்லைத் திகழொளியை" எனவும்,

"மறையினு லயனுன் மாலான் மனத்தினுல் வாக்கான் மற்றுங்
குறைவிலா வளவினுலுங் கூறெணு தாகிநின்ற
இறைவனுர் கமலபாத மின்றியா ளியம்பு மாசை
நிறையினுர் குணத்தோர்க் கெல்லா நகையினை நிறுத்து மன்றே."

எனவும் கூறியவாற்றானுணர்க. (சிவஞானசித்தியார்.)

"அருளதாகி" என்பதற்குப் பிரமாணம்:—

"அருளது சத்தியாகு மரன்றனக் கருளையன்றித்
தெருள்சிவ மில்லையந்தச் சிவமன்றிச் சத்தியில்லை
மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க் களிப்பன்கண்கட்
கிருளினை யொளியாலோட்டு மிரவியைப் போலுமீசன்."

(சிவஞானசித்தியார்.)

"பெரிதாகிப் பெரியதினும் பெரியதாகி" என்பதற்குப்பிரமாணம் :—

"பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கு மொப்பின் மையான்." (திருவருட்பயன்.)

"அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரி
னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வின்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் றெரியின்." (திருவாசகம்.)

"பேதமா யபேதயா"யென்பதற்குப்பிரமாணம்:—தேவாரம். திருவீழிமிழலைத் திருப்பதிகம்.

"ஈறாய் முதலொன்றா யிருபெண்ணாண் குணமூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதம் மவையைந்தாய்
ஆறார் சுவை யேழோசையொ டெட்டுத் திசைதானாய்
வேறாயுட னானிடம்வீழிம் மிழலையே." (தேவாரம்.)

அன்றியும் பெருவேளூர்த்திருப்பதிகத்தில் :—

"நாதனா யுலகமெல்லா நம்பிரா னெனவு நின்ற
பாதனும் பரமயோகி பலபல திறத்தினாலும்
பேதமாய்த் தோன்றினாப் பெரு வேளூர்பேணினானை
யோதிநா வுடையனாகி யுரைக்குமா றுரைக்குற்றேனே." (தேவாரம்.)

என்ற திருவாக்கானுணர்க.

(௧௩)

---

**14.** உருவாகி யுருவினிலுள் ளுருவமாகி யுருவத்தி லுருவாகி யுருவுள்ளொன்றா
யருவாகி யருவினிலுள் ளருவமாகி யருவத்தி லருவாகி யருவுள் ளொன்றாய்க்
குருவாகிச் சததுவ சிற்குணத்ததாகிக் குணரகிதப் பொருளாகிக் குலவாநின்ற
மருவாகி மலராகி வல்லியாகி மகத்துவமா யணுத்துவமாய் வயங்குந்தேவே.

(பதவுரை) உரு ஆகி - தூல வடிவமாகியும், உரு இன் இல் உள் - அவ்வடிவத்தினுள், உருவம் ஆகி-சூக்கும வடிவமாகியும், உருவத்து இல் - அச்சூக்கும வடிவத்துள், உரு ஆகி - காரண வடிவமாகியும், உரு உள் - அக்காரண வடிவத்துள், ஒன்று ஆய் - மகா காரண வடிவமாகியும், அரு ஆகி - தூல அருவமாகியும், அரு இன் இல் உள் - தூல அருவத்தினுள், அருவம் ஆகி - சூக்கும அருவமாகியும், அருவத்து இல்-அச்சூக்கும அருவத்தில், அரு ஆகி - காரண அருவமாகியும், அரு உள் - அந்தக்காரண அரு

வத்துள், ஒன்று ஆய் - மகா காரண அருவாகியும், குரு ஆகி-உருவ அருவங்களுடைய குருவாகியும், சத்துவம் - சாத்வீகத்திலுண்டாகிற, சித்குணத்தது ஆகி-ஞானகுணத்தினையுடையதாகியும், குணம் ரகிதம்-குணங்களீங்கிய, பொருள் ஆகி-பொருளாகியும், குலவாநின்ற - சூழாநின்ற, மரு ஆகி - மணமாகியும், மலர் ஆகி - பூவாகியும், வல்லி ஆகி - கொடியாகியும், மகத்துவம் ஆய் - மகத்துவப்பொருளாகியும், அணுத்துவம் ஆய் - அதிசூக்குமப்பொருளாகியும், வயங்கும் - பிரகாசிக்கின்ற, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) உருவம் நான்கனுள் தூல சூக்கும காரண மகா காரண வுருவங்களுடைய பிரம விட்டுணு ருத்திர மாகேசர்களென்பார் "உருவாகியுருவினிலுள்ளுருவமாகி யுருவத்திலுருவாகி யுருவுள்ளோன்று" யெனவும்; அருவம் நான்கனுள் தூலசூக்கும காரண மகாகாரண அருவங்களுடைய விந்து நாதம் சத்தி சிவங்களென்பார் "அருவாகி யருவினிலுள் ளருவமாகியருவத்திலருவாகி யருவுள் ளோன்றாய்" எனவும்; அருவும் உருவுமுடைய பாவாகார மூர்த்தியா யனுக்கிரகிக்குஞ் சதாசிவனுகி யென்பார் "குருவாகி" யெனவும்; இராசத தமோகுணங்களின் வேறாகிய் சுத்தசாத்துவிகத்திற் சத்வகுணமுடைய சகுணப்பிரமமென்பார் "சத்துவ சித்குணத்ததாகி" எனவும்; நிர்க்குணப்பிரமமென்பார் "குணரகிதப்பொருளாகி" எனவும்; சேதனுசேதனப் பிரபஞ்சங்களின் உள்ளும் புறம்பும் மலரும் மணமும்போல வியாபித்துள்ளதென்பார் "குலவாநின்ற மருவாகி மலராகி" எனவும்; பிரபஞ்சந்தோன்றுதற்குக் காரணமாகிய அருட்கொடியென்பார் "வல்லியாகி" எனவும்; பெரிய பொருளும் சிறியபொருளுமாகி விளங்கு மஹாதேவன் என்பார் "மகத்துவமாயணுத்துவமாய் வயங்குந்தேவே" எனவுங் கூறினர்.

"உருவம்நான்கு அருவம்நான்கு உருவாருவமொன் றென்பதற்குப்பிரமாணம்:—

"சிவஞ் சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீசன்
உவந்தரு ளுருத்திரன்றன் மாலய னொன்றினொன்றாய்ப்
பவந்தரு மருவநாலிங் குருவநா லுபயமொன்று
நவந்தரு பேதமேக நாதனே நடிப்ப னென்பர்." (சிவஞானசித்தியார்.)

"அருவு முருவு மறிஞர்க்கறிவா
முருவு முடையா னுளன்." (திருவருட்பயன்.)

"குருவாகி அருள்புரிதற்கு"ப்பிரமாணம்:—

"மெய்ஞ் ஞானந்தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்துமன்றிப் பிரளயாகலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய்முன்." (சிவஞானபோதம்.)

"சகுணமாய் நிர்க்குணமாய் முதல்வன்" இருத்தற்குப்பிரமாணம்.:—

"அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி - நிகளமாம்
ஆணவமூல மலமகல வாண்டனன் காண்
மாணவக வென்னுடனாய் வந்து." (திருக்களிற்றுப்படியார்.)

"மலர்மணம்போல" என்பதற்குப்பிரமாணம்:—

"அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
வருவுருவ மன்றாகு முண்மை - யரு வுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது
தோன்றன்மலர் மணம்போற் றெரக்கு. (சிவஞானபோதம்.)

**15.** சகலமாய்க் கேவலமாய்ச் சுத்தமாகிச் சராசரமா யல்லவாய்த் தானேதானா, யகலமாய்க் குறுக்கமாய் நெடுமையாகி யவையனைத்து மணுகாத வசலமாகி, யிக லுறாத்துணையாகித் தனியதாகி யெண்குணமா யெண்குணத்தெம் மிறையாயென்று, முகலிலாத் தண்ணருள்கொண் டுயிரையெல்லா மூட்டிவளர்த் திடுங்கருணை யோவாத் தேவே.

(பதவுரை) சகலம் ஆய் - சகலாவத்தையாகியும், கேவலம் ஆய் - கேவலாவத்தையாகியும், சுத்தம் ஆய் - சுத்தாவத்தை யாகியும், சர அசரம் ஆய் - நடையுள்ளதும் இல்லதுமான உயிர்களாகியும், அல்ல ஆய் - அவை யல்லதாகியும், தான் ஏ - இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய „தானே, தான் ஆய் - நவாவத்தைக் கப்பாலுள்ள சச்சிதானந்த சிவமாகியும், அகலம் ஆய் - விரிவாகியும், குறுக்கம் ஆய் - குறுமையாகியும், நெடுமை ஆகி - நீளமாகியும், அவை அனைத்தும் - அகலக்குறுக்க நீட்சிமுழுதும். அணுகாத - நெருங்காத, அசலம் ஆகி - அசையாநிலையாகியும்; இகல் உறா - பகையில்லாத, துணை ஆகி - உயிர்த்துணையாகியும், தனிப்பது ஆகி - ஏகாந்தப்பொருளாகியும், * எண்குணம் ஆய் - தன்வயத்தனாதல் முதலிய எட்டுக்குணங்களாகியும், எண்குணத்து - எட்டுக்குணங்களுமுடைய, எம் இறை ஆய் - எங்கள் பதியாகியும், என்றும் - எக்காலத்தும், உகல் இலா - கெடுதலில்லாத, தண் அருள் கொண்டு - குளிர்ந்த காருணியத்தினாலே, உயிர் ஐ எல்லாம் - எல்லாசீவர்களையும், ஊட்டி - வினைப்போகங்களை யுண்பித்து, வளர்த்திடும் - பாதுகாக்கும், கருணை ஓவா - அருட்சத்தியினீங்காத, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) "சகலமாய்" என்பது மூவகையாருயிர்வர்க்கத்துள் ஆணவம் மாயை கன்மமாகிய மும்மலங்களையுடைய சகலர் அடையும் சகலாவத்தையை யுணர்த்துகின்றது. அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகை யோனியினும், பத்தொன்பது நூறுயிர பேதமுடைய தாவரங்களாகவும், பதினைந்து நூறுயிரபேதமுடைய ஊர்வனவாகவும், பத்து நூறுயிர பேதமுடைய நீர்வாழ்வனவாகவும், பத்து நூறுயிரபேதமுடைய பறவைகளாகவும், பத்து நூறுயிர பேதமுடைய மிருகங்களாகவும், பதினொரு நூறுயிரபேதமுடைய தேவர்களாகவும், ஒன்பது நூறுயிர பேதமுடைய மானுடராகவும் சகலர்கள் இருவினைகளாற் பிறந்தும், இன்பத் துன்பப் போகங்களை யனுபவித்தும், இறந்தும் உழல்கின்ற அவத்தை "சகலாவத்தை"யாம்.

"கேவலமாய்" என்பது கேவலாவத்தையை யுணர்த்துகின்றது. சரீரமில்லாமலும், கலாதியறிவுடன் சேராமலும், புத்தி முதலிய குணங்களையும் கருவிகளையும் பொருந்தாமலும், இச்சாஞானக் கிரியைகளில்லாமலும், சுதந்திரமின்றியும், போகத்துக்கொள்கையின்றியும், நித்தமாகியும், ஏகதேச வியாபகமின்றியும், ஆன்மா ஆணவமலத்துடன் கூடிநிற்கும் அவத்தையே "கேவலாவத்தை"யாம்.

"சுத்தமாகி" என்பது சுத்தாவத்தையை யுணர்த்துகின்றது. பிறந்தும் இறந்தும் உழல்கின்ற சகலராகிய ஆன்மாக்கள் இருவினையொப்பும் சத்திநிபாதமும் உறுதலாற் சிவஞானகுருசேவையும் அருளும்பெற்று, சனனமரண நீங்குதற்கேதுவாகிய ஞானயோகமடைந்து, ஞானத்திற்குத்தடையான மும்மலங்களுநீங்கி, சிற்றுணர்வு தீர்ந்து, ஞானம்பெருகச் சிவபிரான் திருவருளைக்கூடுதல் "சுத்தாவத்தை"யாம்.

---

* தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன.

"சகலாவத்தைக்கு"ப்பிரமாணம்:—

"உருவினைக் கொண்டுபோக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச்சத்த மாதியாம் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங்கெல்லா யோனியும் புக்குழன்று
திரிதருஞ் சகலமான வவத்தையிற் சீவன்சென்றே."(சிவஞானசித்தியார்.)

"தோற்றியிடு மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்
றுதைந்துவரு முற்பிச்சஞ் சராயுசங்க ளொன்றின்
ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்ப தென்று
மூர்வபதி னொந்தமரர் பதினொன் றேமேலவா
மாற்றருநீ ருறைவனநற் பறவைக ளேறக்காலி
மன்னியிடும் பப்பத்து மாநுடரோன் பதுமா
வேற்றியொரு தொகையாக வியம்புவர்கள் யோனி
யெண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே. (சிவப்பிரகாசம்.)

"இனையபல பிறவிகளி னிறந்து பிறந்தருளால்
இருவினைகள் புரிந்தருந்து மிதுசகலம்." (சிவப்பிரகாசம்.)

"மும்மலங்கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகளத்தர் தேவர் நரர்சுரர்
மெய்ம்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே." (திருமந்திரம்.)

"உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று
மருவுற்றுப் பூதமனாதியான் மன்னி
வருமச் செயல்பற்றிச் சத்தாதி வைகிக்
கருவுற்றிடுஞ் சீவன் காணுஞ் சகலத்தே." (திருமந்திரம்.)

"கேவலாவத்தைக்கு"ப்பிரமாணம் :—

"அறிவிலன மூர்த்தனித்த னராகாதி குணங்களோடுஞ்
செறிவிலன் கலாதியோடுஞ் சேர்விலன் செயல்களில்லான்
குறியிலன் கருத்தாவல்லன் போகத்துக் கொள்கையில்லான்
பிறிவிலன் மலத்தினோடும் வியாபிகே வலத்திலான்மா."
(சிவஞானசித்தியார்.)

"அறிவின்றி மூத்தோ னராகாதி சேரான்
குறியொன் றிலாநித்தன் கூடான்கலாதி
செறியுஞ் செயலிலான் றினங்கத்தா வல்லோன்
கிறியன் மலவ்யாபி கேவலன் றானே." (திருமந்திரம்.)

"சுத்தாவத்தைக்கு"ப்பிரமாணம்:—

"இருவினைச் செயல்களொப்பி னீசன்றன் சத்திதோயக்
குருவருள் பெறறுஞான யோகத்தைக் குறுகிமுன்னைத்
திரிமல மறுத்துப்பண்டைச் சிற்றறி வொழிந்துஞானம்
பெருகிநா யகன்றன்பாதம் பெறுவது சுத்தமாமே."(சிவஞானசித்தியார்.)

"இரு வினையொத்திட வின்னருட் சத்தி
மருவிட ஞானத்தி லாதன மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கிப் பிறவாமை சுத்தமே." (திருமந்திரம்.)

இனி இந்த மூன்றவத்தைகளையும் ஆணவம் மாயையென்னும் இருமலமுடைய பிரளாயகலர் அடையு முறைமை வருமாறு :—

நூற்றெட்டு ருத்திரர்களாகிய பிரளயாகலர் தம்மைப்பந்திக்கும் மாயை மயக்கு மாற்றை யுணராமல், அதனுடன் மயங்கிநிற்கும் கேவலாவத்தையும், சுத்த மாயையிலே சகலர் அறியாத வடிவுகொண்டிலவும் சகலாவத்தையும், அவர்போலத் திருமேனிகொண்டு பரசிவனருள மலநீங்கிச் சுத்தமுறுஞ் சுத்தாவத்தையும் பொருந்தாநிற்பர். இதற்குப்பிரமாணம்:—

"ஆணவத் தாரொன் றறியாத கேவலர்
பேணிய மாயை பிரளயா கலராகும்
காணு முருவினர் காணாமை காண்பவே
பூணுஞ் சகலமும் பாசமும் புக்கோரே." (திருமந்திரம்.)

"மாயையின் மன்னும் ப்ரளயா கலர்வந்து
மாயையுந் தோன்றா வகைநிற்க வாணவ
மாய சகலத்துக் காமிய மாமாயை
யேயமன் றூற்றெட் டுருத்திர ரென்பவே." (திருமந்திரம்.)

"விந்துவு மாயையு மேவுங் கிரியையுஞ்
சந்தஞான பரையுந் தனுச்சத்தி
விந்துவின் மெய்ஞ்ஞான மேவும்பிரளயர்
வந்தசகலசுத் தான்மாக்கள் வையத்தே." (திருமந்திரம்.)

ஆணவமல மாத்திரமுடைய விஞ்ஞானகலர் சகலகேவல சுத்தாவத்தைகள் உறுமாறு:—

சாதாக்கிய தத்துவத்திலுள்ள அனுசதாசிவர்களும், மகேசுர தத்துவத்திலுள்ள அட்டவித்தியேசுரரும், சுத்தவித்தியா தத்துவத்திலுள்ள சப்தகோடி மகாமந்திரேசுரருமாகிய மூவகை விஞ்ஞானகலர் ஆணவத்தால் ஞானத்தடையுறுங் கேவலாவத்தையும், சுத்தமாயையில் தனுகரண புவனபோகமுறுஞ் சகலாவத்தையும், மலபரிபாகப்பட்டவர்க்கு முதல்வன் அறிவிலே தோன்றியருள விந்துநாதங்களைவிட்டுப் பிரணவ தேகிகளாய்நின்று திருவருளடையுஞ் சுத்தாவத்தையும் பொருந்தாநிற்பர்

"விஞ்ஞானகலர் அடையும் கேவல சகல சுத்தாவத்தைக்கு"ப்பிரமாணம்:—

"ஆகின்ற கேவலத் தாணவத் தானவர்
ஆகின்ற வித்தேச ராமனந் தாதியர்
ஆகின்ற வெண்ம ரெழுகோடி மந்திரர்
ஆகின்ற வீச ரனேகரு மாமே." (திருமந்திரம்.)

"ஓரினு மூவகை நால்வகை யும்முள
தேரி விவைகே வலமாயை சேரிச்சை
சாரிய லாயிவை தானே தணப்பவை
வாரிவைத் தீசன் மலமறுத் தானே." (திருமந்திரம்.)

"கேவலந் தன்னிற் கிளர்ந்த விஞ்ஞாகலர்
கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியா
லாவயிற் கேவலத் தச்சக லத்தையு
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே." (திருமந்திரம்.)

"ஆமாறிற் சிவனு ரருள்பெற் றுள்ளோர்
போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாக்கி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வத்தைத் தொழிலே." (திருமந்திரம்.)

இந்தக் கேவல சகல சுத்த அவத்தைகள்—கேவலத்திற் கேவலம், கேவலத்திற் சகலம், கேவலத்திற் சுத்தம் எனவும்; சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தம் எனவும்; சுத்தத்திற் கேவலம், சுத்தத்திற் சகலம், சுத்தத்திற்சுத்தம் எனவும் ஒன்பது வகையாம். இவ்வொன்பது அவத்தைகட்கும் பிரமாணம் :—

"கேவலத்திற் கேவல மதீதா தீதங்
கேவலத்திற் சகலங்கள் வயிந்தவம்
கேவலத்திற் சுத்தங் கேடில்விஞ் ஞாகலர்க்
காவயினுத ணருண்மூர்த்தி தானே." (திருமந்திரம்.)

"சகலத்திற்கேவலஞ் சாக்கிராதீதம்
சகலசகலமே சாக்கிர சாக்கிரம்
சகலத்திற் சுத்தமே தற்பராவத்தை
சகலத்தி லிம்மூன்று தன்மையு மாமே." (திருமந்திரம்.)

"சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாம்
சுத்தசகலந் துரிய விலாசமாம்
சுத்தத்தி லிம்மூன்றுஞ் சொல்லலு மாமே." (திருமந்திரம்.)

இவ்வொன்பதுவகை அவத்தைகளையுந் தழுவிய சகலகேவல சுத்தாவத்தைகள் தன்னருளா னிகழ்வனவாகலானும், இவ்வவத்தையின்கண்ணு மூவகையாருயிர்வர்க்கத்தை இறையளவும் பிறிவின்றி வேறுயு முடனுயும் இறைவன் ஒன்றி நிற்றலானும், "சகலமாய்க்கேவலமாய்ச்சுத்தமாகி" என்றார். இறைவன் எல்லாமாகியும் அல்லனகியும் விளங்குதலாற் "சராசரமா யல்லவாய்" என்றார். சகத்தைநோக்கத் தனது சத்தியும், தன்னைநோக்கச் சிவமும் ஆக விளங்கும் சிவமும் சத்தியும் என இரண்டு பதிப்பொருள்கள் உண்டோ வென்பா ரைய நீக்கிச் சத்தி சிவத்தின் வேறன்றென வுணர்த்துவார் "தானே தானுய்" என்றார். "ஒன்றவன்றானே யிரண்டவனின்னருள்" என்று திருமூலர் திருவாய்மலர்ந்தருளியதூஉம் இவ்வுண்மையை யறிவுறுத்துவதற்கென்றுணர்க. தன் திருமேனி யெங்கணும் உள்ளதாகப் பரந்தமையும் குறுகிச் சுருங்கினமையும் கீழ்மேல் விசும்பூடுருவி நின்றமையுந்தோன்ற "அகலமாய்க் குறுக்கமாய் நெடுமையாகி" யென்றார்.

தேவாரத்திற் றிருவீரட்டானத் திருப்பதிகத்தில் "அகலமளக்கிற்பாரில்லாவடி" யென்றும்; "அரைமாத்திரையிலடங்கும்மடி" என்றும்; "நீள்விசும்பை யூடறுத்து நின்ற வடி" என்றும்; முதல்வன் திருவடி யகலக் குறுக்க நெடுமைகள் விளக்கப் பட்டமைகாண்க. "இகலுறத்துணையாகி" என்றது பெத்தத்திசையில் இறைவனது முதன்மையையும் சுதந்திரத்தையும் உபகாரத்தையும் சிறிதுங்கணித்தலின்றி ஆன்மா மறந்து தன்னையே முதல்வனுகவும் சர்வசுதந்தரனுகவும், தன் முயற்சியாலிருவினைப்போகங்களையுந் தானே தெரிந்துண்பவனுகவும் எண்ணித் தன்னைப்பிற் படுத்தாது முற்படுத்திச் சகலனுகிச் சொர்க்க மத்திய பாதாள நரகங்களிற் சென்றுழன்ற காலத்தும் உடனிருந்து பிறிவின்றியும் வெறுப்பின்றியும் உயிர்க்குற்றதுணையாய்நின்ற நிலைமை என்க. இதற்குப்பிரமாணம் :—

"கோலங்கொண்ட வாறுணராதே
ஞாலங்காவலன் யானெனக்கொளீஇப்
பொய்யைமெய்யெனப் புகன்றுவையத்
தோடாப்பூட்கை நாடிநாடா
வென்னுட்கரந்தென் பின்வந்தருளி
யென்னையுந்தன்னையு மறிவின்றியற்றும்

என்னதியானெனு மகந்தையுங்கண்
டியாவர்யாவையும் யாங்கணுஞ்சென்று
புக்குழிப்புக்குப் பெயர்த்துழிப்பெயர்த்து
மிக்கபோகம் விதியால்வினைத்திங்
கெற்பணியாளா யெனைப்பிரியாதே
யோடிமீள்கென வாடல்பார்த்திட்
டென்வழியிருந்தன னெந்தை." (இருபாவிருபஃது.)

தேவாரத்தில் திருப்பாதிரிப்புலியூர்த்திருப்பதிகத்தில் :—

"ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்
மூன்று யுலகம் படைத் துகந்தான் மனத்துள் ளிருக்க
வேன்று னிமையவர்க் கன்பன் றிருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன் றன்னடி யோங்களுக்கே."(தேவாரம்.)

"நற்றுணையாவது நமச்சிவாயவே" எனவும், "தனை நினையவல்லோர்க்கென்றும் பெருந்துணையை" எனவும் விளக்கியுள்ளமைகாண்க. "தனியநாகி" என்றது முதல்வன் எல்லாவுயிர்கண்மாட்டும் இரண்டறக்கலந்து நின்றானாயினும் அப்பதங்களி னீங்கித்தான் ஏகாந்தனாக நிற்குநிலையை யுணர்த்துவதாம்.

"எங்குமெவையுமெரியுறுநீர்போலேகந் தங்குமவன்றானே தனி" என உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன் கூறுமாறுகாண்க:—"எட்டுக்கொலாமவரீறில்பெருங் குணம்" என்றாங்கு "எண்குணத்தெம்மிறையாய்" எனவும் கூறினமை முதல்வன் குணமாகவும் குணியாகவு நிற்றலை விளக்கற்கென்க. எக்காலத்தும் எவ்வுயிர்கண் மாட்டும் பெருங்கருணை யுடையனாய்க் காத்தருளு முதல்வனென்பார் "என்றுமழகலி லாத்தண்ணருள் கொண்டுயிரையெல்லா மூட்டிவளர்த்திடுங்கருணை யோவாத் தேவே" என்றார். இதற்குப்பிரமாணம்:—

"எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோவில்லையோ
அவ்வுயிருள் யானொருவ னல்லவோ - வவ்வி
யருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்." (திருவள்ளுவர்.)

"கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன் - உருப்பெற்று
லூட்டி வளர்க்கானோ வோகெடுவா யன்னாய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்." (அதிகமான்.)

"ஆதிபடைத்தன னைம்பெரும்பூதங்கள்
ஆதிபடைத்தன னெண்ணிலிதேவரை
ஆதிபடைத்தவை தாங்கிநின்றானே." (திருமந்திரம்.)

தேவாரம் திருநாகைக்காரோணத் திருப்பதிகத்தில் :—

"தாசுடைய வகலல்குற் றூமொழியா ளுடல் தொலையாத காலத்தோர்சொற் பாடாய் வந்து, தேசுடைய விலங்கையர் கோன்வரையெடுக்க வடர்த்துத் திப்பிய கீதம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர், நேசமுடை யடியவர்கள் வருந்தாமையருந்த நிறைமறையோ ருறைவீழி மிழலைதனி னித்தங்,காசருளிச்செய்தீரின் றெனக்கருள வேண்டுங் கடனாகைக்காரோணமேவியிருந்தீரே." (தேவாரம்.)

எனச் சுந்தரமூர்த்திநாயனாருந் திருவாய்மலர்ந்தருளினமை காண்க. (கஉ)

16. வாசகமாய் வாச்சியமாய் நடுவாயந்த வாசகவாச்சியங் கடந்த மௌனமாகித்
தேசகமா யிருளகமா யிரண்டுங்காட்டாச் சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும்பந்
பாசமுறாப் பதியாகிப் பசுவுமாகிப் பாசநிலை யாகியொன்றும் பகராதாகி [த
நாசமிலா வெளியாகி யொளிதானாகி நாதாந்தமுடிவினட நவிற்றுந்தேவே.

(பதவுரை.) வாசகம் ஆய் - சொல்லாகியும், வாச்சியம் ஆய் - சொற்பொருளாகியும், நடு ஆய் - அந்தச்சொற்பொருளி னடுவாகியும், அந்த - அந்த, வாசகம் வாச்சியம் கடந்த - சொல்லையும் சொற்பொருளையுங்கடந்த, மவுனம் ஆகி - மவுன நிலையாகியும், தேசு அகம் ஆய்-ஒளியின் உள்ளாகியும், இருள் அகம் ஆய்-இருளின் உள்ளாகியும், இரண்டும்காட்டா-இவ்விரண்டு தன்மையையுங் காண்பியாத, சித்து அகம் ஆய் - சித்தினுள்ளிருப்பதாகியும், வித்தகம் ஆய் - ஞானமாகியும், சிறிது உம்- இறையளவும், பந்தம் பாசம் - கட்டாகிய பாசம், உறா - பொருந்தாத, பதி ஆகி - சக முதற்பொருள் ஆகியும், பசுவும் ஆகி - பசுத்துவமுடைய சீவனுமாகியும், பாசம் நிலை ஆகி - பெத்த நிலையாகியும், ஒன்றும் - தன் இலக்கணம் இத்தகையதெனச் சிறிதேனும், பகராதது ஆகி-சொல்ல முடியாததாகியும், நாசம் இலா-அழிவில்லாத, வெளி ஆகி - ஆகாசமாகியும், ஒளிதான் ஆகி - சோதி தானாகியும், நாதம் அந்தம் முடிவு இல் - ஆறந்தங்களுள் ஒன்றாகிய நாத தத்துவ முடிவென்னு நாதாந்தத்தின் மேல், நடம் - ஆனந்தத்திருக்கூத்தை, நவிற்றும் - நடித்தருளும், தேவே - மஹா தேவனே. எ - று.

(விசேஷஉரை.) சத்தார்த்தங்களாகும் இருவகைப் பிரபஞ்ச வுணர்வாகிய விந்து ஞானம் ஆயினன் என்பார் "வாசகமாய் வாச்சியமா" யெனவும்; அவ்வபர ஞானத்து நடுவிருந்த பொருளென்பார், "நடுவாகி" எனவும்; அபர ஞானத்திற்கு அதீதமாகிய இயற்கை மவுனசொரூபி யென்பார் "அந்த வாசக வாச்சியங் கடந்த மவுனமாகி" எனவும்; சோம சூரி யாக்கினி தாரா கணமாதி யொளியுள்ளபொருள் களினுள்ளும்,பூத இருள் முதலிய இருளினுள்ளும், அன்றியும் மெய்ஞ்ஞான வொளி யிலும் அஞ்ஞான விருளிலும் இருப்பவனென்பார் "தேசகமாயிருளகமா" யென வும்; இருளும் ஒளியுங்கடந்த சைதன்னியமென்பார், "இரண்டுங்காட்டாச்சித் தகமா" யெனவும்; ஞானமே திருமேனியாகக் கொண்டுள்ள சர்வஞ்ஞனென்பார் "வித்தகமாய்"எனவும்;ஒளிமுன் இருளணுகாதவாறுபோலப் பந்தபாச அஞ்ஞானம் ஒருசிறிதுந் தன்னைத்தீண்டாத அனாதிமுத்த சித்துருவாகிய பரசிவம் என்பார் "சிறிதும் பந்த பாச முறாப்பதியாகி" எனவும்; சராசரவுயிர்களும் அவற்றைச்சூழ்ந்து பந்தித்து நிற்கும் ஆணவ மாயை கன்மம் என்னப்பட்ட பாச சமுதாயமுந் தானா யினன் என்பார்"பசுவுமாகிப்பாசநிலையாகி"எனவும்; தனது சொரூபம் இத்தகைய தென எத்தகைப்பெரியோரானும் வேதாகமங்களானும் உணர்ந்தோதற்கரிதாகப் பெற்ற பொருளென்பார் "ஒன்றும்பகராதாகி" எனவும்; பகுதிவெளி, பூதவெளி, உயிர்வெளி, கலைவெளி, சுத்தவெளி, பரவெளி, பரம்பரவெளி, பராபரவெளி, பெரு வெளி, பெருஞ்சுகவெளி எனப்பட்ட வெளிகண்முழுது நிறைந்து சிதைவின்றி யாண்டும் விளங்கும் ஞானவெளி யென்பார் "நாசமிலா வெளியாகி" எனவும்; எல்லாவொளிகளையும் விளக்கும் பேரொளி தானென்பார் "ஒளிதானாகி" எனவும்; தத்துவாதீத ஞானானந்த நடன தேவசிகாமணி யென்பார் "நாதாந்த முடிவி னட நவிற்றுந்தேவே" எனவுங் கூறினர்.

"வாசக வாச்சியமென்னும் வயிந்தவ ஞானமாகி, அதனைக் கடந்தார்முதல்வர்" என்பதற்குப் பிரமாணம். தேவாரம்: திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்திருப்பதிகம்.

"சொன்மலிந்த மறைநான்கா றங்கமாகிச் சொற்பொருளுங் கடந்தசுடர்ச் சோதிபோலும், கன்மலிந்த கயிலைமலை வாணர்போலுங் கடனஞ்ச முண்டிருண்ட

கண்டர்போலு, மன்மலிந்த மணிவரைத்தின் டோளர்போலு மலையரையன் மடப் பாவைமணவாளர் போலும், கொன்மலிந்தமூவிலைவேற் குழகர்போலுங் குடந்தைக் கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே." (தேவாரம்.)

"பரஞானத்தாற் பரத்தைத்தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க, வருஞானம் பவஞான மஞ்ஞான விகற்பம் வாச்சிய வாசக ஞானம் வயிந்தவத்தின் கலக்கந், தருஞானம் போகஞா திருஞானஞேயந் தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகுந், திருஞான மிவையெல்லாங் கடந்த சிவஞான மாதலாற் சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்." (சிவஞானசித்தியார்.)

"தேசகமா யிருளகமா" யென்பதற்குப்பிரமாணம் :—

"அருளே சகலமு மாய பவுதிகம்
அருளே சராசர மாய வமலமே
யிருளே வெளியே யெனுமெங்கு மீசன்
அருளே சகளத்த னன்றி யின்றாமே." (திருமந்திரம்.)

"இருபத மாவ திரவும் பகலும்
உருவது வாவ துயிரு முடலும்
அருளது வாவ தறமுந் தவமும்
பொருளது வுண்ணின்ற போகம தாமே." (திருமந்திரம்.)

"தேசகமும் இருளகமுமாகிய இரண்டுங்கடந்த சித்தகம்" என்பதற்குப்பிரமாணம்:—

"முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின்றதுவே." (கந்தரனுபூதி.)

"பந்த பாச முறாப் பதி" யென்பதற்குப்பிரமாணம்:—தேவாரம்: திருத்தலையாலங்காட்டுத் திருப்பதிகம்.

"தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான்றன்னைச் சூழ்நரகில் வீழாமே காப்பான்றன்னை, அண்டத்துக்கப்பாலைக் கப்பாலானை யாதிரைநாளாதரித்த வம்மான்றன்னை முண்டத்தின் மூளைத்தெழுந்த தீயானானை மூவுருவத் தோருருவாய் முதலாய்நின்ற, தண்டத்திற் றலையாலங் காடன்றன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே." (தேவாரம்.)

"நாசமிலா வெளியாகி யொளிதானாகி" யென்பதற்குப்பிரமாணம்:—

"ஆகாச வண்ண னமரர் தவக்கொழுந்
தேகாச மாசுண மிட்டங் கிருந்தவன்
ஆகாச வண்ண னமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாயங்கி வண்ணனு மாமே." (திருமந்திரம்.)

"புறத்துளா காசம் புவன முலகம்
அகத்து ளாகாச மெம்மாதி யறிவு
சிவத்து ளாகாசஞ் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்து ளாகாசந் தானஞ் சமாதியே." (திருமந்திரம்.)

"ஒளிதானாகி" யென்பதற்குப்பிரமாணம்:—

"பரஞ் சோதி யாகும் பதியினைப் பற்றாப்
பரஞ்சோதி யென்னுட் படிந்ததற் பின்னைப்
பரஞ் சோதி யுண்ணுன் படியப்படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக்கண்டேனே." (திருமந்திரம்.)(௧௪)

17. சகமாகிச் சீவனாயீசனாகிச் சதுமுகனாய்த் திருமாலா யரன்றானாகி
மகமாயை முதலாய்க்கூடத்தனாகி வான்பிரம மாகியல்லா வழக்குமாகி
யிகமாகிப் பரமாகிச் சமயகோடி யெத்தனையு மாகியவை யெட்டாவான்கற்
பகமாகிப் பரமாகிப் பரமமாகிப் பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியுந்தேவே.

(பதவுரை.) சகம் ஆகி - உலகமாகியும், சீவன் ஆய் - உயிராகியும், ஈசன் ஆய்- ஈசுரனாகியும், சதுமுகன் ஆய் - நான்கு முகங்களையுடைய பிரமனாகியும், திருமால் ஆய் - விண்டு ஆகியும், அரன்தான் ஆகி - உருத்திரனாகியும், மகமாயைமுதல் ஆய்- மூலப்பிரகிருதிமுதலிய தத்துவங்களாகியும், கூடத்தன ஆகி - அவத்தைகள் மூன்றினுக்கும் சாட்சியாகிய ஞானாத்மாவாகியும், வான்பிரமம் ஆகி-சர்வ சீவசாட்சியாகும் பிரமமாகியும், அல்லா - அவையல்லாது மேற்பட்டதான, வழக்கும் ஆகி - பரப்பிரமம் சுத்தப்பிரமம் என்று சொல்லப்படுவதாகியும், இகம் ஆகி - இகலோகமாகியும், பரம் ஆகி-பர லோகமாகியும், சமயம்கோடி எத்தனையும் ஆகி - சமயகோடிகள் எவ்வளவுமாகியும், அவை - அந்தச்சமயங்கள், எட்டா - தொடர்ந்து பற்றாத, வான் கற்பகம் ஆகி-தெய்வதரு எனப்படும் கற்பகவிருக்கமாகியும், பரம் ஆகி - மேலானதாகியும், பரமம் ஆகி - உயர்வினையுடைய சக காரணனாகியும், பரம்பரம் ஆய் - பரத்தின்மேற்பட்ட பொருளாகியும், பரம் அபரம் ஆய் - பரமும் பரம்பரமும் அபரமாக உயர்ந்த பராத்பர வத்துவாகியும், பதியும் - எவ்விடத்தும் நிலைபெற்று நிற்கும், தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) தோற்றமுமொடுக்கமுமுள்ள உலகம் என்பார் "சகமாகி" என்றும்; வினைப்பயன்களை யுண்டு சீவித்திருக்கும் சீவான்மா வென்பார் "சீவனாய்" என்றும்; சீவர்களையெல்லாம் தன் ஆட்சியில் வைத்துள்ள கர்த்தாவென்பார் "ஈசனாகி" யென்றும்; பிரம விட்டுணு ருத்திரர்களாகத்தோன்றிச் சிருட்டி திதி சங்காரமாகிய முத்தொழில்களையு மியற்று மூவராகி யென்பார் "சதுமுகனாய்த் திருமாலாயரன்றனாகி" யென்றும்; சக ஜீவேஸ்வராதிகளின் தோற்றத்திற்குக் காரணமாகியதென்பார் "மகமாயை முதலாய்"என்றும்; தத்துவசேட்டைகள் முழுதுங்கண்டு சரீரத்துள்ளே விளங்கி நிற்குஞ் சாட்சியாகிய கூடத்தப்பிரமமென்பார் "கூடத்தனாகி" யென்றும்; அண்டகோடிகள் முழுதுங் கண்டு விளங்கி நிற்குஞ் சர்வ சாட்சியாகி யென்பார் "வான்பிரமமாகி" யென்றும்; அந்நிலைக்கு மேற்பட்ட சுத்தப்பிரமமாகியென்பார்"அல்லா வழக்குமாகி"யென்றும்; இம்மை மறுமைகளின் போகங்களாகியென்பார் "இகமாகிப்பரமாகி" யென்றும்; சீவர்கள் பக்குவமடையப் பலபல சௌபானங்களுடன் தோன்றிய அளவிறந்த மார்க்கங்களாகினனென்பார் "சமயகோடியெத்தனையுமாகி"யென்றும்; சமயாதீதமாயின தென்பார் "அவையெட்டா" வென்றும்; வேண்டுவார் வேண்டும் வரங்களை வழங்கும் வழக்கமுடைய மேலான பொருள் என்பார் "வான் கற்பகமாகி" யென்றும்; தத்துவாதீத நிலையான தென்பார் "பரம்" என்றும்; பரநிலையினையுடைய காரணச் சிறப்புநாமத்த தென்பார் "பரமமாகி" யென்றும்; அந்தப்பரமநிலையின் மிக்க நிலைகளில் விளங்குவதென்பார் "பரம்பரமாய் பராபரமா" யென்றும்; அவ்வந்நிலைகளில் அவை யவையாகிப் பதிந்து விளங்கும் மஹாதேவனென்பார் "பதியுந்தேவே" என்றுங் கூறினார்.

"சகமாகி" யென்பதற்குப்பிரமாணம் :—

"ஒருவ னொருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டு மெல்லாம் விளக்கும்
பருவங்க ளேறும் பயன் பலவான
திருவொன்றிச் செய்கை செகமுற்று மாமே." (திருமந்திரம்.)

"சிவனாய்" என்பதற்குப்பிரமாணம் :—

"தேடுந் திசையெட்டுஞ் சிவனுட லுயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி
யூடு மவர்தம துள்ளத்தி னுண்ணின்று
நாடும் வழக்கமு நானறிந் தேனே." (திருமந்திரம்.)

"ஈசனாகி" யென்பதற்குப்பிரமாணம் :—

"தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈச னுறவுக் கெதிரில்லை தானே." (திருமந்திரம்.)

"சந்தி யெனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமி லீசனரு ணமக்கே யென்றும்." (திருமந்திரம்.)

"குறைந்தடைந் தீசன் குரைகழ லேடும்
நிறைந்தடை செம்பொனி னேரொளி யொக்கும்
மறைஞ்சிடஞ் செய்யாது வாழ்த்த வல்லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்து நின்றானே." (திருமந்திரம்.)

எனத் திருமூலதேவர் அருளிய திருவாக்காலுணர்க. (௧௭)

---

**18.** விதியாகி யரியாகிக் கிரீசனாகி விளங்குமகேச் சுரனாகி விமலமான, நிதியாகுஞ் சதாசிவனாய் விந்துவாகி நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலானந்தப், பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப் பக்கமிரண்டா யிரண்டும் பகராதாகிக், கதியாகி யளவிறந்த கதிகளெல்லாங் கடந்துநின்று நிறைந்த பெருங்கருணைத்தேவே.

(பதவுரை.) விதி ஆகி - பிரமனாகியும், அரி ஆகி - திருமாலாகியும், கிரி ஈசன் ஆகி - வெள்ளியங்கிரியில் வசிக்கும் உருத்திரமூர்த்தியாகியும், விளங்கும் - பிரகாசிக்கின்ற, மகா ஈச்சுரன் ஆகி-மகேச்சுரன் ஆகியும், விமலம் ஆன - மலமற்றதான, நிதி ஆகும் - ஐசுவரியமாகும், சதாசிவன் ஆய் - சதாசிவ மூர்த்தியாகியும், விந்து ஆகி - விந்து தத்துவமாகியும், நிகழ் நாதம் ஆய் - ஒளிர்கின்ற நாத தத்துவமாகியும், பரை ஆய் - பராசத்தியாகியும், நிமல - பரிசுத்தமான, ஆனந்தம் பதி ஆகும் - ஆனந்தமுடைய பதியாகின்ற, பரசிவம் ஆய்-பரசிவ வத்துவாகியும், பரம் ஆய்-பரம்பொருளாகியும், மேல் ஆய் - மேன்மையுடையதாகியும், பக்கம் இரண்டு ஆய் - இரண்டு பக்கங்களாகியும், இரண்டும் - மேற்கண்ட இரண்டு பக்கங்களும், பகராதது ஆகி-சொல்லமுடியாத பொருளாகியும், கதி ஆகி-மோக்கமாகியும், அளவு இறந்த-அளவு கடந்த, கதிகள் எல்லாம் - மோக்கநிலைகள் எல்லாம், கடந்து நின்று - மேற்பட்டு நின்று, நிறைந்த - சருவ வியாபியாக நிரம்பிய, கருணை தேவே-கருணையையுடைய மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை) உயிர்த்திரளுக்குக் கன்மத்தினளவாகத் தனுகரண புவன போகங்களை விதித்தருளும் ஒருதொழிலையுடைய பிரமனென்பார் "விதியாகி" யெனவும்; விதிக்கப்பெற்ற உயிர்த்திரளுக்குப் போகங்களையூட்டிக் கருணையொடு புரந்தருளும் இருதொழிலுடைய காவற்கடவுளாகிய நாரணனென்பார் "அரியாகி" யெனவும்; படைத்தல், காத்தல், அழித்தலாகிய மூன்று தொழிலுடைய ஸ்ரீகயிலாய மலையில் விளங்கும் சீகண்டதேவ ருத்திரமூர்த்தி யென்பார் "கிரீசனாகி" எனவும்; மேற்சொல்லிய முத்தொழில்களுடன் போகானுபவிகளாக யாவரையுந் திரோபவிக்குந் தொழிலுடைய மாயையாடல்வல்ல கடவுளென்பார் "மகேச்சுரனாகி" யெனவும்; சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமாகிய பஞ்சகிருத்தியங்

களையுமுடைய மனோன்மனியுடன் கூடிநிற்கும் நிட்கள சகளத்திருமேனியுடைய கன்ம சாதாக்கியம், கர்த்துருசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், சிவசாதாக்கியமென ஐவகையாக விளங்கு மதுகையுடையதாய், பாசபந்தத் துரிசறுத்து மூவகை யாருயிர்வர்க்கத்தையும் உய்விக்கு முதன்மைப்பொருளென்பார் "விமலமான நித்தியாதுஞ்சதாசிவனு" மெனவும்; சுத்தமாயை, சுத்தா சுத்த மாயை,அசுத்தமாயையென்னுமூவகை மாயைகளும் மாயா காரியங்களுந் தோன்று நிலைக்களமாகி யென்பார் "விந்துவாகி" யெனவும்; விந்துமுதலாகவுள்ள தத்துவங்கள் யாவுந் தோன்றுமிடமாகியும், உயிர்க்கெல்லாம் ஓசையாகியும், அறிவு தோன்று நிலைக்களமாகியும், உச்சியின்கண் விளங்குவதாகியு மேம்பாடுற்ற தலைமைத்தத்துவமான தென்பார் "திகழ்நாதமாகி" யெனவும்; நாத தத்துவந்தோன்றுந் தானமாகி யென்பார் "பரையாய்" எனவும்; பராசத்தியொடு கூடிவிளங்கும் பேரானந்தப் பதிப்பொருளாயசகமுதல்என்பார் "நிமலானந்தப்பதியாதும்பரசிவமாய்" எனவும்; அதனின்மிக்க பரம்பரமாய்ப் பராபரமாய் விளங்குவதென்பார் "பரமாய்மேலா" யெனவும்; அணுபக்ஷம் சம்புபக்ஷமாகி விளங்கும் உபயபக்ஷம் என்பார் "பக்ஷமிரண்டாய்" எனவும், அவ்விருபக்கங்களையுங் கடந்ததென்பார் "இரண்டும்பகராதாகி"யெனவும்;தன்னிகரில்லாத சிவசாயுச்சிய முத்தியென்பார் "கதியாகி"யெனவும்; ஏனைய சமயத்தார் கூறும் பல திறத்தனவாகிய முத்திநிலைக்கப்பாலதென்பார் "அளவிறந்த கதிகளெலாங்கடந்து நின்று நிறைந்த" எனவும்; பேருளே தன் பண்பாகவும், தானே பண்பியாகவும் விளங்கு மஹாதேவனென்பார் "பெருங் கருணைத்தேவே" எனவுங் கூறினர்.

"பஞ்ச பூதங்களி னிடமாகநின்றுபிரமன் முதலாகிய பஞ்சகர்த்தர்களும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்தருள்வ" ரென்பதற்குப்பிரமாணம்:—

"பாராதி யைந்துக்கும் பன்னுமதி தெய்வங்கள்
ஆரா ரயனாதி யையவராம்—ஓரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்காற் றோற்றமுத லைந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார்." (உண்மைவிளக்கம்.)

"படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்ப னுருத்திரனுஞ் சொல்லிற்—றிடப்பெறவே
யென்றுந் திரோபவிப்ப ரீசர் சதாசிவரும்
அன்றே யனுக்கிரக ராம்." (உண்மைவிளக்கம்.)

"பரையினின்று நாதமாகி தத்துவங்கள் தோன்றுவன" வென்பதற்குப் பிரமாணம்:—

"ஆதியொ டந்த மிலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பரையதன் பாற்றிகழ் நாதமே." (திருமந்திரம்.)

நாதத்தில் விந்துவு நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவஞ்சத்தி யென்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே. (திருமந்திரம்.)

என ஆன்றோர் கூறியவாறு காண்க. (கஅ)

19. மானுகி மோகினியாய் விந்துவாகி மற்றவையாற் காணுத வானமாகி
நானுகி நானல்லனுகி நானே நானுகும் பதமாகி நான்றான்கண்ட
தானுகித் தானல்லனுகித் தானேதானுகும் பதமாகிச் சகசஞான
வானுகிவானடுவில் வயங்குகின்ற மௌன நிலை யாகியெங்கும் வளருந்தேவே.

(பதவுரை.) மான் ஆகி - பிரகிருதி மாயையாகியும், மோகினி ஆய் - சுத்தா சுத்த மாயையாகியும், விந்து ஆகி - சுத்த மாயையாகியும், மற்று அவை ஆல் - அம் மூவகைமாயைகளாலும், காணுத-உணரவொண்ணுத, வானம் ஆகி - வெளியாகியும், நான் ஆகி-நான் எனநிற்குஞ் சீவனுகியும், நான் அல்லன் ஆகி-சீவான்மா வல்லனுகியும், நான் ஏ-பசுத்துவமிக்க நானே, நான் ஆகும் பதம் ஆகி - மலநீங்கி விளங்குஞ் சீவதுரியத்திற்குரிய தொம்பதமாகியும், நான்தான் - சீவ துரியத்தினின்ற நான், கண்ட - தரிசித்த, தான் ஆகி - பரமாகியும், தான் அல்லன் ஆகி-அந்தப் பரமல்லாதாகியும், தானே தான் ஆகும் பதம் ஆகி - பாதுரியத்தில் விளங்கும் அதுவெனப் படும் தற்பதமாகியும், சகசம்-இயற்கையாகவுள்ள, ஞானம் வான் ஆகி-ஞானவெளியாகியும், வான் நடு இல் - அந்த ஞானுகாச நடுவில், வயங்குகின்ற - பிரகாசியா நின்ற, மௌனம் நிலை ஆகி - கருவிகள் சலனமின்றி நிற்கும் மௌன நிலையாகியும், எங்கும்-எவ்வுலகினும், வளரும் - வியாபிக்கின்ற, தேவே - மஹாதேவனே. எ - று.

(விசேஷஉரை.) சகலர், பிரளயாகலர், விஞ்ஞானுகலர் எனப்படு மூவகை யாருயிர்வர்க்கமும் வாழும் புவனங்கள் முறையாக அசுத்த மாயையிலும், சுத்தா சுத்த மாயையிலும், சுத்த மாயையிலுந் தோற்றுதலின் சகத்துக்கு உபாதான காரணங்கள் மூன்றுமாகி யென்பார் "மாருகி மோகினியாய் விந்துவாகி" யென்றும்; அவ்வுபாதானங்கண் மூன்றும், அவற்றிற்றோன்றிய கருவிகண் முப்பத்தாறும் சடமாகலின் அவற்ருற்காணப்படாத உயிர்வெளியாகி யென்பார் "மற்றவற்றுற் காணுத வானமாகி" யென்றும்; தூல சூக்கும காரண சரீரத்திரையங்களுடன் கூடி நிற்குஞ் சீவன் என்பார் "நானுகி" யென்றும்; சீவனுடன் கூடிநிற்கினுஞ் சீவனுகாது வேருகி நிற்பதென்பார் "நானல்லனுகி" என்றும்; சீவசாக்கிரம், சீவசொப்பனம், சீவசுழுத்தியிவைக்கடந்த சீவதுரியத்திற் களங்கமற விளங்குவதாகிய தொம் பதமென்பார் "நானே நானுகும் பதமாகி" என்றும்; சீவதுரியத்தில் அருள்காட்டக் காண்பதாகிய பரம் என்பார் "நான்தான் கண்ட தானுகி" என்றும்; பரத்தின்மிக்க சிவமாகி விளங்குதலால் "தானல்லனுகி" என்றும்; பரசாக்கிரம், பரசொப்பனம், பரசுழுத்தியின் மிக்க பரதுரியத்தில் விளங்குந் தற்பதம் என்பார் "தானேதானுகும் பதமாகி" என்றும்; மலத்தடை சிறிதுமில்லாத இயற்கையுண்மை ஞானவிளக்கமிக்க அருள்வெளியென்பார் "சகசஞான வானுகி" என்றும்; அருள்வெளியினடுவிலே யெக்காலும் கேடும்பெருக்கமு மின்றியொருப்படித்தாய்ப்பதங்களனைத்தினுஞ் சிறந்து விளங்குகின்ற மோனபதம் என்பார் "வானடுவில் வயங்குகின்றமௌன நிலையாகி" யென்றும்; திசைகள் பத்தினும் பரந்து வியாபித்து நிற்குஞ் சர்வ பரிபூரண அகண்டாகார மஹாதேவனென்பார் "எங்கும் வளருந்தேவே" என்றுங் கூறினர்.

"உபாதானங்கள்மூன்று" என்பதற்குப்பிரமாணம் :—

"விந்துவின் மாயையாகி மாயையி னவ்வியத்தம்
வந்திடும் விந்துத்தன்பால் வைகரியாதி மாயை
முந்திடு மராகமாதி முக்குண மாதிமூலந்
தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே." (சிவஞானசித்தியார்.)

"எங்கும் வளருந் தேவே" யென்பதற்குப்பிரமாணம் :—

"இருக்கின்ற தெண்டிசை யண்டம் பாதாள
முருக்கொடு தன்னடி வோங்க விவ்வண்ணக்
கருக்கொ டெங்குங் கலந்தனன் றானே
திருக்கொன்றை வைத்த செழுஞ் சடையானே." (திருமந்திரம்.)

"தேவனுமாகுந் திசைதிசை பத்துளு
மேவனு மாம்விரி நீருல கேழையு
மாவனு மாமமர்ந் தெங்கு மூலகினுள்
நாவனு மாகி நவிற்று நின்றானே." (திருமந்திரம்.)

"மஹாதேவன்" என்பதற்குப் பிரமாணம்:—

"ஏனோர்பெருமைய னாகிலு மெம்மிறை
யூனே சிறுமையி னுட்கலந் தங்குளன்
வானோ ரறியு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தி னளவே." (திருமந்திரம்.)

"மோனபத" மென்பதற்குப் பிரமாணம்:—

"நின்றா ரிருந்தார் கிடந்தா ரெனவில்லை
சென்றார் தஞ்சித்த மோன சமாதியா
மன்றேயு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே." (திருமந்திரம்.)

---

**20.** மந்திரமாய்ப் பதமாகி வன்னமாகி வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவனமாகிச்
சந்திரனா யிந்திரனா யிரவியாகித் தானவராய் வானவராய்த் தயங்காநின்ற
தந்திரமா யிவையொன்று மல்லவாகித் தானாகித் தனதாகித் தானான்காட்டா
வந்தரமா யப்பாலா யதற்கப்பாலா யப்பாலுக்கப்பாலா யமர்ந்ததேவே.

(பதவுரை.) மந்திரம் ஆய் - மந்திரங்களாகியும், பதம் ஆகி - பதங்களாகியும், வன்னம் ஆகி - எழுத்துக்களாகியும், வளர் - வளர்கின்ற, கலை ஆய் - கலைகளாகியும், தத்துவம் ஆய் - தத்துவங்களாகியும், புவனம் ஆகி - உலகங்களாகியும், சந்திரன் ஆய் - மதியாகியும், இந்திரன் ஆய் - தேவராசனாகியும், இரவிஆகி - சூரியனாகியும், தானவர் ஆய் - அசுரராகியும், வானவர் ஆய்-சுரர்களாகியும், தயங்காநின்ற - விளங்காநின்ற, தந்திரம் ஆய் - ஆகமங்களாகியும், இவை ஒன்றும் அல்ல ஆகி - இப்பொருள்கள் யாதொன்றும் அல்லாததாகியும், தான் ஆகி - தான் என்னும் பொருளாகியும், தனது ஆகி - தனது என்னும் உடைமைப்பொருளாகியும், தான் நான்-தான் நான் என்னும் இரண்டு பொருள்களையும், காட்டா - காட்டாத, அந்தரம் ஆய் - ஆகாசமாகியும், அ பால் ஆய் - அதனைக்கடந்ததாகியும், அதற்கு - அவ்வெல்லைக்கு, அ பால் ஆய்-மேற்பட்டதாகியும், அ பாலுக்கு-அந்தமேற்பட்டவெல்லைக்கு, அ பால் ஆய் - மேற்பட்டபொருளாகியும், அமர்ந்த-பொருந்திய, தேவே-மஹாதேவனே. எ - று.

(விசேஷஉரை.) இத்திருவிருத்தம் முதற்பாதத்தால் அத்துவாக்களாறையுமுணர்த்துகின்றது. மந்திரம் என்றது மந்திராத்துவாவை; பதம் என்றது பதாத்துவாவை; வன்னம் என்றது வன்னாத்துவாவை; கலையென்றது கலாத்துவாவை; தத்துவம் என்றது தத்துவாத்துவாவை; புவனம் என்றது புவனாத்துவாவை; மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம் ஆகிய வைந்தத்துவாக்களும் கலைகளிலே வியாபித்து நிற்பனவாம். கலைகள் நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலையென வைந்தாம்.

நிவிர்த்திகலையினுள் சத்தியோசாதம், இருதயம் ஆகிய மந்திரம் இரண்டும்; ஓம் நமோநம வென்னும் பதமுதலாக மஹாதேவ வென்னும் பதம் ஈறாகப் பதங்கள் இருபத்தெட்டும்; எழுத்து க்ஷகாரம் ஒன்றும்; புவனங்கள் நூற்றெட்டும்; பிருதிவி தத்துவம் ஒன்றும் வியாபித்திருக்கும். நிவிர்த்திகலைக்குத் தெய்வம் பிரமன்.

பிரதிட்டாகலையினுள் வாமதேவம், சிரசு ஆகிய மந்திரம் இரண்டும்; மகேசுரன் என்னும் பதமுதலாக அரூபின் அரூபின் என்னும் பதமீறாகப் பதங்கள் இருபத்தொன்றும்; ளகாரமுதல் டகாரமீறாக எழுத்துக்கள் இருபத்துநான்கும்; அப்புவில் எட்டுப்புவனமும், தேயுவில் எட்டும், வாயுவில் எட்டும், ஆகாசத்தில் எட்டும், சத்த பரிச ரூப ரசகந்தங்களாகிற தன்மாத்திரைகளில் நான்கும், கன்மேந்திரியத்தில் ஒன்றும், ஞானேந்திரியத்தில் ஒன்றும், மனசில் ஒன்றும், அகங்காரத்தில் ஒன்றும், புத்தியில் எட்டும், பிரகிருதியில் எட்டும் ஆகக்கூடிய புவனம் ஐம்பத்தாறும்; அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், சோத்திரம், சட்சு, ஆக்கிராணம், துவக்கு, சிங்குவை, மனம், அகங்காரம், புத்தி, பிரகிருதி என்னும் தத்துவம் இருபத்துமூன்றும் வியாபித்திருக்கும். இந்தப் பிரதிட்டாகலைக்குத் தெய்வம் மாயன்.

வித்தியாகலையினுள் அகோரம், சிகையாகிய மந்திரம் இரண்டும்; வியாபின் வியாபின் என்னும் பதமுதலாகத் தியானகாராய வென்னும் பதமீறாகவுள்ள பதங்கள் இருபதும்; ஞகாரமுதல் வகாரமீறாகவுள்ள எழுத்துக்கள் எழும்; புருடனில் புவனம் ஆறும்; இராகத்தில் ஐந்தும்; நியதி, கலை, காலம், வித்தையாகிய தத்துவங்களில் எட்டும்; மாயையில் எட்டும் ஆகக்கூடிய புவனம் இருபத்தேழும்; புருடதத்துவமுதல் மாயையீறாகவுள்ள தத்தவங்கள் எழும் வியாபித்திருக்கும். இக்கலையை யதிட்டித்திருப்பவர் உருத்திரமூர்த்தியாம்.

சாந்திகலையினுள் தற்புருடம், கவசம் என்னும் மந்திரங்கள் இரண்டும்; நித்திய யோகினே யென்னும் பதமுதல் வியோம வியாபினே யென்னும் பதமீறாகவுள்ள பதங்கள் பதினொன்றும்; ம, வ, க, என எழுத்துக்கள் மூன்றும்; சுத்த வித்தியா தத்துவத்தில் வாமம்முதல் மனோன்மனிபுவன மீறாகப்புவனம் ஒன்பதும், ஈசுர தத்துவத்தில் அனந்தேஸ்வர புவனமுதலாகச் சிகண்டிபுவன மீறாகவுள்ள புவனம் எட்டும், சாதாக்கிய தத்துவத்திற் சாதாக்கியபுவனம ஒன்றும், ஆகக்கூடிய புவனம் பதினெட்டும்; சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் ஆக தத்துவமூன்றும் வியாபித்திருக்கும். இவ் வித்தியாகலைக்கு அதிட்டாதா மகேசுரராம்.

சாந்தியாதீத கலையினுள் ஈசானம், அத்திரம் என்னு மந்திரங்கள் இரண்டும்; ஓம் என்னும் பதம் ஒன்றும், அ காரமுதல் அஃ வரையிலுள்ள எழுத்துக்கள் பதினாறும்; சத்தி தத்துவத்தில் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீத மெனப்படும் புவனங்கள் ஐந்தும், சிவதத்துவத்தில் இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினி, வியாபினி, வியோமரூபினி, அனந்தை, அநாசிருதை என்னும் புவனம் பத்தும்; ஆகக்கூடிய புவனம் பதினைந்தும்; சத்திதத்துவம், சிவதத்துவமெனத்தத்துவம் இரண்டும் வியாபித்திருக்கும். இந்தக் கலைக்கு அதிட்டாதா சதாசிவதேவர்.

மந்திரங்கள் சப்தகோடி யென்றோதப்படினும் அவற்றுள்ளே தலைமைபெற்ற மந்திரங்கள் பதினொன்றேயாதலால் இவற்றையே வேதாகமங்கள் பாராட்டுவன. பதங்கள் எண்பத்தொன்று. அக்கரங்கள் ஐம்பத்தொன்று. புவனம் இருநூற்றிருபத்து நான்கு. தத்துவங்கள்தொண்ணூற்றாறாயினும் தலைமைபெற்றன முப்பத்தாறும். கலைகள் ஐந்தினுள்ளே யேனைய கலைகளடங்குதலால் ஐந்து தான் முக்கியம்.

நிவிர்த்திகலையாவது:—தன்னையடைந்த பக்குவான்மாக்கட்குச் சனனமரணத்துக் கேதுவான சங்கற்பங்களை நிவிர்த்திப்பதாம்.

பிரதிட்டாகலையாவது:—தன்னை யடைந்த பக்குவான்மாக்களின் சனன மரண நாசஞ்செய்யுஞ் சன்மார்க்க சங்கற்பங்களில் அவர்களை நிலைநிறுத்துவதாம்.

வித்தியாகலையாவது:—தன்னையடைந்த பக்குவான்மாக்களின் அறிவைப் பிரகாசிப்பிப்பதாம்.

சாந்திகலையாவது:—தன்னையடைந்த ஆன்மாக்களுக்கு இராகத்துவேஷ முதலிய குணங்களை விலக்கிப் பரம சாந்தியைத் தருவதாம்.

சாந்தியாதீதகலையாவது:—தன்னை அடைந்த பக்குவான்மாக்களுக்குச் சாந்தி அதீதத்தைத் தருவதாம்.

இவற்றிற்குப் பிரமாணம் :—

"தத்துவ மாறாறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னமைம் பானென்று மேதினி
யொத்திரு நூற்றிரு பானன்கெண் பானென்று
வைத்த பதங்கலை யோரைந்தும் வந்ததே." (திருமந்திரம்.)

"பஞ்சகலைகளினுள் மந்திர முதலிய அத்துவாக்கள் வியாபித்திருப்பன" என்பதற்குப்பிரமாணம்:—

"மந்திரங்கண் முதலைங்துங் கலையைந்தின் வியாத்தி மருவுமந் திரமிரண்டு பதங்களுலேழ், அந்தநிலை யெழுத்தொன்று புவனநூற்றெட் டவனிதத் துவமொன்று நிவிர்த்தியன் றெய்வம், வந்திடுமந் திரமிரண்டு பதங்கண் மூவேழ் வன்னங்களைாறு புரமைம்பத் தாறு, தந்திடுந்தத் துவங்களிரு பத்துமூன்று தரும்பிரதிட் டாகலைமா லதிதெய்வந் தானும்." (சிவஞானசித்தியார்.)

"வித்தையின்மந் திரமிரண்டு பதநாலைந்து விரவுமெழுத் தேழுபுர மிருபத்தேழு, தத்துவமு மோரேழு தக்குமதி தெய்வந் தாவிலுருத் திரனுஞ் சாந்திதன்னின், வைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னொன்று வன்னமொரு மூன்றுபுரம் பதினெட்டாகும், உத்தமமாந் தத்துவமு மொருமூன்றுகு முணரிலதி தேவதையு முயரீச னுமே." (சிவஞானசித்தியார்.)

"சாந்தியா தீதகலை தன்னின்மந்திரங் டாமூன்றுபதமொன்றக் கரங்கள்பதினாறு, வாய்ந்தபுர மூவைந்து தத்துவங்க ளிரண்டு மருவுமதி தேவதையு மன்னுசதாசிவராம், ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்க ளெண்பத் தொன் றக்கரங்களைம்பத் தொன்றுகு, மாய்ந்தபுர மிருநூற்றே டிருபத்துநாலா மறிதருதத் துவமுப்பத் தாறுகலை யைந்தே." (சிவஞானசித்தியார்.)

"சந்திரனாய்" என்றது மன்னுயிர்கட்குத் தண்ணருளாகிய அமுதத்தை வழங்கும் அன்னையையொத்து விளங்குதலைநோக்கியென்க. அன்றியும், உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவ விருளைச் சிறிது சிறிதாகப்போக்கிப் பரிபாகத்துக்குத் தக்கபடி யருட்பிரகாசத்தைச் செய்தலை நோக்கி யென்னினுமாம்.

இதற்குப்பிரமாணம்:—

"மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து - தன்னின்
வலித் திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான்." (சிவஞானபோதம்.)

"இந்திரனும்" என்றது மன்னுயிர்கட்குப் பல பல உணவுகளை விளைவித்தற் கேதுவாகிய நீர்சுரந்து பொழியு மேகங்கட்கதிபதியாகித் தன்னாணையில் அவை நடைபெற நடத்து மதுகையுடையானுதலை யுணர்த்துதற்கென்க.

இதற்குப்பிரமாணம்:—

"தானே யிருநிலந் தாங்கி விண்ணாய்நிற்கும்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தண்கட லாகுமே." (திருமந்திரம்.)

"பெயலு மழைமுகிற் பேர்நந்தி தானே." (திருமந்திரம்.)

"இரவியாகி" என்றது ஆதித்த னொளியையின்றிப் பல்லுலகுந் தொழிற்படாமையும், அவன் பல்லுயிர்த்தொகுதிக்குமாதியாய் நிற்றலும், கண்விளக்குங் கதிர் செய்தலும், அவ்விரவியொளியு முதல்வனொளியின்றி விளங்காமையு நோக்கியென்க. அண்டத்தின்விளங்கி விளக்குதலும், பிண்டத்தின்விளங்கி விளக்குதலும் செய்கின்ற அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனத்தை விளக்கும் மனவாதித்தன், ஞானத்தை விளக்கு ஞானாதித்தன், சிவநிலையை விளக்குஞ் சிவாதித்தன் எனப் பல ஆதித்தராயினமை நோக்கி"இரவியாகி"யெனத் துதித்தனரெனினு மொக்கும்.

"அண்டாதித்தன்" என்பதற்குப்பிரமாணம்:—

"பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்
புகலவ னாய்நின்ற புண்ணிய நாதன்
இகலற வேழுல கும்முற வோங்கும்
பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே." (திருமந்திரம்.)

"மண்ணை யிடந்ததின் கீழோடு மாதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடும்
கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்
எண்ணு மிழமைக் கிசைந்து நின்றானே." (திருமந்திரம்.)

"பிண்டாதித்தன்" என்பதற்குப்பிரமாணம்:—

"நின்று மிருந்துங் கிடந்து நடந்தேதுங்
கன்றாய நந்தி கருத்து ளிருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே." (திருமந்திரம்.)

"மனவாதித்தன்" என்பதற்குப் பிரமாணம்:—

"எறிகதிர் ஞாயிறு மின்பனி சோரு
மெறிகதிர் சோம னெதிர்நின் றெறிப்ப
விருகதி ருள்ளே வியங்கு மெண்ணுவி
யொருகதி ராகி லுவாவது வாமே." (திருமந்திரம்.)

"ஞானாதித்தன்" என்பதற்குப் பிரமாணம்:—

"மண்டலத் துள்ளே மலர்ந்தெழு மாதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடும்
சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்
நின்றிடத் தேநில நேரறி வார்க்கே." (திருமந்திரம்.)

"சிவாதித்தன்" என்பதற்குப் பிரமாணம்:—

"கடங்கடந் தோறுங் கதிரவ னோன்றில்
அடங்கிட மூடிலவற்றி லடங் காண்

விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்
தடங்கிட நின்றது மப்பரி சாமே." (திருமந்திரம்.)

"தானே விரிசுடர் மூன்றுமொன் றாய்நிற்கும்
தானே யயன்மா லெனநின்று தாபிக்கும்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாமே." (திருமந்திரம்.)

"தந்திரமாய்" என்றது தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலையாக விளங்கும் ஆகமமாகிநின்றண்ணித்தலைநோக்கியென்க. ஆகமம் என்பதற்குப்பொருள் :—

ஆ - சிவஞானம்; க - மோக்ஷசாதகம்; ம-மலநாசம். மலநாசஞ்செய்து சரியை கிரியை யோகங்களின் சாதகத்தால் சிவஞானம் வழங்கிச் சிவசாயுச்சிய மருள்வது என்பது திரண்டபொருள்.

தந்திரகலையாவது :—முன்னைப்பின் மலைவின்றிச் சரியை கிரியையாகிய இரண்பொதங்களைப் போதிப்பதாம். இதனுள் கிரியாபாதமடங்கும்.

மந்திரகலையாவது:—தெய்வ வுபாசனைக்குரிய மந்திரங்களின்மெய்ப்பொருள் களை விளக்கித் தேவாராதனை மார்க்கத்தைப் போதிப்பதாம். இதனுள் யோகபாத மடங்கும்.

உபதேசகலையாவது :—ஆதி யந்தமில்லாத பரஞ்சோதியின் வியாத்தி வியா பகத்தையும், ஆன்மவியாத்தி வியாபகங்களையும், பாசவியாத்தி வியாபகத்தையும் போதிப்பதாம். இதனுள் ஞானபாதம் அடங்கும்.

இதற்குப்பிரமாணம்:—

"அநாதியே யமலனாய வறிவனூ லாகமந்தான்
பிறநிமா றின்றிப்பேண றந்திர மந்திரந்தான்
மறுதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையாகும்
தனுதியீ றிலாதான்றன்மை யுணர்த்துத லுபதேசந்தான்."
(சிவஞானசித்தியார்.)

"அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள வாகமம்
அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே." (திருமந்திரம்.)

"ஆகமமாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க." (திருவாசகம்.)

"தானாகி" யென்றது எல்லாமுடையான், பசுபதி என்னும் வாய்மையையுணர்த்துவது. "தனதாகி" என்பது எல்லாமுடையானாகிய பசுபதியே உடைமைப் பொருள்கள் முழுதுமாகிநின்ற வாய்மையை யுணர்த்துவது.

இதற்குப்பிரமாணம்:—

"உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
யுடைய னேபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி யாதியு
மந்த மாயினாய் போற்றி யப்பனே." (திருவாசகம்.)

"என்னை யுடையவன்வந் தென்னுடனா யென்னளவி
லென்னை யுத்தன் னுளாகக் கொள்ளுதலா - லென்னை

யறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று." (திருக்களிற்றுப்படியார்.)

"எப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகும்
அப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய்."
(திருவாசகம்.)

"ஆனவறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய்." (திருவாசகம்.)

"தானன்காட்டா வந்தரமாய்" என்றது உயிர்க்குயிராகிய சிவத்தையும், உயிரையும் வேறுபிரித்துணராதவண்ணம் இரண்டற நிற்கின்ற சுவானுபூதி நிலையை நோக்கியதென்க. இதற்குப்பிரமாணம்:—

"நானென்றுந் தானென்று நாடினே னாடலு
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினா
னானென்று நானு நினைப் பொழிந் தேனே." (திருமந்திரம்.)

"என்னையுந் தன்னையும்வேறு - வுள்ளத்
தெண்ணாத வண்ண மிரண்டறநிற்கச்
சொன்னது மோவொரு சொல்லே - யந்தச்
சொல்லால்விளைந்த சுகத்தையென்சொல்வேன்."(தாயுமானவர்.)

"என்னுணை யென்னுணை யென்னுணையேகமிரண்
டென்னாமற் சும்மா விருவென்று - சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞான விநோதன்." (கண்ணுடையவள்ளல்.)

அருள்வெளியை "அந்தரமா" யென்றும், அதன்மேற்பட்ட பராபரவெளியையும், பெருவெளியையும் பெருஞ்சுகவெளியையும் "அப்பாலா யதற்கப்பாலா யப்பாலுக்கப்பாலா" யென்றும் விளக்கினர்.

இதற்குப்பிரமாணம்:—

"அந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்." (திருவாசகம்.)

"அப்பார் சடையப்ப னானந்த வார்கழலே
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய்." (திருவாசகம்.)

என்னும் ஆன்றோர் வாக்கானுண்மையுணர்க. (௨௦)

---

**21.** மலைமேலுங் கடன்மேலு மலரின்மேலும் வாழ்கின்ற மூவுருவின் வயங்குங்கோவே, நிலைமேலு நெறிமேலு நிறுத்துகின்ற நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும் வேதக், கலைமேலு மெம்போல்வா ருளத்தின்மேலுங் கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின்மேலுந், தலைமேலு முயிர்மேலு முணர்வின்மேலுந் தகுமன்பின் மேலும்வளர் தாண்மெய்த்தேவே.

(பதவுரை.) மலைமேல் உம் - திருக்கைலாயமலைமேலும், கடல் மேல் உம் - திருப்பாற்கடலின்மேலும், மலர் இன் மேல் உம் - செந்தாமரைமலரின்மேலும், வாழ்கின்ற - வீற்றிருந்து வாழ்கின்ற, மூ உரு இன்-அரன் அரி அயன் என்னுமூவர் திருவுருவங்களினால், வயங்கும் - திருவுருவுடையவனாக விளங்குகின்ற, கோ எ - தலைவனே, நிலை மேல் உம் - ஆச்சிரம நிலையின்மேலும், நெறி மேல் உம் - அட்டாங்கயோக ஞான சித்திமார்க்கத்தின்மேலும், நிறுத்துகின்ற - தமது சிந்தையைநில

யாகநிறுத்துகின்ற, நெடு - நெடிய, * தவத்தோர் - தவஞ்செய்வோருடைய, நிறை மேல் உம் - மாட்சிமையின்மேலும், நிகழ்த்தும்-(அந்தணர்) ஓதுகின்ற, வேதம்கலை மேல் உம் - முதனூலாகிய வேதத்தின் மேலும், எம் போல்வார் - எம்மையொத்த அடியவருடைய, உளம் அத்து இன் மேல் உம் - நெஞ்சத்தின்மேலும், கண் மேல் உம் - விழியின்மேலும், தோள் மேல் உம் - தோளின்மேலும், கருத்து இல் மேல் உம் - எண்ணத்தின்மேலும், தலை மேல் உம் - சிரத்தின்மேலும், உயிர் மேல் உம் - உயிரின்மேலும், உணர்வு இல் மேல் உம் - உணர்ச்சியின்மேலும், தரும்-தக்கதாகிய அன்பு இல் மேல் உம் - உருக்கம் அல்லது அன்பின்மேலும், வளர் தாள் - வளர்கின்ற திருவடியையுடைய, மெய் - நித்தியப்பொருளாகிய, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) திருக்கைலயங்கிரியிற் சீகண்டருத்திர மூர்த்தியாகவும், திருப்பாற்கடலில் அனந்தசயனத்து நாராயணனாகவும், பங்கயாதனத்துப் பிரமனாகவும், சங்காரமுந் திதியுஞ் சிருட்டியு முறையே நடத்தத்தோன்றிய மூவரென்பார் "மலைமேலுங் கடன்மேலு மலரின்மேலும் வாழ்கின்ற மூவுருவின்" என்றும், அந்த மூவரையும் அதிட்டித்து நின்று முத்தொழில்களையுந் தன் ஆணையால் நடத்தி விளங்குந் தலைமையுடையானாதலின் "வயங்குதங்கோவே" என்றுங் கூறினார்.
இதற்குப்பிரமாணம்:—

"முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்று மில்லாத் தலைமகன்
தன்னையப் பாவெனி லப்பனு மாவுளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே." (திருமந்திரம்.)

"நீலை" என்பது துறவறநிலை; "நெறி" யென்பது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யாம்.
இவை நெறியென்பதற்குப் பிரமாணம்:—

"இந்நெறி யந்நெறி யென்னாதட் டாங்கத்
தின்னெறி சென்று சமாதியிலே நின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே." (திருமந்திரம்.)

இயமமாவது:—அஹிம்சை அல்லது உயிர்வதை செய்யாமை, களவுசெய்யாமை; சத்தியம் அல்லது பொய் சொல்லாமை, பிரமசரியம் அல்லது இச்சையில்லாமை, அபரிக்கிரகம் அல்லது பிரதி பிரயோசனம் விரும்பாமை முதலிய மார்க்கத்தில் நிற்றலாம். இதற்குப் பிரமாணம்:—

"கொல்லான்பொய் கூறான் களவிலா னெண்குணன்
னல்லா னடக்கமுடை யானடுச் செய்ய
வல்லான் பகிர்ந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையி னின்றானே." (திருமந்திரம்.)

நியமமாவது:—தேகசுத்தி அல்லது ஆசாரம், சந்தோஷம் அல்லது கெடுதி செய்தோருக்கும் கேடு நினையாமை, தபசியம் அல்லது தேகாபிமானம் விடுத்தல், சுவத்தியாயம் அல்லது ஆத்மானாத்ம தரிசனங்கள், ஈஸ்வரப் பிராணிதானம்

* தவத்தோர் என்பது யோகிகள். யோகமென்பது இத்தூலசரீரத்தை அழிவின்றி நீடித்த காலம் ஜீவித்திருக்கச்செய்யான் கருதி இதற்கு ஆதாரமாக விருக்கின்ற சுவாசத்தைத் தன்வயப்படுத்துதல்.

அல்லது சிருட்டி திதி சங்காரமென்னும் முத்தொழில் நடத்தும் ஏகப்பிரம்ம சொரூபத்தை அலங்கார கவிதைகளால் ஸ்தவுத்தியம் செய்தலாம்.

இதற்குப்பிரமாணம்:—

"தூய்மை யருளுண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே." (திருமந்திரம்.)

ஆதனமாவது:—சுவத்திகம், கோமுகம், வீரம், சிங்கம், பத்திரம், மயூரம், சித்து, பத்மம், சுகம் என்பனவாதி பலவிதங்களாம். இதற்குப் பிரமாணம்:—

"பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதன மோரேழும்
உத்தம மாமுது வாசன மெட்டெட்டுப்
பத்தொடு நூறு பல வாசனமே." (திருமந்திரம்.)

பிராணாயாமமாவது:—தேகமெலிந்து,ஒடுங்கி,வியர்த்து,நடுங்கித் தனதிச்சையாய்ப் பிரக்ஞையற்றுப் போகச்செய்துகொள்ளுதலாம். இதற்குப்பிரமாணம்:—

"ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குங்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே." (திருமந்திரம்.)

"மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலா மிரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
யாலால முண்டா னருட்பெற லாமே." (திருமந்திரம்.)

பிரத்தியாகாரமாவது:—ஐம்புலன்களுமடங்கி மனோசலனமற்றுத் தனியே யிருக்கப் பழகுதலாம். இதற்குப் பிரமாணம்:—

"ஒருக்கா லுபாதியை யொண்சோதி தன்னைப்
பிரித்துணர வந்த வுபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைதலுண் ணோக்கல்
பிரத்தியாகாரப் பெருமைய தாமே." (திருமந்திரம்.)

தாரணையாவது:—சுவாசபந்தனம் செய்து, தேகத்தை அசைவறநிறுத்தி, எண்ணங்களைச் சுருக்கி, நிராசையிற்பயின்று, மனதை விஷயங்களில் பற்றச் செல்லவொட்டாமல் தடுத்து லயப்படுத்துதலாம். இதற்குப் பிரமாணம்:—

"கடைவாசலைக் கட்டிக் காலை யெழுப்பி
யிடைவாச னோக்கி யினிதுள் ளிருத்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பார்க்
குடையாம லூழி யிருக்கலு மாமே." (திருமந்திரம்.)

"அரித்த வுடலை யைம்பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் பூதஞ் சித்தாதியிற் போக்கு
தெரித்த மனாதி சத்தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே." (திருமந்திரம்.)

தியானமாவது:—இந்திரியங்களின் சலனத்தைக் கெடுத்து, மனோலயப்படுத்தி, நிர்க்குணம் வகித்து, சுவாசத்தைப் பந்தித்து, நாடிகள் ஸ்தம்பிக்க அசைவற

நின்று, தன்னை ஆநந்த ஜோதிகலந்து கொண்டிருக்கக் காணுதலாம். இந்தச் சோதியை யோகிகள் ஆத்மசொரூப மென்றும், வேதாந்திகள் துரியபூமி யென்றும் கூறுவர். இதற்குப் பிரமாணம்:—

"வருமாதி ஈரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்யான முன்னுங்
குருவாய சிவத்யானம் யோகத்திற் கூறே." (திருமந்திரம்.)

**சமாதியாவது:**—சுவாசபந்தனம் செய்து வெயில், காற்று, மழை, தீ, குத்து, வெட்டு முதலியவைகளால் உண்டாகும் சரீரவாதனைகளின் உணர்வற்று, ஸ்தம்பமாய், அசைவற நிருவிகற்பத்தில் ப்ரம்ம சொரூபத்தில் கலந்து, நீடூழிகாலம் நின்று விடுதலாம். இதற்குப் பிரமாணம்:—

"விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்
சந்தியிலான சமாதியிற் கூடிடு
மந்த மிலாத வறிவினரும் பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே." (திருமந்திரம்.)

மாதவர்கள் மேற்கூறிய அட்டாங்கயோக நெறிகளிலே தஞ்சிந்தையை நிறுத்தித் தவநெறியி னிற்போராதலால் "நிலைமேலு நெறிமேலு நிறுத்துகின்ற நெடுந் தவந்தோர்" என்றார். நெடுந்தவத்தோர் நிறையாவது * அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமாசித்தி பெற்ற மாட்சிமையின்மேல் வளர்கின்ற செல்வத்திருவடியாதலின் "நெடுந்தவத்தோர் நிறைமேலும்" எனவும்; வேத சிரசின்மேல் நடனம் புரிதலின் "வேதக்கலை மேலும்" எனவும்; தொண்டு பூண்டு சொன்மாலை சூட்டி வழிபடும் அடியாருள்ளத்திலும், அவர் கண்களிலும், தோளிலும் கருத்திலும் குலவுவ தென்பார் "எம்போல்வாருள்ளத்தின்மேலும் கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின்மேலும்" எனவும்; தீக்கை செய்யுங்கால் தலைமேற் சூட்டப்படுதலால் "தலைமேலும்" எனவும்; அடியவர் உயிரும் உணர்வும் திருவடியையே நோக்கி நிற்றலின் "உயிர்மேலும் உணர்வின் மேலும்" எனவும்; அவர் செய்யு மெய்யன்பின் பயனாக வெளிப்பட்டருள்புரிதலின் "தமதன்பின்மேலும்" எனவும்; மேற்குறித்த தலங்கட்குப்பழுது நேரா தவண்ணம் இடையீடின்றிப் பாதுகாத்து வளருந்தன்மைய தாகலின் "வளர்த்தாள்" எனவும் கூறினார். "வளர்தாள்" என்பது வினைத்தொகை.

"திருவடியெங்குங் காவலாக நிற்றற்கு"ப்பிரமாணம்:—

"ஆரே யறிவா ரடியின் பெருமையை
ஆரே யறிவா ரங்கவர் நின்றது
ஆரே யறிவா ரதுபத்தோ டாக்கையை
ஆரே யறிவா ரடிக்காவ லானதே." (திருமந்திரம்.)

"சிந்தையி னுள்ளே யெந்தை திருவடி." (திருமந்திரம்.)

"கடியதோ ருண்ணிமை கட்டுமின் காண்மின்." (திருமந்திரம்.)

"விடியாமை காக்கும் விளக்கது வாமே." (திருமந்திரம்.)

என்னும் திருமூலதேவர் திருவாய்மலர்ந்தருளிய ஆப்தவாக்கியங்களால் இறைவன் அடியவர் உள்ளமாதியிடத்தினின்று காவல் செய்வது விளங்குதல் காண்க. (உக)

---

* அட்டமாசித்தியின் விபரம் திருவருட்பா அரும்பதவுரை 54-ம் பக்கத்தில் விரித்துரைக்கக்காண்க.

**22.** பொற்குன்றே யகம்புறமும் பொலிந்துநின்ற பூரணமே யாரணத்துட் பொருளேயென்றுங், கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பேதான கற்பகமே கற்பகத்தின்கனியே வாய்மைச், சொற்குன்று நாவகத்துண் மாறுவின்பந் தோற்று கின்ற திருவருட்சீர்ச்சோதியேவிண்,ணிற்கின்றசுடரேயச் சுடருள்ளோங்கு நீளொளியே யவ்வொளிக்கு ணிறைந்த தேவே.

(**பதவுரை.**) பொன் குன்று ஏ - பொன்மலை யொப்பவனே, அகம் புறம் உம்- உள்ளிடத்தும் வெளியிடத்தும், பொலிந்து நின்ற - விளங்கிநின்ற, பூரணம் ஏ - வியாபக வஸ்துவே, ஆரணத்து உள்-வேதத்தினுள்ளமர்ந்த, பொருள் ஏ - நித்தியப் பொருளே, என்றும் - எக்காலத்தும், கற்கின்றோர்க்கு - வேதாகமங்களோதுந் திரிபதார்த்த லட்சணங்களையும் படித்துணர்வோர்க்கு, இனிய - இனியதான, சுவை கரும்பு ஏ-சுவையுடைய கரும்பையொப்பவனே, தானம்-சொர்க்கத்திலுள்ள, கற்பகம் ஏ - கற்பகத்தருவே, கற்பகத்து இன் - கற்பகதருவினுடைய இனிய, கனியே-பழத்தையொப்பவனே, வாய்மை சொல் - உண்மைச்சொற் சொல்லுதல், குன்று - குறைவுறாத, நா அகத்து உள் - நாக்கினுள்ளே, மாறு - மாறுபடாத, இன்பம் - இன்பத்தை, தோற்றுகின்ற - விளக்கின்ற, திரு - அழகிய, அருள் சீர் - அருளாகிய செல்வத்தையுடைய, சோதியே - ஞானப்பிரகாசமே, விண் - ஆகாயத்தில், நிற்கின்ற - நிலையாக வாழ்கின்ற, சுடர் ஏ - செங்கதிரே, அ - அந்த, சுடர்உள் - செங்கதிரினுக்குள், ஓங்கும் - உயரும், நீள் ஒளி ஏ - நீள்கின்ற சோதியே, அ ஒளிக்கு உள் - அந்தச் சோதிக்குள்ளே, நிறைந்த - வியாபித்த, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) அண்டத்திற் சந்திர சூரியர்களும், பிண்டத்தில் இடைகலை பிங்கலைகளும் வலம்வரும் நடுநாடியாகவும், அண்டபிண்டங்களுக்காதாரமாகவும், தேவர்கள் வசிக்குந்தானமாகவும் விளங்கு மேருமலை யொப்பவனே யென்பார் "பொற்குன்றே"என்றும்; அண்டத்தில் அகமாகிய அக்கினியிலும், அகப்புறமாகிய சூரியனிலும், புறமாகிய சந்திரனிலும், புறப்புறமாகிய நட்சத்திரங்களிலும், பிண்டத்தில் அகமாகிய ஆன்மாவிலும், அகப்புறமாகிய சீவனிலும், புறமாகிய மனசிலும், புறப்புறமாகிய இந்திரியங்களிலும், அபேதமாகக்கலந்து விளங்குஞ் சருவ வியாபியென்பார் "அகம் புறமும் பொலிந்து நின்ற பூரணமே" யென்றும்; சொற்பிரபஞ்சத்துள்ளே தலைமைபெற்ற வேதங்களின் அர்த்தமாக விளங்குவதென்பார் "ஆரணத்துட் பொருளே" யென்றுங் கூறினர். ஞானநூல்களை யோதுவாரும், ஓதுவிப்பாரும், அந்த நூற்பொருளைக்கேட்பாரும், கேட்பிப்பாரும், சிந்திப்பாருமாக ஐவகை ஞானவேள்வி செய்பவருக் கினிக்குமின்சுவைக் கரும்பன்னனென்பார் "கற்கின்றோர்க் கினிய சுவைக்கரும்பே" என்று கூறினர். தன்னிகரில்லாத துரிய ஞான பூமியிற்பேரின்பப் பெருவாழ்வைக் கைம்மாறு கருதாது மெய்யுணர்வுடைய மேலோர்க்கு வழங்கும் வண்மையுடைய தருவென்பார் "தானகற்பகமே கற்பகத்தின் கனியே" யென்றார்.

சத்தியவாசகம்பேசு நாவினையுடையவர்க்கு மாறுபாடில்லாத வின்பத்தை விளக்குந் திருவருட்புகழுடைய பரம்பொருளென்பார் "வாய்மைச் சொற்குன்று நாவகத்துண் மாறுவின்பந் தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதியே" என்றார்.

ஊனக்கண்காணு மொளியா யுலகத்தைப் பல்லூழிகளாக விளக்குஞ் செங்கதிரென்பார் "விண்ணிற்கின்றசுடரே" யென்றும்; செங்கதிரோனுக்குள் விளங்கும் பர்க்க மூர்த்தியென்பார் "அச்சுடருள்ளோங்கு நீளொளியே" என்றும்; பர்க்க மூர்த்தியினுள் விளங்கும் ஞானக்கண்ணாற் காணத்தக்க பேரொளிப்பிழம்பாகிய மஹாதேவனென்பார், "அவ்வொளிக்குணிறைந்த தேவே" என்றும் கூறினர்.

"சூரியனாதி யும்பர்கள் மேருவை வலம் வருதற்கு" ப்பிரமாணம் :—

"செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கண்
மஞ்சுடை மேரு வலம்வரு காரண
மெஞ்சுட ரீசனி றைவ னிணையடி
தஞ்சுட ராக வணங்குந் தவமே." (திருமந்திரம்.)

"அகம்புறமும் பொலிந்துநின்ற பூரண" மென்பதற்குப் பிரமாணம் :—

"ஆயும் பொய் மாயை யகம்புற மாய்நிற்கும்
வாயு மனமுங் கடந்த மயக்கறுந்
தூய வறிவு சிவானந்த மாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே." (திருமந்திரம்.)

தேவாரத்தில் "அருமறையினகத்தானை" யென்னுந் திருவாக்கிற்கிணங்க, "ஆரணத்துட்பொருள்" என்றார்.

"ஐவகை ஞானவேள்வி" யென்பதற்குப்பிரமாணம்:—

"ஞானநூ றனையோத லோதுவித்த னற்பொருளைக் கேட்பித்த றான்கேட்ட றன்று, வீனமிலாப் பொருளதனைச் சிந்தித்தலைந்து மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞானபூசை; யூனமிலாக் கன்மங்க டவஞ்செபங்கடியான மொன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவதுபோக: மானவையான் மேலான ஞானத்தாலரனை யருச் சிப்பர்வீடெய்த வறிந்தோரெல்லாம்." (சிவஞானசித்தியார்.)

"அடைந்தார்க்கு வேண்டும்பொருள் முழுதுந்தரும் வண்மையுடையா"னென்பதற்குப் பிரமாணம்: —

"வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ
வேண்டுமயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீயா தருள்செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பொருளொன் றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே."
(திருவாசகம்.)

"தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருத
வாமே யிவனு ரதற்கு." (திருவருட்பயன்.)

"வாய்மைச்சொற்குன்றா நாவகத்துண்மாறுத வின்பம்விளைதற்கு"ப்பிரமாணம்:—

"பன்னி யூறும் பழத்தினி லொண்சுவை
யென்னி லூறி யெனக்கே களிதரும்
உன்னி லுன்னுமுன் னாவிடில் விட்டிடும்
என்னு ளீச னிருந்த வியற்கையே." (தேவாரம்,)

"நிற்கின்ற போதே நிலையுடை யான்கழற்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்ற லின்றித் தொழுமின் றொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே." (திருமந்திரம்.)

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு." (திருக்குறள்.)

"சுடருளோங்கு நீளொளி" யென்பதற்குப் பிரமாணம் :—

"சோதிக்குட் சோதியாய்த் தோன்றிவென் காணே,"

"வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியி லொளியி லொளியன்."

என்னுஞ் சைவசித்தாந்த நூற்பாடல்களாலுங் கண்டுகொள்க.

"வாழும்படி யொன்று கண்டுகொண்டேன் மனத்தேயொருவர்
வீழும்படி யன்று விள்ளும்படியன்று வேலைநில
மேழும் பெருவரை யெட்டுமெட்டாம விரவுபகல்
சூழுஞ் சுடர்க்கு நடுவேகிடந்து சுடர்கின்றதே."

என அபிராமிபட்டர் திருவாய்மலர்ந்தருளிய அபிராமியந்தாதியாலும் உண்மையுணர்க. (உஉ)

---

**23.** தேசுவிரித் திருளகற்றி யென்றுமோங்கித் திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்தவாழ்க்கை, மாசுவிரித்திடுமனத்திற் பயிலாத் தெய்வ மணிவிளக்கே யானந்த வாழ்வேயெங்கும், காசுவிரித்திடு மொளிபோற் கலந்துநின்ற காரணமே சாந்த மெனக்கருதாநின்ற, தூசுவிரித்துடுக்கின்றோர் தம்மைநீங்காச் சுகமயமே யருட் கருணை துலங்குந்தேவே.

(பதவுரை.) தேசு - ஒளியை, விரித்து - பரப்பி, இருள் - மூலமல அந்தகாரத்தை, அகற்றி - விலக்கி, என்றும் - எக்காலத்தும், ஓங்கி - உயர்ந்து, திகழ்கின்ற - விளங்குகின்ற, செழு கதிர் ஏ - செழித்த ஞானபானுவே, செறிந்த - நெருங்கிய, வாழ்க்கை - மாயவாழ்க்கையின், மாசு - குற்றத்தை, விரித்து இடு - பரப்புகின்ற, மனத்தில் - உள்ளத்தில், பயிலா - பழகுதலில்லாத, தெய்வம் - தெய்வீகம்வாய்ந்த, மணிவிளக்கு ஏ - மாணிக்கத்தீபமே, ஆனந்தம் வாழ்வு ஏ- பேரின்பவாழ்வாகவுள்ளவனே, எங்கும் - எவ்விடத்திலும், காசு - பொன்னானது, விரித்து இடு-பரப்புகின்ற, ஒளிபோல் - பிரகாசத்தைப்போல, கலந்துநின்ற - வியாபித்துநின்ற, காரணமே - காரணப்பொருளே, சாந்தம் என - உபசாந்தமென, கருதாநின்ற - எண்ணுகின்ற, தூசு - ஆடையை, விரித்து - பரப்பி, உடுக்கின்றோர் - புனைகின்ற ஞானிகள், தம் ஐ - தங்களை, நீங்கா - விட்டொழியாத, சுக மயம் ஏ - இன்பமயமானவனே, அருள் கருணை - அருளாகிய கருணை, துலங்கும் - பிரகாசிக்கின்ற, தேவே - மஹாதேவனே.

(விசேஷ உரை.) ஆன்மாவின் கண்ணே சிவஞான வொளியைப் பெருக்கி ஆணவ விருளைத் துரத்தும் சிவஞானபானுவாகி யுள்ளவனென்பார். "தேசுவிரித் திருளகற்றியென்றுமோங்கித் திகழ்கின்ற செழுங்கதிரே" யென்றும்; பொய்யுலக போகத்தி லிச்சையாற் களங்கமுற்ற மனத்தில் விளங்காத மாணிக்கவிளக்காயிருத்தலின் "செறிந்தவாழ்க்கைமாசுவிரித்திடுமனத்திற்பயிலாத்தெய்வமணிவிளக்கே" யென்றும்; துக்கமற்ற நித்திய சுகவாழ்வினை யுடையவனாதலான் "ஆனந்த வாழ்வே" யென்றும்; மாயாகாரியப்பிரபஞ்சமுழுதுங்கலந்து பொன்போலொளிரு ஞானத்திருமேனியுடைய காரணப்பொருளாதலின் "காசுவிரித்திடுமொளிபோற் கலந்துநின்றகாரணமே" யென்றும்; ஞானியர் மாயா தனுவுடன்கூடி வாழ்ந்திருப்பவராயினும் சிவமே தனுவாகப்பெற்று அத்தனுவினுள் வாழும் பரிசுத்தராக விருத்தலால் தமது சிவாங்கத்துப் புனையும் ஆடையும் அத்தகைய ஞானமய வாடையாகவே புனையும் தன்மையர் என்பது தோன்ற "சாந்தமெனக்கருதாநின்ற தூசுவிரித்துடுக்கின்றோர்தம்மை" யென்றும்; அன்னோரை நீங்காமல் அவருள்ளத்து வாழுஞ் சிற்சுகசொரூபியாதலின் "நீங்காச்சுகமயமே"யென்றுங் கூறினர்.

காருணியமூர்த்தியாகவே யென்றும் விளங்கு மஹாதேவன் என்பது தோன்ற "அருட்கருணை துலங்குந்தேவே" யென்று அடைமொழி கொடுத்தோதினர்.

"இருளகற்றித் தேசுவிரிந்தென்று மோங்கித் திகழ்கின்ற செழுங்கதிர்"ரெனவே அது முக்காலத்துந் திகழ்வது பெற்றாம். என்னை? "முக்காலத்தினு மொத்தியற் பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே" என்பது விதியாகலின்.

"அருட்கருணை:—இருபெயரொட்டுப்பண்புத்தொகை; இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன்றொக்க தொகையெனினும் பொருந்தும். பயிலா, நீங்கா இவையிரண்டும் ஈறுகெட்ட வெதிர்மறைப் பெயரெச்சங்கள்.

"இருளகற்றித்திகழ்கின்ற செழுங்கதிர்" என்பதற்குப்பிரமாணம்:—

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே னீயலாற் பிறிதுமற் றின்மை [னே
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறைசிவ
யொன்றுநீ யல்லை யன்றியொன்றில்லை யாருன்னை யறியகிற்பாரே."

(திருவாசகம்.)

"மாசுவிரிந்திடுமனத்திற் பயிலாத்தெய்வ மணிவிளக்கு" என்பதற்குப்பிரமாணம்:-

"உடலி னூடுபோய் மீளு - முயிரி னூடுமா யாத
வுணர்வி னூடுவா னூடு - முதுதீயூ
டலவை யூடுநீ ரூடு - புவியி னூடுவா தூடு
மொருவ ரோடுமே வாத - தனிஞானம்;
சடரி னூடுநால் வேத - முடியி னூடுமூ டாடு
துரிய வாகுலா தீத - சிவரூபம்,
தொலைவி லாதபே ராசை - துரிச றாதவோர் பேதை
தொடு முபாய மேதோசொ - லருள்வா யே." (திருப்புகழ்.)

"தணியா னமனே சிலைமீ துனதா
ளணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோக தயாபரனே." (கந்தரனுபூதி.)

என அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளியவாறு காண்க. (௨௩)

---

24. கோவேயெண் குணக்குன்றே குன்றாஞானக் கொழுந்தேனே செழும் பாகே குளிர்ந்தமோனக், காவேமெய் யறிவின்பமயமே யென்றன் கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத், தேவேயத் தேவுக்குந் தெளிய வொண்ணாத் தெய்வ மே வாடாமற் றிகழ்சிற்போதப், பூவேயப் பூவிலுறு மணமே யெங்கும் பூரணமாய் நிறைந்தருளும் புனிதத்தேவே.

(பதவுரை.) கோவே - தலைவனே, எண்குணம் குன்று ஏ - தன்வயத்தனுதன் முதலாகிய எட்டுக்குணங்களையுடைய மலையொப்பவனே, குன்றா-குறையாத, ஞானம்கொழுதேன் ஏ-வளமையுடைய ஞானத்தேனே, செழு பாகு ஏ-செழிய சர்க்கரைப்பாகை யொப்பவனே, குளிர்ந்த-தண்மைபடைத்த, மோனம் கா ஏ-மௌன மாகிய கற்பகச்சோலையை யொப்பவனே, மெய் - நித்தியமாகிய, அறிவு - அறிவினிறைந்த, இன்பம் மயம் ஏ - ஆனந்தமயமே, என்றன் - என்னுடைய, கண் ஏ-கண் போல்வானே, மு கண் கொண்ட-மூன்று கண்களைப்படைத்த, கரும்பு ஏ-கரும்பை யொத்தவனே, வானம் தே ஏ - சொர்க்கலோகாதிபனே, அ தேவு கு உம் - அவ்வுலகாதிபனாகிய இந்திரனுக்கும், தெளிய ஒண்ணா - தெளிந்துணர்தற்கியலாத, தெய்வம் ஏ - கடவுளே, வாடாமல் - என்றும் வதங்காமல், திகழ் - விளங்குகின்ற, சித போதம் பூ ஏ - சித்தாகிய ஞானமலரே, அ பூ இல் - அந்த மலரினிடத்தில், உறு -

பொருந்திய, மணம் எ - பரிமளமே, எங்கும் - எல்லாவுலகின்கண்ணும், பூரணம் ஆய் - நிறைவாய், நிறைந்து அருளும் - நிரம்பிநின்று மன்னுயிர்க்கருள்செய்கின்ற, புனிதம் - பரிசுத்தமுடைய, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) தேவர்க்கும், முத்தொழில்செய்யுமூவர்க்கும், ஏனைய சீவர்க்குந் தலைமைத் தனிப்பெரும்பதியானவன் என்பார், "கோவே" யெனவும்; எண்வகைப்பட்ட குணங்களையுடையானாயினுஞ் சிறிதும் விகாரமும் சலனமுமின்றி விளங்கும் அசலனென்பார், "எண்குணக்குன்றே" எனவும்; பவரோகமருந்தாய்க் குணக்குன்றின்மேற் குறையாது விளைகின்ற சிவஞான நறுந்தேன் அனையான் என்பார், "ஞானநறுந்தேனே" எனவும்; கருப்பஞ்சாறும், முக்கனிரசமும், தெங்கினறும்பாலும், கற்கண்டின்பொடியும், சீனிச்சர்க்கரையும் ஒன்றாகக்கூட்டி வடிகட்டி யெடுத்துக்காய்ச்சி யிறக்கிய நறும்பாகினையொத்தினிப்பவனென்பார், "செழும்பாகே" எனவும்; எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதங்களிற்பட்டுப் பிறந்துழன்ற அருப்பிறவி வெப்பத்தையும், இளைப்பையும், யுதவிப்பையும் தன் குளிர் நிழலால் ஆற்றி யின்பசுகந்தருஞ் சோலைநிழலன்னான் என்பார், "குளிர்ந்தமோனக் காவே" எனவும்; வியாபகமா யாண்டு நிறைந்துள்ள சத்து என்பார் 'மெய்' எனவும்; வியாபகத்துடன் பளிங்கென விளங்குங் களங்கமில்லாத சித்து என்பார் 'அறிவு' எனவும், ஆனந்தபூர்த்தி யென்பார், "இன்பமயமே" எனவும்; சகத்தைக்கண்டு விளக்கி விளங்கும் முகக்கண்போலும், ஆன்மசொரூபத்தைக்கண்டு விளங்கும் அகக்கண்போலுஞ் சிறந்த பொருளென்பார் "என்றன்கண்ணே" எனவும்; எவ்வுயிர்களினகத்தும் புறத்தும் உடனாகியும் வேறாகியு நின்று விளக்கி விளங்கும் முச்சுடரு முக்கண்களாகக்கொண்ட சுகவடிவோ யென்பார் "முக்கண்கொண்ட கரும்பே" எனவும்; மானிடரின் மேம்பட்ட சுரர்களுக்குத்தலைவனாக நின்றோனே யென்பார் "வானத்தேவே" யெனவும்; தேவருக்கும் அசுரருக்கும் ஒருகாலத்துப் போர்நேர்ந்துழி, தேவர்கள் போர்முகத்திலிளைத்து வருந்துவது நோக்கி, உமாதேவியார் வேண்டுகோட்கிணங்கி, அன்னவர் வெற்றியுறப் பரசிவங் கருணை கூர்ந்த திறத்தைமறந்து, இந்திராதி யட்டதிக்குப்பாலருங்கூடிய தேவசபையில், அசுரர்களைத்தாம்ஜெயித்த தமது ஆற்றலை யொவ்வொருவரும் புகழ்ந்துகொண்டிருந்தனராக, அச்சமயத்தில் மஹாதேவர் தாம் ஓர் இயக்கவடிவுகொண்டு சென்று நின்று, ஒரு சிறுதுரும்பைத் தரைமேனட்டி இதனைச்செயித்தவரே அசுரரைச்செயித்தவர் எனத் திருவாய்மலர்ந்தருள, இந்திரனும் பிரமித்து, இவ்வண்ணம் செய்து மறைந்தவர் இவரெனத்தெளியவொண்ணாது திருவுருக்கரந்து தாம் யாரினும் சீரியரெனத் தெரித்தருளிய திருவிளையாட்டுடையோன் என்பார், "அந்தேவுந்தெளியவொண்ணாந்தெய்வமே" எனவும்; சோமசூரியாக்கினிகளின் வெம்மையாலும், நீர் இன்மையாலும், பனியாலுங்கருகி வாட்டமுறும் தாமரைமுதலிய மலர்போல வாடாத விளக்கமும், மலர்ச்சியும் மணமும் படைத்த தெய்வீக அருண்ஞான மலரொப்போய் என்பார், "வாடாமற் றிகழ்சிற்போதப்பூவே அப்பூவிலுறு மணமே" எனவுங் கூறினர்.

"பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தப்" பொருளாதலின், "எங்கும்பூரணமாய் நிறைந்தருளும் புனிதத்தேவே" என்றார்.

மஹாதேவர் யாவர்க்குங் கோவாகியும் இந்திராதியர் தெளியவொண்ணாத் தேவாகியும் விளங்குதற்குப்பிரமாணம் :—

"தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை, மூவர்கோ னாய்நின்ற முதல்வன்மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத் தெந்தை, யாவர்கோ னென்னையும்வந் தாண்டுகொண்டான் யாமார்க்குங்குடியல்

வோம் யாதுமஞ்சோம், மேவினு மவனடியா ரடியாரோடு மேன்மேலுங் குடைந் தாடி யாடுவோமே." (திருவாசகம்.)

"குணக்குன்ருனோன்" என்பதற்குப் பிரமாணம்:—

"பாசம் - பலவுங் கடந்து பரிந்தருள்சேர் பண்பாற், தலைவி விளங்குங் குணக் குன்றேன்." (நெஞ்சுவிடுதூது.)

"ஞானக்கோழுந்தேனே" யென்ருங்குத் திருவாதவூரடிகள் "இன்னதேன் றறியாத தேனே" எனவும்; திருநாவுக்கரசர் "திருமகட்குச் செந்தாமரையாமடி, சிறந்தவர்க்குந் தேனுய் விளைக்கும்மடி" எனவும் திருவாய்மலர்ந்தருளினமை காண்க.

"இறைவன் கண்ணுனப்பான்" என்பதற்குப்பிரமாணம்:—

"கண்ணவனு புலகெல்லாங் காக்கின்றனே
காலங்க ளூழிகண் டிருக்கின் றனே
விண்ணவனுய் விண்ணவர்க்கு மருள்செய் வானே
வேதனுய் வேதம் விரித்திட்டானே
யெண்ணவனே யெண்ணுர் புரங்கண் மூன்றும்
இமையாமு னெரிகொளுவ நோக்கி நக்க
திண்ணவனே திருச்சோற்றுத் துறையுளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே." (தேவாரம்.)

"குருகாம் வயிரமாங் கூறுநாளாம், கொள்ளுங் கிழமையாங் கோளே தானும்
பருகா வமிர்தமாம் பாலி னெய்யாம், பழத்தி னிரதமாம் பாட்டிற் பண்ணும்
ஒருகா லுமையா ளோர்பா கனுமாம், உண்ணின்ற நாவிற் குரையா டியாங்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங், கண்ணுங் கருகாவூரெந்தை தானே."
(தேவாரம்.)

எனத் திருநாவுக்கரசுநாயனுர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திருத்தாண் டகத் திருப்பாசுரங்களில் இறைவன்கண்ணுனவாறு காண்க.

"மாதேவர் பூவாயும் பூமணமாயும் உண்மைக்கு" ப்பிரமாணம்:—"பூத்தானும் பூவினிறத் தானுமாம் புக்குளால் வாசமாய் மன்னிநின்ற கோத்தானும்" எனவும்; வாசமலரெலா மானுய் நீயே." எனவும், திருவையாற்றுத் திருத்தாண்டகத்திலும், திருக்கருகாவூர்த் திருத்தாண்டகத்திலுந் துதிக்கப்பட்டுள்ளவாறு காண்க. (உச)

---

**25.** வானேயவ் வானுலவுங் காற்றே காற்றின்வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரிற், ருனேயும் புவியே யப்புவியிற் றங்குந் தாபரமே சங்கமமே சாற்று கின்ற, வூனே நல்லுயிரே யுள்ளொளியே யுள்ளத் துணர்வே யவ்வுணர்வுகலந் தூறு கின்ற, தேனேமுக்கனியே செங்கரும்பே பாகின்றீஞ்சுவையே சுவையனைத்துந் திரண்டதேவே.

(**பதவுரை.**) வான் ஏ - ஆகாயமே, அ வான் - அந்த ஆகாயத்தில், உலவு உம்- சஞ்சரிக்கின்ற, காற்று ஏ - வாயுவே, காற்று இன் வரும் - வாயுவினின்றும் தோன் றுகின்ற, நெருப்பு ஏ - அக்கினியே, நெருப்பு உறு - அக்கினியிற் பொருந்திய, நீர்வடிவு ஏ - சல வடிவமே, நீர் இல் தான் - சலத்திற்ருன், ஏயும் - பொருந்திய, புவி ஏ - பூமியே, புவி இல் - பூமியின் கண்ணே, தங்கும் - வசிக்கின்ற, தாவரம் ஏ- நிலையியற்கைப் பொருளே, சங்கமம் ஏ - இயங்கியற் பொருளே, சாற்றுகின்ற - சொல்கின்ற, ஊன் ஏ - உடம்பே, உயிர் ஏ - சீவனே, உள் - அந்தச் சிவனுள்ளிருக்

கும், ஒளி எ - பிரகாசமே, உள்ளத்து-அச்சீவனுக்குரிய, உணர்வு எ - ஞானமே, அ உணர்வு - அந்த ஞானவுணர்வில், கலந்து - வியாபித்து, ஊறுகின்ற - சுரக்கின்ற, தேன் எ - மதுவே, மு கனி எ-வாழை பலா மாவின் பழமன்னவனே, செம் கரும்பு எ - சிவந்த கரும்பொப்பவனே, பாகு இன் - சர்க்கரைப்பாகினது, தீம் சுவை எ - இனிய சுவையாகி யுள்ளவனே, சுவை அனைத்தும் - சுவைகளெல்லாமும், திரண்ட - ஒன்றாக வுருக்கொண்டாற்போன்ற, தேவே - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை) பஞ்சமகா பூதங்களில் எங்குமாகி எப்பொருட்கும் கிரந்தரமா யிடங்கொடுத்துக்கொண்டு நிற்கு முதன்மைபெற்றுள்ளது ஆகாயமாதலின் "வானே" எனவும்; ஆகாயத்திற் றோன்றி யதன்கண் வியாபித்து நிற்பது "வாயு" வாதலின் "அவ்வானுலவுங்காற்றே" எனவும்; காற்றினிடை யுதிப்பது நெருப்பாதலின் "காற்றின்வரு நெருப்பே" எனவும்; நெருப்பினிடையுதிப்பது நீராதலின் "நெருப்புறுநீர்வடிவே" எனவும்; நீரினின்றுந் தோன்றுவது மண்ணாதலின் "நீரிற்றனேயும் புவியே" எனவும்; சராசரங்கள் புவியில் வசிப்பனவாதலின் "புவியிற்றங்குந் தாவரமே சங்கமமே" எனவும்; உடம்பாகியும் உயிராகியும் உயிரின் பிரகாசமாகியும் உணர்வாகியும் இறைவர் நிற்றலின் "சாற்றுகின்ற வூனேநல்லுயிரே யுள்ளொளியே யுள்ளத்துணர்வே" எனவும்; அவ்வுயிர்கடோறுங் கலந்து விளங்கும் ஆனந்த சொரூபியாதலின் "அவ்வுணர்வுகலந் தூறுகின்ற தேனே முக்கனியே செங்கரும்பே பாகின்றீஞ்சுவையே" எனவும்; இந்திரன், பிரமன், விண்டு, உருத்திரன், மகேசன், சதாசிவனாதி யும்பர்வாழ் பதங்களின் இன்பமுழுதும் ஒன்றாகத் திரண்டன்ன பரிபூரணனந்த மஹாதேவராக விளங்குதலின், "சுவையனைத்துந் திரண்டதேவே" யெனவுங் கூறினர்.

"வானாதி யைம்பெரும்பூதங்களாயுஞ் சராசர வுயிர்களாயும் மாதேவர் விளங்குதற்கு"ப்பிரமாணம்:—

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ." (திருவாசகம்.)

"நிற்பனவு நடப்பனவு நிலனுநீரு நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி, யற்பமொடு பெருமையுமா யருமையாகி யன்புடையார்க் கெளிமையதா யளக்கலாகாத், தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும்யானு மாகின்றதன்மையனை நன்மையோடும், பொற்புடைய பேசக்கடவோம்பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே. (தேவாரம். திருமறுமாற்றத்திருத்தாண்டகம்.)

"ஊனாகி யுயிராகி யுணர்விற் கலந்தூறும் இன்பவடிவ"னென்பதற்குப்பிரமாணம்:—

"ஊனா யுயிரா யுணர்வா யென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய்." (திருவாசகம்.)

"பழச்சுவைபோ லினிப்பவ"னென்பதற்குப் பிரமாணம்:—

"அது பழச்சுவையென வமுதென வறிதற் கரிதென வெளிதென வமரருமறியார்" (திருவாசகம்.)

"பழமதுவும் எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம் அண்ணருள்." எனச் சிவஞானபோதம் கூறியவாற்றானுணர்க. (உகு)

26. விண்ணே விண்ணுருவே விண்முதலே விண்ணுள்வெளியே யவ்வெளிவிளங்குவெளியே யென்றன், கண்ணே கண்மணியே கண்ணொளியே கண்ணுட்கலந்து நின்றகதிரே யக்கதிரின்வித்தே, தண்ணே தண்மதியே யம்மதியிற்பூத்த தண்ணமுதே தண்ணமுத சாரமே சொற், பண்ணே பண்ணிசையே பண்மயமே பண்ணின்பயனே மெய்த்தவர் வாழ்த்திப் பரவுந்தேவே.

(பதவுரை.) விண் ஏ - ஆகாயமானவனே, விண் உரு ஏ - ஆகாய சொரூபனே, விண் முதல் ஏ-ஆகாயத்துக்கு முதல்வனே, விண் உள்-ஆகாயத்தினுள்ளிருக்கின்ற, வெளி ஏ - பரமாகாசமானவனே, அ வெளி - அந்தப்பரமாகாசத்துள், விளங்கு - பிரகாசிக்கின்ற, வெளி ஏ - சிதாகாசமானவனே, என்தன் - என்னுடைய, கண் ஏ - கண்ணின்பிரகாசமானவனே, கண் உள் - கண்ணுக்குள், கலந்து நின்ற - கூடி நின்ற, கதிரே - ஞான சூரியனே, அ கதிர் இன் - அந்த ஞானசூரியனுக்கு, வித்து ஏ - காரணனே, தண் ஏ - குளிர்ச்சியானவனே, தண் - குளிர்ந்த, மதி ஏ - சந்திரனானவனே, அ மதி இல் - அந்த சந்திரனிடமாக, பூத்த - தோன்றிய, தண் அமுது ஏ - குளிர்ந்த அமிர்தமானவனே, தண் அமுத சாரம் ஏ - குளிர்ந்த அமிர்த சாரமானவனே, சொல் - சொற்களையுடைய, பண் ஏ - இசைப்பாட்டானவனே, பண் இசை ஏ - இசைப்பாட்டின் ஓசையானவனே, பண் மயம் ஏ - இசைமயமாயிருப்பவனே, பண் இன் பயன் ஏ - இசையின் இனிய பலனாகியுள்ளவனே, மெய் தவர் - உண்மையுணர்ந்த தவநெறியுடையோர், வாழ்த்தி - பல்லாண்டு கூறி, பரவும் - வழிபடுகின்ற, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) அளவிட்டறிதற்கரிய பெரிய அகண்ட வெளியாயினனென்பார் "விண்ணே" எனவும்; அகண்டாகாரனென்பார் "விண்ணுருவே" எனவும்; அகண்டவெளிக்குத்தானே தலைவனாயினனென்பார் "விண்முதலே" எனவும்; விண்ணின் அகத்துக் காரணமான பரமாகாசமாயினனென்பார் "விண்ணுள் வெளியே" எனவும்; காரணமான பரமாகாசத்துண் மகாகாரண சிதாகாசனென்பார் "அவ்வெளிவிளங்குவெளியே" எனவும்; எல்லாவுயிர்கட்கும் கண்ணுங்கண்மணியும், அதன் ஒளியும், அதனுட்கலந்த கதிரும், அதன்காரணமுமாகி விளங்குதலின் "கண்ணே * * கதிரின் வித்தே" எனவும்; அருளுந்தகவாற் றண்மையாகியும் தண்மதியாகியும் விளங்கி, இறவாநலம் வழங்கும் அமுதசாரமாயினனாதலின் "தண்ணே * * * * தண்ணமுதசாரமே" யெனவும்; ஆரியதிராவிட வேதங்களின் இசைப்பாட்டாகி விளங்குதலின் "பண்ணே" எனவும்; பண்ணோசையும் பண்மயமுமாகி இன்பந்தருதலின் "பண்ணிசையே பண்மயமே" எனவும்; நாதாந்தத்திற் பெறப்படும் இன்பசொரூபி என்பார் "பண்ணின்பயனே" எனவும்; மெய்யுணர்வுடையோர் வணங்குங் கடவுளென்பார் "மெய்த்தவர் வாழ்த்திப் பரவுந்தேவே" எனவும் கூறினர்.

"மஹாதேவர் பிறராலறிதற்கரிய வெளியாகி நிற்றற்குப்" பிரமாணம்:—

"ஆரு மறியாத வண்டத் திருவுருப்
பார் முதலாகப்பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகமறிந் தேனே." (திருமந்திரம்.)

**"விண்ணானாய் விண்ணவர்கள் விரும்பிவந்து வேதத்தாய் கீதத்தாய் விரவி யெங்கும், எண்ணானாய் யெழுத்தானாய் கடலேழானாய் யிறையானாய் யெம்மிறையே**

யென்றுயிர்க்குங், கண்ணானாய் காரானாய் பாருமானாய் கழிப்பாலை யுள்ளுறையுங் கமலபாதா, மண்ணானாய் மாயக்குரம்பை நீங்க வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே." (தேவாரம். திருத்தாண்டகம்.)

"கண்ணாகியுங் கண்மணியாகியும் இறைவர் விளங்குதற்குப்" பிரமாணம்:—

பண்காட்டிப் படியாயதன் பத்தர்க்குக்
கண்காட்டிக் கண்ணினின்ற மணியொக்கும்
பெண்காட்டிப் பிறைச்சென்னி வைத்தான்றிரு
வெண்காட்டை யடைந்துய் மடநெஞ்சமே." (தேவாரம்.)

"தண்மையுஞ் சந்திரனுமாயினர்" என்பதற்குப் பிரமாணம்:—

"ஆகின்ற சந்திரன் றண்ணளியா யவன்
ஆகின்ற சந்திரன் றட்பமுமா யிடும்
ஆகின்ற சந்திரன் றன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் றானவ னாகுமே." (திருமந்திரம்.)

"பண்ணும் பண்ணினிசையும் பண்ணின்பயனுமாயினமைக்குப்" பிரமாணம்:—

"பாசுபாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத், தாசு பேணின நின்றாரிவர் தன்மை யறிவாரார்." (தேவாரம்.)

"பண்ணார்ந்த வீணை பயின்ற விரவலனே யென்கின்றாளால்
யெண்ணார் புரமெரித்த வெந்தை பெருமானே யென்கின்றாளால்
பண்ணார் முழவதிரப் பாடலொ டாடலனே யென்கின்றாளால்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள் கொல்லோ."
(தேவாரம்.)

" அருந்தவர்க டொழுதேத்து மப்பன்றன்னை " யெனத்திருநாவுக்கரையர் துதித்ததுபோல "மெய்ந்தவர் வாழ்த்திப் பரவுந்தேவே" என வீண்டுந் துதிக்கப் பட்டமைகாண்க. (உசு)

---

**27.** மாணேயத் தவருளத்தே மலர்ந்தசெந்தா மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப், பூணேமெய்ப் பொருளே யற்புதமேமோனப் புத்தமுதே யானந் தம் பொலிந்த பொற்பே, யாணேபெண் ணுருவமே யலியே யொன்று மல்லாத பேரொளியே யனைத்துந்தாங்குந் தூணேசிற்சுகமே யச்சுகமேற் பொங்குஞ் சொரூபானந்தக்கடலே சோதித்தேவே.

(பதவுரை.) மாண் - மாட்சிமையும், நேயம் - அன்பும் உடைய, தவர்-உளத்து ஏ-தவமுடையார் மனத்துள்ளே, மலர்ந்த-விரிந்த, செம் தாமரை மலரின் - சிவந்த தாமரை மலரினிடத்து, வயங்குகின்ற - பிரகாசிக்கின்ற, மணி ஏ - மாணிக்கமே, ஞானம் பூண்-ஞானமாகிய ஆபரணமே, மெய் பொருள் ஏ - உண்மைப்பொருளே; அற்புதம் ஏ - விம்மிதவடிவமே, மோனம் புது அமுது ஏ - மோனநெறியில் விளை கின்ற புதிய அமிர்தமே, ஆனந்தம் - இன்பமானது, பொலிந்த - மிகுந்த, பொற்பு ஏ - அழகே, ஆண் ஏ - ஆண் உருவமே, பெண் ஏ - பெண் உருவமே, அலி ஏ - அலி யுருவமே, ஒன்று உம் அல்லாத - இவையொன்றுமல்லாததான, பேர் ஒலி ஏ - அக ண்ட ஞானவொளியே, அனைத்து உம் - எல்லாவுலகத்தையும், தாங்கும் - சுமக் கின்ற, தூண் ஏ - தம்பமே, சித் சுகம் ஏ - சிதானந்தமே, அ சுகம்மேல் - அந்தச்சுகத் தின்மேலாக, பொங்கு உம் - அதிகரித்தெழுகின்ற, சொரூபம் ஆனந்தம் கடல் ஏ -

ஆன்மசொரூபத்தில் விளைகின்ற ஆனந்தசாகரமே, சோதி தே வ - பரஞ்சோதி வடிவினையுடைய மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) அளத்தற்கரிய பெருமையும் சிவநேசமும் தவநெறியும் உடைய வருள்ளத்தாமரையில் ஒளிருஞ் சிவமணியாதலின் "மானேயத்தவருளந்தே * * மணியே" யெனவும்; அப்பெருந்தவத்தோர் விரும்பிப்பூணத்தக்க ஞானவாபரணம் போலிருத்தலின் "ஞானப்பூணே" யெனவும்; என்றும் உள்ள சத்திலக்கணமுடைமையின் "மெய்ப்பொருளே" எனவும்; காணுந்தோறும் வேணவா விளைக்கும் தொலையாத அற்புதக்காட்சியையுடையதாகலின் "அற்புதமே" எனவும்; மௌனநிலையிற் பெருகுகின்ற அமுதப்பெருக்கினதாகலின் "மோனப்புத்தமுதே" யெனவும்; ஆனந்தமதிகரித்த அழகியவண்ணனாதலாயிருத்தலின் "ஆனந்தம்பொலிந்த பொற்பே" எனவும்; அவன் எனவும், அவளெனவும், அதுவெனவும் நிற்றலின் "ஆணே பெண்ணுருவமே யலியே" எனவும்; இவையனைத்துங் கடந்து நிற்றலின் "பேரொலியே" எனவும்; அளவிறந்த அண்டங்களையும் பிண்டங்களையும் தாங்கும் ஆதாரவாக விளங்கிநிற்றலின், "அனைத்துந்தாங்குந்தூணே" எனவும்; அறிவானந்தமும் அதனின்மிக்க சொரூபானந்தசாகரமும் தானாகலின் "சிற்சுகமே யச்சுகமேற்பொங்குஞ் சொருபானந்தக்கடலே" யெனவும்; அருளொளித் திருமேனியுடைய மஹாதேவனென்பார் "சோதித்தேவே" எனவுங்கூறினர்.

"அடியார் அளத்தற்கரிய பெருமையுடையவ"ரென்பதற்குப் பிரமாணம்:—

"இயங்கு முலகி லீச னடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்
புயங்க ளெண்டிசை போது பாதாளம்
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே." (திருமந்திரம்.)

"அடியார் உள்ளத்தாமரையான்" என்பதற்குப்பிரமாணம்:—

"மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்." (திருக்குறள்.)

"அடியாருள்ளத் தன்புமீதூரக்
குடியாக்கொண்ட கொள்கையுஞ்சிறப்பும்." (திருவாசகம்.)

"பூணலாப்பூணானைப் பூசாச்சாந்தமுடையானை" யென்ற திருநாவுக்கரையர் திருவாக்குக்கிணங்க, வள்ளலார் "ஞானப்பூணே" யெனத்துதித்தனர். (தேவாரம்-திருப்புன்கூருந் திருநீடூரும் கலந்த பதிகம்.)

"அற்புதன்காண்க வநேகன்காண்க" என்று திருவாதவூரடிகள் துதித்தவாறு வள்ளலாருந் துதித்தனர்.

"இறைவர் ஆணாகிப் பெண்ணாகி யலியாகினு" ரென்பதற்குப் பிரமாணம்:—

"விண்ணோர்பெருமானை வீரட்டானை
வெண்ணீறு மெய்க்கணிந்த மேனியானைப்
பெண்ணானை யாணானைப் பேடியானைப்
பெரும்பற்றத் தண்புலியூர் பேணினானை
அண்ணா மலையானை யானைந்தாடு
மணியாரூர் வீற்றிருந்த வம்மான்றன்னைக்
கண்ணார் கடல்புடைசூழ் தண்ணாகைக்
காரோணத் தென்ஞான்றுங் காணலாமே." (தேவாரம்.)

"அனைத்துந்தாங்கும் அணுகி"யென்பதற்குப் பிரமாணம்:—

"மூள்வாய தொழிற்பஞ் சேந்திரியவஞ்ச
முகரிகாண் முழுதுமிவ் வுலகையோடி
நாள்வாயு நம்முடைய வம்மாணை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல்வாளோர்
நீள்வான முகடதனைத் தாங்கிநின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவையாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேனும்மா
லாட்டுணே னோட்டந்நீங் கலையேன் மின்னே."

(தேவாரம்: திருத்தாண்டகம்.)

என ஆன்றோர் கூறியவாக்கானுண்மையுணர்க. (உஎ)

---

**28.** பூதமே யவைதோன்றிப் புகுந்தொடுங்கும் புகலிடமே யிடம்புரிந்த பொருளே போற்றும், வேதமே வேதத்தின்விளைவே வேதவியன்முடிவே யம்முடியின் விளங்குங்கோவே, நாதமே நாதாந்த நடமேயந்த நடத்தினையுண் ணடத்துகின்ற நலமே ஞான, போதமே போதமெலாங் கடந்துநின்ற பூரணமே யோகியருட் பொலிந்த தேவே.

(பதவுரை.) பூதம் ஏ - பஞ்சபூதங்களானவனே, அவை - அந்தப்பூதங்கள், தோன்றி-உதித்து, புகுந்து ஒடுங்கும் - மீண்டுநுழைந்து மறைதற்கான, புகல் இடம் ஏ-சத்தியாகிய அடைக்கலத்தானமே, இடம்புரிந்த-தோன்றி யொடுங்கு மிடத்தை வகுத்த, பொருள் ஏ - வத்துவே, போற்றும் - துதிக்கப்பட்ட, வேதம் ஏ - வேத சொரூபியே, வேதம் அத்து இன்-வேதங்களில் விளைகின்ற, விளைவு ஏ-பயனானவனே, வேதம் வியன் முடிவு ஏ-வேதங்களின் பெருமைபொருந்திய அந்தமே, அ - அந்த, முடிவு இல் - வேதாந்தத்தில், விளங்கும்-ஒளிர்கின்ற, கோ ஏ-தலைவனே, நாதம் ஏ-நாத தத்துவமே, நாதம் அந்தம் நடம் ஏ - நாதமுடிவாகிய நாதாந்தத்திற் செய்யப் படும் திருக்கூத்தானவனே, அந்த நடம் அத்து இன் ஐ-அந்த நாதாந்தத்திருக்கூத்தை, உள் - உள்ளத்தே, நடத்துகின்ற - செய்கின்ற, நலம் ஏ - உபகாரமுள்ளவனே, ஞானம் - இருவகை ஞானமுந்தோன்றும், போதம் ஏ - அறிவே, போதம் எலாம் - ஆன்மபோதமுழுதும், கடந்து நின்ற - தாண்டிநின்ற, பூரணம் ஏ-சர்வ வியாபியே, யோகியர் உள் - சகமார்க்கிகள் உள்ளத்தில், பொலிந்த - மிக வெளிப்பட்ட, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) பிருதிவி முதலாகிய ஐந்து பெரும்பூதங்களாயினனென்பார் "பூதமே" எனவும்; அவை உதித்தொடுங்கு மிடமாக நிற்றலின் "புகலிடமே" எனவும்; அந்த இடமாக நிற்கும் பொருளாதலின் "இடம்புரிந்தபொருளே" எனவும்; யாவருங்கொண்டாடும் அபரஞான வடிவானவனே யென்பார், "வேதமே" எனவும்; கரும காண்டத்தாலும் உபாசனாகாண்டத்தாலும் இருவகைக்காண்டிகட்கும் அவரவர் கருதி முயலும் பயன்விளையச்செய்வதனால்"வேதத்தின்விளைவே"எனவும்; ஞானபாதத்தை யோதும் வேதாந்தமென்பார் "வேத வியன்முடிவே" யெனவும்; வேதாந்தபீடத்தில் விளங்கு முதல்வனென்பார், "அம்முடியில் விளங்குங் கோவே" எனவும்; நாத தத்துவமாகியும் அதன்மேல் நடத்தை நடத்து நன்மையுடையராகியும் மஹாதேவர் நிற்றலின் நாதமே எனவும், நடமே யெனவும், நடத்தினை நடத்துகின்ற நலமே யெனவும்; ஞானாதீதப்பூரணப்பொருளென்பார் "போதமெலாங்கடந்த பூரணமே" யெனவும்; சிவயோகியருள் விளங்கு மிறையோன் என்பார் "யோகியருட்பொலிந்த தேவே" யெனவுங் கூறினார்.

"பஞ்சபூதங்களும் மஹாதேவர் தாம் ஆனமைக்கு"ப்பிரமாணம் :—

"நீணிலவுமந்தீயு நீருமற்றை நெறியிலக்கு மிருகாலு மாகாசமும், வாணிலவு தாரகையு மண்ணும்விண்ணு மன்னுயிருமென்னுயிருந் தானுஞ்செம்பொன், ஆணியென்று மஞ்சனமா மலையே யென்று மம்பவளத்திரளென்று மறிந்தோரேத்துஞ், சேணெறும்பி யூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேனனே." (தேவாரம்: திருவெறும்பியூர்த்திருப்பதிகம்.)

"பூதங்கள் தோன்றியொடுங்க இறைவரது சத்தியே புக்லிட" மென்பதற்குப் பிரமாணம் :—

"தூரத்துச்சோதி தொடர்ந்தொரு சத்தியா
யார்வத்துநாத மனைத்தொரு விந்துவாய்
பாரச்சதாசிவம் பார்முத லைந்துக்கும்
ஆர்வத்துச் சத்தியோ ராவத்துமாணுமே." (திருமந்திரம்.)

எனத் திருமூலதேவர் கூறியவாற்றானுணர்க. (உ-அ)

---

29. ஞாலமே ஞாலமெலாம் விளங்கவைத்த நாயகமே கற்பமுத னவிலாநின்ற
காலமே காலமெலாங் கடந்த ஞானக்கதியே மெய்க்கதியளிக்குங் கடவுளேசிற்
கோலமே குணமேயுட்குறியே கோலங் குணங்குறிகள்கடந்துநின்றகுருவேயன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட செம்பொருளே யும்பர்பதஞ் செழிக்குந்தேவே.

(பதவுரை.) ஞாலம் ஏ - உலகமே, ஞாலம் எலாம்-உலகமுழுதும், விளங்க-ஒளிசெய்ய, வைத்த - நிலைநிறுத்தி வைத்த, நாயகம் ஏ - தலைமை படைத்தவனே, கற்பம் முதல் - பிரம கற்பமாதியாக, நவில் ஆநின்ற அ-சொல்லப்படுகின்ற,காலம் ஏ - கால தத்துவமே, காலம் எலாம் - எல்லாக்காலங்களையும், கடந்த - தாண்டிய, ஞானம் கதி ஏ - ஞான நடையுடையவனே,மெய் கதி - உண்மையாகிய பரகதியை, அளிக்கும் - அடியார்க்கு வழங்குகின்ற, கடவுள் ஏ - பதிப்பொருளே, சித்கோலம் ஏ - அறிவாகிய வடிவுடையவனே, குணம் ஏ - குணங்களானவனே, உள் குறி ஏ - தியானிக்கப்படும் பல அடையாளமுடையவனே, கோலம்-வடிவத்தையும், குணம்-குணங்களையும், குறிகள் - அடையாளங்களையும், கடந்துநின்ற - கடந்து அப்பால் நின்ற, குரு ஏ - பரமாசாரியனே, அன்பர் - அன்புடைய தொண்டரது, சீலம் ஏ - ஒழுக்கங்களானவனே, மால் அறியா-மயக்கமறியாத, மனத்து இல் - உள்ளத்தில், கண்ட - தரிசித்த, செம்பொருள் ஏ - சிறந்த வத்துவே, உம்பர் - மேலாகிய, பதம்-சிவகதியில், செழிக்கும் - இன்பவளந் தழைக்கப்பெற்ற, தே ஏ - மஹாதேவனே, எ - று.

(விசேஷஉரை.) புவனகோடி முழுதுந் தனது திருமேனியாகவும், எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதங்களும் உறுப்புக்களாகவும், இச்சாஞானக்கிரியா சத்திகள் அந்தக்கரணங்களாகவும் கொண்டுள்ள முதல்வனென்பார் "ஞாலமே" எனவும்; ஞாலத்திலுள்ள மன்னுயிர்கட்கெல்லாம் மலபரிபாகமுண்டாம்பொருட்டுத் தனுகரணாதி கொடுத்து, அவ்வுயிர்களின் அறிவுக்கறிவாக நின்றுணர்த்திப் பந்த நீங்கி முத்தியடையுங்காறும் ஐந்தொழில் புரிந்து, விளங்கவைக்கும் தலைமைப் பெரும்பதியென்பார்"ஞாலமெலாம் விளங்கவைத்த நாயகமே" எனவும் கூறினார்.

"ஞாலமாய் ஞாலத்தை விளங்கவைக்கும் பதி" யென்பதற்குப்பிரமாணம்:—

"உலகமே யுருவமாக யோனிக ளுறுப்பதாக
விலகுபே ரிச்சாஞானக் கிரியை யுட்கரணமாக

வலகிலா வுயிர்ப்புலன்கட் கறிவினை யாக்கியைந்து
நலமிகு தொழில்களோடு நாடக நடிப்பனுதன்.”

(சிவஞானசித்தியார் சுபக்கம்-௨-ம் சூத்திரம்.)

நிமிடம், நாழிகை, முகூர்த்தம், சாமம், பகல், இரவு, வாரம், பக்கம், மாதம், வருடம், யுகம், சதுர்யுகம், தேவயுகம், பிரமகற்பம் எனப்பலபேதமாய், இறப்பு நிகழ்வு எதிர்வு என மூன்று வகையாய், பிரபஞ்சத்தின் தோற்றமும் நிலையும் இறுதியுந் தன்கண் நிகழச்செய்து போதருநெறியின் முதல்வனுக்கோர் துணைக்காரணம் போல நிற்பதனை நோக்கிக் *“கற்பமுதனவிலாநின்ற காலமே” யெனத்துதித்தார்.

---

* காலப்பிரமாணம் :— நிமிஷம் பதினைந்து கொண்டது ஒரு காஷ்டை; காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை; கலை முப்பது கொண்டது ஒரு முகூர்த்தம்; முகூர்த்தமென்பது இரண்டு நாழிகை; முகூர்த்தம் முப்பது கொண்டது பகலும் இரவும்கூடிய ஒருநாள்; நாள் பதினைந்து கொண்டது ஒரு பக்ஷம்; பக்ஷம் இரண்டு கொண்டது ஒரு மாசம்; மாசம் ஆறுகொண்டது ஒரு அயனம்; அயனம் இரண்டு கொண்டது ஒரு வருஷம்; இம்மனுஷ வருஷம் ஒன்று தேவர்களுக்கு ஒரு நாளாம்; தேவர்களுக்கு உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம் இராத்திரியுமாயிருக்கும்; மனுஷவருஷம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்களுக்கு ஒரு வருஷமாம்; தேவ வருஷம் பன்னீராயிரம் கொண்டது ஒரு சதுர்யுகமாம்.

| யுகம். | தேவ வருஷம். | மனுஷவருஷம். |
|---|---|---|
| கிருதயுகம். | ...4,800 | ...1,728,000 |
| திரேதாயுகம். | ...3,600 | ...1,296,000 |
| துவாபரயுகம். | ...2,400 | ... 864,000 |
| கலியுகம். | ...1,200 | ... 432,000 |
| சதுர்யுகம். | ...12,000 | ...4,320,000 |

இப்படிச்சதுர்யுகம் ஆயிரந்திரும்பினால், பிரமாவுக்கு ஒருபகலாகும்; பின்னும் ஆயிரந் திரும்பினால் பிரமாவுக்கு ஒரு இராத்திரியாகும்; ஆகவே இரண்டாயிரம் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக்கு ஒரு நாளெனப்படும். இந்தநாள் முப்பது கொண்டது ஒருமாசம். இந்தமாசம் பன்னிரண்டு கொண்டது ஒரு வருஷம். இந்தவருஷம் நூறானால் பிரமாவுக்கு ஆயுசு முடியும். இவ்வியல்புடைய பிரமாக்கள் எண்ணில்லாதவர்கள் பிறந்திறந்தார்கள். பிரமாவினுடைய ஆயுசு பரமெனப்பெயர் பெறும். அதிற் பாதியாகிய ஐம்பது வருஷம் பரார்த்தமென்று சொல்லப்படும்.

பிரமாவினுடைய பகலாகிய ஆயிரஞ்சதுர்யுகத்திலே பதினான்கு மனுக்கள் அதிகாரம் பண்ணுவார்கள் அவர்கள்பெயர்:-சுவாயம்புவர், சுவாரோசிஷர், ஔத்தமர், தாமசர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்வதர், சூரியசாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரம சாவர்ணி, தருமசாவர்ணி, ருத்திர சாவர்ணி, ரோச்சியர், பாவியர் என்பவைகளாம். ஒவ்வொரு மநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகும். எழுபத்தொரு சதுர்யுகம், தேவமானத்தினாலே எட்டுலக்ஷத்தைம்பத்திராயிரம் வருஷங்களாம்; மனுஷிய மானத்திலே முப்பது கோடியே அறுபத்தேழு லக்ஷத்திருபதினாயிரம் வருஷங்களாம். ஒரு மநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகப் பதினான்கு மநுவந்தரத்துக்கும் தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்கு சதுர்யுகமாகும். பிரமாவின் பகலிலே மிஞ்சிய சதுர்யுகம் ஆறு.

இப்படிப் பதினான்கு மநுவந்தரங்களானால், பிரமாவுக்கு ஒருபகலாம். இதன் முடிவிலே தினப்பிரளயம் உண்டாகும். அப்பொழுது பிரமா அப்பகலளவினதாகிய இராத்திரியிலே யோகநித்திரைசெய்வர். இப்படி ஆயிரஞ் சதுர்யுக வளவையையுடைய இராத்திரி கடந்தபின்பு பிரமா திரும்பியும் படைத்தற்றொழில் செய்வர். பிரமாவுக்கு ஒருபகல் ஒரு கற்பமெனப் படும். கற்பமாவது சிருட்டிமுதற் பிரளயமிறுதியாகிய காலம். ஒரு கற்பத்துக்கு மனுஷ வருஷம் நானூற்று முப்பத்திரண்டு கோடி.

"கால தத்துவந்துணைக்காரணம்" என்பதற்குப்பிரமாணம்:—

"காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக் கென்னிற்
காலமோ வறிவின்றாகு மாயினுங் காரியங்கள்
காலமே தரவே காண்டுங் காரணன் விதியினுக்குக்
காலமுங் கடவுளேவ லாற்றுணைக் காரணங்காண்."
(சிவஞானசித்தியார்: சுபக்கம்-க-ம். சூத்திரம்.)

கால தத்துவத்தைக்கடந்த அநாதி நித்த முத்த சித்துருவனாய் எக்காலத்தும் தனக்கோரிறுதியின்றித் தன்னை யடைந்தார்க்கு மரணத்தைத்தவிர்த்து நித்திய வாழ்வை வழங்கவல்ல பெருமானாதலின் "காலமேலாங்கடந்த ஞானக்கதி" யென்றார்.

"காலங்கடந்தமைக்கு" ப்பிரமாணம்:—

"அந்தணாள னுன்னடைக்கலம் புகுத வவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன்ற னாருயிரதனை வவ்வினாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தைநீயெனை நமன்றமர் நலியி லிவன்மற்றென் னடியானென விலக்குஞ்
சிந்தையால்வந்துன் றிருவடியடைந்தேன் செழும்பொழிற் றிருப்புன்கூருளானே."
(தேவாரம்.)

"வென்றிமிகு காலனுயிர் பொன்றிவீழ
விளங்குதிரு வடியெடுத்த விகிர்தன்றன்னை." (தேவாரம்.)

"மூலத் துவாரத்து மூளு மொருவனை
மேலைத் துவாரத்தின் மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே." (திருமந்திரம்.)

"புரிகாலே நேசஞ்செய்ய விருந்தபுண் டரீகத்தாரு
மெரிகாலே மூன்று மாகி யிமையவர் தொழநின்றாரும்
தெரிகாலே மூன்றுசந்தி தியானித்து வணங்கநின்று
திரிகாலங் கண்டவெந்தை திருச்செம்பொன் பள்ளியாரே."
(தேவாரம்.)

"மெய்க்கதியளிக்குங் கடவுளே" என்றது எத்தெய்வத்தை யாவர் வழிப்படினும் அத்தெய்வ வடிவு கொண்டு சென்று, அவர் விரும்புங் கதியை யளிக்கு முதன்மையை நோக்கித்துதித்ததென்க. இதற்குப்பிரமாணம்:—

"சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முந்திகோடிப்பன மொய்த்திருண்டு
பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
யந்திப் பிறையணிந் தாடுமையாற னடித்தலமே." (தேவாரம்.)

"யாதொருதெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியங்கே
மாதொரு பாகனார்தம் வருவர்மற் றைத்தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யு
மாதலா லவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே."
(சிவஞானசித்தியார்.)

இறைவன் பலவேறு வகை வேடங்களும் குணங்களும் குறிகளு முடையனாகியும் அவையனைத்துங் கடந்தவனாகியு நிற்கும் எல்லாம்வல்ல பெருமான் என்பது தோன்ற "கோலமே குணமே யுட்குறியே கோலங் குணங்குறிகள் கடந்து நின்ற குருவே" என்றார். இதற்குப்பிரமாணம்:—

"குறித்ததொன் றாகமாட்டாக் குறைவில னாதலானு
நெறிப்பட நிறைந்தஞானத் தொழிலுடை நிலைமையானும்
வெறுப்பொடு விருப்புத்தன்பால் மேவுத லிலாமையானு
நிறுத்திடு நினைந்தமேனி நின்மல னருளினாலே."
(சிவஞானசித்தியார்.)

என ஆன்றோர் கூறியவாற்றானுணர்க. (௨௧)

---

**30.** தத்துவமே தத்துவாதீதமே சிற்சயம்புவேயெங்குநிறை சாக்ஷியே மெய்ச், சத்துவமே சத்துவத்தின் பயனா மின்பந் தந்தருளும் பெருவாழ்வாஞ் சாமியேயெஞ், சித்தநிலை தெளிவிக்கு மொளியே சற்றுந் தெவிட்டாத தெள்ளமுதே தேனே யென்றுஞ், சுத்தநெறி திறம்பாதா ரறிவிற்றோய்ந்த சுகப்பொருளே மெய்ஞ்ஞானந் துலங்குந் தேவே.

(பதவுரை.) தத்துவம் ஏ - தத்துவ மயமே, தத்துவம் அதீதம் ஏ - தத்துவங் கட்கெட்டாதபொருளே, சித்-சித்தாகிய, சயம்பு ஏ - சயம்புவே, எங்கும் - எல்லா உலகத்திலும், நிறை - பூரணமாக வியாபித்த, சாட்சி ஏ-சாட்சியானவனே, மெய்-நித்தியமான, சத்துவம் ஏ - சத்துவ குணாகரனே, சத்துவத்து இன் - சாத்துவீக குணத்தினாற்றோன்றும், பயன் ஆம் - பேறாகின்ற, இன்பம் - ஆனந்தத்தை, தந்து அருளும் - கொடுத்தருள்கின்ற, பெருவாழ்வு ஆம் - பெரிய வாழ்வாகிய, சாமி ஏ - சுவாமியே, எம்-அடியேமுடைய, சித்தம் நிலை - (மயங்கிய) சித்தத்தினிலைமையை, தெளிவிக்கும் - மயங்காவண்ணம் தெளிவுபெறச்செய்யும், ஒளி ஏ - சோதியே, சற்றும் - சிறிதும், தெவிட்டாத - தெவிட்டலைத்தாராத, தெள் அமுது ஏ - தெளிந்த தேவாமிர்தமே, தேன் ஏ-மதுவே, என்றும்-எந்நாளினும், சுத்தம் நெறி-சுத்த சன்மார்க்கத்தினின்று, திறம்பாதார் - வழுவி நடவாதவரது, அறிவு இல் - அறிவினிடத்திலே, தோய்ந்த - படிந்த, சுகம் பொருள் ஏ - சுகசொரூபியே, மெய் ஞானம்-மெய்ஞ்ஞானநெறியின்கண், துலங்கும் - விளங்கப்பெற்ற, தே ஏ-மஹாதேவனே. எ-று.

(விசேஷஉரை.) ஐந்துபெரும்பூதங்கண் முதலாகிய தத்துவங்களும், தாத்துவிகங்களும், தயாமூல தன்மமென்னுந் தத்துவமுமாய் நிற்றலின் "தத்துவமே" எனவும்; அந்தத் தத்துவ தாத்துவிகங்கள் சடமாகலின் அவற்றாலுணரப்படாமை தோன்ற "தத்துவாதீதமே" எனவும்; சடப்பொருள்களின் மருவியிருக்கினும் முதல்வன் தானே முளைத்த சித்துப்பொருளாய் அவற்றைத் தொழிற்படுத்தும் கர்த்தத்துவமுடையவனாதலின் "சிற்சயம்புவே" யெனவும்; தான் ஒருகருமமுமின்றி நிர்விகாரியாய்த் தனது சந்நிதியினடைபெறுஞ் சர்வ ஜீவர்களின் அறிவு, இச்சை, செயல்களைக் கண்டு நிற்பவனாதலின் "எங்குநிறை சாக்ஷியே" எனவும்; இராசத தாமத குணங்களினீங்கிச்சுத்தஞானமுதித்தற்குரிய சத்துவ குணமாயினனாதலின் "மெய்ச்சத்துவமே" எனவும் கூறினர். சத்துவத்தின் பயனாவது அஞ்ஞானநீக்கமும், மெய்யுணர்வடைதலும், அருள்வழிப்பட்டு நிற்றலும், இறைவனை வாழ்த்தலும், இன்பவாழ்வு பெறுதலு மாதலானும், அவ்வாழ்வைத்தருங் கருணையோன் பரமனாதலானும் "சத்துவத்தின் பயனாமின்பந் தந்தருளும் பெருவாழ்வாஞ் சாமியே" எனவும் கூறினர். சித்தத்தின் நிலை தெளிவிக்கும் ஒளியென்றது "அருளொளி" யென்றுணர்க. சுத்தநெறியென்றது பலவகை நெறிகளின் மிக்க சுத்த சமரச சன்மார்க்கத்தை.

"தத்துவங்களாயினா" னென்பதற்குப்பிரமாணம்:—

"தலையவனா யுலகுக்கோர் தன்மையானே
தத்துவனுஞ் சார்ந்தார்க்கின் னமுதானானே

நிலையவனாய் நின்னொப்பா ரில்லாதானே
   நின்றுணராக் கூற்றத்தைச் சிறிப்பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோன்மேலிட்ட
   கூற்றுவனே கொடிமதில்கண் மூன்றுமெய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையுளானே
   திகழொளியே சிவனேயுன்னபய நானே.''

(தேவாரம்: திருத்தாண்டகம்.)

அன்றியும், தேவாரம் திருநள்ளாற்றுத் திருத்தாண்டகம் "குலங்கொடுத்துக் கோணிக்க வல்லான்றன்னை"யென்ற திருவிருத்தத்தில் சலங்கெடுத்துத் "தயாமூல தன்மமென்னுந் தத்துவத்தின்வழிநின்றுதாழ்ந்தோர்க்கெல்லாம், நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற்றானை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்தவாறே" என்த் திருநாவுக்கரையர் துதித்தமை காண்க.

"இறையவன் தத்துவங்களுக்கு அதீதனாய் நிற்றற்குப்"பிரமாணம்:—

"கண்டிடுங் கண்டனைக்காணு கரணங்காணு
   கரணங்க டமைக்காணு வுயிருங்காணு
வுண்டியம ருயிர்தானுந் தன்னைக்காணு
   துயிர்க்குயிரா மொருவனையுங்காணுதாகும்
கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங்காட்டிக்
   கண்ணாகிக் கரணங்கள் காணுமனிற்பன்
கொண்டானை யுளத்திற்கண் டடிகூடிற்பாசங்
   கூடாது கூடிடினுங் குறித்தடியினிறுத்தே."

(சிவஞானசித்தியார்: கூம் சூத்திரம்.)

"எங்குநிறைசாக்ஷி" யென்பதற்குப் பிரமாணம்:—

"உரைச்சேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேத
நிரைச்சேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்
வரைச்சேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
விரைச்சேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலையாமே."

(தேவாரம்.)

"கடந்து நின்றான் கமல மலராதி
கடந்து நின்றான் கடல்வண்ண னெம்மாயன்
கடந்து நின்றா னவர்க்கப் புறமீசன்
கடந்து நின்றா னெங்குங் கண்டுநின்றானே." (திருமந்திரம்.)

"சத்துவத்தின்பயனும் இன்பவாழ்வை மஹாதேவர் வழங்குதற்கு"ப்பிரமாணம்:—

"மண்ணுலகிற் பிறந்துநம்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுத றொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத் தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னொடித்தான்மலை யுத்தமனே."

"இந்திரன்மால் பிரமன்னெழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திரமா முனிவரிவ னாரெனவெம் பெருமான்
நந்தம ரூரனென்றா னொடித் தான்மலை யுத்தமனே."

(தேவாரம்: ஸ்ரீகயிலாயப்பதிகம்.)

"சிந்தைதனை மயக்கந்தீர்க்கும் ஏரோளியை" எனத் திருநாவுக்கரையர் பெரும்பற்றப் புலியூர்த் திருத்தாண்டகத்திற் சிவபிரானைத் துதித்தவண்ணம் "வள்ளலார் "சித்தநிலை தெளிவிக்குமோளியே" எனத்துதித்தனர்.

"அருளது வென்ற வகலிட மொன்றும்
பொருளது வென்ற புகலிட மொன்றும்
மருளது நீங்க மனம் புகுந்தானைத்
தெருளலும் பின்னைச் சிவகதி யாமே."

என்றது திருமூலநாயனுர் திருவாய்மலர்ந்தருளிய திருமந்திரம். (௩௦)

---

31. யோகமே யோகத்தின்பயனே யோகத்தொருமுதலே யோகத்தி னோங்குந்தூய
போகமே போகத்தின்பொலிவே போகம்புரிந்தருளும் புண்ணியமே புனிதஞான
யாகமே யாகத்தின் விளைவே யாகத்திறையே யவ்விறைபுரியு மின்பேயன்பர்
மோகமே மோகமெலா மழித்துவீறு மோனமே மோனத்தின் முளைத்ததேவே.

(பதவுரை.) யோகம் ஏ - யோகநெறியானவனே, யோகம் அத்து இன் - யோகநெறியினது, பயன் ஏ - பேருக வுள்ளவனே, யோகம் அத்து - யோக நெறியின்கண், ஒரு முதல் ஏ - ஒப்பற்ற முதன்மை பெற்றவனே, யோகம் அத்து இன் - யோகநெறியினல், ஓங்கும் - மிக்குயராநிற்கும், தூய - சுத்தமான, போகம் ஏ - போகமானவனே, போகத்து இன் - போகத்தினுடைய, பொலிவு ஏ-பெருக்கமே, போகம் - போகத்தை, புரிந்து அருளும் - விரும்பியளிக்கின்ற, புண்ணியம் ஏ - புண்ணிய சொரூபியே, புனிதம் - சுத்தமாகிய, ஞானம் யாகம் ஏ - ஞானவேள்வி யானவனே, யாகத்து இன் - அந்த வேள்வியாலாகிய, விளைவு ஏ - பயனுனவனே, யாகத்து இறை ஏ - வேள்விக்குத் தலைவனே, அ இறை - அந்தத்தலைவன், புரியும் - செய்கின்ற, இன்பு ஏ - ஆனந்தமே, அன்பர் - அடியவருடைய, மோகம் ஏ-மோகிக்கும்பொருளானவனே, மோகம் எல்லாம்-ஆசையெல்லாவற்றையும், அழித்து-நாசஞ்செய்து, வீறும் - விளங்குகின்ற, மோனம் ஏ - மௌன நிலைமையனே, மோனத்து இல் - மௌனநிலையின்கண், முளைத்த - தானேதோன்றிய, தே ஏ - மஹா தேவனே. எ-று.

(விசேஷ உரை.) மன்னுயிர்த் தொகுதியுள் பரிபாகிகளாயினோர் ஞான யோகத்தாற்றன்னோடு கூடி யின்பமுற இருபதினாயிரத்தெண்ணூறு வகைகளை யுட்படுத்திய அட்டாங்க யோகநெறியாய் இறைவன் விளங்குதலின் "யோகமே" எனவும்; யோகிகள் அடையும் அட்டமாசித்தியும், சாருபமுமாகிய பயனுகி நிற்றலின் "யோகத்தின் பயனே" எனவும்; எவ்வுயிர்களும் தம்தம் அறிவு இச்சை செயல் நீங்கித்தன்பால் ஒடுங்கிநிற்கக் கல்லாலநீழலிற்செங்கமலபீடத்தில்வீற்றிருந்துமௌன யோகம் புரிந்து சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரராகிய நால்வருக்கருளிய பரமயோகியாதலின் "யோகத்தொருமுதலே" எனவும்; கருவிகளின் கலப்பால் அடைகின்ற அசுத்தமாகிய சிற்றின்பம் போகத்தின் வேறாய், அறிவின்கண் அனுபவித்துணரப்படு ஞானயோகத்தின் பரிசுத்த பரபோகமாய் விளங்குதலின் "யோகத்தினோங்குந்தூய போகமே" எனவும்; என்றும் குறைவுபடாது இந்திராதியோர்போகமும் அற்பமாக மதிக்க வளர்கின்ற போகமாதலின் "போகத்தின் பொலிவே" எனவும்; தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமுடையார்க்கே விரும்பி இத்தகைய போகத்தைப் பிரசாதிக்கும் புண்ணிய சொரூபியாதலின் "போகம் புரிந்தருளும் புண்ணியமே" எனவும்; யோகங்களை யூட்டுதற்கேதுவாகிய கர்மயாகம், ஜெபயாகம், தவயாகம், தியான யாகங்களின் மிக்க பவுத்திர யாகமாய்

வீடுபேற்றிற்குக் காரணமாதலின் "புனிதஞானயாகமே" எனவும்; அந்த ஞான யாகத்தின் பலனும், அதற்குத்தலைவரும் தன்னையன்றிப் பிறராகாமையால் "யாகத்தின் விளைவே யாகத்திறையே" எனவும்; அந்த யாகத்திற் பெறும் பேரின்பம் தனதாக நிற்றலின் "அவ்விறை புரியுமின்பே" எனவும்; அடியாராயினோர்க்குத் தன்பாற்றீராத பேராசையைத் தருவோனாயிருத்தலின் "அன்பர் மோகமே" எனவும்; நிராசையுடன் விளங்கும் மௌனபதமாக விருத்தலின் "மோகமேலா மழிந்து வீறு மோனமே" எனவும்; பலபல மதவாதிகளுடைய மனவாக்குக் காயங்களுக்கெட்டாத தூரமாயுள்ள மகாமௌனவெளியிற் சுயம்புவான மஹாதேவனாதலின் "மோனத்தின் முளைந்த தேவே" எனவுங் கூறினார்.

"யோகமார்க்கம் இருபதினாயிரத்தெண்ணூறு வகையாய் எட்டாய் நிற்பதற்கு" ப்பிரமாணம்:—

"இருபதினாயிரத்தெண்ணூறு பேத
மருவிய கன்மமா மந்த யோகந்
தருமிவை காய வுழைப்பாகுந் தானே
யருமிரு நான்கா யடங்குமா சித்திக்கே." (திருமந்திரம்.)

"யோகத்தின் விளைவு அட்டமாசித்தியும் சாரூபமும்" என்பதற்குப்பிரமாணம்:—

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதாரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தாங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதி மண்டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருந்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோகமுற்று
முழத்தலுழந்தவர் சிவன்ற னுருவந்தைப் பெறுவர்."
(சிவஞானசித்தியார்: அ-ம்-சூத்திரம்.)

"சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தால்
புத்திக ளானவை யெல்லாம் புலப்படுஞ்
சித்திக ளெண் சித்தி தானாந் திரிபுரைச்
சத்தி யருடரத் தானுள வாகுமே." (திருமந்திரம்.)

"ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாகிய இறையோன் சநகாதியர்க்கருளினமைக்கு" ப்பிரமாணம்:—

"எழுந்தநீர் பெய்யினு மெட்டுத் திசையும்
செழுந்த ணியமங்கள் செய்ம்மினென் றண்ணற்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
யழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே." (திருமந்திரம்.)

"யோகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகியா யோகமுத்தி யுதவுத லதுவுமோரார்
வேகியா னற்போற்செய்த வினையினை வீட்டலோரார்
ஊகியா மூடரெல்லா மும்பரிலொருவ னென்பர்."
(சிவஞானசித்தியார்: க-ம்-சூத்திரம்.)

"பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
யெத்தினாற் பத்திசெய்கே னென்னைநீ யிகழவேண்டாம்

முத்தனே முதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற
வத்தாவுன் ளுடல்காண்பா னடியனேன் வந்தவாறே."

(தேவாரம்.)

"ஞானயோகம்" என்பதற்குப்பிரமாணம்:—

"நெக்குநெக் குள்ளுருகியுருகி நின்றுமிருந்துங் கிடந்துமெழுந்து
நக்குமழுதுந் தொழுதும்வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச்
செக்கர்போலுந் திருமேனி திகழநோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்குநிற்ப தென்றுகொல்லோ வென்பொல்லாமணியைப் புணர்ந்தே."

(திருவாசகம்: புணர்ச்சிப்பத்து.)

"யோகத்தினுங்குந் தூய போகம் அறிவின்கண் அநுபவிக்கப்படுவ" தென்பதற்குப்பிரமாணம்:—

"தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னைச் சங்கராவார் கொலோசதுரர்
அந்தமொன்றில்லா வானந்தம் பெற்றே னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம்பெருமான் றிருப்பெருந் துறையுறைசிவனே
யெந்தையேயீசா வுடலிடங்கொண்டா யானிதற் கிலனோர்கைம்மாறே."

(திருவாசகம்: கோயிற்றிருப்பதிகம் - அநுபோகவிலக்கணம்.)

"ஞானயாகங்கள்ஐவகைப்படும்:—ஞானநூல்களை யோதுதலும், ஓதுவித்தலும், நல்லாசிரியரை யடுத்துத்தான் கேட்டலும், கேட்பித்தலும், சிந்தித்தலுமாம்."

இதற்குப் பிரமாணம்:—

ஞானநூ றனையோத லோதுவித்த
நற்பொருளைக் கேட்பித்த றான்கேட்ட னன்று
வீனமிலாப் பொருளதனைச் சிந்தித்த லைந்து
மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை
யூனமிலாக் கன்மங்க டபஞ்செபங்க டியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போக
மானவையான் மேலான ஞானத்தா லானை
யருச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம்."

(சிவஞானசித்தியார்.)

"சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே."

(திருமந்திரம்.)

"அன்பர்மோகனுய் முதல்வனிருத்தற்கு"ப்பிரமாணம்:—

"முற்றொருவர்போல முழுநீறாடி முளைத்திங்கள்சூடி முந்நூலும்பூண்டு, வொற்றொருவர்போல வுறங்குவேன்கை யொளிவளையை யொன்றொன்று வெண்ணுகின்றார், மற்றொருவ ரில்லைத்துணை யெனக்குமால்கொண்டாற்போல மயங்கவேற்றுப், புற்றரவக் கச்சார்த்து பூதஞ்சூழப் புறம்பயநம் மூரென்று போயினாரே."

"ஆகாதனஞ்சுண்ட வந்திவண்ண னைந்தலைய மாசுணங்கொண்டம்பொற்றோண் மேல், ஏகாசமாவிட்டொன்றேற்றிவர் ... நீந்நேவ பலியென்றார்க்கில்லேபுக்கேன், பாகேதங் கொள்ளார் பலியுங்கொள்ளார் பாவியேன்கண்ணுளே பற்றிநோக்கிப் போகாத வேடத்தர் பூதஞ்சூழப் புறம்பயநம் மூரென்று போயினாரே."

(தேவாரம்: திருப்புறம்பயத்திருத்தாண்டகம்.)

அன்பர்கள் கடவுண்மாட்டுக் கொள்ளுமோகமும், அன்பரிடந்தேடிச் சென்று அவர்க்குத்தரிசனமளித்து அனுக்கிரகிக்கு நெறியில் கடவுட்கன்பர்மேலுள்ள மோகமும் விளங்கவுணர்த்துந் தகையவான மேற்கண்ட தேவாரத்திருத்தாண்டகங்கள் சுந்தரமூர்த்தி நாயனுர் திருவாய்மலர்ந்தருளிச் செய்தனவாம். இத்திருவிருத்தங்களிற்பேசப்பெற்ற பாட்டுடைத்தலைவர் பேரழகுடைய பிட்சாடனமூர்த்தி; தலைவி வன்றொண்டராகிய ஆலாலசுந்தரர். அன்பர்மோகமே என்ற தொடர்மொழிக்கு அடியவர்மேனீங்காத மோகமுடையவனெனப் பொருள் கூறுதலும் பொருந்தும். என்னை ? திருவாரூரெம்பெருமானுர் ஆலாலசுந்தரர்மேல் தீராத மோகமுடையவராயிருந்தமையினுல் அவர்க்குத் தாந்தோழராய் நின்றதும், தூதராய்ப் பரவையார் திருமாளிகைக்குத் தூதுநடந்து சென்றது முதலிய செயற்கருஞ்செயல்களைச் செய்தளிருனர் என்பதை யுணராதவர் யார்? (கக)

---

**32.** காட்சியே காண்பதுவே ஞேயமேயுட் கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பேயோங்கு; மாட்சியே யுண்மையறி வின்பமென்ன வயங்குகின்ற வாழ்வே மாமெளனக்காணி, யாட்சியே யாட்சிசெயு மரசேசுத்த வறிவேமெய் யன்பேதெள் ளமுதேநல்ல, சூட்சியே சூட்சியெலாங் கடந்துநின்ற துரியமே துரியமுடிச் சோதித்தேவே.

(பதவுரை.) காட்சி ஏ - ஞானமே; காண்பது ஏ - ஞாதுருவே, ஞேயம் ஏ - காணப்படுபொருளாகிய ஞேயமே, உள் கண் உடையார்-மனக்கண்ணுடையாரது, கண் நிறைந்த - கண்ணில் நிரம்பிய, களிப்பு ஏ - மகிழ்ச்சியே, ஓங்கு உ.ம் - மிக்குயர்ந்த, மாட்சியே - பெருமையே, உண்மை அறிவு இன்பம் என்ன - சத்து சித்து ஆனந்தமென்று; வயங்குகின்ற - விளங்குகின்ற, வாழ்வு ஏ - வாழ்வானவனே, மா-பெரிய, மெளனம் காணி ஆட்சி ஏ - மெளனமாகிய காணியாட்சியே, ஆட்சி செயும் - அக்காணியாட்சியைச் சுதந்தரித்து ஆளுகைசெய்கின்ற, அரசு ஏ - மன்னவனே; சுத்தம் - களங்கமற்ற, அறிவு ஏ - அறிவானவனே, மெய் அன்பு ஏ-உண்மையாகிய அன்பே வடிவானவனே, தெள் அமுது ஏ - தெளிந்த அமிர்தமே, நல்ல சூட்சி ஏ - நல்ல ஆராய்ச்சியே, சூட்சி எலாம் - ஆராய்ச்சி முழுதும், கடந்துநின்ற-தாண்டிநின்ற, துரியம் ஏ - துரியநிலைப்பொருளே, துரியமுடி - துரியாதீதத்தினிற்கும், சோதி - பரஞ்சோதியாகிய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) சர்வஞானமும், ஞானத்தினுெகூடிய ஞாதுருவும், ஞாதுருவின் உணர்வினுக்கினிய அனுபவப்பொருளாகிய ஞேயமும், தானுகநிற்பவனென்பார் "காட்சியே காண்பதுவே ஞேயமே" எனவும்; ஊனக்கண்ணுடையவர் சகநோக்கிற் பெறுதற்கரிய பெரிய சுகரூபியென்பார் "உட்கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே" எனவும்; வேதாகமங்களாலும், எத்தகைய பெரியோராலும் மனவாக்குக்காயங்களால், சிந்தித்தளந்துரைக்கவொண்ணுது மேன்மேலும் வளர்கின்ற அளவிறந்த பெருமையுடையவனென்பார் "ஓங்குமாட்சியே" எனவும்; சத்தியஞானனந்த வாழ்வாய் ஆன்மாக்களிடத்திலென்றும்விளங்குபவன் என்பார் "உண்மையறிவின்பமென்னவயங்குகின்றவாழ்வே" எனவும்; அகண்டமவுனராச்சியவுரிமையும், அதன் ஆதிபத்தியமும் படைத்தவனென்பார் "மாமவுனக்காணியாட்சியே யாட்சிசெயுமரசே" எனவும்; மாயாதீதமான விமலஞானரூபி என்பார் "சுத்தவறிவே" எனவும்; அருளுக்குத்தாயகமாகிய அழிவற்ற அன்பே வடிவாக வமர்ந்தவனென்பார் "மெய்யன்பே" எனவும்; உண்பவர்க்கு மரணத்தைத்தவிர்க்கும் அமுதமாயினுனென்பார் "தெள்ளமுதே" எனவும்; தத்துவசோதிசெய்து பின்னர் நாடாது நாடுகின்ற சிறந்த நாட்டமென்பார் "நல்லசூழ்ச்சியே" எனவும்; ஆராய்ச்சி முழுது

பிறந்து தானேதானாய் விளங்குஞ் சிவபரதுரியங்களாயினனென்பார் "சூழ்ச்சியெலாங்கடந்துநின்ற துரியமே" எனவும்; சிவதுரியமாகிய அதீதநிலையில் விளங்கும் பரஞ்சோதியாகிய மஹாதேவே என்பார் "துரியமுடிச் சோதித்தேவே" எனவும் கூறினர்.

"காட்சியும் காண்பதுவும் ஞேயமுமாகிய திரிபுடியுண்மைக்குப்" பிரமாணம்:—

"காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக்—காண்கின்றார்
காண்பானும் காணப் படுபொருளு மன்றியே
காண்கையினுற் கண்டனரே காண்." (திருக்களிற்றுப்படியார்.)

"உட்கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பு" என்பதற்குப் பிரமாணம்:—

"ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன் - ஏகமாய்
உள்ளத்தின் கண்ணுணு னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனே வுற்று." (சிவஞானபோதம்.)

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்த
மகட்குத் தாய்தன் மணாளனொ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே." (திருமந்திரம்.)

"ஓங்குமாட்சியே" என்பதற்குப் பிரமாணம்:—

"ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே - பாகத்
தருள்வடிவந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு." (திருக்களிற்றுப்படியார்.)

"உண்மையறி வின்பமென்பதற்கு" ப்பிரமாணம் :—

"சத்திய ஞானத் தனிப்பொரு ளானந்தஞ்
சித்தத்தி னில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியத் துரியத்து
ளுய்த்த துரியத் துறுபே ரொளியே." (திருமந்திரம்.)

"மவுனக்காணியாட்சி" என்பதற்குப்பிரமாணம் :—

"சென்றார்தஞ் சித்தமோன சமாதியாம்" எனவும்; "சொல்லறுஞ்சோதி தொடர்ந்து நின்றானே" எனவும்; "உரையற்ற தொன்மை யுரைசெய்யுமூமர்காள்" எனவும்; "உதறிய பாழிலொடுங்குகின்றேனே" எனவும் திருமந்திரங்கூறுமாறும், "உள்ளும்புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே, வள்ளலெழுந்தருளு மாதினொடும்" எனத் திருக்களிற்றுப்படியார் கூறுமாறும், "நினைப்புமறப்புமில்லாதவர் நெஞ்சம், தனைப்பிரியாது சிவம்" என ஔவைகுறள் உணர்த்துமாறுங் காண்க.

"அன்பே வடிவாய் முதல்வனிருத்தற்கு"ப்பிரமாணம்:—

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்." (திருமந்திரம்.)

"அன்பே யென்னன்பே யென்றன்பா லழுதரற்றி
யன்பே யன்பாக வறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்." (திருக்களிற்றுப்படியார்.)

"சூழ்ச்சியெலாங் கடந்துநின்ற துரியநிலை" யென்பதற்குப் பிரமாணம் :—

"நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி நலஞ்சுடரே நால்வேதத் தப்பாலனின்ற, சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்துநின்ற சொலற்கரியசூழலா யிதுவுன்றன்மை, நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந்தன்னு ணிலாவாத புலாலுடம்பே புகுந்துநின்ற, கற்பகமே யானுன்னை விடுவேனல்லேன் கனகமா மணிநிறத்தெங் கடவுளானே." (தேவாரம்: தனித்திருத்தாண்டகம்.)

என மூதறிஞர் கூறிய வாக்கான் உண்மையுணர்க. (௩௨)

---

**33.** மறைமுடிக்குப் பொருத்தமுறுமணியே ஞானவாரிதியே யன்பர்கடம் மனத்தேநின்ற, குறைமுடிக்குங் குணக்குன்றே குன்றாமோனக் கோமளமே தூய சிவக்கொழுந்தே வெள்ளைப், பிறைமுடிக்கும் பெருமானே துளவமாலைப் பெம்மானே செங்கமலப் பிரானேயிந்த, விறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய்நின்ற விறையேயிவ் வுருவுமின்றி யிருந்ததேவே.

(பதவுரை.) மறைமுடி கு - வேதசிரசுக்கு, பொருத்தம் உறு - அணியும் பொருத்த மிகுந்த, மணி ஏ-இரத்தினமே, ஞானம் வாரிதி ஏ - ஞானசமுத்திரமே, அன்பர்-அடியவரது, மனம் அத்து ஏ நின்ற - உள்ளத்திலே கிடந்த, குறை - குறைவுகளை, முடிக்கும் - பூர்த்திசெய்யும், குணம் குன்று ஏ - எண்குணமாகிய மலையே, குன்று ஆ - குறைவுபடாத, மோனம் கோமளம் ஏ - மவுனத்தின் அழகே, தூய - பரிசுத்தமுள்ள, சிவம் கொழுந்து ஏ - ஆனந்தரூபியாகிய சிவக்கொழுந்தே, வெள்ளை பிறை - வெள்ளிய சந்திரகண்டத்தை, முடிக்கும் - சடைமுடிமேற்சூடும், பெருமான் ஏ - பெருமையுடைய சிவனே, துளவம் மாலை - திருத்துழாய்மாலையையணியும், பெம்மான் ஏ - திருமாலே, செம் கமலம் - செந்தாமரைமலர்மேல் வீற்றிருக்கும், பிரான் ஏ - தலைவனாகிய பிரமனே, இந்த இறை - இக்கடமைகளை, முடிக்கும் - முற்றுற முடிக்கவல்ல, மூவர்கட்கு உம்-தேவர் மூவருக்கும், மேல் ஆய் நின்ற-அதீதனாக நின்ற, இறை ஏ - பசுபதியே, இ உருவும் - இம்மூன்றுதேவர் திருவுருவங்களும், இன்றி - இல்லாமல், இருந்த - நிர்விகாரியாயாண்டும் கோயிலாகவிருந்த, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) வேதபுருடன் உபநிடதமாகிய சிரத்தில் அணிந்துகொள்ளும் பொருத்தமிக்க சிகாமணியென்பார் "மறைமுடிக்குப்பொருத்தமுறுமணியே" எனவும்; அளந்தறியப்படாத வாழமும் பரப்புமுடையதாய் மன்னுயிர்களினகத்தும் புறத்தும் சூழ்ந்துள்ள அகண்ட பராபர ஞானசமுத்திரமென்பார் "ஞானவாரிதியே" எனவும்; அடியவராயினோர் மனக்கவலையைநீக்கி அன்னோர் வேண்டும் பொருளை வழங்கும் அருட்குணமலையென்பார் "அன்பர்கடம் மனத்தேநின்ற குறைமுடிக்குங் குணக்குன்றே" எனவும் கூறினர். மன்னுலகிற் சிருட்டி திதி சங்காரம் என்னுமுத்தொழில்புரியு மூவராயினமையின் "வெள்ளைப்பிறைமுடிக்கும் பெருமானே,துளவமாலைப்பெம்மானே,செங்கமலப்பிரானே"என்றார்.வெள்ளைப்பிறையாவது ஞானாமிர்த கலாமதியாம். முத்தொழில்புரியுந் தேவர் மூவர்க்குள் ஒருவனுமியும் அவர்களின் மிக்கசோவாயு நிற்றலின் "இந்த இறை முடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற விறையே" என்றார். சகளவடிவமின்றி நிட்களமாகி விளங்கும் பெருமானென்பார் "இவ்வுருவுமின்றி யிருந்த தேவே" என்றார்.

"மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே" யென்பதற்குப் பிரமாணம் :—

"உரைமாலையெல்லா முடையவடி." எனவும்,

"நெடியான் பிரமன்றேடிக் காணார் நினைப்பார் மனத்தாரா
யடியாராவரு மருமாமறையு மண்டத் தமரரு
முடியால் வணங்கிக் குணங்களேத்தி முதல்வா வருளென்னச்
செடியார் செந்நெற் றிகழுநறையூர்ச் சித்தீச்சரத்தாரே." எனவும்,

"மூவாநான்மறை முதல்வா போற்றி." எனவும்,

செந்தமிழ்வேதங்கள் இசைப்பன காண்க.

"அன்பர் மனத்தேநின்ற குறைமுடிக்குங் குணக்குன்றென்பதற்கு"ப்பிரமாணம்:—

"ஒழித்திடுமே யுள்குவா ருள்ளத்துள்ள வுறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால், விழித்திடுமே காமனையும் பொடியாய்வீழ வெள்ளப் புனற்கங்கை செஞ் சடைமேல், இழித்திடுமே யேழுலகுந் தானாகும்மே யியங்குந் திரிபுரங்க ளோரம் பினால், அழித்திடுமே யாதிமா தவத்துளானே யவனாகிலதிகைவீரட்டனாமே."

(தேவாரம்.)

"அடியார்கட் காரமுத மானாய்போற்றி." (தேவாரம்.)

"கொடுவினையா ரென்றுங் குறுகாவடி."

"குறைந்தடைந்தா ராழாமைக்காக்குமடி." (தேவாரம்.)

"சிவக்கொழுந்தென்பதற்கு" ப்பிரமாணம் :—

"பொத்தார் குரம்பை புகுந்தைவர்நாளும் புகவழிப்ப
மத்தார் தயிர்போன் மறுகுமென்சிந்தை மறுக்கொழிவி
யத்தா வடியே னடைக்கலங்கண்டா யமரர்கடஞ்
சித்தா திருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே." (தேவாரம்.)

"முத்தொழில்புரியு மூவராயும் அவர்க்கு முதல்வராயும் மஹாதேவர் இருத் தற்கு"ப்பிரமாணம் :—

"மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய் நின்றமூர்த்தி
பாவங்கடீர்தர நல்வினைநல்கிடப் பல்கண நின்றுபணியச்
சாவமதாகிய மால்வரைகொண்டு தண்மதின் மூன்றுமெரித்த
தேவர்கடேவ ரெம்பெருமானார் தீதில்பெருந் துறையாரே."

(தேவாரம்.)

"இவ்வுருவ மூன்றுமின்றி யிருந்தவர்" என்பதற்குப்பிரமாணம் :—

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னினல்லா
னொப்புடைய னல்ல னொருவனல்ல
னோரூ னல்ல னொருவம னில்லி
யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு
மவனருளே கண்ணாகக் காணினல்லா
லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே." (தேவாரம்.)

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
யுருநாம மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்
ஒருநாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ." (திருவாசகம்.)

"உருவன்றியே நின்றுருவம் புணர்க்கு
கருவன்றியே நின்று தான் கருவாகு

*மருவன்றியே நின்ற மாயப் பிரானைக்*
*குருவன்றி யாவர்க்குங் கூட வொண்ணாதே."* (திருமந்திரம்.)

"குன்றாதமோனக் கோமன" னென்பதற்குப் பிரமாணம் :—

"உரையற்ற வானந்த மோன சொரூபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில காரம்
மருவுற் றுகார மகாரம தாக
வுரையற்ற தாரத்தி லுள்ளொளி யாமே." (திருமந்திரம்.)

என மூதறிஞோர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (௩௩)

---

**34.** கோதகன்றயோகர்மனக் குகையில்வாழுங் குருவே சண்முகங்கொண்ட கோவே வஞ்ச, வாதகன்ற ஞானியர்தம் மதியிலூறும் வானமுதே யானந்த மழையே மாயை, வேதகன்ற முத்தர்களை விழுங்குஞான வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சிற், றீதகன்ற மெய்யடியர் தமக்குவாய்த்த செல்வமே யெல்லையிலாச் சீர்மைத்தேவே.

(**பதவுரை.**) கோது அகன்ற-குற்ற நீங்கிய, யோகர்-யோகிகளுடைய, மனம் குகை இல் - மனமாகிய குகையினுள், வாழும் - வசிக்கின்ற, குரு ஏ - தேசிக மூர்த்தியே, சண்முகம் - ஆறு திருமுகங்களை, கொண்ட-படைத்த அல்லது பெற்ற, கோ ஏ - தலைவனே, வஞ்சம் - கொடுமையுடைய, வாது - தருக்கங்கள், அகன்ற - நீங்கிய, ஞானியர் தம் - ஞானிகளது, மதி இல்-புத்தியில், ஊறும் - சுரக்கும், வான் பெருமையுடைய, அமுது ஏ - அமிர்தமே, ஆனந்தம் மழை ஏ - பேரின்ப மாரியே, மாயை வேது - மாயையின் வெம்மையை, அகன்ற - கடந்த, முத்தர்கள் ஐ - சீவன்முத்தர்களை, விழுங்கும் - உட்கொள்ளும், ஞானம் வேழம் ஏ - ஞான சொரூபமுடைய யானையே, மெய் இன்பம் - நித்திய வின்பத்தைத்தரும், விருந்து ஏ - புதுமையுள்ள பொருளே, நெஞ்சு இல் - உள்ளத்தின்கண்ணே, தீது அகன்ற - தீமையற்ற, மெய் அடியர் - உண்மையடியவர், தமக்கு - தங்களுக்கு, வாய்த்த - கிடைத்த, செல்வம் ஏ - திரவியமே, எல்லை இல் ஆ - அளவில்லாத, சீர்மை - சிறப்புடைய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(**விசேஷ உரை.**) "கோதகன்றயோகர்" என்றமையால், பிராணாயாமஞ் செய்கையில் மாத்திரைகளினளவாக இரேசித்தலும் பூரித்தலும் கும்பித்தலுஞ்செய்து, சலிப்பற்ற தாரணை தியான சமாதிகளுங்கூடி, மனத்திற் பழைய வாதனைகள் சிறிதுந்தாக்காதவண்ணம்அகப்பற்று புறப்பற்றுக்களை அறுத்துச்சித்திபெற்ற யோகிகள் என்பது பெற்றாம். உலக நெறியினோர் தம்மைக்காணாமல் மலைக்குகையில் வாழும்யோகிகள் உணர்ந்து தியானித்து வீடுபேறெய்துதற்கானயோகாசியங்களை யுணர்த்தியருளுங் குருமூர்த்தியாக அவரது நின்மல மனக்குகேசனா யிருத்தலின் "கோதகன்றயோகர் மனக்குகையில் வாழுங்குருவே" யென்றார். பராசத்தி, ஆதி சத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, குண்டலினி சத்தியாகிய ஆறுசத்திகளானியன்ற ஆறுதிருமுகங்கொண்ட குமரகுருபரனாயினா னென்பார் "சண்முகங் கொண்ட கோவே" யென்றார். மனம் அடங்காது கடற்றிரைபோல மேலுமேலும் சங்கற்பரூபமாக எழுந்து, பல விஷயங்களிலே திரிவதும்,அதனோடு போராடுவதும், அன்றியும் பரசமய வாதங்கள்செய்தலுமாகிய தொழில்களினின்றும் விலகிய ஞானியர்மனத்தி லமுதூறலும்,இறைவன் அருண்முகிலாகிப் பெய்தும்,நிகழுங் காரியமாதலின் "வஞ்சவாதகன்ற ஞானியர்தம்மதியிலூறும் வானமுதேயானந்தமழையே" என்றார். மாயையின் வெம்மை நீங்கிய முத்தர்களை ஐக்கியம் செய்தருளும் சிவம் என்பது தோன்ற "மாயைவேதகன்ற முத்தர்களை விழுங்குஞானவேழம்" என்

ரர். மெய்யடியர்க்கன்றி யேனையோர்க்குக் கிடைத்தற்கரிய நித்திய ஞானச் செல்வமாக இருத்தலின் "மெய்யடியர்தமக்குவாய்த்த செல்வமே"என்வும்; அளந்தறியவொண்ணாத பெரும்புகழுடைய மஹாதேவன் ஆதலின் "எல்லையிலாச்சீர்மைத்தேவே" எனவும் கூறினர்.

"யோகர் மனக்குகையில் வாழ்பவன்" என்பதற்குப் பிரமாணம் :—

"யோகச் சமாதியி னுள்ளே யகலிடம்
யோகச் சமாதியி னுள்ளே யுளரொளி
யோகச் சமாதியி னுள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே." (திருமந்திரம்.)

"உணர்ந்தே னுலகினி லொண்பொரு ளானைக்
குணர்ந்தேன் குவலயங் கோயிலென் னெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டு மொலியே." (திருமந்திரம்.)

"உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே." (திருமந்திரம்.)

"ஞானியர் மதியிலூறும் வானமுதம்" என்பதற்குப் பிரமாணம் :—

"ஞானம் விளைந்தெழு கின்றதொர் சிந்தையு
ளேனம் விளைந்தெதி ரேகாண் வழிதோறுங்
கூனன் மதி மண்டலத் தெதிர் நீர்கண்டு
ஆன மறுத்துநின் றுண்சுட ராகுமே." (திருமந்திரம்.)

"மாயைக்கோதகன்ற முத்தர்களைவிழுங்கு ஞானவேழம்"என்பதற்குப்பிரமாணம்:-

"செற்றதோர் மனமொழிந்து சிந்தைசெய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தையுள்ளா
லுற்றதோர் நோய்களைந்திவ் வுலகமெல்லாங்
காட்டுவா னுத்தமன்ற னோதாதெல்லாங்
கற்றதோர் நூலினன் களிறுசெற்றான்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
மற்றிதோர் மாயக் குரம்பைநீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே."

(தேவாரம் : திருத்தாண்டகம்.)

"விண்ணப்ப விச்சாதரர்க ளேத்த
விரிகதிரோ னெரிசுடரான் விண்ணுமாகிப்
பண்ணப்பன் பத்தர்மனத் துள்ளேயும்
பசுபதி பாசுபதன் றேசமூர்த்தி
கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தான்
கழிப்பாலை மேயகபா லப்பனார்
வண்ணப் பிணிமாய யாக்கைநீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே."

(தேவாரம் : திருத்தாண்டகம்.)

"இன்பவிருந்தென்பதற்கு" ப்பிரமாணம் :—

"வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வ னிவனெனத்
தருந்தண் முழவங் குழலு மியம்ப
விருந்தின்ப மெய்தவ ரீசனருளே." (திருமந்திரம்.)

"அடியர்க்குவாய்த்த செல்வமென்பதற்கு" ப்பிரமாணம்:—

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." (தேவாரம்.)

"அல்லலடியார்க் கறுப்பார்போலும் அமருலகந் தம்மடைந்தார்க் காட்சிபோலும்
நல்லமுநல்லூரு மேயார்போலும் நன்னாறுநாளும் பிரியார்போலும்
முல்லைமுகைநகையாள் பாகர்போலு முன்னமேதோன்றி முளைத்தார்போலும்
தில்லைநடமாடுந் தேவர்போலுந் திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர்தாமே."
(தேவாரம்.)

என்னும் பெரியோர்வாக்கா னுண்மையுணர்க. (௩௪)

---

**35.** அருளருவி வழிந்துவழிந் தொழுகவோங்கு மானந்தத் தனிமலையே யமல வேதப்,பொருளளவு நிறைந்தவற்றின் மேலுமோங்கிப் பொலிகின்ற பரம்பொருளே பூரணமாகி,யிருளறுசிற் பிரகாச மயமாஞ்சுத்த வேகாந்தப் பெருவெளிக்கு ளிருந்த வாழ்வே, தெருளளவு முளமுழுதுங் கலந்துகொண்டு தித்திக்குஞ் செழுந்தேனே தேவதேவே.

(பதவுரை.) அருள் அருவி - திருவருளாகிய அருவி நீர், வழிந்து வழிந்து - மேன்மேலும் வழிந்து, ஒழுக - ஓடும்படி, ஓங்கும் - மிக நீண்ட, ஆனந்தம் தனிமலை ஏ - ஒப்பற்ற ஆனந்த மலையே, அமலம் - சுத்தமான, வேதம் பொருள் அளவும் - வேதங்கள் கூறும் மகாவாக்கிய ஞானார்த்தங்களின் வரையறையுள்,நிறைந்து - நிரம்பி, அவ் அற்று இன் மேல் உம் - அந்தப் பொருளின்மேலாகவும், ஓங்கி - உயர்ந்து, பொலிகின்ற - விளங்குகின்ற, பரம்பொருள் ஏ - மேலாகிய வத்துவே,பூரணம்ஆகி-நிறைவினையுடையதாகி, இருள் அறு-மலத்தடையற்ற, சித் பிரகாசம் மயம் ஆம்-சிற்சோதிமயமாகிய, சுத்தம் - கலப்பற்ற, ஏகாந்தம் - தனிமையாகிய, பெரு வெளி கு உள் - பேராகாசத்துள், இருந்த - வீற்றிருந்த, வாழ்வு ஏ - இன்பவாழ்வாகியுள்ளவனே, தெருள் அளவும் - தெளிந்துகொள்ளுமளவும், உளம் முழுதும் - சித்தமுழுவதும், கலந்துகொண்டு - கூடிக்கொண்டு, தித்திக்கும் - மதுரிக்கும், செழும் தேன் ஏ - செழிப்பான தேனை யொப்பவனே, தேவ தே ஏ - தேவர்களுக்குத் தேவாகிய மஹாதேவனே. எ-று.

( விசேஷ உரை. ) அளவு செய்யப்படாத வடிவின் அளவும், மாட்சிமையும், உயர்ச்சியும்,மெய்யடியாராவார் பிறவிவெம்மையுற்றுத்தளராத வண்ணம் அருளமுதத் தாட்டிப் பருகுவித்துத் தழைத்தோங்கப் பாலனம்புரியும் வண்மையுமுடைமை தோன்ற "அருளருவி வழிந்து வழிந்தொழுக வோங்கு மானந்தத்தனிமலையே" எனவும்; வேதங்களின் அளவும், அவற்றின் பாடியமாகிய சிவாகமங்களினளவும், இவ்விருமுதனூல்களின் ஞானார்த்தங்களின் அளவும் நிரம்பி, அவ்வெல்லையையுங் கடந்து மேம்பட்டு விளங்கும் பொருளாயினது தோன்ற "வேதப்பொருளளவு நிறைந்தவற்றின் மேலுமோங்கிப் பொலிகின்ற பரம்பொருளே" எனவும்; சர்வ

வியாபக முடைமையின் "பூரணமாகி" எனவும்; தடையற்ற ஞானவொளியியற்கையிற்பெற்ற வொப்பற்ற பெருவெளிக்குட் பிறராலறியப்படாதமர்ந்த பெருவாழ்வாய் விளங்குதலின் "இருளறுசிற்பிரகாச மயமாஞ் சுத்தவேகாந்தப் பெருவெளிக்குளிருந்த வாழ்வே" எனவும்; தெளிந்து தெளிந்துணருந்தோறும் நெஞ்சகத்துள் முற்றுங்கலந்து மதுரிக்கும் இயல்பினையுடையதாய் மும்மலநோயை யறுக்குங் குணமிக்க செந்தேனு மிதயதாமரையுளூறிப்பெருகுதலின் "தேருளளவு முளமுழுதுங் கலந்துகொண்டு தித்திக்குஞ் செழுந்தேனே" எனவும்; தேவாதிபனுதலின் "தேவதேவே" யெனவுங் கூறினர். சிவம் குணியாகவும், திருவருள் குணமாகவும் பிரிவறக்கலந்து நிற்கும் வாய்மையை "மலையாகவும் அருவிநீராகவும்" விளக்கினர். இஃது உருவக வலங்காரம்:

"அருளருவி பாயுமானந்தமலையென்பதற்கு"ப்பிரமாணம்:—

"மலையார் சிரத்திடை வானீ ரருவி
நிலையாரப் பாயு நெடுநாடி யூடுபோய்
சிலையார் பொதுவிற் றிருநட மாடுந்
தொலையாத வானந்தச் சோதி கண்டேனே." (திருமந்திரம்.)

"வேதப்பொருளினிரம்பி யவற்றின்மேலும் பெருகிப் பொலிகின்றதெனற்கு" ப்பிரமாணம்:—

"ஆறங்க மாய்வரு மாமறை யோதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்கு கின்றாரே." (திருமந்திரம்.)

"இருளறு சிற்பிரகாசம் எனற்கு" ப்பிரமாணம்:—

"அன்றியும் பாச விருளுமஞ் ஞானமுஞ்
சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்று மிருசுட ராமரு ணோதயந்
துன்றிரு ணீங்குதல் போலத் தொலைந்ததே" (திருமந்திரம்.)

"ஏகாந்தப் பெருவெளி வாழ்வென்பதற்குப்" பிரமாணம்:—

"எழுஞ் சகள மியம்புங் கடந்தெட்டில்
வாழும் பரமென் றதுகடந் தொன்பதி
லூழி பராபர வோங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே." (திருமந்திரம்.)

"உள்ளமுழுதுங் கலந்து தித்திக்கு" மென்பதற்குப்பிரமாணம்:—

"பாலொடு தேனும் பழத்து ளிரதமும்
வாலிய பேரமு தாகு மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுட்புகச்
சீல மியிர்க்கா ரெறுறுந்தேக் கிடுமே." (திருமந்திரம்.)

"யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே." (திருவாசகம்.)

"இரும்பைக் காந்தம்வலித்தாற் போலியைந்தன் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தானாக்கி

யரும்பித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை
யறுத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."

(சிவஞானசித்தியார்.)

"காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவே
னுமாத் தூரானே யென் றழைத்தலுந்
தேமாத் தீங்கனி போலத் தித்திக்குமே." (தேவாரம்.)

என மூதறிஞர் கூறியவற்றான் உண்மையுணர்க. (கூ௫)

---

**36.** அளவையெலாங்கடந்து மனங்கடந்து மற்றை யறிவையெலாங் கடந்து கடந்த மலயோகர், உளவையெலாங் கடந்து பதங்கடந்து மேலையொன்று கடந்திரண்டுகடந் துணரச்சூழ்ந்த,களவையெல்லாங் கடந்தண்ட பிண்டமெல்லாங்கடந்து நிறைவான சுகக்கடலே யன்பர், வளவையெலா மிருளகற்று மொளியே மோன வாழ்வே யென்னுயிர்க்குயிராய் வதியுந்தேவே.

(பதவுரை.) அளவை எல்லாம் - பிரமாணங்கள் முழுதும், கடந்து - தாண்டியும், மனம் கடந்து - மனத்தைத் தாண்டியும், மற்றை - அதற்கினமாகிய, அறிவு ஐ எல்லாம் கடந்து - சீவ வறிவுகளெல்லாந் தாண்டியும், கடந்த மலம் யோகர் - மும்மலங்களையு நீங்கிய யோகிகளறிந்த, உளவு ஐ எல்லாம் கடந்து - யோக நெறியிலுள்ள உபாயமுழுதுந் தாண்டியும், பதம் கடந்து - மூன்று பதங்களையுந் தாண்டியும், மேலை - அப்பால், ஒன்றுகடந்து - சகப்பாழைத்தாண்டியும், இரண்டுகடந்து - சிவப்பாழ் பரப்பாழாகிய இரண்டையுந் தாண்டியும், உணர - உணராமலுணரும்படி, சூழ்ந்த - யோசித்த, களவு ஐ எல்லாம் கடந்து - உன்மத்த நிலைமை முழுதுந் தாண்டியும், அண்டம் பிண்டம் எல்லாம் கடந்து - அண்டபிண்டங்கள் முழுதுந் தாண்டியும், நிறைவு ஆன - பரிபூரணமான, சுகம் கடல் ஏ - சுகவாரியே, அன்பர் வளவு ஐ எல்லாம் - அடியவர் வசிக்கும் இடம் எல்லாம், இருள் அகற்றும் - அஞ்ஞானவிருளை நீக்குகின்ற, ஒளியே - ஞானசோதியே, மோனம் - மௌனபதத்துக்குரிய, வாழ்வு ஏ - வாழ்வாக வுள்ளவனே, என் உயிர்க்கு உயிர் ஆய் - எனது உயிர்க்குளுற்ற உயிராக, வதியும் - வசிக்கும், தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) காட்சியும்,அனுமானமும், ஆகமமும், அபாவமும்,அருத்தாபத்தியும், ஒப்பும், பாரிசேடமும்,சம்பவமும், ஐதீகமும், சகசமுமாக வுரைக்கப்படும் பிரமாணங்களையெல்லாங் கடந்து மாதேவர் விளங்குதலான்"அளவையெலாங்கடந்து" எனவும்; நினைவைக்கடந்த தலத்திலே சிவம் விளங்குதலின் "மனங்கடந்து" எனவும்;உணர்வுகள் பலவற்றையுங்கடந்த சங்கற்பமற்ற பேரறிவனாகலின்"மற்றை யறிவையெல்லாங் கடந்து கடந்த" எனவும்; சகமார்க்கத்துக்குரிய யோகத்தின் உபாயங்களிலகப்படாமற் சன்மார்க்க ஞானமுடிவி னிற்பவனாகலின் "அமலயோகர் உளவையெலாங்கடந்து"எனவும்;பதங்களினாலுணரப்படாத பொருளாயிருத்தலின் "பதங் கடந்து" எனவும்; உள்ளத்தினுள்ளே யொளித்திருந்துணர்த்த வல்லனாதலின் "உணரச்சூழ்ந்த களவையெல்லாங்கடந்து"எனவும்; அண்டங்கள்

பிண்டங்கள் தன்னருள் வெளியினின்றியங்க வியக்கு முதல்வனும் அப்பாலேக்கப் பாலாயிருத்தலின் "அண்டபிண்டமெலாங்கடந்துநிறைவான சுகக்கடல்"எனவும்; மெய்யடியார் உள்ளும் புறம்பும், அவர்வசிக்குந் தலமும், அஞ்ஞானவிருள் படரா தகற்றி அறிவோருளராகத் தோற்றும் ஞானப்பிரகாசனுகலின் "அன்பர் வளவை யெல்லாமிருளகற்று மொளியே" யெனவும்; மனமிறந்த மவுனநிலேயிற் பேரின்ப வாழ்வாதலின் "மோனவாழ்வே" எனவும்; உயிரே தன் நிகேதனமாக வாழ்வா தலின் "உயிர்க்குயிராய் வதியுந்தேவே" எனவுங் கூறினர்.

"காட்சிமுதலிய பிரமாணங்களுக்கு (அளவையிலக்கண)"ப்பிரமாணம்:—

"அளவைகாண்டல் கருதலுரை யபாவம்பொருளொப் பாறென்ப
ரளவைமேலு மொழிபுண்மை யைதிகத்தோ டியல்பெனநான்
களவைகாண்ப ரவையிற்றின் மேலுமறைவ ரவையெல்லாம்
அளவைகாண்டல் கருதலுரை யென்றிம்மூன்றி னடங்கிடுமே."

(சிவஞானசித்தியார்.)

"நினைப்பு இறந்தவிடத்திற் சிவம்விளங்குதற்கு"ப்பிரமாணம் :—

"நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சந்
தனைப்பிறி யாது சிவம்." (ஔவை குறள்.)

"சிவ வுணர்வு கடந்த விடத்தன்" எனற்குப்பிரமாணம்:—

"நினைப்பதாக சிந்தைசெல்லு மெல்லேயேய வாக்கினற்
றினைத்தனையு மாவதில்லை சொல்லலாவ கேட்பவே
யனைத்துலகு மாயநின்னை யைம்புலன்கள் காண்கிலா
வெனைத்தெனைத்த தெப்புறத்த வெந்தை பாதமெய்தவே."

(திருவாசகம்.)

"சகமார்க்கயோக உபாயங்கள்" என்பதற்குப்பிரமாணம்:—

"நாலு மிருமூன்று மீரைந்து மீராறும்
கோலி மேனின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்து முதலிரண்டுங்
காலங்கண் டானடி காணலு மாமே." (திருமந்திரம்.)

"ஆதார சோதனை யானாடி சுத்திகண்
மேதாதி யீரெண் கலந்தனு விண்ணொளி
போதா லயத்துப் புலன்கரணம் புந்தி
சாதா ரணங்கெட்டான் முன்சக மார்க்கமே." (திருமந்திரம்.)

"ஞானமுடிவினிற்பவன்" என்பதற்குப்பிரமாணம்:—

"தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழிப் பான்முத்த ராவது
மீனமில் ஞானனு பூதியி லின்பமுந்
தானவ னாயுற்ற லானசன் மார்க்கமே." (திருமந்திரம்.)

"பதங்கடந்த பொரு"ளென்பதற்குப்பிரமாணம்:—

"துரிய மடங்கிய சொல்லறும் பாழை
யரிய பரமென்ப ராகாரி தன்றெனார்
உரிய பரம்பர மாமொன் றுதிக்கும்
அருகில மென்பதை யாரறி வாரே." (திருமந்திரம்.)

"உள்ளத்திநுள்ளே யொளிக்குங்கள்வன்" என்பதற்குப்பிரமாணம்:—

"வள்ளற் றலைவனை வானநன் றூடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்
றுள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தானுமே." (திருமந்திரம்.)

"அண்டபிண்டமெல்லாங் கடந்து நின்றமைக்கு"ப்பிரமாணம்:—

"ஆதிப் பிரானம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கு
மாதிப் பிரானண்டத் தப்புறங் கீழவ
ளாதிப் பிரானவ னாகிநின் றானே." (திருமந்திரம்.)

"அன்பர் வளவையெல்லாம் இருளகற்று மொளி என்பதற்கு" ப்பிரமாணம்:—

"அவன்பா லணுகியே யன்புசெய் வார்கள்
சிவன்பா லணுகுதற் செய்யவும் வல்லன்
அவன்பா லணுகியே நாடு மடியார்
இவன்பாற் பெருமை யிலயம தாமே." (திருமந்திரம்.)

"சிவயோகி ஞானி செறிந்த வத்தேசம்
அவயோக மின்றி யறிவோ ருண்டாகு
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே." (திருமந்திரம்.)

"ஏறுநெறியே மலத்தை யெரித்தலால்
ஈறிலுரையா லிருளை யறுத்தலால்
மாறிவ் பசுபாசம் வாட்டலால் வீடுகை
வேறு பரனே குருவா மியம்பிலே." (திருமந்திரம்.)

"மோன வாழ்வென்பதற்கு" ப்பிரமாணம்:—

"பரனல்ல நீடும் பராபர னல்ல
வுரனல்ல மீதுண ரொண்சுட ரல்ல
தரனல்ல தானவை யாயல்ல வாகு
மரனல்ல வானந்தத் தப்புறத் தானே." (திருமந்திரம்.)

"தானு மழிந்து தனமு மழிந்துநீ
டூனு மழிந்து வுயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்தபி
னானு மழிந்தமை நானறி யேனே." (திருமந்திரம்.)

"உயிர்க்குயிராய் வதியுந் தேவனென்பதற்கு" ப்பிரமாணம்:—

"அணுவு ளவனு மவனு ளணுவுக்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்ற சராசரந் தானே." (திருமந்திரம்.)

என ஆன்றோர்கூறியவற்றான் உண்மையுணர்க. (௩௧)

**37.** வன்புகலந்தறியாத மனத்தோர்தங்கண் மனங்கலந்து மதிகலந்து வயங்காநின்ற, வென்புகலந் தூன்கலந்து புலன்களோடு மிந்திரிய மவைகலந்துள் ளியங்குகின்ற, வன்புகலந் தறிவுகலந் துயிரைம்பூத மான்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி, யின்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி யெழுங்கருணைப் பெருக்காறே யின்பத்தேவே.

(பதவுரை.) வன்பு - இளகாத வன்மை, கலந்து அறியாத - கூடியறியாத, மனத்தோர் தங்கள் - மனமுடையோரது, மனம் கலந்து - உள்ளத்திற் கூடியும், மதி கலந்து - புத்தியுட் கூடியும், வயங்கு ஆநின்ற - பிரகாசியாநின்ற, என்பு கலந்து - எலும்புகளுட் கூடியும், ஊன் கலந்து - தசையுட் கூடியும், புலன்கள் ஓடு உம் - ஐந்து புலன்களுடனும், இந்திரியம் அவை கலந்து - இருவகை இந்திரியங்களுட் கூடியும், உள் இயங்குகின்ற - உள்ளத்திற் சஞ்சரிக்கின்ற, அன்பு கலந்து - நேயத்துட் கூடியும், அறிவு கலந்து - உணர்வினுட் கூடியும், உயிர் - சீவனிலும், ஐ பூதம் - பஞ்ச பூதங்களிலும், ஆன்மா உம் - ஆன்மாவினுள்ளும், கலந்துகலந்து - உடனுகிக் கூடியும், அண்ணித்து ஊறி - தித்தித்துச் சுரந்து, இன்பு கலந்து - இன்பத்துட் கூடியும், அருள் கலந்து - அருளிற்கூடியும், துளும்பி - திமிர்ந்து, பொங்கி எழும் - மிகுந்தெழுகின்ற, கருணை பெருக்கு ஆறு ஏ - கருணைப்பிரவாகமுடைய நதியே, இன்பம் தே ஏ - ஆனந்தசொரூபியாகிய மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) பிறிதோருயிருக்குற்ற துன்பம் தமக்குள்ள துன்பம்போற் கருதிக் கண்டபொழுதுங் கேட்டபொழுதும் கசிந்துருகும் காருணியநிறைந்த மனமுடைய சாதுக்களென்பார் "வன்புகலந்தறியாத மனத்தோர்" எனவும்; அத்தகைய சாதுக்களாயினோர் உள்ளக்கோயிலிற் கூடிக்குலாவுவோனென்பார் "தங்கண் மனங்கலந்து" எனவும்; அவர் புந்தியுள் அஞ்ஞானவிருள் படராவண்ணம் ஞானவிளக்காகி யொளிர்ந்திருப்பவனென்பார் "மதிகலந்து" எனவும்; அவர் தம் முடலைச்சிவத்தொண்டினுக்கே யுரியதாக்க வதனைத்தனது ஆலயமாக்கி, ஆங்கு வதிகின்றவனென்பார் "வயங்காநின்றஎன்புகலந்து ஊன்கலந்து" எனவும்; அவர் ஐம்புலன்களாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களையும் திருவருளாகக் கண்டனுபவித்தலாலும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களுக்குரிய உணர்வுந் தொழிலும் பரமன் பரமாகவே நிகழ, விடயங்களையுணர்ந்தும் சுகிர்த்தியங்களைப்புரிந்தும் பரனுக்காக்கி நிற்பதாலும் "புலன்களோடு மிந்திரியமவைகலந்து" எனவும்; அவர் அன்பு திருவடிமேவதாய் முறுகிவளர்ந்தோங்கலின் அந்த அன்பின்பயனாக வெளிப்பட்டுக் கூடியிருத்தலால் "உள்ளியங்குகின்ற அன்புகலந்து" எனவும்; அவர் அறிவு சுத்தமாய் நின்மலமாயிருப்பதனால் "அறிவுகலந்து" எனவும்; அவரது தூல சூக்கும வுடலின்கண் விளங்கும் பஞ்சபூதங்களினுள்ளும், உயிரினுள்ளும், ஆன்மாவினுள்ளுங் கலப்புற்றவனாதலால் "உயிர் ஐம்பூதம் ஆன்மாவும் கலந்து கலந்து" எனவும்; மேலுமேலுந் தித்தித்துச் சுரந்து, இன்பும் அருளும் கலந்து பொங்கி யெழுங்கருணைப் பிரவாக ரூபமாயிருப்பதனால் "அண்ணித்தூறி இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கியெழுங்கருணைப் பெருக்காறே" எனவும் கூறினர்.

"பிறவுயிர்கண்மாட்டுக் கருணைபாராட்டவேண்டு"மென்பதற்குப் பிரமாணம்:—

> "அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
> தந்நோய்போற் போற்றாக் கடை." (திருக்குறள்.)

> "நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
> றேரினு மஃதே துணை." (திருக்குறள்.)

"வன்புகலந்தறியாத மனத்தோர்தங்கண் மனங்கலந்தென்பதற்கு" ப்பிரமாணம்:—

"காணவில் லாயடியேற் குறவா ருள்ள
நாணவில் லேனுனை நான் றழுவிக் கொள்ளக்
கோணவில் லாத குணத் தடியார்மனத்
தாணிய னாகி யமர்ந்து நின்றானே." (திருமந்திரம்.)

"மதிகலந்தென்பதற்கு" ப்பிரமாணம்:—

"மாமதி யாமதி யாகின்ற மாதவர்
தூமதி யாகுஞ் சுடர்பர மானந்தம்
தாமதி யாகச் சகமுணச் சாந்திபுக்
காமல மற்று ரமைதி பெற்றாரே." (திருமந்திரம்.)

"அந்திவட்டத் திளங்கண்ணிய னாறமர் செஞ்சடையான்
புந்திவட்டத் திடைப்புக்கு நின்றானையும் பொய்யென்பனோ
சந்திவட்டச் சடைக்கற்றை யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத் தொடுகொன்றை வளாவிய நம்பனையே." (தேவாரம்.)

"என்பு கலந்தென்பதற்கு" ப்பிரமாணம்:—

"நானுநின் றேத்துவ னாடொறு நந்தியைத்
தானுநின் றான்றழற் போலொக்கு மேனியன்
வானினின் றார்மதி போலுட லுள்ளுவர்
தானினின் றாங்கே யுயிர்க்கின்ற வாறே." (திருமந்திரம்.)

"தேனிலுமினியர் பாலனநீற்றர் தீங்கரும்பனையர்தந் திருவடிதொழுவார்
ஊனயந்துருக வுவகைதருவா ருச்சிமேலுறைபவ ரொன்றலாதூரார்
வானகமிறந்து வையகம்வணங்க வயங்கொளிசிறப்பதோர் வடிவினையுடையார்
ஆனையினுரிவை போர்த்தவெம்மடிக ளச்சிறுபாக்கம் தாட்சிகொண்டாரே."
(தேவாரம்.)

"இனைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத்தேன் சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ." (திருவாசகம்.)

"புலன்களோடும் இந்திரியங் கலந்து" என்பதற்குப் பிரமாணம்:—

"தெரிந்துகொண் டோரோவொன்றாகச்சென்றைந்துபுலனும்பற்றிப்
புரிந்திடு முணர்வினோடும் போகமுங் கொடுத்தியோனி
திரிந்திடு மதுவுஞ்செய்து செய்திகண் டுயிர்கட்கெல்லாம்
விரிந்திடு மறிவுங்காட்டி வீட்டையுமளிப்பன் மேலோன்."
(சிவஞானசித்தியார்.)

"அன்புகலந்தென்பதற்கு" ப்பிரமாணம்:—

"என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்." (திருமந்திரம்.)

"துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே." (திருமந்திரம்.)

"அறிவுகலந்தென்பதற்கு"ப்பிரமாணம்:—

"அறிவுக் கறிவாம் பதியு மனுதி." (திருமந்திரம்.)

"அறிவினுக் கறிவல்ல தாதார மில்லை." (திருமந்திரம்.)

"அறிவுக் கறிவா மகண்ட வொளியும்
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்று
மறியர் தடங்கிடி லத்த னடிக்குட்
பிறியா திருக்கிற் பெருங்கால மாமே." (திருமந்திரம்.)

"உயிரினுட் கலந்தென்பதற்குப்"பிரமாணம்:—

"உயிர்க் குயிராகி யுருவா யருவா
யயற் புணர்வாகி யறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியு நாத னுலகாதி
யியற்பின்றி யெல்லா மிருண்மூட மாமே." (திருமந்திரம்.)

"ஐம்பூதம் ஆன்மாவுங் கலந்தென்பதற்கு"ப்பிரமாணம்:—

"தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி யத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையு ஞாயிறுந் தண் மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தி னின்ற
விரதங்க ளுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே." (தேவாரம்.)

"இறைவன் ஆனந்தசொரூபி அருட்கடலென்பதற்கு"ப்பிரமாணம்:—

"வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி
ஆரா வமுதளித் தானந்தி பேர்நந்தி
பேரா யிரமுடைப் பெம்மான்பே ரொன்றினி
லாரா வருட்கட லாடுகென் றானே." (திருமந்திரம்.)

"அருளா லமுதப் பெருங்கட லாட்டி
அருளா லடிபுனைந் தார்வமுந் தந்திட்
டருளான வானந்தத் தாரமு தூட்டி
யருளா லென்னந்தி யகம்புகுந் தானே." (திருமந்திரம்.)

"பேரின்ப மான பிரமக் கிழத்தியோ
டோரின்பத் துள்ளா னென்றுந்தீபற
யுன்னையே யாண்டதென் றுந் தீபற." (திருவுந்தியார்.)

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயை யென்றுந்தீபற." (திருவுந்தியார்.)

"அகளத்தி லானந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றோன்றி—நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமே
லாக்குவதுஞ் செய்தா னவன்." (திருக்களிற்றுப்படியார்.)

என அறிஞர்கள்பலர் கூறியவற்றான் உண்மையுணர்க. (கஎ)

**38.** தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம்வீசத் தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல்வீச, வெண்ணமுதப் பளிக்குநிலாமுற்றத்தே யின்னிசைவீசத் தண்பனி நீரெடுத்துவீசப், பெண்ணமுத மனையவர்விண் ணமுதமூட்டப் பெறுகின்ற சுக மனைத்தும் பிற்பட்டோடக், கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்துமின்பங் கலந்து கொளத் தருங்கருணைக் கடவுட்டேவே.

(பதவுரை.) தண் அமுதம் மதி - குளிர்ந்த அமுதமுடைய சந்திரன், குளிர்ந்த கிரணம் வீச - சீதள கிரணத்தை வீசவும், தடம் - பெருமையுடைய, பொழில் - சோலையானது, பூ மணம் வீச-மலர்மணத்தை வீசவும், தென்றல் வீச-தென்கால் வீசவும், எண் - மதிக்கின்ற, அமுதம் - அமிர்தத்தையுடைய, பளிக்கு - படிகத்தா லியற்றப்பட்ட, நிலா முற்றம் அத்து எ - உப்பரிகைமேல் உலாவும் வெளியிலே, இன் இசை வீச - சங்கீதப் பண்ணோசை வீசவும், தண் பனிநீர் - தண்ணிய பனி நீரை, எடுத்துவீச - கைகளால் எடுத்து வீசவும், பெண் அமுதம் அனையர் - பெண் டிருள் அமுதம் ஒப்பவர், விண் அமுதம் ஊட்ட - தேவர் அமுதன்ன உண்டியை யூட் டவும், பெறுகின்ற - அடைகின்ற, சுகம் அனைத்தும் - இன்பமுழுவதும், பின்பட்டு ஓட - பிறகிட்டோடும் வண்ணம், கண் அமுதத்து - ஆனந்தக்கண்ணீரால், உடம்பு-உயிர் மற்று அனைத்தும் - உடம்பும் உயிரும் பிறதத்துவங்களும், இன்பம் கலந்து கொள - இன்பம் புணர்ந்துகொள்ள, தரும் கருணை - செய்கின்ற கிருபையுடைய, கடவுள் தே எ - உம்பர்கோவாகிய மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) இத்திருவிருத்தம் சிற்றின்பசுகம் எத்துணைப் பெரியதாக விருப்பினும் அழியுந்தன்மையதென்றும், பேரின்பசுகமே தன்னிகரில்லாததென் றும், அழிவற்றதென்றும், மஹாதேவர் இதனையருளுங் கருணையாளரென்றும் உணர் த்துகின்றது. குளிர்ந்தசந்திரிகையும், பூஞ்சோலையினறுமலர்வாசமும், பொதிய மலைச்சந்தனடவியிற்கலந்து நறுமணம் வீசும் இளந்தென்றலும், பளிக்குநிலா முற்றமும், இன்னிசைச்சங்கீதமும், வெப்பந்தணிய மடவார் பக்கத்திருந்தெடுத்து வீசும் பனிநீரும், பெண்மணிகளாலூட்டப்படும் விண்ணமுதமும், ஒருங்கே கூடி யுண்டாக்குஞ் சிற்றின்பசுகம் எத்துணைச் சிறப்பினையுடையதேனும் அஃது சின்னீர வின்பமாதலின் சுகமன்றெனவும், அநித்தியசுகமெனவும், நிலைபேறுடையதாகத் தோன்றி நில்லாதொழியுமெனவும் கூறுவார் "தண் அமுதமதி...கிரணம்வீச... **பூ மணம்வீசத் தென்றல்வீச...நிலாமுற்றத்தே யின்னிசைவீசத் தண்பனிநீரெடு த்துவீசப் பெண்ணமுதமனையவர்விண் ணமுதமூட்டப் பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட்டோட"** என்றார். சுகமனைத்தும் என்றதனால் நரபதி சுரபதி முதலியோரனு பவிக்கும் சுகப்பெருக்கங்களையுந் தழுவியதாயிற்று. அனைத்தும் என்பதில் உம்மை முற்றும்மை. இஃது உலகாயதர் கொள்கையை மறுத்துச் சிவமுத்தியை வியந்த படி யென்க.

"சிற்றின்ப நுகர்ச்சியையே உலகாயதன் விரும்பிப் பேரின்பச் சிவசாயுச்சி யத்தை வேறுத்தமைக்கு" ப்பிரமாணம்.—

"போகத்தை மண்ணிற்கண்டு விட்டுப்போய் விண்ணிற்கொள்ள
மோகத்த ராகியல்லன் முயன்றுழன் றூடரெல்லாந்
தாகத்திற் றண்ணீர்கண்டு விட்டுப்போய்த் தண்ணீர்கேட்டுச்
சோகித்தே யுண்ணவெண்ணித் துயருறு வார்களந்தோ."

"வாழவே வல்லைவாமி வலக்கைதா வென்னுயிர்க்குத்
தோழனீ யுன்னையொப்பார் சொல்லிடி னில்லைகண்டாய்
கோழைமா னூடந்திதென்னுங் கொலைகளை வாதிகொண்டே
சூழும்வார் குழலார்மொய்ப்பச் சுடரெனத் தோன்றினையே."

"ஈசனு ரயனுர்மாலோ டிந்திரன் றெரிவைமார்பாற்
பேசொணு வகைகளெல்லாஞ் செய்தன்றோ பெரியோரானு
ராசையா லவர்போனும மாகவே வேண்டுமாயின்
வாசமார் குழலாரோடும் வல்லவா கூடிவாழ்மின்."

"தையலா ருடலாடத் தாமவ ரோடுங்கூடிச்
செய்யதா மரையைவென்ற சீறடி செம்பஞ்சூட்டி
மெய்யெலாம் பாதஞ்சூடும் வேடத்தார் மெய்யிற்கூடா
மையன்மா னுடர்போய் மார்க்க வேடத்தே மாய்கின்றாரே."

"வாசமார் குழன்மின்னுர்கண் மணியல்குற் றடத்தேமூழ்கி
நேசமார் குமுதச்செவ்வா யமுதினை நிறையவுண்டு
தேசுலா மணிமென்றோண்மேற் சேர்ந்துவீற் றிருந்திடாதே
மாசுலா மனத்தோரெல்லா மறுமைகொண் டழிவர்மன்னே."

"மதிநிலா நுதலாரோடு மணிநிலா முன்றிலேறி
முதிர்நிலா வெறிப்பச்செவ்வா யிளநிலா முகிழ்ப்பமொய்த்த
கதிர்நிலா வடங்கொள்கொங்கைக் கண்கண்மார் பகலமூழ்கும்
புதுநிலா வியநன்போகம் விடுவர்புன் சமயத்தோரே."

"ஊடுவ துணர்வதுற்ற கலவிமங் கையரையுள்கி
வாடுவ தடியில்வீழ்ந்து வருந்துவ தருந்தவம்பின்
கூடுவ துணர்வுகெட்டுக் குணமெலாம் வேட்கையேயாய்
நீடுவ தின்பமுத்தி யித்தினின் றூர்கண்முத்தர்."

(சிவஞானசித்தியார் : பரபக்கம்.)

"தேவலோகத்தாரும் சிற்றின்பத்தைவெறுத்திலா"ரென்பதற்குப்பிரமாணம்:—

"முத்தனைய மூரலும் பவளவா யின்சொலு
முகத்திலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற விருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெமை மயக்கியிரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியிலாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடக்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்தபோகம் புசித்துவிழி யிமையாத
பொன்னுட்டும் வந்ததென்றாற்
போராட்டமல்லவோ பேரின்பமுத்தியிப்
பூமியிலிருந்து காண
வெத்தனை விகாதம்வரு மென்றுசுகர் சென்றநெறி
யிவ்வுலக மறியாததோ
இகபர மிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே."

(தாயுமானவர்பாடல்.)

இனிப் பேரின்பநலங் கூறுகின்றது : அன்புமேலீட்டால் என்புநெக்குருக, உள்ளமுருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரைகுழறப் பாடியாடி, யானந்தக்கண்ணருவி பெய்துநின்று, தம்மைமறந்து, அருளமுதமுண்டு, பேரின்பவடிவான அன்பர்க்கரு

ளும் திருஅருட்பிரகாசமஹாதேவனென்பார் "கண்ணழதத்துடம்புயிர் மற்றனைத்து மின்பங் கலந்துகொள்ந் தநுங்கநுணைக்கடவுட்டேவே" என்று கூறினர்.

"இறைவன் அடியார்க்கருளும் வண்மைமிக்கோன்" என்பதற்குப் பிரமாணம்.—

"தீர்ந்தவன்பாய வன்பர்க் கவரினு மன்பபோற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமைபோற்றி
வார்ந்தகஞ் சயின்றுவானோர்க் கமுதமீ வள்ளல்போற்றி
யார்ந்தநின் பாதநாயேற் கருளிட வேண்டும்போற்றி." (திருவாசகம்.)

"போகம்வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமு
மேகநின் கழலிணை யலாதிலேனெ னெம்பிரான்
ஆகம்விண்டு கம்பம்வந்து குஞ்சியஞ் சலிக்கணே
யாகவென்கை கண்கடாரை யாறதாக வையனே." (திருவாசகம்.)

"சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடகின்ற பாச மறுத்திட்
டவனெந்தை யாண்டரு ளாதிப் பெருமான்
அவன்வந் தென்னுள்ளே யகப்பட்ட வாறே." (தாயுமானவர்.)

"என்பெலா நெக்குடைய ரோமஞ்சிலிர்ப்ப வுடலிளக மனதழலின் மெழுகா
யிடையறா துருகவரு மழைபோ லிரங்கியே யிருவிழிக ணீரிறைப்ப
வன்பினுன் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே யமிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்பிலாதவெனை யார்க்காக வடிமைகொண்டாய்
புன்புலான் மயிர்தோ னரம்பென்பு மொய்த்திடு புலைக்குடிலி லருவருப்புப்
பொய்யல்லவே யிதனை மெய்யென்று நம்பியென் புந்திசெலுமோ பாழிலே
துன்பமா யலையவோ வுலகநடை யையவொரு சொர்ப்பனத்திலும் வேண்டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே."
(தாயுமானவர்பாடல்.)

"பேரின்பம் இனையதென்பதற்கு" ப்பிரமாணம்:—

"கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே." (திருமந்திரம்.)

"அன்பு ளுருகி யழுவ னரற்றுவன்
என்பு முருக விராப்பக லேத்துவன்
என்பொன் மணியை யிறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் றிருத்துவன் றானே." (திருமந்திரம்.)

"அன்பருக்கன்பு தரும்பரஞ் சோதியை யாத்துமத்தோ
டென்புருகக் கலந்துள்ளே யுருகி யிரவுபகல்
தம்புருவீணை சரமண் டலத்தொனி தாளதித்தி
மின்பெரு குங்கொலுச் சிங்காரங்கண்டிரு மெய்மகிழ்ந்தே."
(கடவுளந்தாதி.)

எனப் பேரறிவாளர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (கூஅ)

**39.** சுழியாத வருட்கருணைப் பெருக்கே யென்றுந் தூண்டாத மணிவிளக்கின் சோதியேவா, னொழியாத கதிர்பரப்புஞ் சுடரேயன்பர்க் கோவாத வின்பருளு மொன்றே விண்ணோர், விழியாலுமொழியாலு மனத்தினாலும் விழைதருமெய்த்தவத் தாலும் விளம்புமெந்த, வழியாலுங் கண்டுகொளற் கரிதாய்ச்சுத்த மௌனவெளி யூடிருந்து வயங்குந்தேவே.

(பதவுரை.) சுழியாத - சுழிதலில்லாத, அருள் கருணை - அருளாகிய கருணையின், பெருக்கு ஏ - வெள்ளமே, என்றும் - எக்காலத்தும், தூண்டாத - எழுப்புத லில்லாத, மணிவிளக்கு இன் - மாணிக்க விளக்கினது, சோதி ஏ - ஒளியே, வான் - ஞானாகாசத்தில், ஒழியாது - நீங்காது நின்று, கதிர் பரப்பும் - கிரணத்தைப்பரவச் செய்யும், சுடர் ஏ - ஞானபாநுவே, அன்பர்க்கு - அடியவர்க்கு, ஓவாத - ஒழியாத, இன்பு அருள் உம் - ஆனந்தத்தைக்கொடுக்கும், ஒன்று ஏ - ஒரு பொருளே, விண்ணோர் - தேவர்கள், விழி ஆல் உம் - கண்ணாலும், மொழி ஆல் உம் - வாக்கினாலும், மனத்து இன் ஆல் உம் - உள்ளத்தினாலும், விழைதரும் - விரும்புகின்ற, மெய் தவம் அத்து ஆல் உம் - உண்மையான தவமுயற்சியாலும், விளம்பும் - சொல்லப்பட்ட, எந்த வழி ஆல் உம் - வேறு எவ்வழியினாலும், கண்டு கொளல் கு - சேவைசெய்வதற்கு, அரிது ஆய் - அருமையுடையதாகி, சுத்தம்-அமலமான, மவுனம் வெளி ஊடு- மவுனாகாசத்தின் மத்தியில், இருந்து - வசித்து, வயங்கும் - விளங்குகின்ற, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) நீர்ப்பிரவாகத்திலுள்ள துன்பச்சுழிமுதலாகிய தீமை கணீங்கி யிடையறாதின்பச்சுழி சொழித்தொழுகுதலின் "சுழியாத வருட்கருணைப் பெருக்கே" யெனவும்; தூண்டுகோல்வேண்டாது மழுங்காதெரிகின்ற ஆன்மஞான தீபசோதியாதலின் "தூண்டாத மணிவிளக்கின் சோதியே" யெனவும்; சுருங்கியும் விரிந்தும், உதித்தும் அத்தமித்தும் வருஞ் சூரியசந்திரர்கள் போலாது எக்காலத்தும் ஒருதன்மையுடையதாய்ச்சதோதய ஞான அருட்பெருஞ்சோதியாகச் சிதாகாசத்து விளங்கலின் "வானொழியாது கதிர்பரப்புஞ்சுடரே" எனவும்; மெய்யடியார் அன்புசெய்து துதித்து வழிபடுந்தோறும் அவர்விரும்பும் பேரின்பப்பெருவாழ்வை யொழிவின்றி யெக்காலத்தும் வழங்கிக்கொண்டிருக்கும் ஒப்பில்லாப்பெருவள்ள லாதலின் "அன்பர்க் கோவாத வின்பருளுமொன்றே" எனவும்; சுவர்க்கலோகத் தாராகிய தேவர்கள் கண்ணாற் காண்பதற்கும், வாக்கினாற் றுதித்தேத்துதற்கும், நெஞ்சத்தா னினைந்து வழிபடற்கும், தவநெறி முதலிய வெவ்வகை மார்க்கத்திலும் தேடி அனைத்திற்கு மரியனாக நிற்றலின் "விண்ணோர்வழியாலு மொழியாலு மனத் தினாலும் விழைதருமெய்த்தவத்தாலும் விளம்புமெந்த வழியாலுங்கண்டுகொளற் கரிதாய்" எனவும்; பரிசுத்த மௌனாகாசத்திற் சந்ததம்விளங்குந் தேசோமயானந்த னாதலின் "சுத்தமௌனவெளியூடிருந்து வயங்குந்தேவே" எனவுங் கூறினார். என்றுஞ் சுழியாதகருணைப் பெருக்கே என்றுங் கதிர்பரப்புஞ்சுடரே என்றும் இன்பருளுமொன்றே என்றும் விண்ணோர் எந்தவழியாலுங் கண்டுகொளற்கரி தாய் வயங்குந்தேவே எனத்தனித்தனி "என்றும்" என்னும் சொல்லைக் கூட்டுக. என்றுங் காலகாட்டும் இடைச்சொல். இதில் உம்மை முற்றும்மை.

"துன்பச் சுழிசுழியாத இன்பச்சுழி சுழிக்குங் கருணைப்பிரவாகம்" என்பதற்கு"ப்பிரமாணம்:—

"ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந்தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம்பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்கள்

இருவினைமாமரம் வேர்பறித்தெழுந்
துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலிநிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக்குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலு ளன்பு வித்திட்டுத்
தொண்டவுழவ ராரத்தந்த
வண்டத் தரும்பெறன் மேகன்வாழ்க." (திருவாசகம்.)

"தூண்டாத மணிவிளக்கின் சோதியென்பதற்கு" ப்பிரமாணம்:—

"வேண்டும்வேண்டு மெய்யடியா ருள்ளேவிரும்பி யெனையருளா
லாண்டாயடியே னிடர்களைந்த வமுதேயருமா மணிமுத்தே
தூண்டாவிளக்கின் சுடரனையாய் தொண்டனேற்கு முண்டாங்கொல்
வேண்டாதொன்றும் வேண்டாது மிக்கவன்பே மேவுதலே." (திருவாசகம்.)

"ஒண்ணு நயனத்தி லுற்ற வொளிதன்னைக்
கண்ணாற் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணுமி னின்றது பார்க்கலு மாமே." (திருமந்திரம்.)

மனத்து விளக்கினை மான்பட வேற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
யனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே." (திருமந்திரம்.)

"சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரி தாகிய வைந்து மடங்கிடு
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே." (திருமந்திரம்.)

"ஞானுகாசத்திற் கதிர்பரப்புஞ் சுடர் என்பதற்கு" ப்பிரமாணம்:—

"நெருப்புண்டு நீருண்டு வாயுவு மூண்டங்
கருக்கனுஞ் சோமனு மங்கே யமரும்
திருத்தக்க மாலுந் திசைமுகன் றானு
முருத்திர சோதியு முள்ளத்துள் ளாரே." (திருமந்திரம்.)

"அன்பருக்கு இடைவிடாமல் இன்பருளு மொருவனென்பதற்கு" ப்பிரமாணம்:—

"நடித்துமண்ணிடைப் பொய்யினைப்பலசெய்து நானெனதெனுமாயக்
கடித்தவாயிலே நின்றமுன்வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்துமுன்னின்ற பெருமறைதேடிய வரும்பொரு ளடியேனை
யடித்தடித்துவக் காரமுன் றீற்றிய வற்புத மறியேனே." (திருவாசகம்.)

"பத்தர்சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச்
சித்தர்சூழச் சிவபிரான் றில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனுமாகி வந்தில்புகுந்தெமை யாளுங்கொண்டெம் பணிகொள்வான்
வைத்தமாமலர்ச் சேவடிக்கணெஞ் சென்னிமன்னி மலருமே."
(திருவாசகம்.)

"மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடாவகை நல்கினன்
வேயதோளுமை பங்கனெங்க டிருப்பெருந்துறை மேவினன்
காயத்துள்ளமு தூறவூறநீ கண்டுகொள்ளென்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கணெஞ் சென்னிமன்னித் திகழுமே." (திருவாசகம்.)

"வானோர் எவ்வழியாலுங் காண்டற் கரியவன்" என்பதற்குப்பிரமாணம்:—

"வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டேன்வந்து ரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்த
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்." (திருவாசகம்.)

"மௌனவெளியினிற்போர்க்குச் சதாசிவ மனோன்மணி நிர்த்தமும், சர்வபரிபூரண வகண்ட தத்துவநிலையும், அளவிடவொண்ணாத கோடிமதி யுதயம்போல நாதாந்த நல்லொளியும் ஆனந்தானுபவமுந்தோன்றி விளங்கலான் "சுத்தமௌன வெளியூடிருந்து வயங்குந்தேவே" என்றார். இதற்குப் பிரமாணம்:—

"கூடுவது புருவமய்ய வெளியினுள்ளே குறிப்பாக மௌனத்தை மூட்டு மூட்டு, வாடுவது மனோன்மணியுஞ் சிவனுந்தோன்றும் மாகாயஞ் சருவ வியாபகமுந்தோன்றும், நாடுவது கனலொளிபோல் விந்துதோன்று நாதமது கோடிமதி போலே தோன்றும், தேடுவது வனந்தவானந்தந்தோன்றுஞ் சிவசிவா மவுனவித்தை செப்பொணாதே. (மவுன தரிசனம்.)

"ஆனந்த மோனகுரு வாமெனவே யென்னறிவின்
மோனந்த னக்கிசைய முற்றியதால் - தேனுந்து
சொல்லெல்லா மோனந் தொழிலாதியு மோன
மெல்லாநன் மோன வடிவே." (தாயுமானவர்பாடல்.)

"இன்பமிருந்த விடஞ்சுடு காடதெடுத் துரைக்கத்
துன்பம்வெகுதொலை சுற்றிலும் வன்னி துருவமத்திக்
கம்பமதுநுனி காணுதகாட்சி கனகசபை
விம்பம் பெருவெளி யுற்றுற்றுப்பார்க்க விளக்கொளியே."

"ஒளியாம் விளக்கொளிக் குள்ளேதெளிந்துகொண் டேருவ
வெளியாம் பராபர மாசோதி யேவிந்து நாதமொத்துத்
தெளிவாயிருந்து பிரகாசந்தோற்றுஞ் சிதம்பரத்தி
லழியா வரம்பெற் றிருக்கப் பதமுண் டடியவர்க்கே."

"அடியவர்க் கன்பு கொடுக்குந்தியாக ரனுக்கிரகப்
படியவர்க் கெய்தும் பயனதுவேபற்றிப் பாய்ந்தவுண்மைப்
பிடியவர்க் கேதிறங்கண்டவர் விண்டிலர் பேதமற்ற
முடியவர்க் கேகுடியப்பா னடக்கவு மூச்சில்லையே."

"மூச்சில்லை யேதுமொழி வதுமில்லை மூனையொழியப்
பேச்சில்லை யம்பலம் பேருமில்லை பிறந்திறக்க
நீச்சில்லை பள்ளநிலையுமங் காச்சுது நின்றநிலை
யாச்சில்லை யென்று சற்றங்கே யிருக்கிற தானந்தமே."(கடவுளந்தாதி.)

எனப்பலஅறிஞர்கள் கூறியவற்றான் உண்மையுணர்க. (கக)

**40.** சொல்லொழியப் பொருளொழியக் கரணமெல்லாஞ் சேர்ந்தொழிய வுணர்வொழியத் துளங்காநின்ற, வல்லொழியப் பகலொழிய நடுவேநின்ற வானந்த வநுபவமே யதீதவாழ்வே, நெல்லொழியப் பதர்கொள்வார் போலவின்ப நிறைவொழியக் குறைகொண்மத நெறியோர்நெஞ்சக், கல்லொழிய மெய்யடிய ரிதயமெல்லாங் கலந்துகலந் தினிக்கின்ற கருணைத்தேவே.

(பதவுரை.) சொல் ஒழிய - மொழி நீங்கவும், பொருள் ஒழிய - அம்மொழியின் உரை நீங்கவும், கரணம் எல்லாம் - கரணங்கள் யாவும், சேர்ந்து - ஒருங்குகூடி, ஒழிய - நீங்கவும், உணர்வு ஒழிய - உணர்ச்சி நீங்கவும், துளங்கு ஆநின்ற - ஒளிர்கின்ற, அல் ஒழிய - கேவல நீங்கவும், பகல் ஒழிய - சகலாவத்தை நீங்கவும், நடு ஏ - மத்தியிலே, நின்ற - நிலையாக நின்ற, ஆனந்தம் அநுபவம் ஏ - ஆனந்தாநுபூதியே, அதீதம் - கருவிகட்கெட்டாத, வாழ்வு ஏ - வாழ்வாயுள்ள பொருளே, நெல் ஒழிய - நெற்றானிய நீங்க, பதர் - பிணியில்லாத பதரினை, கொள்வார்போல - கைக்கொள்ளும் அறிவிலிகள் ஒப்ப, இன்பம் நிறைவு ஒழிய - பூரணானந்த வஸ்துவை விட்டு, குறை கொள் - குறைவாகிய பதமுத்திகளைப் பொருளாகக் கொண்ட, மதம் நெறியோர்-பலசமயநெறியினிற்போர்தங்கள், நெஞ்சம் கல் ஒழிய- மனமாகிய கல்லினிற் கூடுதலொழிந்து, மெய் அடியர் - உண்மைத் தொண்டராயினோர், இதயம் எல்லாம் - மனமுழுவதும், கலந்து கலந்து - மேன்மேலும் புணர்ந்து, இனிக்கின்ற - தித்திக்கின்ற, கருணை - காருண்யமுடைய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) ஆனந்தானுபவத்திலே சொற்பிரபஞ்சம் அர்த்தப் பிரபஞ்சமாகிய இருவகைப்பிரபஞ்சமுழுது மனநினைவினின்று நீங்குதலாற் "சொல்லொழியப் பொருளொழிய" என்றும்; அவ்விருவகைப் பிரபஞ்சமு நீங்க அப்பிரபஞ்ச மயமாய்நின்ற அகக்கரணங்களும் புறக்கரணங்களும் ஒடுங்குதலாற் "கரணமெல்லாஞ் சேர்ந்தொழிய" என்றும்; அவை ஒடுங்க அறிவு இச்சை செயல்களும் ஒடுங்குதலால் "உணர்வொழிய" என்றும்; அவையொடுங்கக் கேவல சகலாவத்தைகளொழிதலால் "அல்லொழியப் பகலொழிய" என்றும்; அவ்விரண்டவத்தைகளு நீங்க மத்தியில் விளங்கிநிற்பது சுத்தாவத்தை யெனப்படும் அருளவத்தை யாதலால் "நடுவே நின்ற" என்றும்; அந்த அருளவத்தையில் நிகழ்வது பரஞானமாதலால், "ஆனந்தானுபவமே" என்றும்; அவ்வானந்த அனுபவ முதிர்ச்சியிற் சித்திக்கப் பெறுவது இட்டுதற்கரிய பேரின்பப் பெருவாழ்வாதலால் " அதீதவாழ்வே " என்றும்; பரிபூரணானந்த சிவத்தை வழிபடாது பதமுத்திகட்கேதுவான பல சகளோபாசனுமார்க்கத்தினோர் நெல்லொழித்துப் பதர்கொள்வோராதலால் "நெல்லொழியப் பதர்கொள்வார்போல வின்ப நிறைவொழியக் குறைகொண்மத நெறியோர்" என்றும்; அவர் அன்பில்லா மனம் நெகிழ்ந்துருகாக்கல்லொத்தலின் அதனில் விளங்குதலில்லானுதலால் "நெஞ்சக்கல்லொழிய" என்றும்; தமது தலைவன் அருளை வேண்டி யன்பினுலுருகும் நெகிழ்ச்சிபெற்ற அன்பர் மனக்கோயிலி னீங்காது கலந்து இனித்துவிளங்குங்காருணியமூர்த்தியாதலால் " மெய்யடி யரிதயமெல்லாங் கலந்து கலந்தினிக்கின்ற கருணைத்தேவே" என்றுங் கூறினர்.

"சொல்லொழியப் பொருளொழிய வென்பதற்குப்" பிரமாணம்:—

"உரைமாண்ட வுள்ளொளியுத் தமன்வந் துளம்புகலுங்
கரைமாண்ட காமப்பெருங் கடலைக் கடத்தலுமே
யிரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ." (திருவாசகம்.)

"அல்லும்பகலு மறிவாகி நிற்பவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் பராபரமே." (தாயுமானவர்பாடல்.)

"காணமெல்லாஞ் சேர்ந்தொழிய என்பதற்கு"ப்பிரமாணம்:—

"சரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ." (திருவாசகம்.)

"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெலாம் பெற்றாலு
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே." (தாயுமானவர்பாடல்.)

"உணர்வொழிய" வென்பதற்குப் பிரமாணம்:—

"சொற்பதங்கடந்த தொல்லோன்
உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும்படாஅன்
கண்முதற்புலனாற் காட்சியுமில்லோன்
விண்முதற்பூதம் வெளிப்படவகுத்தோன்
பூவினாற்றம் போன்றுயர்ந்தெங்கு
மொழிவற நிறைந்து மேவியபெருமை
யின்றெனக் கெளிவந்தருளி
யழிதருமாக்கை யொழியச்செய்த வொண்பொருள்." (திருவாசகம்.)

"கேவல சகலநீங்க வென்பதற்கு"ப்பிரமாணம்:—

இராப்பக லற்ற விடத்தே யிருந்து
பராக்கற வானந்தத் தேறல் பருகி
யிராப்பக லற்ற விறையடி யின்பத்
திராப்பகன் மாயை யிரண்டறுத் தேனே." (திருமந்திரம்.)

"நில்லாத வாக்கைநிலை யன்றெனவே கண்டாய்
நேயவருண் மெய்யன்றோ நிலயமதா நிற்கக்
கல்லாதே யேன்படித்தாய் கற்றதெல்லா மூடங்
கற்றதெல்லா மூடமென்றே கண்டனையு மன்று
சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போற் றொட்டது பற்றாநில்
எல்லாரு மறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ
இராப்பகலில் லாவிடமே யெமக்கிட மென்றறிந்தே." (தாயுமானவர்.)

"நடுவே நின்ற" என்பதற்குப் பிரமாணம்:—

"அணுதி பசு வியாத்தி யாகுமிவனை
அணுதியில் வந்த மலமைந்தா லாட்டி
அணுதியிற் கேவல மச்சகல த்திட்டு
அணுதி பிறப்பறச் சுத்தத்து ளாக்குமே." (திருமந்திரம்.)

"ஆனந்தஅனுபவ" மென்பதற்குப்பிரமாணம்:—

"ஆனந்த மானந்த மென்ப ரறிவிலார்
ஆனந்த மாநட மாரு மறிகிலா
ஆனந்த மாநடமாரு மறிந்தபின்
ஆனந்த மற்றிட மானந்த மாமே." (திருமந்திரம்.)

"அப்பினி லுப்பென வத்த னவைந்திட்டுச்
செப்பு பராற்பரஞ் சேர்பரமும் விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
யெப்படி யப்படி யென்னு மவ்வாறே." (திருமந்திரம்.)

'அதீதவாழ்வென்பதற்கு'ப்பிரமாணம்:—

"இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமா
யந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே." (திருவாசகம்.)

"ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளு நானுமொன் றானேன்
அழிந்தாங் கினிவரு மார்க்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே."

"சிறைவொழியக் குறைகொண்மத நெறியோரென்பதற்கு"ப்பிரமாணம்:—

"உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைக டந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ." (திருவாசகம்.)

"சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
றாவி யருதே யென்றுந் தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற." (திருவுந்தியார்.)

"நெஞ்சக்கல்" இஃதென்பதற்குப் பிரமாணம்:—

"ஆளாகா ராளானாரை யடைந் துய்யார்
மீளாவாட் செய்து மெய்ம்மையு ளிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர் செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே." (தேவாரம்.)

"குறிகளு மடை யாளமுங் கோயிலு
நெறிகளு மவர் நின்றதோர் நேர்மையு
மறிய வாயிர மாரண மோதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே." (தேவாரம்.)

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சுந்
தாழ்க்கச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே." (தேவாரம்.)

"மெய்யடியாரிதயக்கலந்தினிக்கின்றவன்" என்பதற்குப் பிரமாணம்:—

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங் கொண்டு
நக்கு நிற்ப ரவர்தமை நாணியே." (தேவாரம்.)

"பொந்தையைப் புக்கு நீக்கப் புகுந்திடுந்
தந்தையைத் தழல் போல்வதோர் மேனியைச்

சிந்தையைத் தெளிவைத் தெளி வாய்த்ததோ
ரெந்தையைக் கண்டு கொண்டதெ னுள்ளமே." (தேவாரம்.

எனப் பெரியோர்பலர் கூறியவற்றான் உண்மையுணர்க. (சoo)

---

**41.** அலைகடலும் புவிவரையு மனல்காணீரு மந்தாமு மற்றை யகிலாண்டம் யாவு, நிலைகுலையா வண்ணமருள் வெளியினூடு நிரைநிரையா நிறுத்தியுயிர் நிகழும் வண்ணந், தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதையென்னுந் தனியாணை நடத்தி யருட் டலத்திலென்று, மலைவறவீற் றிருந்தருளுமரசே முத்திவழித்துணையே விழி த்துணையுண் மணியாந்தேவே.

**(பதவுரை.)** அலை - திரையைவீசி யசைகின்ற, கடலும் - சமுத்திரமும், புவி - பூமியும், வரை உம்-மலையும், அனல்-நெருப்பும், கால் - காற்றும், நீர் உம் - புனலும், அந்தரம் உம் - ஆகாயமும், மற்றை - அவற்றிற்கினமாயுள்ள, அகிலம் அண்டம் யாவும் - உலகங்கள்முழுதும், நிலை குலையா வண்ணம் - தத்தம் நிலை கெடாதபடி அருள்வெளி இன் ஊடு - திருவருளாகிய வெளிநடுவிலே, நிரை நிரை ஆ - வரிசை வரிசையாக, நிறுத்தி - நிறுவி வைத்து, உயிர் - சீவான்மாக்கள், நிகழும் வண்ணம்- விளங்கும் வண்ணம், தலை குலை ஆ - தன் தலைமை கெடாத, தத்துவம் செய் - தத் துவங்கள் சேட்டிக்க வினையின்வழிச் செய்யும், திரோதை என்னும் - திரோதான சத்தியென்னப்பட்ட, தனி ஆணை - தன் ஒப்பற்ற சிற்சத்தியை, நடத்தி - செலு த்தி, அருள் தலத்து இல் - திருவருளாகிய பதியின்கண், என்றும் - எக்காலத்தும், மலைவற - ஐயநீங்க, வீற்றிருந்து அருள் உம் - எழுந்தருளியிருக்கும், அரசு ஏ - சிவ ராசனே, முத்திவழி - முத்திநெறிக்கு, துணை ஏ - சகாயனே, விழி துணை உள் - இரண்டு கண்களினுள்ளும், மணி ஆம் - ஒளிர்கின்ற கண்மணியாகும், தே ஏ-மஹா தேவனே. எ - று.

**(விசேஷ உரை.)** உலகமுழுதுஞ் சூழ்ந்துள்ள மகரசலராசியையும், எண்டிக் கினுமுள்ள மலைகளையும், பிருதிவிமுதலிய பஞ்சமகாபூதங்களையும், அகிலாண்டங் களையும் தத்தம் நிலைகள் கெடாதபடி அடுக்கடுக்காய் அருள் வெளியிலே நிறுத்தி என்றதனால், அநாதியாக உலகம் நிலைபெற்றுளதென்பதும், அதற்குத் தோற்றமும் ஒடுக்கமு முண்டென்பதும், அது தானேதோன்றி யொடுங்காது அசேதனமாகலின் அதனைத்தோற்றி யொடுக்குமொரு முதல்வன் வேண்டுமென்பதும், உலகம் இல் பொருளாயின் அதற்குத் தோற்றமின்றென்பதும், உள்பொருளாயின் தோற்றமுறு தலனுவசிகமென்பதும், உள்ளதுமில்லதுமாகாமல் அநிர்வசனமாகநின்ற உள் பொருள் உலகமென்னில் அவ்வுள்பொருளாகிய காரியவுலகம் ஒருகாரணத்தி னின்று கருத்தாவாலுள்ளதாகத் தோற்றுவிக்கப்படுமென்பதும், அணுக்கள்தாமே யுலகமாகத்தோன்றுமென்னில் அவையும் உலகம் ஒடுங்கும்போதொடுங்குதலால் சகத்துக்கு முதற்காரணமாகாதென்பதும், மாயையினின்றே யுலகம் தோற்றமுறு தலால் மாயையே முதற்காரணமாமென்பதும், இறைவனது சத்தியே துணைக் காரணமென்பதும், இறைவனே நிமித்தகாரணமென்பதும் பெற்றாம்.

"அகிலாண்டம் யாவு நிலைதலையாவண்ணமருள்வெளியினூடு நிரைநிரையா நிறுத்தி" என்பதுகாறும் இறைவன் முதற்காரண மாயையினின்று உலகமுழுதும் தோற்றுவிக்கும் தன்மையும், "உயிர் நிகழும் வண்ணம் தலைதலையாத் தத்துவஞ் செய்திரோதையென்னுந்தனியாணை நடத்தி" யென்பதுகாறும்இறைவனது துணைக் காரணத்தின் வன்மையும், "அருட்டலத்தின் மலைவற வீற்றிருந்தருளுமரசே" யென் பதுகாறும் இறைவனிமித்தகாரணனாகு நன்மையும் அவனது முதன்மையும் உணர்த்

தப்பட்டவாறறிக. மோட்சமார்க்க சகாயனாதலினால் முத்திவழித்துணை யென்றார் "விழித்துணையுண் மணியாந்தேவே" என்றது எல்லா உயிர்களானும் விரும்பப்படும் கண்ணொளியினுட் கலந்த ஞானசோதி வடிவனென்பதை நோக்கி யென்க.

"அண்டகோடியெலாம் அருள்வெளியினிறுத்தி" யென்பதற்குப்பிரமாணம்:—

"ஆராரெனக்கென்ன போதித்துமென்ன வெனையறிவினை மயக்கவசமோ
அண்டகோடிகளெலாங் கருப்பவறைபோலவு மடுக்கடுக்கா வமைத்துப்
பேராமனின்ற பரவெளியிலே மனவெளிபிறங்குவ தலாதொன்றினும்
பின்னமுற மருவாது நன்னயத்தாலினிப் பேரின்பமுத்திநிலையுந்
தாராது தள்ளவும் போகாதுலைது தள்ளினும் போகேனியான்
தடையேதுமில்லை யாண்டவனடிமை யென்னுமிருதன்மையிலுமென்வழக்குத்
தீராது விடுவதிலை நடுவானகடவுளே தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே தேசோமயானந்தமே."
(தாயுமானவர்பாடல்.)

"அனாதியாக உலகமுள்ளதென்பதற்கு"ப்பிரமாணம்:—

"படைப்பு மளிப்பும் பயிலிளைப் பாற்றுந்
துடைப்பு மறைப்பு முன்றோன்ற வருளுஞ்
சடத்தை விடுத்த வருளுஞ் சகலத்
தடைத்த வனாதியை யைந்தென லாமே." (திருமந்திரம்.)

"அறிவினைக்கட்டிய பாசமனாதி." (ஷை)

"பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே." (ஷை)

"உலகந்தோன்றி நின்றொடுங்கலால் அதனைத்தோற்றி யொடுக்க ஆதியந்த மில்லா முதல்வன் ஒருவன் வேண்டுமென்பதற்கு"ப்பிரமாணம்:—

"நிலம்புன லனல்காற்றா நிறுத்திடு மழிக்கு மாக்கும்
பலந்தரு மொருவனிக்குப் பண்ணிடவேண்டா வெண்ணி
னிலங்கிய தோற்றநிற்ற லீறிவை யிசைதலாலே
நலங்கிளர் தோற்றநாசந் தனக்கிலா நாதன்வேண்டும்."
(சிவஞானசித்தியார்.)

"உள்ளது மில்லது மன்றாகிய வுலகம் அநிர்வசன மென்பதற்கும், அது ஒரு காரணத்தினின்று தோன்று மென்பதற்கு"ம் பிரமாணம்:—

"உள்ளது மிலதுமின்றி நின்றதொன் றுளதேலுண்டா
மில்லதே லில்லையாகுந் தோற்றமு மிசையாதாகு
முள்ளகா ரணத்திலுண்டாங் காரிய முதிக்குமென்னில்
இல்லதாம் படங்கடாதி யெழிறரு மியற்றுவானால்."
(சிவஞானசித்தியார்.)

"அணுக்களினின்று உலகம் தோன்றாது மாயையினின்று தோன்றுமென்பதற்கு"ப்பிரமாணம்:—

"அழிந்தபின் னணுக்களாமே யகிலமாய் வந்துநின்று
கழிந்திடுங் கன்மத்தென்னிற் கன்மமு மணுவுங்கூட
மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலான் முடியாசெய்தி
யொழிந்திடு மணுவுமஃதே யுலகெலா மொடுங்குமன்றே."
(சிவஞானசித்தியார்.)

"காரண வணுக்கள் கெட்டாற் காரியவுலகின் றென்னிற்
காரண மாயையாகக் காரியங் காணலாகும்
காரண மாயையென்னை காண்பதிங் கணுவே யென்னிற்
காரண மாயையேகாண் காரணமணுவிற் கண்டால்."
(சிவஞானசித்தியார்.)

"காரணங்கள் முதல் துணை நிமித்தமென மூன்றென்பதற்கு"ப்பிரமாணம்:—

"காரிய காரணங்கண் முதறுணை நிமித்தங்கண்டாம்
பாரின்மண் டிரிகைபண்ணு மவன்முத றுணைநிமித்தந்
தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக
வாரியன் குலாலனுய்நின் றுக்குவ னகிலமெல்லாம்."
(சிவஞானசித்தியார்.)

"முத்திவழித்துணை" யென்பதற்குப்பிரமாணம்:—

"மனவாக்குக் காயமுயிர் மன்னியசைப்பானு
மனமாதி போக மளிப்பானும்—நனவாதி
கூட்டிவிடு வானுமுத்தி கூட்டுவொனும் பிறப்பி
லாட்டிவிடு வானு மரன்." (சிவபோகசாரம்.)

"ஆகஞ் சிறைச்சாலை யக்கரணங் காவலாள்
போகம் புவனம் பொருந்துமிடம்—ஓகோ
இதனுட் படுமுயிர்கட் கீடேற்றஞ் செய்வான்
அதனுக் கிறைவ னரன்." (சிவபோகசாரம்.)

"மோக மறுத்திடினு முத்திகொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன வவர்தம்மைத்—தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுதனை
யேதாகச் சொல்வே னியான்." (திருக்களிற்றுப்படியார்.)

"முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
யின்பங் கொடுத்தவிறை யித்தைவினை வித்தன்மல
மன்புடனே கண்டு கொளப்பா" (உண்மைவிளக்கம்.)

"அம்மையே யப்பா வொப்பிலாமணியே யன்பினில் விளைந்த வாரமுதே [குச்
பொய்ம்மையே பெருக்கிப்பொழுதினைச் சுருக்கும்புழுத்தலைப் புலையனேன் றனக்
செம்மையேயாய சிவபதமளித்த செல்வமேசிவபெருமானே
யிம்மையேயுன்னைச் சிக்கெனப்பிடித்தே னெங்கெழுந் தருளுவதினியே."
(திருவாசகம்.)

"விழித்துணையுண் மணியாயினன் முதல்வனென்பதற்கு" ப்பிரமாணம்:—

"கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
அண்ணாக்கி னுள்ளே யகண்டவெளி காட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே." (திருமந்திரம்.)

"விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி யெழுத்தாகி யியல்புமாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற

கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவநின்ற
பண்ணாகி யின்னமுதாம் பாசூர்மேய
பாஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே." (தேவாரம்.)

என மூதறிஞர் பலர் கூறியவற்றான் உண்மையுணர்க. (சக)

---

**42.** வரம்பழுத்தநெறியே மெய்ந்நெறியிலின்ப வளம்பழுத்த பெருவாழ்வே வானோர்தங்கள், சிரம்பழுத்த பதப்பொருளே யறிவானந்த சிவம்பழுத்த வநுபவமே சிதாகாசத்திற், பரம்பழுத்த நடத்தரசே கருணையென்னும் பழம்பழுத்த வான்றருவே பரமஞானத், திரம்பழுத்த யோகியர்தம் யோகத்துள்ளே தினம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத்தேவே.

(பதவுரை.) வரம் பழுத்த - மேன்மை முதிர்ந்த, நெறி ஏ - சன்மார்க்கமே, மெய் நெறி இல் - அந்த உண்மையாகிய சன்மார்க்க நெறியின்கண், இன்பம் வளம் பழுத்த-இன்பத்தின் வளமை முதிர்ந்த, பெருவாழ்வு ஏ - பெரியவாழ்வே, வானோர் தங்கள் - வானுலகில் வாழுந்தேவர்கள், சிரம் - சிரத்தில், பழுத்த - பழுத்ததாகிய, பதம் - திருவடியையுடைய, பொருள் ஏ - வத்துவே, அறிவு - ஞானம், ஆனந்தம் - ஆனந்தமாகிய, சிவம் - சத்தாகிய சிவம், பழுத்த - முதிர்ந்த, அநுபவம் ஏ - அநுபூதியே, சித் ஆகாசம் அத்து இல் - ஞானாகாசத்தினுள், பரம் பழுத்த - பரத்துவ முதிர்ந்த, நடத்து அரசு ஏ - நடனத்தைச்செய்யு நடராசனே, கருணை என்னும் - அருளென்கிற, பழம் பழுத்த - பழமானது பழுத்த, வான் தரு ஏ-பெருமையுடைய தேவதருவே, பரமம் ஞானம் திரம்பழுத்த - மேலாகிய நித்தியமான பரஞான முதிர்ந்த, யோகியர்தம்-ஞானயோகியரது, யோகம் அத்து உள் ஏ-ஞானயோகத்தினுள்ளே, தினம் - நாடோறும், பழுத்து - முதிர்ந்து, கனிந்த-கனிவடைந்த, அருள் செல்வம் - அருளாகிய செல்வத்தையுடைய, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) சரியை கிரியா யோக நெறிகளின் மிக்க ஞானநெறியென்பார் "வரம்பழுத்தநெறியே" யென்றும்; ஏனைய நெறிகளினிற்போர் அடையும் சாலோக சாமீப சாரூப முத்தியின்பங்களினு மிக்க சாயுச்சியத்திலோங்கும் தன்னிகரில்லாப்பெருவாழ்வென்பார் "மெய்ந்நெறியி லின்பவளம் பழுத்த பெருவாழ்வே" யென்றும்; தேவர்கள் வேண்டும் வரங்களைப்பெற வணங்கித்தம் உச்சிமேல் வைத்து நச்சித்தொழுது தியானிக்குந் திருவடித்தாமரை யுடையவனென்பார் "வானோர் தங்கள் சிரம்பழுத்த பதப்பொருளே" யென்றும்; இனிப்புடைய சிவானுபவமென்பார் "சிவம்பழுத்த வனுபவமே" யென்றும்; எவ்வுயிர்களும் தத்தம் வினையின்படி போகங்களை யனுபவிக்கும்படி தொழில்களைச்செய்து உய்யும் வண்ணம் நடத்துகின்ற ஊனநடம் ஞானநடம் என்னும் இருவகை நடனங்களையு மியற்றுகின்ற நடராசமணியென்பார் "சிதாகாசத்திற் பரம்பழுத்த நடத்தரசே" யென்றும்; அருட்கனிபழுத்த கற்பகம் என்பார் "கருணைக்கனி பழுத்த வான்றருவே" யென்றும்; கர்மயோகிகளின் வேறான ஞானயோகியருடைய சிவயோகத்துள்ளே தினந்தோறும் பழுத்துக்கனிந்த சிறந்த நித்திய வருட்செல்வமுடைய மஹாதேவன் என்பார் "பரமஞானத்திரம்பழுத்த யோகியர்தம் யோகத்துள்ளே தினம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத்தேவே" என்றுங் கூறினர்.

"மேன்மை மிக்க ஞானநெறி" யென்பதற்குப் பிரமாணம்:—

"ஞானத்தின் மிக்க வறநெறி காட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றது

ஞானத்தின் மிக்கவை நன்மூத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே." (திருமந்திரம்.)

"ஞானத்தாற் றொழுவார் சில ஞானிகள்
ஞானத்தாற் றொழ வேனுனை நானலேன்
ஞானத்தாற் றொழு வார்க டொழக்கண்டு
ஞானத்தா னுனை நானுந் தொழுவனே." (தேவாரம்.)

"இன்பவளம்பழுத்த சிவசாயுச்சியப் பெருவாழ்" வென்பதற்குப்பிரமாணம்:—

"சாயுச்சியஞ் சாக்கிராதீதஞ் சாருதல்
சாயுச்சியமுப சாந்தத்துத் தங்குதல்
சாயுச்சியஞ் சிவமாதன் முடிவிலாச்
சாயுச்சியமனத் தானந்த சத்தியே."

"வானவர் சிரஞ்சூட்டி வழிபடுக் திருவடியினையுடையவ" னென்பதற்குப்பிரமாணம்:—

"வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகர முரலுந்தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப்பரவுவனே."
(திருவாசகம்.)

"மாறெதிர் வானவர் தானவர் நாடொறும்
கூறுதல் செய்து குரைகழ லுடுவர்
ஊறுவ ருள்ளத் தகத்தும் புறத்துளும்
வேறுசெய் தாங்கே விளக்கொளி யாமே." (திருமந்திரம்.)

"அறிவானந்த" மென்பதற்குப் பிரமாணம்:—

"ஆயு மலரி னணிமலர் தன்மேலே
பாய விதழ்கள் பதினாறு மங்குள
தூய வறிவு சிவானந்த மாகிப்போய்
போய வறிவாய்ப் புணர்ந்திருந் தானே." (திருமந்திரம்.)

"சிதாகாசத்தினடனஞ் செய்வோன் பரனென்பதற்கு" ப்பிரமாணம்:—

உம்பரிற் கூத்தனை யுத்தமக் கூத்தனை
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
யின்புற நாடியென் னன்பில் வைத்தேனே." (திருமந்திரம்.)

"ஞானயோகியர்தம் யோகத்துட் பழுத்த அருட்செல்வத்தேவன்" என்பதற்குப்பிரமாணம்:—

"வாயுநிற்ப மனநின்று மனந்தானிற்பப் பொறிநின்று
பாயபொறிக ணிற்பவிடர் படுபுன்புலன்க ணின்றனவா
லாயபுலன்க ணின்றமையா லகிலந்தோன்று துள்ளத்தே
தூயபரமா னந்தபரஞ் சோதிதோன்றக் கண்டிருந்தார்."
(பிரபுலிங்கலீலை.)

'அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கிஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும புராணர்கோயில்

*தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச் சலசத்தீயுண்*
*மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யு மிழலையாமே."*

(தேவாரம்.)

"உணர்பொருளு முணர்வானு முணர்வுமெனும் பகுப்பொழியா தொழிந்து பானும், புணர்விழியு நீர்நிழலுந் தீயிரும்பும் புனலுவரும் பரிதிமீனுர், துணையவிரண்டறு கலப்பினெம் முடனுய்ப் பேரின்பந்துய்த்து வாழ்வார், இணர் விரைத்த மலர்க்கோதா யவர்வடிவே யெமக்கினிய கோயிலாமால்."

(காஞ்சிப்புராணம்.)

என மூதறிஞர் கூறியவற்ருன் உண்மையுணர்க. (சஉ)

---

**43.** அண்டமெலாங் கண்ணுகக்கொளினுங் காண்டற் கணுத்துணையுங் கூடா வென் றனந்தவேதம், விண்டலறி யோலமிட்டுப் புலம்பமோன வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்குமொன்றே, கண்டவடிவா யகண்டமயமா யெங்குங்கலந்து நின்றபெருங்கருணைக் கடவுளேயெஞ், சண்டவினைத் தொடக்கறச் சின்மயத்தைக் காட்டுஞ் சற்குருவே சிவகுருவே சாந்தத்தேவே.

(பதவுரை.) அண்டம் எலாம் - ஆகாய முழுதும், கண் ஆக - நேத்திரமாக, கொளின் உம் - கொண்ட போதினும், காண்ட கு - தெரிசித்தற்கு, அணு துணை உம் - ஓர் அணுவளவும், கூடா என்று - முடியமாட்டா வென்று, அனந்தம் வேதம் - அளவற்ற வேதங்கள், விண்டு - வாய்மலர்ந்து, அலறி - அலறி, ஓலம் இட்டு - கூவி, புலம்ப - அழாநிற்ப, மோனம் வெளிக்கு உள்-மவுனமாகிய வெளிக்குள்ளே, வெளி ஆய் - சிதாகாசமாய், நிறைந்து - நிரம்பி, விளங்கு உம் - பிரகாசிக்கின்ற, ஒன்று ஏ - ஏகமே, கண்டம் வடிவு ஆய் - சகளமூர்த்திகளாய், அகண்டம் மயம் ஆய் - அகண்டாகாரமாகி, எங்கும் - எவ்வுலகினும் எப்பொருளினும், கலந்து நின்ற - புணர்ந்துநின்ற, பெரும்கருணை கடவுள் ஏ-பெருமைபொருந்திய காருணியமுடைய கடவுளே, எம் - எமது, சண்டம் - கொடுமையுடைய, வினை தொடக்கு அற - வினையின் மூலம் நிர்மூலமாக, சித் மயம் அத்து ஐ - சித்தின்மயமாகிய சொரூபநிலையை, காட்டும் - அடியேன் தரிசிக்குமாறு செய்யும், சத் குரு ஏ - நல்ல ஆசாரியனே, சிவம் குரு ஏ - சிவநாமம் படைத்த குருவே, சாந்தம் - உபசாந்தமுடைய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) பாதாளமேழினுங்கீழாகநிலைபெற்று விளங்குந் திருவடியும் விண்ணுலகமனைத்துக்கு மப்பாலாய் விளங்குந் திருமுடியும் உடையனுய், ஆதி அந்தங்காட்டாத அருட்பெருஞ்சோதியாய், கீழுமேலு நீண்டு நீண்டு, அரிபிரமாதி அமரர்களாலுங் காண்டற்கரியனுய், சருவ வியாபியாய், விசுவாதீதனுயிருப்பவனென்பார் "அண்டமெலாங்கண்ணுகக்கொளினுங் காண்டற்கணுத்துணையுங் கூடாவென்று" எனவும்; வாக்குக்கெட்டாத அல்லது விந்துஞானத்திற்கதீதனுன பரஞானசொரூபியென்பார் "அனந்தவேதம் விண்டலறி யோலமிட்டுப் புலம்ப" எனவும்; மனமிறந்துநின்ற மவுனவெளிக்குள் ஞானவெளியாக வியாபித்து நிற்கும் அத்துவித வத்துவென்பார் "மோனவெளிக்குள் வெளியாய் நிறைந்து விளங்குமொன்றே" எனவும்; அளவிறந்த சமயநெறிகளிலும் அளவிறந்த அடியார்கள் பரிபாக நிலைமைக்குப் பொருந்தியவாறு தோன்றி யனுக்கிரகிக்கும் அளவிறந்த சகளவடிவங்கள் தங்கியுள்ளவனென்பார் "கண்டவடிவாய்" எனவும்; யாவராலும் அறிவதற்கரிய அகண்டாகார ஞானத்திருமேனி தாங்கிநிற்கும் பரிபூரணனென்பார் "அகண்டமயமா யெங்குங் கலந்துநின்ற" எனவும்; தன்னிகரில்லாத தயாமூல தன்மத்திற்கிடனுக நிற்பவனென்பார் "பெருங்கருணைக்கடவுளே" எனவும்;

ஒரு பிறப்பிற்செய்த வினைகெடாது வினைப்போக நுகருங்காறும் செய்தவனைப் பற்றிவருத்துங் கொடுமையுடையதாதலின் "எம்சண்டவினைத்தொடக்கு" எனவும்; வினைத்தொடக்கு நீங்கும்படி சின்மய சொரூபநிலையைக்காணக் காட்டியருளும் பரமாசாரியனாதலின் "சின்மயத்தைக்காட்டுஞ் சற்குருவே சிவகுருவே" எனவுங் கூறினார்.

"அண்டமெலாங் கண்ணாகக் கொள்ளினுங் காண்டற்கரணுத்துணையுங்கூடா" வென்பதற்குப்பிரமாணம் :—

"அன்றுமுத லாரேனு மாளா யுடனாகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதிலை—யின்றிதனை
யெவ்வாறிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது." (திருக்களிற்றுப்படியார்.)

"நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா
னல்லசிவ ஞானத்தா னானழிய—வல்லதனால்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா வரன்." (திருக்களிற்றுப்படியார்.)

"வேதாகமங்களாலறிதற்கரியவன்" என்பதற்குப் பிரமாணம் :—

"சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்
கல்லனு யானுனென் றுந்தீ பற
வம்பிகை பாகனென் றுந்தீ பற." (திருவுந்தியார்.)

"ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்க ளொன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவா—லின்றுரைக்க
வென்னா லியன்றிடுமோ வென்போல்வா ரேதேனுஞ்
சொன்னாற்று னேறுமோ சொல்." (திருக்களிற்றுப்படியார்.)

"உரைமாலை யெல்லா முடையவடி
உரையா லுணரப் படாதவடி." (தேவாரம்.)

"கண்டவடிவன்" என்பதற்குப் பிரமாணம் :—

"நீரானே தீயானே நெதியானே கெதியானே
யூரானே யுலகானே யுடலானே யுயிரானே
பேரானே பிறைசூடீ பிணிதீர்க்கும் பெருமானென்
றூராத வையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே." (தேவாரம்.)

"ஒருமணியை யுலகுக்கோ ருறுதிதன்னை
யுதயத்தி னுச்சியை யுருமானானைப்
பருமணியைப் பாலோடஞ் சாடினானைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக்குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேனதாகித்
தீங்கரும்பி னின்சுவையைத் திகழுஞ்சோதி
யருமணியை யாவடுதண் டுறையுண்மேய
வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே." (தேவாரம்.)

"அகண்டமயமானவன்" என்பதற்குப் பிரமாணம் :—

"தேவரும் மமரர்களுந் திசைகண்மே லுளதெய்வமும்
யாவரும் மறியாததோ ரமைதியாற் றழலுருவினர்

மூவரும்மவ ரென்னவு முதல்வரும் மிவரென்னவு
மேவரும்பொரு ளாயினர் மேயது விளநகரதே." (தேவாரம்.)

"உள்ளதன்றனைக் காண்பன்கீழென்ற மாமணி வண்ணனும்
உள்ளதன்றனைக் காண்பன்மேலென்ற மாமல ரண்ணலு
முள்ளதன்றனைக் கண்டிலாரொளியார் தருஞ்சடை முடியின்மேல்
உள்ளதன்றனைக் கண்டிலா வொளியார் விளநகர்மேயதே." (தேவாரம்.)

"வேறு கோலத்த ராணலர் பெண்ணலர்
கீறு கோவண லைந்துகி லாடையர்
தேற லாவதொன் றன்றுசெம் பொன்பள்ளி
யாறு சூடிய வண்ண லவனையே." (தேவாரம்.)

"தந்தையுந் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி
முந்திய தேவர்கூடி முறைமுறை யிருக்குச்சொல்லி
யெந்தைநீ சரணமென்றங் கிமையவர் பரவியேத்தச்
சிந்தையுட் சிவம்தானார் திருச்செம்பொன் பள்ளியாரே." (தேவாரம்.)

"வினைத்தொடக்கறுப்பவன்" என்பதற்குப் பிரமாணம் :—

"வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய்போல
வினையனு னென்றுன்னை யறிவித்தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின்பாவை
யனையநான் பாடேனின் றாடேனந்தோ
வலறிடே னுலறிடே னாவிசோரேன்
முனைவனே முறையோநா னானவாறு
முடிவறியேன் முதலந்த மாயினானே." (திருவாசகம்.)

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பல மன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய்."

(திருவாசகம்.)

"ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவரா
யேனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
யூனையு நின்றுருக்கி யென்வினையு மோட்டுகந்து." (திருவாசகம்.)

"சின்மயத்தைக்காட்டுஞ் சிவகுரு"வென்பதற்குப்பிரமாணம்:—

"அஞ்செழுத்தா லுள்ள மானுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில் - அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனாஞ் சேடனு மங்கு." (சிவஞானபோதம்.)

"இந்நிலைதா னில்லையே லெல்லா மீச
னிடத்தினினு மீசனெல்லா விடத்தினினு நின்ற
அந்நிலையை யறிந்தந்தக் கரணங்க ளடக்கி
யறிவதொரு குறிகுருவி னருளினு லறிந்து

மன்னுசிவன் றனையடைந்து நின்றவன்ற னாலே
 மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனிற் றுரியாதீதந்
 தோன்றமுயல் சிவாநுபவஞ் சுவாநுபூதிகமாம்.''

(சிவஞானசித்தியார்.)

என்னும் ஆன்றோர்கூறிய வாக்கான் உண்மை யுணர்க. (சங)

---

**44.** பேதமுறு மெய்ப்போத வடிவமாகிப் பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச், சீதமிகுந்தருள்கனிந்து கனிந்துமாறுச் சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா, வாதரவோ டியன்மவுனச் சுவைமேன் மேற்கொண் டானந்தரசமொழுக்கி யன்பாலென்றுஞ், சேதமுறு தறிஞருளந் தித்தித்தோங்குஞ் செழும்புனிதக் கொழுங்கனியே தேவதேவே.

(பதவுரை.) பேதம் உறு - வேற்றுமை யடையாத, மெய் போதம் வடிவு ஆகி- மெய்ஞ்ஞானந் தனது வடிவமாகி, பெரு கருணை நிறம் பழுத்து - பெரிய காருணியமாகிய வண்ணமுதிர்ந்து, சாந்தம் - உபசாந்தநிலை, பொங்கி - உயர்ந்து, சீதம்- குளிர்ச்சி, மிகுந்து - அதிகரித்து, அருள் கனிந்து - அருள் பழுத்து, கனிந்து - கனிவடைந்து, மாறு - வேறுபடாத, சித்மயம் ஆய் - சித்துருவ மயமாகி, நிர்மலம் ஏ - விமலத்தன்மையே, மணந்து - கமழ்ந்து, நீங்கா - பிரியாத, ஆதரவு ஓடு-ஆதரத்தினுடனே, இயல் - பொருந்திய, மவுனம் சுவை - மவுனமாகிய சுவை, மேல் மேல் கொண்டு - அளவிலதாகக்கொண்டு, ஆனந்தம் இரசம் ஒழுக்கி - ஆனந்தமாகிய இரதத்தை யொழுகவிட்டு, அன்பு ஆல் - அன்பினாலே, என்றும் - ஒரு போதும், சேதம் உறுது - நாசமடையாது, அறிஞர் உளம் - விவேகிகளின் இருதயத்திலே, தித்தித்து - இனித்து, ஓங்கும் - மாட்சிமையுற்ற, செழு - செழித்த, புனிதம் - பரிசுத்தமுடைய, கொழு கனி ஏ - மதர்த்த பழமே, தேவர் தே ஏ-தேவர்கட்குத் தேவனாகிய மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) அஞ்ஞானத்தினாற்றோன்றும் பலபல மதபேத சாதிபேதங்களைவிட்ட அபேதமிக்க சமரசஞான வடிவத்ததென்பார் "**பேதமுற மெய்ப்போத வடிவமாகி**" எனவும்; மாயையின் மருள் வண்ணஞ் சிறிதுந் தோன்றாத பேரருள் வண்ணம் பழுத்ததென்பார் "**பெருங்கருணை நிறம் பழுத்து**" எனவும்; கருவிகரணங்களினசைவற்ற சுபாவ வியற்கை மிக்கதென்பார் "**சாந்தம் பொங்கி**" எனவும்; வெம்மை முழுதுந்துறந்த தண்ணமயுற்றதென்பார் "**சீதமிகுந்து**" எனவும்; புறத்தே அருணிறம் பழுத்தாற்போல அகத்தே காருணியமுதிர்ச்சி பெற்றதென்பார் "**அருள்கனிந்து கனிந்து**" எனவும்; கன்ம மலபரிபாகமடையுங்காறும் சீவர்களைப் பலபல பேதவடிவத்தொடு மாறி மாறிப் பந்திக்குந் தூல சூக்கும காரண அசித்தின்மயங்கடந்ததென்பார் "**மாறச்சின்மயமாய்**" எனவும்; அசத்தின்கணுள்ள மலவாசஞ் சிறிதுந் தாக்காத ஞானவாசம் வீசுவதென்பார் "**நின்மலமே மணந்து**" எனவும்; கணப்பொழுதேனும் உயிர்த்தொகுதியைவிட்டு நீங்காத ஆதாரமாகித்தற்போத நீக்கத்தின்மேவு மவுனத்தின் சுவையை மிகக்கொண்டு இன்பத்தேனூறல் ஒழுக்குவதென்பார் "**நீங்கா வாதரவோ டியன்மவுனச்சுவை மேன்மேற்கொண் டானந்த ரசமொழுக்கி**" எனவும்; என்றுங் கேடுபடாததாய், அன்பினாலே அறிவையறிந்த அறிஞர் உள்ளத்திலினிக்கும் தூய்மையுற்ற கொழுவிய அருட்கனியென்பார் "**அன்பாலென்றுஞ் சேதமுற தறிஞருளந் தித்தித்தோங்குஞ் செழும்புனிதக் கொழுங் கனியே**" எனவும்; தேவர் யாவரையும் படைத்தும் காத்தும் கரந்தும்

மயக்கியும் அருளியும் ஆளவல்ல மஹாதேவனென்பார் "தேவதேவே" எனவுங் கூறினர்.

"பேதமுறு மெய்ப்போத வடிவம்" என்பதற்குப்பிரமாணம்:—

''ஈசனேநீ யல்லதில்லை யிங்குமங்கு மென்பதும்
பேசினேனோர் பேதமின்மை பேதையேனெ னெம்பிரான்
நீசனேனை யாண்டுகொண்ட நின்மலாவொர் நின்னலாற்
றேசனேயொர் தேவருண்மை சிந்தியாது சிந்தையே."

(திருமந்திரம்.)

"முத்தியுஞ் சித்தியு முற்றிய ஞானத்தோன்
பத்தியு ணின்று பரந்தன்னு ணின்றுமா
சுத்தியு ணின்றோர்க்குத் தத்துவங் கூடலாற்
சுத்தி யகன்றோர் சுகானந்த போதரே." (திருமந்திரம்.)

''ஓதிய முத்தி யடைவே யுயிர்பர
பேதமி லச்சிவ மெய்துந் துரியமோ
டாதி சொரூபச் சொரூபத்த தாகவே
பேத மிலாநிரு வாணம் பிறந்ததே." (திருமந்திரம்.)

''கருணைநிறம் பழுத்தென்பதற்கு"ப்பிரமாணம்:—

"பொன்னிறங் கட்டியினும் பூணினுநின் றற்போ
லந்நிற மண்ணலு மம்பிகையும்—செந்நிறத்த
ளெந்நிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியு
மந்நிறத்த னாயிருப்ப னாங்கு." (திருக்களிற்றுப்படியார்.)

"நிறம்பல வெவ்வண்ண மவ்வண்ண மீசன்
நிறம்பல வெவ்வண்ண மவ்வண்ண மின்பம்
அறம்பல வெவ்வண்ண மவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே." (திருமந்திரம்.)

"சாந்தம் பொங்கி"என்பதற்குப்பிரமாணம்:—

"காரியகாரண வாதனைப் பற்றறப்
பாரணவும்முப சாந்தப் பரிசதே." (திருமந்திரம்.)

''ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்தி லின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல்." (திருவருட்பயன்.)

''அருள்கனிந்து கனிந்து" என்பதற்குப்பிரமாணம்:—

"அருணனி சுரக்கு மமுதே காண்க." (திருவாசகம்.)

''கருணையின் பெருமை கண்டேன் காண்க." ( ஷை )

"உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினா னாயடியே னணிகொடில்லை கண்டேனே." ( ஷை )

"மாறாச் சின்மயமா" யென்பதற்குப்பிரமாணம்:—

"பூதங்க ளாந்தாகிப் புலனாகிப்பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்

சேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்க டொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே."
(திருவாசகம்.)

"சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
யற்புதக் கூத்தனை யாரறி வாரே." (திருமந்திரம்.)

"நின்மலமணம் கமழ்தற்கு" ப்பிரமாணம்:—

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது." (திருமந்திரம்.)

"காவினிலூறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினு ணெய்யும் பழத்துளி ரதமும்
பூவினு ணாற்றமும் போலுள னெம்மிறை
காவல னெங்குங் கலந்து நின்றானே." (திருமந்திரம்.)

"எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத மொட்டின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே." (திருமந்திரம்.)

"ஆனந்தரசமொழுக்கும் அருட்கனி" யென்பதற்குப் பிரமாணம்:—

"மானோர்பங்கா வந்திப்பார் மதுரக்கனியே மனநெகா
நானோர்தோளாச் சுரையொத்தா னம்பியித்தால் வாழ்ந்தாயே
யூனேபுகுந்த வுனையுணர்ந்தே யுருகிப்பெருகு முள்ளத்தைக்
கோனேயருளுங் காலந்தான் கொடியேற் கென்றோ கூடுவதே."
(திருவாசகம்.)

"கூடிக்கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரால்
வாடிவாடி வழியற்றேன் வற்றன் மரம்போ னிற்பேனோ
ஊடியூடி யுடையாயொடு கலந்துள்ளுருகிப் பெருகிநெக்
காடியாடி யானந்த மதுவேயாக வருள்கலந்தே." (திருவாசகம்.)

"மௌனச்சுவை கொண்டது" என்பதற்குப் பிரமாணம்:—

"வாய்திறந் தேனென்று சொல்லுவரோ மனச்சாட்சிதன்னை
நாய்திறந் தாலது மூடறியாது நஞ்சுண்டவர்போல்
ஆயிறந்துள்ள மொடுங்கி யடங்கி யசைந்ததுவாய்
நீயிறந்தா லறிவாய் நெஞ்சமேயது நீச்சில்லையே." (கடவுளந்தாதி.)

"நீச்சில்லை யப்புறம் போய்வரவில்லை நிலைப்பதிலே
பேச்சில்லை யந்தரந் தில்லைவனத்துறை பேசப்பெரு
மூச்சில்லை தாரையி லொத்துடன் தித்தி முழங்கச்சங்கு
கீச்சில்லைகம்மென் றசத்தமுங்கேள்வியிராகமுமே." (கடவுளந்தாதி.)

"அறிஞருள்ளந் தித்திப்பவன்" என்பதற்குப் பிரமாணம்:—

"மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிகள்

தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்றெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தரகோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ." (திருவாசகம்.)

"நஞ்சமர் கண்டத்த னண்டத்தவர் நாதன்
மஞ்சுதோய் மாடமணி யுத்தர கோசமங்கை
யஞ்சொலா டன்னோடுங் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ." (திருவாசகம்.)

எனப் பெரியோர்பலர் கூறியவாக்கான் உண்மையுணர்க. (சச)

---

**45.** உடல்குளிர வுயிர்தழைக்க வுணர்ச்சியோங்க வுளங்கனிய மெய்யன்ப ருள்ளத்தூடே, கடலனைய பேரின்பந்துளும்பநாளுங் கருணைமலர்த் தேன்பொழி யுங் கடவுட்காவே, விடலரிய வெம்போல்வா ரிதயந்தோறும் வேதாந்தமருந்த ளிக்கும் விருந்தேவேதந், தொடலரிய வெளிமுழுதும் பரவிஞானச் சோதிவிரித் தொளிர்கின்ற சோதித்தேவே.

(பதவுரை.) உடல் குளிர - தேகங்குளிர்ச்சியடையவும், உயிர் தழைக்க - ஜீவன்மா தளிர்க்கவும், உணர்ச்சி - அறிவானது, ஓங்க - பெருகவும், உளம் கனிய - மனம் பாகத்தின் முதிரவும், மெய் அன்பர் - உண்மைச் சிவநேசருடைய, உள்ளம் அத்து ஊடு ஏ - இதய மத்தியிலே, கடல் அனைய - சமுத்திரத்தையொத்த, பேர் இன்பம் - பேரானந்தமானது, துளும்ப - ததும்பவும், நாள் உம் - எந்நாளும், கருணை மலர் தேன் - அருளாகிய மலரின் தேனை, பொழியும் - சொரிகின்ற அல்லது பெய்கின்ற, கடவுள் - தெய்வீகமுடைய, கா ஏ - கற்பகத்தருவே, விடல் அரிய - கைவிடுதற்கரிய, எம்போல்வார் - எம்மை யொத்தவர்களின், இதயம் தோறு உம் - சித்தந்தோறும், வேதம் அந்தம் - வேதத்தின் முடிவிலிருக்கும், மருந்து - அமுதத்தை, அளிக்கும் - கொடுத்தருளும், விருந்து ஏ - புதுமையுடைய பொருளே, வேதம் - வேதங்கள், தொடல் அரிய - தீண்டுதற்கரிய, வெளி முழுது உம் - அருள்வெளி முழுதும், பரவி - வியாபித்து, ஞானம் சோதி - ஞானப்பிரகா சத்தை, விரித்து - பரப்பி, ஒளிர்கின்ற - விளங்குகின்ற, சோதி - அருட்பெருஞ் சோதியாகிய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) ஆணவம், மாயை, கன்மமென்னு மும்மல மூலநோய்கள் காரணமாகத்தோன்றும் தூலவுடலின் வாத பித்த சிலேத்தும நாடிகளின் பிறழ் வாலுண்டாகும் பலநோய்களாலுற்ற வெம்மை நீங்கிக்குளிர் என்பார் "உடல் குளிர" எனவும்; உடலின் வெம்மை நீங்கிக்குளிர்ந்ததனால், குளிர்ந்த நிலத்திற் பயிர்தழைப்பதுபோல உயிர்வாட்டநீங்கித் தழையவென்பார் "உயிர்தழைக்க" எனவும்; உயிர் தழைவதனால் விடையஞான வுணர்ச்சியற, அருண்ஞான வுணர்ச்சி மேலாக வென்பார் "உணர்ச்சியோங்க" எனவும்; கல்லாக வன்மையுற்ற மனம் நெகிழ்ந்துருகும் இரக்கமுள்ளதாக வென்பார் "உளங்கனிய" எனவும்; பதமுத்தி யின்பங்களும் போகபூமியி னின்பங்களும் நிலையற்றவையென விரும்பாத மெய் யடியாருள்ளத்தில் அணைகடந்த ஆழிவெள்ளம்போலச் சிவானந்தந் ததும்பவென்

பார் "மெய்யன்ப ருள்ளத்தூடே கடலனைய பேரின்பந்துளும்ப" எனவும்; இன்னோரன்ன செயல்கணிகழ அருளமுதம் பொழியுந்தேவதாரு வென்பார் "கருணை மலர்த்தேன் பொழியுங்கடவுட்காவே", எனவுங் கூறினர்.

குளிர, தழைக்க, ஓங்க, கனிய, துளும்பவென்னுஞ் செயவெனெச்சவினைகள் பொழியும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தன. எச்சவினைகளின் உம்மைகள் தொக்கன. அடியார் திருக்கூட்டத்தைத்தழுவ "எம்போல்வாரிதயந்தோறும்" என்றார்.

ஆசைகளை யெல்லாமகற்றிப் பிறவிநோயைத்தவிர்க்க வழங்கும் ஞானமருந்துடையபுதுமைமிக்க பவரோக வைத்தியநாதன் என்பார் "வேதாந்தமருந்தளிக்கும் விருந்தே" என்றார். வேதங்களாலுந் தீண்டுதற்கரிய ஞானப்பிரகாசமுடைய துரிய நிலம் என்பார் "வேதந்தோடலரிய வெளிமுழுதும் பரவிஞானச் சோதிவிரித்து" எனவும்;எக்காலத்தும் அவியாமலும் தூண்டாமலும் சுடர்கின்ற அருட்பெருஞ் சோதித் தெய்வமென்பார் "ஒளிர்கின்ற சோதித்தேவே" எனவுங் கூறினர்.

"கடவுட்டருவென்பதற்கு"ப்பிரமாணம்:—

"மண்ணதனி லைந்தை மாநீரி னான்கை
வயங்கெரியின் மூன்றை மாருதத் திரண்டை
விண்ணதனி லொன்றை விரிகதிரைத்
தண்மதியைத் தாரகைக டம்மின்மிக்க
எண்ணதனி லெழுத்தை யேழிசையைக் காம
னெழிலழிய வெரியுமிழ்ந்த விமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே." (தேவாரம்.)

"வேதாந்த மருந்தளிக்கும் விருந்தென்பதற்கு"ப்பிரமாணம்:—

"முறுக்கது சுற்றிவந் தேகுறும்போது முடிசுழன்று
இறுக்கிறெனத் தலையேகெட்டுச் சாயும் இலேசமதை
வெறுக்க மருந்திலையோதிருவண்ணாமலை விளக்கைத்
திறக்கத் திருவிளக்காலே தெரியுந் திருவுளமே." (தேவாரம்.)

"மருந்தவை மந்திரமறுமை நன்னெறியவை மற்றுமெல்லா
மருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே." (தேவாரம்.)

"வேதந்தொடலரிய வெளி" என்பதற்குப் பிரமாணம்:—

"ஒளியை யொளிசெய் தோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே." (திருமந்திரம்.)

"ஞானச்சோதி விரிக்குஞ்சோதி"யென்பதற்குப்பிரமாணம்:—

"மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி

துன்னிய வாறெளி தூய்மொழி நாடோறும்
முன்னிய வாறெளி யொத்தது தானே." (திருமந்திரம்.)

என ஆன்றோர் கூறியவற்றான் உண்மையுணர்க. (௪௫)

---

**46.** கிரியைநெறி யகற்றிமறை முடிவினின்று கேளாமற் கேட்கின்ற கேள்வியேசொற், கரியவரை விடுத்துநவ நிலைக்குமேலே காணமற் காண்கின்ற காட்சியேயுள், ளரியநிலை யொன்றிரண்டி னடுவேசற்று மறியாமலறிகின்றவறிவேயென்று முரியசதா நிலைநின்ற வுணர்ச்சிமேலோ ருன்னாமலுன்னுகின்ற வொளியாந்தேவே.

(பதவுரை.) கிரியை நெறி - கிரியாமார்க்கத்தை, அகற்றி - விலக்கி, மறை முடிவு இல் நின்று - வேதாந்த நிலையினின்று, கேளாமல் - விசாரியாமல், கேட்கின்ற - விசாரிக்கின்ற, கேள்வி ஏ - ஞான விசாரணையே, சொல்-கீர்த்தியுள்ள அல்லது சொல்லப்படுகின்ற, கரி அ வரை விடுத்து - சர்வசாட்சியாக நிற்கும் அந்த வரம்பைக் கடந்து, நவ நிலை கு - ஒன்பதுவகை நிலைகளுக்கு மேல், ஏ - மீதிலே, காணமல் - சுட்டிப்பாராமல், காண்கின்ற - பார்க்கின்ற, காட்சி ஏ - தோற்றமே, உள் அரிய நிலை - எண்ணுதற்கரிய நிலையாகிய, ஒன்று இரண்டு இன் நடு ஏ - துவிதம் அத்துவிதம் என்னும் இரண்டின் மத்தியிலே, சற்று உம்-ஒரு சிறிதும், அறியாமல் - சுட்டுணராமல், அறிகின்ற - உணர்கின்ற, அறிவு ஏ - சுத்த அறிவே, என்று உம்-எந்நாளும், உரிய-உரியதாகிய, சதா நிலை - சாசுவதநிலையில், நின்ற - நிலைபெற்ற, உணர்ச்சி - உணர்வினையுடைய, மேலோர் - பெரியோர், உன்னாமல் - தியானிக்காமல், உன்னுகின்ற - தியானிக்கின்ற, ஒளி ஆம்-அருட்பெருஞ்சோதியாகிய, தே ஏ-மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) சரியை கிரியை யோகமாகிய மூன்றும் ஞானநெறி யடைதற்குச் சாதனங்களாதலினாலும், அவற்றை விடுத்தவிடத்தே ஞானவிசாரணை தொடங்குதலானும் **"கிரியை நெறியகற்றி மறைமுடிவினின்று கேளாமற் கேட்கின்ற கேள்வியே"** எனவும்; எப்பொருளுந் தன்னையுணராமல் அவற்றினுள்ள வெளியிற் கரந்து சர்வசாட்சியாக நிற்கின்ற நிலைக்குமேலதென்பார் **"சொற்கரிய வரை விடுத்து"** எனவும்; விந்துநாதமுதல் அருள் ஈறாக விளங்கும் நவநிலைக்குமேற் சுட்டாமற் சுட்டிக்காணுங் காட்சியாதலின் **"நவநிலைக்குமேலே காணமற் காண்கின்ற காட்சியே"** எனவும்; விடையபோக நுகர்ச்சிக்காக முயன்று திரிபவர் எண்ணுதற்கரியதாதலின் **"உள்ளரிய"** எனவும்; வேதாந்த நிலை அத்துவிதமாகலின் **"நிலையொன்று"** எனவும்; சித்தாந்தநிலை துவித நெறியாகலின் **"இரண்டின்"** எனவும்; வேதாந்த சித்தாந்த சமரசநிலை உசிதநிலையாகலின் **"நிலையொன்றிரண்டினடுவே"** எனவும்; ஞாதுரு ஞான ஞேய நெகிழாமனெகிழ்ந்து நிற்க அருளாலறிகின்ற வனுபவ நிலையென்பார் **"சற்றுமறியாம லறிகின்ற வறிவே"** எனவும்; கனவிலும் நனவிலும் வேறொன்றைப் பற்றுதலு நினைத்தலும் சிந்தித்தலும் செய்யாமல் ஒப்பற்ற மெய்யுணர்வினாட்டத்திலே சதா நிலைபெற்ற வுணர்வுடைய ஞானியர் என்பார் **"என்றும் உரிய சதாநிலை நின்ற வுணர்ச்சிமேலோர்"** எனவும்; அப்பெரியோர் கருதாமற் கருதுகின்ற ஞானசோதியாகிய மஹாதேவனென்பார் **"உன்னாமலுன்னுகின்ற வொளியாந்தேவே"** எனவுங் கூறினர். கேளாமல், காணமல், அறியாமல், உன்னாமல் இவைகள் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சவினைகள். சற்றும் இதில் உம்மை இழிவு சிறப்பு.

"கிரியை நெறி யகற்றிக் கேட்கின்ற கேள்வி" யென்பதற்குப்பிரமாணம்:—

"தத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்
சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்

சுத்தமும் வேண்டாந் தொடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே." (திருமந்திரம்.)

"இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ண
மலர்தொட்டுக் கொண்டே வரும்புனல் காணேன்
தலைதொட்ட நூற்கண்டு தாழ்ந்ததென் னுள்ளந்
தலைதொட்டுக் கண்டேன் றவங்கண்ட வாறே." (திருமந்திரம்.)

"கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியு முடலு மிருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே." (திருமந்திரம்.)

"காணாமற் காண்கின்ற காட்சி" யென்பதற்குப்பிரமாணம்:—

"கண்டுகண் டுள்ளே கருத்துற வோங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
யின்றுகண் டிங்கே யிருக்கலு மாமே." (திருமந்திரம்.)

"குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும்
வெறிப்பிரு ணீங்கி விகிர்தனை நாடுஞ்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி யமரரு மாமே." (திருமந்திரம்.)

"கேட்டாரு மறியாதான் கேடொன்றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித்தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே." (திருவாசகம்.)

"ஒன்றிரண்டினடுவே சற்றும் அறியாமலறிகின்ற அறிவென்பதற்கு"ப்பிரமாணம்:—

"ஒன்றிரண்டாய் நின்றொன்றி லோர்மையதா மொன்றாக
நின்றிரண்டா மென்னிலுயிர் நேராகும்-துன்றிருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானுகி
யோங்கியவா றெவ்வாறுரை." (மெய்கண்டசாத்திரம்வினாவெண்பா.)

"சிற்றறிவு முற்சிதையிற் சேர்வாரிற் றுஞ்சிறிது
மற்றதனி னிற்கிலருண் மன்னுவார் - துற்றமுகின்
மின்கொண்ட சோலை வியன்மருதச் சம்பந்தா
வென் கொண்டு காண்பே னியான்."
(மெய்கண்டசாத்திரம் வினாவெண்பா.)

"ஓராதே யொன்றையு முற்றுன்னதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார்." (திருவருட்பயன்.)

"கண்டபடி யேகண்டு காணாமை காணாமை
கொண்டபடியேகொண் டிரு." (திருவருட்பயன்.)

எனப்பல அறிஞர்கள் கூறியவற்றான் உண்மையுணர்க. (சசு)

**47.** சொற்போதற் கரும்பெரிய மறைகணாடித் தொடர்ந்துதொடர்ந் தயர்ந் திளைத்துத் துளங்கியேங்கிப், பிற்போத விரைந்தன்ப ருளத்தேசென்ற பெருங் கருணைப் பெருவாழ்வே பெயராதென்றுந், தற்போத வொழிவினிடை நிறைந்து பொங்கித் ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானேயாகிச், சிற்போதத் தகம்புறமுங் கோத்துநின்ற சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத்தேவே.

(பதவுரை.) சொல் - கீர்த்தியானது, போதல் கு அரும்-சிதையாத, பெரிய-விரிவான, மறைகள் - வேதங்கள், நாடி - ஆராய்ந்து, தொடர்ந்து தொடர்ந்து - பின்பற்றிப் பின்பற்றி, அயர்ந்து-தளர்ந்து, இளைத்து - மெலிந்து, துளங்கி - அஞ்சி, ஏங்கி - வாடி, பின் போத - பிற்பட்டொழிய, விரைந்து - துரிதப்பட்டு, அன்பர் உளத்து ஏ - அடியவர் உள்ளத்திலே, சென்ற - சென்று புகுந்த, பெரு கருணை - பேரருளுடைய, பெரு வாழ்வு ஏ - பெரிய வாழ்வே, பெயராது - விட்டுநீங்காமல், என்றும்-எக்காலத்தும், தன் போதம் ஒழிவு இன் இடை-தனது சீவபோதம் ஒழிந்த விடத்தில், நிறைந்து-பூரணமாகி, பொங்கி - மிகுந்து, ததும்பி - துளும்பி, வழிந்து-ஒழுகி, ஓங்கி - சிறந்து, எல்லாம் - எல்லாப்பொருள்களும், தான் ஏ ஆகி - தானாக விளங்கி, சித் போதத்து - அருண்ஞான போதத்து, அகம் - உள்ளும், புறம் உம் - வெளியும், கோத்து நின்ற - வியாபித்தொன்றாய் நின்ற, சிவம் ஆனந்தம் பெருக்கு ஏ - சிவானந்த வெள்ளமே, மெய் செல்வம் - நித்தியமாகிய ஞானச்செல்வத்தை யுடைய, தே ஏ - தேவர்களுக்குத் தேவாகிய மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) எக்காலத்தும் எச்சமய நெறியாளருங்கண்டு வியத்தற்குரிய உண்மைஞானநெறியை யுணர்த்தி யெங்கும் வியாபிக்கும் புகழ்படைத்த நான்கு வேதங்கள் என்பார் "சொற்போதற் கரும்பெரிய மறைகள்" எனவும்; இத்தகைய வேதங்கள் இறைவனைக் காணுமாறு அர்ச்சித்து வழிபடுவன வென்பார் "நாடித் தொடர்ந்து தொடர்ந்து" எனவும்; கண்டுகொளற்கருமைநோக்கித் தளர்ந்து மெலிந்து அஞ்சி வாடிப் பின்னிட்டு நிற்பன வென்பார் "அயர்ந்திளைத்துத்துளங்கி யேங்கிப் பிற்போத" எனவும்; அன்பர்கள் தியானிக்கும் பாவாகாரத்தொடு தியானிக்குமுன்னர்க் கடிதிற்செல்பவனென்பார் "விரைந்தன்பருளத்தேசென்ற" எனவும்; அளப்பரும் பெருங்கருணையினுக்கமாகிய முடிவில்லாப்பெருவாழ்வின னென்பார் "பெருங்கருணைப் பெருவாழ்வே" எனவும்; சீவபோதம் ஒழிந்த விடத்துச் சிதாகாசத்துணிறைந்து நிற்கும் பொருள் என்பார் "தற்போத ஒழிவினிடை நிறைந்து" எனவும்; அணைகடந்து பாய்கின்ற ஆனந்தப்பிரவாகமாகியதென்பார் "பொங்கித் ததும்பி வழிந்தோங்கி" எனவும்; அவ்வானந்தம் எதிரற்றதாய் தன் னுட்பட்ட வெப்பொருளுந் தானாகியிருப்பதென்பார் "எல்லாந் தானேயாகி" எனவும்; அந்தச் சிவானந்தப்பெருக்குத்தானே அருண்ஞான போதத்தினுள்ளும் புறம்புங் கோத்துநிற்பதாகித் தன்னின் வேறாகிய பதமுத்தி யின்பங்களைக் கீழ்ப் படுத்தும் பெருமையுடையதென்பார் "சிற்போதத் தகம்புறமுங் கோத்து நின்ற சிவானந்தப்பெருக்கே" எனவும்; உலகத்தார் கைக்கொண்ட பொய்ச்செல்வ மன்றாகி யென்றுங் குறைவுபடாநிறைவுடைய நித்தியச்செல்வமுடைய மஹாதேவ னென்பார் "மெய்ச்செல்வத்தேவே" எனவுங் கூறினர்.

"மறைகள் தொடர்ந்திளைத்தேங்க அன்பருளத்தே சென்றவன்" என்பதற்குப் பிரமாணம்:—

> "பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
> பரிந்தொழுகச் சிவகந்தம் பரிந்து நாறக்
> கண்டவிரு தயகமல முகைகளெல்லாங் கண்டிறப்பக்
> காசினிமேல் வந்தவருட் கதிரோன்." (சிவஞானசித்தியார்.)

"உன்னற் கரியசி ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னும்
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலா
ரென்ன வதிசய மன்னே யென்னும்." (திருவாசகம்.)

"தற்போத வொழிவிற்பெறப்படுஞ் சிவானந்தப் பெருக்கு" என்பதற்குப் பிரமாணம்:—

"நானாடி யனைவானொரு நாய்க்குத்தவி சிட்டிங்
கூனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந் துறையுறைவான்
வானோர்களு மறியாததோர் வளமீந்தன னெனக்கே."
(திருவாசகம்.)

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பா னஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தா
லோவாமையன்றே யுடல்." (திருக்களிற்றுப்படியார்.)

"செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ
டொத்தாரே யோகபர ரானவர்கள்-எத்தாலு
மாராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
போராமற் செல்வா தன்பின்." (திருக்களிற்றுப்படியார்.)

"அன்றிவரு மைம்புலனு நீயு மசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ்-சென்று
கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயும்
ஒருமகடன் கேள்வ னுனக்கு." (திருக்களிற்றுப்படியார்.)

"பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினு நெறியல்லா நெறியயிற்றி வரினுஞ்
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்வந் திடினுந்
தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கில்
நாதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து
நானா போகங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே."
(உண்மைநெறிவிளக்கம்.)

என அறிஞர்கள்பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (௪எ)

**48.** பொங்குபல சமயமெனு நதிகளெல்லாம் புகுந்துகலந்திட நிறைவாய்ப் பொங்கியோங்குங், கங்குகரை காணாதகடலே யெங்குங்கண்ணாகக் காண்கின்ற கதியே யன்பர், தங்கநிழல் பரப்பிமயற் சோடையெல்லாந் தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச், செங்குமுத மலரவருமதியே யெல்லாஞ்செயவல்ல கடவுளே தேவதேவே.

(பதவுரை.) பொங்கு - மிகுகின்ற, பல சமயம் என்னும் - பலவாகிய சமய நெறிகளெனப்பட்ட, நதிகள் எல்லாம்-எல்லா ஆறுகளும், புகுந்து-உள்ளேபாய்ந்து, கலந்திட - கலக்க, நிறைவு ஆய் - நிரம்பியதாய், பொங்கி - அதிகரித்து, ஓங்கும் -

மேன்மேலெழுகின்ற, கங்கு - வரம்பின் பக்கமும், கரை - கரையும், காணாத - இல்லாத, கடலே - சமுத்திரமே, எங்கும் - எவ்வுலகத்திலும், கண் ஆக - நேத்திரம் போற் சிறந்ததாக, காண்கின்ற-அறிவுடையோர் நோக்குகின்ற, கதி ஏ - ஆதரவே, அன்பர் - திருவடிக்கன்புடைய தொண்டர்கள், தங்க-தங்குதற்காக, நிழல்பரப்பி - நிழலைப்பரப்பி, மயல்சோடை எல்லாம் - அவரது பந்தத்தாலுற்ற சனனமரண விடாய்முழுதும், தணிக்கின்ற - ஆற்றுகின்ற, தருவே - தேவதருவே, பூ தடம் ஏ - அழகிய மலர்வாவியே, ஞானம் செம் குமுதம் - ஞானமாகிய செங்குவளைமலர், மலர - அலர்வுற, வரும் - உதயஞ்செய்யும், மதி ஏ - சந்திரனே, எல்லாம் - சங்கற்பித்த எல்லாத்தொழில்களையும், செய்யவல்ல - தனது கிரியாசக்தியாற் செய்துமுடிக்கும் வல்லமையுடைய, கடவுள் ஏ - பதிப்பொருளே, தேவர் தே ஏ - தேவர்களுக்குத் தலைவனாகிய மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) அனாதியிலும் ஆதியிலுந்தோன்றித் தேவர் மனிதராதியோர் அகத்தூய்மை புறத்தூய்மை யெய்தி, கரணவொழுக்கம், இந்திரியவொழுக்கம், ஆன்மவொழுக்க முற்றுச்செழித்தோங்க, உள்ளமென்னும் வாய்க்கால் வழியே பெருகி, மன்னுயிர்களாகிய பயிர்க்கு ஞானநீரைப் பாய்ச்சி வளர்க்கின்ற சமயநெறிகள் பலகோடியாக விரிந்துள்ளனவாதலால் "பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்" எனவும்; நதிகள் பாய்தற்கிடமாகிய கடல்போலச் சமயகோடிகளெல்லாம் ஒருங்கேவந்து தன்னுட்புக மாதேவர்நிற்கின்றவாற்றால் "புகுந்து" எனவும்; அவைகள் வேற்றுமையுறாது பாய்ந்து கலக்கவும் தனது பூரணத்துள் அவற்றை வியாப்பியமாக்கித்தான் வியாபகமாயிருத்தலாற் "கலக்கிடநிறைவாய்" எனவும்; மேம்பாடுடையதாய் ஆதியந்தமற்றதாயுள்ள கடல்போறலின் "பொங்கி யோங்குங் கங்கு கரைகாணாத கடலே" எனவும்; பஞ்ச கர்த்தர்கட்கும், ஏனைய தேவர்க்குஞ் சீவர்க்கும் எவ்வுலகத்தினுந் தன்னிற் சிறந்த ஆதரவு பிறிதிலதாகத் தழைத்ததென்பார் "எங்குங்கண்ணாகக் காண்கின்ற கதியே" எனவும்; அன்புடையார் வந்து தங்கத் திருவடிநிழலைப் பரப்பி அனாதியாகவருந்தும் ஜனனமரண வெப்பந்தணிக்கவல்ல பரஞான சாம்பிராச்சிய கற்பதருவாதலின் "அன்பர் தங்க நிழற்பரப்பி மயற்சோடையெலாந் தணிக்கின்ற தருவே" எனவும்; உள்ளும்புறமுங் குளிர அன்பர் படிந்தாடு ஞானதீர்த்தம் போறலின் "பூந்தடமே" எனவும்; ஞானக்குவளைமலர உள்ளவெளியி லுதிக்கின்ற ஞானகலாநிதியாதலின் "ஞானச்செங்குமுதமலரவரு மதியே" எனவும்; கருவிகரணாதிகளா னிருமிக்கும் சிற்பாதி வினைமாக்கள்போல அவையொன்றையும்வேண்டாது எல்லா அண்டங்களையும் பிண்டங்களையும், அவற்றைப் படைக்கின்ற தேவராதியோரையும், ஏனைய சித்துவிளையாடல்களையும் சங்கற்பித்த அளவே கணப்போதில் செய்தருளும் முடிவிலாற்றலுடைய பதியாகிய மஹாதேவனாய்விளங்குதலின் "எல்லாஞ்செய்யவல்ல கடவுளே தேவதேவே" எனவுங் கூறினார்.

"நதிகளையொத்துள்ள பல சமயங்களும் சென்றுபுகுங் கடலைப்போல மாதேவர் உள்ளார்" என்பதற்குப்பிரமாணம்:—

"ஆமா றுரைக்கு மறுசம யாதிக்குப்
போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்
காமாம் வழியாக்கு மவ்வே றுயிர்கட்கும்
போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே." (திருமந்திரம்.)

"இமையவர் தம்மையு மெம்மையு முன்ன
மமைய வகுத்தவ னாதிப் புராணன்

சமையங்க ளாறுந்தன் னுளிணை நாட
வமையங் குழல்கின்ற வாதிப் பிரானே." (திருமந்திரம்.)

"பேறனைத்து மணுவெனவே யுதறித்தள்ளப்
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா
வீறனைத்து மிந்நெறிக்கே யென்ன வென்னை
மேவென்ற வரத்தேபாழ் வெய்யமாயைக்
கூறனைத்துங் கடந்தவெல்லைச் சேடமாகிக்
குறைவறநின் றிடுநிறைவே குலவாநின்ற
வாறனைத்தும் புகுங்கடல்போற் சமயகோடி
யத்தனையுந் தொடர்ந்துபுகு மாநிரட்பே." (தாயுமானவர்பாடல்.)

"எங்குங் கண்ணாகக் காண்கின்ற கதி" என்பதற்குப் பிரமாணம்:—
"அருளெங்குங் கண்ணாந தாரறிவாரே." (திருமந்திரம்.)

"எண்ணில் பலகோடி யுயிரெத்தனையோ வத்தனைக்குங்
கண்ணிற் கலந்தவருட் கண்ணே பராபரமே." (தாயுமானவர்பாடல்.)

"காணுங் கண்ணிற் கலந்தகண் ணேயுனைச்
சேணும் பாருந் திரிபவர் காண்பரோ
வாணும் பெண்ணு மதுவெனும் பான்மையும்
பூணுங் கோலம் பொருந்தியு ணிற்கவே." (தாயுமானவர்பாடல்.)

"நிழல்பரப்புந்தரு" வென்பதற்குப்பிரமாணம்:—
"பாசா டவிக்குளே செல்லா தவர்க்கருள்
பழுத் தொழுகு தேவ தருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்த மே." (தாயுமானவர்பாடல்.)

எனப் பெரியோர்பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (சஅ)

**49.** வான்காணு மறைகாணு மலரோன்காணான் மால்காணா னுருத்திரனு மதித்துக்காணு, னான்காணு விடத்ததனைக் காண்பேமென்று நல்லோர்க ணவில்கின்ற நலமே வேட்கை, மான்காணு வுளக்கமல மலர்த்தாநின்ற வான்சுடரே யானந்தமயமேயீன்ற, வான்காணு விளங்கன்று யலமர்ந்தெங்கு மன்பர்தமைக் கலந்து கொளு மமலத்தேவே.

(பதவுரை.) வான் காணு - விண்ணுலகங்களறியா, மறை காணு - வேதங்கள் அறியா, மலரோன் காணான் - பிரமன் அளந்தறியான், மால் காணான்-மாயோன் அளந்தறியான், உருத்திரன் உம் - உருத்திரமூர்த்தியும், மதித்து காணான் - கணித்து அளந்தறியான், நான் காணு இடத்து - தற்போதம் நசித்தவிடத்திலே, அதனை-அந்தப் பாவத்துவை,காண்பேம் என்று-அருளால் அறிவேமென்று,நல்லோர்கள் - நற்குணநற்செய்கையுடைய பெரியோர்கள், நவில்கின்ற - சொல்லாநின்ற, நலம் ஏ - நன்மை முழுதுமாகிய பொருளே, வேட்கை - ஆசையும், மான்-பிரகிருதி மயக்கமும், காணு - அடைதலில்லாத, உளம் கமலம்-உள்ளத்தாமரையை, மலர்த்து ஆநின்று அ - அலரச்செய்கின்ற,வான் சுடர் ஏ - பெருமையுடைய சூரியனே, ஆனந்தம் மயம் ஏ - பேரின்ப மயமே, ஈன்ற - பெற்ற, ஆன்-தாய்ப்பசுவை, காணு - கண்டடையமாட்டாத, இள கன்று ஆய் - இளங்கன்றுபோல, அலமந்து-சுழன்று, எங்கும் - வாடுகின்ற, அன்பர் தம் ஐ - அடியவர்களை, கலந்து கொள்ளும்-கூடிக்கொள்ளுகின்ற, அமலம் - பரிசுத்தமுடைய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) மண்ணுலகுபோல விண்ணுலகங்களும் காணாமல் எல்லாவுலகிற்கும் அப்பாலாயினானாகலின் "வான்காணா" எனவும்; பொருளுலகுபோலச் சொல்லுலகமுங் காணாமை நிற்பவனாகலின் "மறைகாணா" எனவும்; அன்னப்பறவையாகிப் பன்னெடுங்காலம் விண்மேற்பறந்தும், வராகமாகிப் பன்னெடுங்காலம் பாதாளமெல்லாம் இடந்தும், தேடித்தேடித் திருமுடியையுந் திருவடியையும் காணாமலெய்த்தமையின் "மலரோன்காணான் மால்காணான்" எனவும்; ஏனைய வுருத்திரருங் காணற்கியலாமையின் "உநத்திரனு மதித்துக்காணார்" எனவும்; அகங்கார மமகார விவகாரமிழந்த தற்போத நிவிர்த்தி யென்பார் "நான்காணாவிடத்து" எனவுங் கூறினார். அதனை யென்றது சுட்டுணர்வுக்கப்பாலிருந்தபொருளை. தற்சுதந்தரமின்றித் தற்போத நிவிர்த்தியில் அவனருளே கண்ணாகநின்று காண்பதென்பார் "காண்பேமென்று நல்லோர்கணவில்கின்ற நலம்" என்றார். "வேட்கைமான் காணா உளக்கமலம்" என்பதனால் நிராசையும் மலரும் பருவமும் அடைந்துள்ள சித்தாம்புயமென்பது பெற்றாம். "மலர்த்தாநின்ற வான்சுடர்" என்பதனால் முகைமலர மலர்த்துவது சூரிய சந்நிதானத்தி னிகழ்வதாயினும் அபக்குவமிக்க அரும்புகள் அலராமையும், அவற்றை யலர்த்தாமையும் காணக்கிடப்பன. "வான்சுடர்" என்றது சிதாகாசத்தெழுஞ் சிவஞானபானுவாந் தோற்றத்தை. அநித்திய சடதுக்க விவகார நீங்கிய சுகாதீத வத்துவாதலின் "ஆனந்தமயம்" என்றது.

தனது பசித்தீயவியத் தாய்ப்பசுவின் முலைப்பாலுண்ண நினைந்து, பலவிடங்களினுந் தேடித்தேடிக் காணாது இளங்கன்று வாடுதல்போலத் தமது தலைவனை யடைந்து, ஞானாமிர்தமுண்டு வாட்டமற்றிருப்போமெனத் தேடித்தேடிக் காணாமலுழன்று வாடித் தற்சுதந்தரமற நிற்கும் அன்பரை யடையும் விமல மஹாதேவனாதலின் "ஈன்ற ஆன்காணா விளங்கன்ற யலமந்தேங்கு மன்பர்தமைக் கலந்து கோளுமமலத்தேவே" என்றார்.

"வான்காணாப்பொருள்" என்பதற்குப் பிரமாணம்:—

"மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்த லுற்றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்றொழப் பட்டவொண் சுடரை
முத்தியு ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே." (தேவாரம்.)

"மறைகாணாப்பொருள் என்பதற்குப்பிரமாணம்:—

"இருளாய வுள்ளத்தி னிருளைநீக்கி
யிடர்ப்பாவங் கெடுத்தேழை யேனையுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தைதந்த
அருளானை யாதிமா தவத்துளானை
ஆறங்க நால்வேதத் தப்பானின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கினேனே." (தேவாரம்.)

"பிரமன் மால் உருத்திரர் காணுப்பொருள்" என்பதற்குப்பிரமாணம்:—

"செங்கணா மால் பிரமற்கு மறிவொணு
வங்கி யின்னுரு வாகி யழல்வதோர்
பொங்க ரவனைப்புள் ளிருக்குவேளூர்
மங்கை பாகனை வாழ்த்த வருமின்பே." (தேவாரம்.)

"தன் னுருவை யொருவர்க் கறிவொணு
மின் னுருவனை மேனிவெண் ணீற்றனைப்
பொன் னுருவனைப் புள்ளிருக்கு வேளூர்
என்ன வல்லவர்க் கில்லை யிடர்களே." (தேவாரம்.)

"நான் காணு விடத்தினல்லோர் காணும்பொரு" ளென்பதற்குப் பிரமாணம்:—

"வான்பொருளாகி யெங்குநீயிருப்ப வந்தெனைக்கொடுத்து நீ யாகா
தேன்பொருள்போலக் கிடக்கின்றேன்முன்னை யிருவினைவாதனையன்றோ
நின்பொருளான வமிர்தமேநின்னைச் சிந்தையிற் பாவனைசெய்யு
நான்பொருளானே னல்லனல்லரசே நாவிறந்திருப்பது நாட்டம்."
(தாயுமானவர் பாடல்.)

"என்னதியா னென்பதற்றே ரெங்கிருந்து பார்க்கினுநின்
சந்நிதியா நீபெரிய சாமி பராபரமே." (தாயுமானவர்பாடல்.)

"மான்காணு வுளக்கமல மலர்த்தாநின்ற வான்சுடர்போல்பவன்"என்பதற்கு ப்பிரமாணம்:—

"பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்
பருதியலர்த் திடுவதுபோற் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளி னாலே
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே." (சிவஞானசித்தியார்.)

"அன்பர்தமைக் கலந்துகொள்ளு மாதேவன்" என்பதற்குப்பிரமாணம்:—

"அன்று வந்தெனை யகலிடத் தவர்முன்
னாள தாகவென் றுவணங் காட்டி
நின்று வெண்ணோல் லூர்மிசை யொளித்த
நித்திலத் திரட் டொத்தினை முத்திக்
கொன்றி னுன்றனை யும்பர் பிரானை
யுயரும் வல்லர ணங்கெடச் சீறுங்
குன்ற வில்லியை மெல்லிய லுடனே
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே." (தேவாரம்.)

எனப்பேரறிவாளர் கூறிய வாற்றான் உண்மையுணர்க. (சக)

**50.** மெய்ஞ்ஞான விருப்பத்திலேறிக் கேள்விமீதேறித் தெளிந்திச்சை விடுதலேறி, யஞ்ஞானமற்றபடி யேறியுண்மை யறிந்தபடி நிலையேறி யதுநானெனனும், கைஞ்ஞானங் கழன்றேறி மற்றவெல்லாங் கடந்தேறிமௌனவியற்கதியிலேறி,யெஞ் ஞான மறத்தெளிந்தோர் கண்டுங்காணே மென்கின்ற வநுபவமே யின்பத்தேவே.

(பதவுரை.) மெய் ஞானம் - மெய்ஞ்ஞானத்தைப்பெறுவதாகிய, விருப்பம் அத்து இல் ஏறி - இச்சையின் மீக்கூர்ந்து, கேள்வி மீது ஏறி-சிரவணஞ்செய்வததிகரித்து, தெளிந்து - தெளிவடைந்து, இச்சை - பிரபஞ்ச மயலை, விடுதல் ஏறி-விட்டு நீக்குதலாகிய துறவுமார்க்க மதிகரித்து, அஞ்ஞானம் அற்றபடி ஏறி - அஞ்ஞான

நீங்கிய படியிலேறி, உண்மை - உள்ளதாகிய சொரூபத்தை, அறிந்தபடி - அனுபவி த்தறிந்த வண்ணம், நிலை ஏறி - அந்த நிலையை யடைந்து, அது நான் என்னும் - அந்தப்பிரமம் நானென்னப்பட்ட, கை ஞானம் - சிறுமையுடைய பசுஞானத்தி னின்று, கழன்று - நீங்கி, ஏறி-மேலேறி, மற்ற எல்லாம் - பிற பாசஞானமுழுதும், கடந்து ஏறி - தாண்டிச்சென்று, மவுனம் இயல் கதி இல் ஏறி - பொருந்திய மவு னமாகிய கதியினை யடைந்து, எ ஞானம் - எந்த லௌகிக விடயஞானமும், அற - நீங்க, தெளிந்தோர் - சித்தந்தெளிந்த பெரியோர், கண்டும் - தரிசித்தும், காணேம் என்கின்ற - தரிசித்திலேமென்கின்ற, அநுபவமே - ஞானனுபவமாயுள்ள வனே, இன்பம் தே எ - ஆனந்த ரூபியாகிய மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) அநித்திய வத்துவிலுண்டாகிய வெறுப்பினால் நித்தியவத்து வை யுணர்கின்ற சத்தியஞானத்தில் இச்சை மிகுதலின் "மெய்ஞ்ஞான விருப்பந்தி லேறி" யெனவும்; நல்ல ஞானாசிரியனை யடைந்து ஞானவிசாரணை செய்தலின் "கேள்விமீதேறி" எனவும்; சிரவணமு மனனமு நிகழ்ந்தபின்னர்ச் சிந்தைதெளித லும் பற்றறுத்தலும் கூடுதலின் "தெளிந்திச்சைவிடுதலேறி" எனவும்; அஞ்ஞான இருளினீங்கி உண்மையாகிய சொரூபத்தை யுணர்தலும், அதனிற் றளர்வகன்று நிற் றலு நிகழ்தலின் "அஞ்ஞானமற்றபடியேறி யுண்மையறிந்தபடிநிலையேறி" என வும்; அந்நிலையிலே நானே பிரமமாயினேனென்னும் பசுஞானந் தோன்றுமலடங் குதலின் "அதுநானென்னுங் கைஞ்ஞானங்கழன்று" எனவும்; பின்னர் அதனிற் பிறவாகிய பாசஞான முழுதும் முப்பாழுங் கடந்தேறுதலின் "மற்றவெலாங் கடந் தேறி" யெனவும்; அப்பால் உள்ளதாகிய மோன சமாதியிற் புகுதலின் "மௌன வியற்கதியிலேறி" எனவும், எவ்வகை விடய ஞானமும் வாசனாரூபமாக உள்ளத்தி லெழாமல், திரையற்ற நீர்போல வுள்ளந்தெளிந்த பெரியோராதலின் "எஞ்ஞான மறந்தெளிந்தோர்" எனவும்; தற்போதத்துடனின்று தாமாக ஒன்றனைக் கண்ட னுபவித்தலின்றி, அருள்காட்டக்கண்டு நிற்றலின் யாமே ஒருபொருளையுங் காண் கிலேமென்று நிலையிற்பிரியா தடங்கிநிற்பவர் ஞானனுபவ மென்பார் "கண்டுங் காணேமென்கின்ற அனுபவமே" எனவும்; சிற்சுகோதய விலாசப் பூரணத் தெய்வமாதலின் "இன்பத்தேவே" எனவுங் கூறினர்.

"மெய்ஞ்ஞான விருப்ப மதிகரித்த" லென்பதற்குப்பிரமாணம்:—

"யோகியர்க்கே ஞான மொழுங்காம்பே ரன்பான
தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே." (தாயுமானவர்.)

"கேள்வி மீதேறி" என்பதற்குப்பிரமாணம்:—

"செல்வத்துட்செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை." (திருக்குறள்.)

"தெளிந்திச்சை விடுதல்" என்பதற்குப்பிரமாணம்:—

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு
வையத்தின் வான நணிய துடைத்து." (திருக்குறள்.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி." (திருக்குறள்.)

"அஞ்ஞான மற்றபடி யென்பதற்குப் பிரமாணம்:—

"தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்." (திருக்குறள்.)

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு
மற்று நிலையாமை காணப்படும்." (திருக்குறள்.)

"உண்மையறிந்தபடி" யென்பதற்குப் பிரமாணம்:—

"தமனியக் கடமேயாயினும் பவ்வீத் தங்குறின் விழைஞரும்பற்றார்
அமிழ்தமே யானுந்துய்த்திடிற் பவ்வீ யாக்குமிவ் வுடற்புகரறிந்தும்
இமிழ்தரப் பற்று மடவருக்குரைத்து மென்பயன் றீர்த்தமாடிடினும்
உமிழ்முடை யாக்கை சுசியுறுதிறைவ னுண்மைதேர்ந் துயிர்சுத்தியுறுமே."

(திருத்தணிகைப்புராணம்.)

"அது நான் என்னுங்கைஞ்ஞானங் கழன்றேறி" யென்பதற்குப் பிரமாணம்:—

"அதுவென் றுன்னு மதுவு மறநின்ற
முதிய ஞானிகண் மோனப் பொருளது
எதுவென்றெண்ணி யிறைஞ்சுவ னேழையேன்
மதியுணின் றின்ப வாரி வழங்குமே." (தாயுமானவர்பாடல்.)

"ஞானாபேட்சை முதலிய படியேறித் தெளிந்தோர் கண்டுகாணுமையாகு மனுபவம்" என்பதற்குப் பிரமாணம்:—

"பால்வடிவாகிய பாதத்தைப் பற்றிப் பதைப்பறவே
நூல்வழியேணிப் படியேறிப் போய்வர நோக்கியின்னே
காலதுகாலடி பேராமற்பார்த்துக் கடந்து முப்பாழ்
மேல்வெளி பார்த்திருப்பீர் தரிப்பீரந்த மின்னொளியே." (கடவுளந்தாதி.)

என அறிஞர்கள் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (ருய)

51. பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்பழம்போல விழுங்குகின்ற பரமேமாசு, பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக்காட்டும் பெருமானே யானந்தப்பேற்றின் வாழ்வே,யுற்றறியா தின்னுமின்னு மறைகளெல்லா மோலமிட்டுத் தேடநின்ற வொன்றேயொன்றுங், கற்றறியாப்பேதையேன் றனக்குமின்பங் கனிந்தளித்த வருட்கடலே கருணைத்தேவே.

(பதவுரை.) பற்று - பிரபஞ்சமயக்கம், அறியா - இல்லாத, முத்தர்தமை எல்லாம் - சீவன்முத்தர்களெல்லாரையும், வாழைப்பழம்போல-வாழைக்கனியை விழுங்குதற்கொப்பாக, விழுங்குகின்ற - உட்கொள்கின்ற, பரம் ஏ - பரமனே, மாசு - களங்கத்தைப்பெற்று, அறியா - அடைந்தறியாத, பெரு பதம் ஏ - பெரிய பதவியே, பதம் அத்து ஐ - திருவடிநிலையை, காட்டும் - அனுபவிகட்குக்காட்டுகின்ற, பெருமான் ஏ - எமது தலைவனே, ஆனந்தம் பேறு இன் வாழ்வு ஏ - ஆனந்தமென்னும் ஆன்மலாபத்தின் வாழ்வாயுள்ளவனே, மறைகள் எல்லாம் - வேதாகம நூல்கள் அனைத்தும், உற்று அறியாது - அடைந்தறியாதனவாய், இன்னும் இன்னும்-இதுகாறும், ஓலம் இட்டு - முறையிட்டு, தேட - தேடும்படியாக, நின்ற - அவற்றுக் கெட்டாமனின்ற, ஒன்றே - அத்துவித வத்துவே, ஒன்று உம் - ஓர் உறுதிப்பொருளும், கற்று அறியா - படித்தறியாத, பேதையேன் தனக்கு உம் - அறிவிலேனாகிய எனக்கும், இன்பம் - பேரின்பக்கதியை, கனிந்து - திருவுளமிரங்கி, அளித்த - வழங்கிய, அருள் கடல் ஏ - கிருபாசமுத்திரமே, கருணை - காருணிய சத்தியுருக் கொண்ட, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) ஆசையே பிறவிக்கு வித்தென வுணர்ந்து நிராசையே வடிவாக நிற்பவர் முத்தர் ஆகலின் "பற்றறியா முத்தர்" எனவும்; அன்னோர் தன்னைப் போல அமலராகி ஐக்கியத்தை யுன்னிச்செயலற்றுநிற்கத் தன் பூரணானந்தத்துள் அழுத்தி, அவரை விழுங்கும் இயல்புடையனாகலின் "தமையெல்லாம் வாழைப் பழம்போல விழுங்குகின்ற பரமே" எனவும் கூறினார்.

பரிசுத்த ஞானவான் பதவியே தானாக நிற்றலின் "மாசுபெற்றறியாப்பெரும் பதம்" எனப்பட்டது. மேலான நாலாம்பதவியில் திருவடிநிலையை அடியவர்க்குக் காட்டும் தனித்தலைமைப் பெரும்பதி தானாகலின் "பதந்தைக்காட்டும்பெருமான்" என விதந்தனர். உலகோர்பெறும் இலாபங்களனைத்தினுமிகச்சிறந்தது ஆன்மலாபமென்பதும், அது அநித்திய சுகதுக்க நீங்கிய சாசுவத சிவானந்தப்பெருவாழ்வென்பதுந்தோன்ற "ஆனந்தப்பேற்றின்வாழ்வே" என்றனர். சொற்பிரபஞ்ச முழுதுங் கடந்த அத்துவித மோனப்பொருள் எனக்கூறுவார் "மறைகளெல்லா மற்றறியா தின்னுமின்னு மோலமிட்டுத் தேடநின்றவோன்றே" என்றனர். கல்வி கரையிலதாதலானுங் கற்றது சிற்றளவினதாய்த் தன்னின்மிக்கோரை நோக்க மதிக்கப்படுதலானும், கற்றவரோடு தன்னை வைத்தெண்ணுதலிற் கல்லாதவரொடு வைத்தெண்ணுதல் அடங்கிநிற்கு நெறியாதலானும் "ஒன்றுங்கற்றறியாப் பேதையேன்றனக்கும்" என்றனர். தனக்கும்—இதன்கண் உம்மை இழிவு சிறப்பு. "பேதையேன்றனக்கும் இன்பங்கொடுத்தவருட்கடல்" என்றதனால் அபக்குவரையும் பக்குவர்களாக்கித் தன் பேரின்பம் வழங்குந் தயாநிதி நங்கடவுள் என்பது பெற்றாம்.

"பற்றறியா முத்தர்" என்பதற்குப்பிரமாணம்:—

"ஐந்தொழிலுங் காரணங்க ளாந்தொழிலும் போகநுகர்
வெந்தொழிலு மேவார் மிக." (திருவருட்பயன்.)

"புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலனடக்கு மாமை தக." (திருவருட்பயன்.)

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து." (திருக்குறள்.)

"மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாத
மேவுதலு ஞானம்விளைந் தோர்குருவி னருளாற்
புக்கநுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
றமநியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் கரனோ
டொக்கவுறைந் திவரவனே யவனிவரை விடாதே
யுடந்தையாய்ச் சிவன்றேற்ற மொன்றுமே காண்பர்."
(சிவஞானசித்தியார்.)

"மாசு பெற்றறியாப் பெரும்பத"மென்பதற்குப்பிரமாணம்:—

"மாறிநின் றூடிய வான்பொரு ளாணி மணியசைந்து
மீறிநின் றூனந்த நிர்த்தத்தி லோசை விளங்கிமனந்
தேறிநின் றற்பர னலாம் பதமெனுந் தேனமுதம்
ஊறிநின் றின்ப ரசந்திரு வாய்திறந் துண்பவர்க்கே." (கடவுள்தாநி.)

எனப் பெரியோர் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (൬க)

**52.** மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச்சுத்த வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியேமுற்றும், பொய்யுணர்ந்த வெமைப்போல்வார் தமக்குமின்பம் புரிந்தரு ளுங் கருணைவெள்ளப் பொற்பே யன்பர், கையுறைந்து வளர்நெல்லிக் கனியேயுள் ளங் கரைந்துகரைந் துருகவவர் கருத்தினூடே, யுய்யுநெறி யொளிகாட்டி வெளியு முள்ளு மோங்குகின்ற சுயஞ்சுடரே யுண்மைத்தேவே.

(பதவுரை.) மெய் உணர்ந்த - மெய்ப்பொருளை யுணர்ந்த, வாதவூர் - திருவாதவூரில் அவதரித்த, மலையை - மலையையொத்த மாட்சிமை மிக்க மாணிக்கவாசகரை, சுத்த வெளி ஆக்கி - பற்றற்ற ஞானவெளிமயமாக்கி, கலந்து கொண்ட - அவருடன் கூடிக்கொண்ட, வெளியே - பரவெளியே, முற்றும் - முழுவதும், பொய் உணர்ந்த - பொய்யாகிய பிரபஞ்சப்பொருளையுணர்ந்த, எம்மைபோல்வார் தமக்கு உம் - எம்மையொத்த சொற்றொண்டு புரிபவர்களுக்கும், இன்பம் - பேரின்பத்தை, புரிந்து - விரும்பி, அருள் உம் - வழங்காநின்ற, கருணைவெள்ளம் - அருளாகிய வெள்ளத்தின், பொற்பு ஏ - அழகாயவனே, அன்பர் - அன்புடைய நல்லோர், கை உறைந்து - கையில் அமர்ந்து, வளர் - வளர்கின்ற, நெல்லி கனி ஏ - கருநெல்லிக்கனியொப்பவனே, உள்ளம் - மனமானது, கரைந்து கரைந்து - நெகிழ்ந்து நெகிழ்ந்து, உருக - கசிந்துருக, அவர் - அவ்வன்பரது, கருத்து இன் ஊடு ஏ - சிந்தையினிடையிலே, உய்யும் - பிழைக்கின்ற, நெறி - முத்திநெறிக்காகும், ஒளிகாட்டி - ஞானப்பிரகாசத்தைத் தரிசிப்பித்து, வெளி உம் உள் உம் - அகம்புறம் இரண்டிலும், ஓங்குகின்ற - நிமிர்ந்துயர்கின்ற, சுயம் சுடர் ஏ - சுயம்புவான ஞானபானுவே, உண்மை தே ஏ - சத்தியப்பொருளாகிய மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) திருப்பெருந்துறையிற் குருந்தடியில் எழுந்தருளியிருந்த பரமஞான சற்குருராயர்பாற் சிவஞானபோதத்தைச் சந்தேக விபரீதங்களறக் கேட்டு மெய்ப்பொருளீதெனத் தெளிந்த திருவாதவூரடிகள் என்பார் "மெய்யுணர்ந்த வாதவூர்மலை" என்றார். மலை என்றது குணங்குறிகளாலும், பிறப்பினாலும், தொழிலாலும், சிறப்பினாலும், அறிவாலும் உயர்தோற்றத்தை நோக்கி யென்க. "மலைபோல்வாரைத்தன்போலச்சுத்தவெளியாக்கிக்கலந்துகொண்டவெளியே" யென்றது தனது சட்சுதீக்கை, வாசகதீக்கை, பரிச தீக்கைகளால் அவரது தூலதேகப்பிரபஞ்சத்தைச் சின்மாத்திரமாகக் கரைத்து ஐக்கியமருளிய அருள்வண்மையைப்பாராட்டியதென்க.

அபக்குவர்களையும் பக்குவராக்கித் தன்இன்பங்கொடுத்தருளும் அருள்வல்லபத்தைப்பாராட்வோர் "பொய்யுணர்ந்த வெமைப்போல்வார்தமக்குமின்பம் புரிந்தருளுங் கருணைவெள்ளப் பொற்பே" என்றார். அன்பர் கையுறைந்து வளர்நெல்லிக் கனியென்றது, உண்டவர்க்குச் சாவாநலமும், கையில் வைத்திருப்பவர்க்கு எவ்வுலகத்துப்பொருளுங் கண்ணிற்காணும் பிரத்தியக்க காட்சியும்நல்குங்கனிபோலநல்க வல்லான் இறைவன் என்பதை யுணர்த்தற்கென்க. அன்பாற் கரைந்துகரைந்துருகுந் தொண்டர்க்கே யுய்யுநெறிக்கான வொளியைக்காட்டுஞ் சுயஞ்சோதி யென்பார் "கரைந்துகரைந்துருக வவர்கருத்தினூடே யுய்யுநெறி யொளிகாட்டி" யென்றார். வளர்நெல்லி—வினைத்தொகை.

"மெய்யுணர்ந்த வாதவூர்மலையை வெளியாக்கிக் கலந்தவெளி" யென்பதற்குப் பிரமாணம்:—

"பேசும் பொருளுக் கிலக்கியமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து."

(திருவாசகம்.)

"வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
யாரா வமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையா னென்சிந்தை மேய
வொருத்தன் பெருக்கு மொளி." (திருவாசகம்.)

'மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
யெண்ணமிலா வன்பருளி யெனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ண
மண்ணலெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.'' (திருவாசகம்.)

"வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூ ரேறேநின் பொன்னடியுங் காண்பேனோ." (தாயுமானவர்.)

"உருவெளிதான் வாதவூ ருத்தமர்க்கல் லாலினமுங்
குருவழிநின் றார்க்குமுண் டோகூறாய் பராபரமே." (தாயுமானவர்.)

"கையுறைந்து வளர் நெல்லிக்கனி" யென்பதற்குப்பிரமாணம்:—

"மையுலாம் விழி மாதர்க டோதகப்
பொய்யி லாழும் புலையினிப் பூரைகாண்
கையி லாமல கக்கனி போன்றவென்
ஐயனே யெனை யாளுடை யண்ணலே." (தாயுமானவர்.)

எனப்பெரியோர் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (இஉ)

**53.** ஒலிவடிவு நிறஞ்சுவைக ணாற்றமூற்ற முறுதொழில்கள் பயன்பலவே றுளவாயெங்கு, மலிவகையா யெவ்வகையுமொன்றா யொன்று மாட்டாதாயெல்லா மும்வல்லதாகிச், சலிவகையில் லாதமுதற் பொருளேயெல்லாந் தன்மயமாய் விளங்குகின்ற தனியேயாண்பெண், அலிவகையல் லாதவகை கடந்துநின்ற வருட் சிவமே சிவபோகத் தமைந்ததேவே.

(பதவுரை.) ஒலி - ஓசையும், வடிவு - உருவமும், நிறம் - வண்ணமும், சுவைகள் - இரதங்களும், நாற்றம் - கந்தமும், ஊற்றம் - பரிசமும், உறு - மிக்க, தொழில்கள் - கருமங்களும், பயன் - பலனும், பல - பலவாகிய, வேறு - வேற்றுமைகளை, உள ஆய் - உடையவையாகி, எங்கு உம் - எந்த வுலகின்கண்ணும், மலிவகை ஆய் - நிரம்பிய வகுப்புகளாகியும், எ வகை உம் - எந்த வகுப்பும், ஒன்று ஆய் - ஒருவகுப்பாகியும், ஒன்று உம் - ஒரு வகுப்பிலும், மாட்டாது ஆய் - இசையாததாகியும், எல்லாம் உம் - சகல சித்தும், வல்லது ஆகி - செய்யுந்திறனுள்ளதாகியும் (விளங்கி), சலி வகை - சலிக்கும் விகாரத்தன்மை, இல்லாத - ஒழிந்த, முதல் பொருள் ஏ - தலைமைப்பதிப்பொருளே, எல்லாம் - எப்பொருண்மயமும், தன் மயம் ஆய் - தனது மயமுள்ளதாகியும், விளங்குகின்ற - பிரகாசிக்கின்ற, தனி ஏ - ஏகனானவனே, ஆண் (வகை) - ஆண் வகையையும், பெண் (வகை) - பெண் வகையையும், அலி வகை-அலி வகையையும், அல்லாத வகை - அம்மூவகையாகாத வகையையும், கடந்து நின்ற-தாண்டி நின்ற, அருள் சிவம் ஏ — அருட்குணமுடைய சிவமே, சிவம் போகத்து - சிவபோகமாகிய பேரின்ப அநுபூதியில், அமைந்த - பொருந்திய, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) தநுகரணபுவன போகங்களொடுகூடிய பல வேற்றுமையுடைய அளவிறந்த சீவகோடிகளிடத்தும் பொருந்தியுள்ள சத்த, பரிச, ரூப, ரச கந்தங்களாகிய தன்மாத்திரைகளும், புண்ணியபாப கருமங்களும், அவற்றால் விளையும் இன்பத்தன்ப போகங்களும் ஒன்றேடொன்று ஒற்றுமையுடையன வாகாமல் பலகோடி வேற்றுமையடைந்து முதல்வன் கிரியாசத்தி வல்லபத்தை வியக்குமாறு

நிற்றலின் "ஒலிவடிவு நிறஞ்சுவைகளுற்றுழற்ற முறுதொழில்கள் பயன்பல வேறுளவாயெந்த மலிவகையாய்" எனவும்; இக்கூறப்பட்ட வெல்லாமாகியும் இவையெல்லாம் அல்லவாகியும் விளங்குதலின் "எவ்வகையு மொன்றயொன்று மாட்டாதாய்"எனவும்; சங்கற்பித்தவை யாவும் அக்கணத்தே யியற்றவல்ல சித்தனாதலின் "எல்லாமும் வல்லதாகி" யெனவும்; மகாபஞ்சகிருத்தியங்களை நடாத்தும் வகையில் ஒருசிறிதும் விகாரமடையாத நிருவிகாரியாக விருக்குந் தலைவனாதலின் "சலிவகையில்லாத முதற்பொருளே" எனவும்; எக்காலமும் எத்தேசமும் எப்பொருளுந் தன்னுள் வியாப்பிய முற்றனவாக விளங்கவைத்த அத்துவிதனாதலின்"எல்லாந்தன்மயமாய் விளங்குகின்ற தனியே" எனவும்; உயர்திணை அஃறிணை ஐம்பான் மூவிடங்களுக்குமுரிய ஆண் பெண் பேடு என்னும் உருவமும், அருவமுங் கடந்த சகளநிட்களா தீதனாதலின் "ஆண் பெண் அலிவகையல்லாத வகை கடந்து நின்ற வருட்சிவமே" எனவும்; சர்வதேவபோகமும் ஏகதேசமாய், நித்தியவியல்பினதாய்த் தோன்றச் சர்வமங்களாகார சர்வவியாபக அகண்டாநந்தப் பெற்றியதாய்க் குறைவற வெக்காலுமோங்கும் நின்மல போகமுடையனாதலின் "சிவபோகத்தமைந்த தேவே" எனவுங் கூறினர்.

"ஒலிகள் பலவுந்தானாகினான் இறைவன்" என்பதற்குப்பிரமாணம்:—

"ஓசை யொலியெலா மானாய் நீயே
யுலகுக்கொருவனாய் நின்றாய் நீயே."

எனத் திருவையாற்றுத் திருத்தாண்டகத்தும்;

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
யூற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாத சத்தத் தொலியே போற்றி."

எனப் போற்றித்திருத்தாண்டகத்தும் திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளியன காண்க.

"வடிவு பலவுந் தானாகினான்" என்பதற்குப்பிரமாணம்:—

"ஒருவனென் னு மொருவன் காண்க."
"விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க."
"நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க."
"பெண்ணு ணலியெனும் பெற்றியன் காண்க."
"குவளைக்கண்ணி கூறன் காண்க."
"அவளுந் தானு முடனே காண்க." (திருவாசகம்.)

"காரிலங்கு திருவுருவத் தவற்கு மற்றைக்
கமலத்திற் காரணற்குங் காட்சி யொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலுஞ்
சிலைவளைவித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனலனல்கால் பரமாகாசம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு வேற்குமரன் றாதை போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே." (தேவாரம்.)

"நிறம் பலவுந் தானாகினா" னென்பதற்குப்பிரமாணம்:—

"வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
னேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்

கெண்ணந்தான் றமொறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவுகாட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற்றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் றடுத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக்கேனே." (திருவாசகம்.)

"மணிநிற மொப்பன பொன்னிற மன்னின மின்னியல்வாய்
கணிநிறமன்ன கயிலைப் பொருப்பன காதல் செய்யத்
துணிவன சீலத்த ராகித்தொடர்ந்து விடாத தொண்டர்க்
கணியன சேயன தேவர்க்கை யாற னடித்தலமே." (தேவாரம்.)

"சிந்தை வண்ணமுந் தீயதொர் வண்ணமு
மந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக்காலனைப் பாய்ந்ததொர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவரை யாறரே." (தேவாரம்.)

"இருளின் வண்ணமு மேழிசை வண்ணமுஞ்
சுருளின் வண்ணமுஞ் சோதியின் வண்ணமு
மருளு நான்முகன் மாலொடு வண்ணமு
மருளும் வண்ணமு மாவரை யாறரே." (தேவாரம்.)

"சுவை பலவுந் தானாகினான்" என்பதற்குப்பிரமாணம்:—

"நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாலா யிவையிற்றி னியம மாகிப்
பாதியா யொன்றாகி யிரண்டாய் மூன்றாய்ப்
பரமாணு வாய்ப்பழுத்த பண்களாகிச்
சோதியா யிருளாகிச் சுவைகளாகிச்
சுவைகலந்த வப்பாலாய் வீடாய் வீட்டி
ஞாதியா யந்தமாய் நின்றான் றன்னை
யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே." (தேவாரம்.)

"நாற்றம் பலவும் தானாகினான்" என்பதற்குப்பிரமாணம்:—

"வாச மலரெலா மானாய் நீயே." (திருவாசகம்.)

"நாற்றமாய் நறுமலர்மே லுறையாநின்ற வறநெறியை." (தேவாரம்.)

"பூவினாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை
யின்றெனக் கெளிவந் தருளி
யழிதருமாக்கை யொழியச்செய்த வொண்பொருள்." (திருவாசகம்.)

* "ஊற்றம் பலவுந் தானாகினான்" என்பதற்குப் பிரமாணம்:—

"புலனையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்." (தேவாரம்.)

"தொழில் பலவுந் தானாகினான்" என்பதற்குப்பிரமாணம்:—

"பின்றானு முன்றானு மானான் றன்னைப்
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான் றன்னை

* வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை என ஊறுகள் எட்டாம்.

நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி
நல்வினையுந் தீவினையு மானான் றன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தீயா னானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகானை
நின்றாய நீரோ் நிலாவி னானை
நீதனே னென்னேனா னினையா வாறே." (தேவாரம்.)

"எல்லாமுனுடைமையே யெல்லாமுனுடைய செயலே." (தாயுமானவர்.)

"பயன் பலவுந் தானாகினான்" என்பதற்குப் பிரமாணம்:—

"வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்பமாயி னார்க்குப்
பாதியு மாய்முற்று மாயி னார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயி னாருக்
காதியு மந்தமு மாயி னாருக்
காடப் பொற்சுண்ண மிடித்து நாமே." (திருவாசகம்.)

எனப்பெரியோர் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (௫௩)

**54.** பேராய வண்டங்கள்பலவும் பிண்டபேதங்கள் பற்பலவும் பிண்டாண்டத்தின், வாராய பலபொருளுங் கடலுமண்ணு மலையுளவுங் கடலுளவு மணலும் வானு, மூராத வான்மீனு மணுவு மற்றை யுள்ளனவு மளந்திடலா மோகோவுன்னை, யாராலு மளப்பரிதென் றனந்தவேத மறைந்திளைக்க வதிதூர மாகுந்தேவே.

(பதவுரை.) பெரு ஆயம் - பெரிய நீளம்உடைய, அண்டங்கள் - உலகங்கள், பலஉம் - அளவில்லாதனவும், பிண்டம் - பிண்டங்களின், பேதங்கள் - வேற்றுமைகள், பல பல உம்—அளவிறந்த பலவும், பிண்டம் அண்டம் அத்து இன் - பிண்ட அண்டங்களின், வார் ஆய - நேர்மையுள்ளனவாகிய, பலபொருள் உம்—அளவிறந்த பொருள்களும், கடல் உம்-சமுத்திரமும், மண் உம்- நிலவுலகும், மலை உள உம்-மலைகளின் உள்ள வளங்களும், கடல் உள உம் - கடலின்கண் உள்ள பொருள் வளங்களும், மணல் உம் - மணல்களும், வான் உம் - ஆகாயங்களும், ஊராத - நகராத, வான் மீன் உம் - வானத்திலுள்ள நட்சத்திர கணங்களும், அணு உம் - அணுக்களும், மற்று ஐ - இவையல்லாமல் வேறு, உள்ளன உம் - இருக்கும் பண்டங்களும் ஆகிய இவை அனைத்தையும், அளந்திடல் ஆம் - கணக்கிட்டு இத்துணையென அறியலாம், ஓகோ-ஓஓ, உன்னை-உன்பெரு வடிவத்தை, ஆர் ஆல் உம் - ஒருவராலும், அளப்பு-அளந்தறிதல், அரிது என்று-அருமையுடையதென்று, அனந்தம் வேதம்-பலவாகிய வேதங்கள், அறைந்து - சொல்லி, இளைக்க-எய்க்க, அதிதூரம் ஆகும் - அவற்றினுக்கெட்டாத தூரத்திலுள்ள பொருளாகும், தே எ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) அளத்தற்கரிய அகலநீட்சியும் மாட்சியும் வளப்பெருங்காட்சியும் உடைய அண்டபிண்டங்கள் பலகோடியாக விளங்குவன வென்பார் "பேராயவண்டங்கள் பலவும்" எனவும்; அவ்வண்டகோடிகளுள் விளங்கும் பல பேதமுடைய பிண்டங்களும் பலகோடிகளாவன வென்பார் "பிண்டபேதங்கள் பற்பலவும்" எனவும்;அண்டநிலையிலும் பிண்டநிலையிலும் விளங்குந் தத்துவதாத்துவிகங்களென்பார் "பிண்டாண்டத்தின் வாராய பல பொருளும்" எனவும்; விசாலமுள்ள நீருலகும் நிலவுலகும் என்பார் "கடலுமண்ணும்" எனவும்; மலைபடு

திரவியம் கடல்படு திரவிய மென்பார் "மலையுளவுங்கடலுளவும்" எனவும்; இத்தனையெனக் கணக்கிட்டறிதற்கும், இவ்வளவினதென அளந்தறிதற்கு முடியாத பொருள்களைக் கணித்தலும் அளத்தலுமொருவாற்றான் முடியுமேனும், ஆதியு மந்தமுமில்லா முதல்வன் பிரமாணாதீதனாதலின் எவ்வாறு அளந்தறிதலென்பார் "மணலும் வானு மூராத வான்மீனு மனுவு மற்றை யுள்ளனவுமளந்திடலா மோகோவுன்னை, யாராலு மளப்பரிதேன்று" எனவும்; வேதாகமபுராண விதிகாச கலைஞானங்களாகிய சொல்லுலகமென்பார் "அனந்தவேதம்" எனவும்; வேதாகமாதி நூல்கள் முதல்வன் மெய்ப்புகழைக்கூறிக் கூறித்துதித்தும்,தொடர்ந்தும், கண்டளக்க முடியாமல் இளைத்தன வென்பார் "அறைந்திளைக்க" எனவும்; சுட்டியுணரப்படாத துரியாதீத நிலையின்கணுள்ள மஹாதேவனென்பார் "அதிதூரமாதந்தேவே" எனவும் கூறினர்.

"அண்டங்கள் பலவும் என்பது முதல்மற்றை யுள்ளனவும்" என்பதீறாகவுள்ள உம்மைகள்-எண்ணும்மைகள். ஆராலும்-இதில் உம்மை இழிவு சிறப்பு. மஹாதேவர் சிருட்டிப்பொருள்களையே யளந்தறிய முடியாதெனில் அவரையறிதல் எவ்வாறெனை வேதாகமங்கள் கூறி இளைத்ததென்பதனால் பதிஞானத்தாற் பரமனை யடைதல் கூடுமென்று கூறினாராயினர்.

'அண்டபிண்டபேதம் பலவென்பதற்கு"ப்பிரமாணம்:—

"விளையும் பரவிந்து தானே வியாபி
விளையுந் தனிமாயை மிக்கமா மாயை
இளையொன்று தேவர் கிளர்மனு வேத
மளவொன்றி லாவண்ட கோடிக ளாமே." (திருமந்திரம்.)

"அப்பரி சண்பத்து நான்குநூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கு
மப்பரி சேதென்று புகலு மனிதர்கள்
அப்பரி சேயிருண் மூடநின் றாரே." (திருமந்திரம்.)

"உடலா யுயிரா யுலகம தாகிக்
கடலாய்க் கார்முகி னீர்பொழி லானாய்
இடையா யுலப்பிலி யெங்குந்தா னாகி
யடையார் பெருவழி யண்ணனின் றானே." (திருமந்திரம்.)

"தரணி சலங்கனற் காற்றந்த வானம்
அரணிய பானு வருந்திங்க ளங்கி
முரணிய தாரகை முன்னிய வொன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே." (திருமந்திரம்.)

"ஆரா லுமளக்க வரியவன் மாதேவ"னென்பதற்குப்பிரமாணம்:—

"அகன்றார் வழிமுத லாதிப் பிரானு
மிவன்றா னெனநின் றெளியனு மல்லன்
சிவன்றான் பலபல சீவனு மாகு
மவன்றான் வரும்வழி காமறி யோமே." (திருமந்திரம்.)

"எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையு
மம்மான் றிருவருட் பெற்றவர்க் கல்லால்
இம்மா தவத்தி னியல்பறி யாரே." (திருமந்திரம்.)

"வேதங்களும் காணாமல் அதிதூரமானான்" என்பதற்குப்பிரமாணம்:—

"சொல்லது சொல்லிடிற் றூராதி தூரமே." (திருமந்திரம்.)

"இணைப்பரும் பெருமையி னீசன்காண்க.
அரியதி லரிய வரியோன் காண்க.
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க.
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க.
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க." (திருவாசகம்.)

"படியடி யடங்காக் கடிகமழ் தாமரைக்
கட்காண் கடவுளொ டத்துறை யமலனு
மெண்ணு வியல்பின னிறையென விரக்கும்
விண்ணோ ரண்ணலை வினவின் மண்முதன்
முப்பது முதலா மூவிரண் டோவா
வொப் பிறத்துவ மொருவிய திப்பியன்
ஒழிவற நிறைந்த வொருவன் புரைதீர்
வண்ண மில்லி, அமலன், கண்முதற்
புலனெறு புணரான், இணையிலி * *
* * * * * * * *
காட்சி முதலிய வளவையு மளவறச்
சேட்பட வகன்றனன் சிவனெனச்
சூட்சியி னிறைந்தோர் துணிந்தனர் செடிதே." (ஞானாமிர்தநூல்.)

எனப்பல பெரியோர்கள் கூறியவாற்றான் உண்மையுணர்க. (ருச)

55. கற்பங்கள் பலகோடி செல்லத்தீய கனலினடு வூசியின்மேற் காலையூன்றிப், பொற்பறமெய் யுணவின்றி யுறக்கமின்றிப் புலர்ந்தெலும்பு புலப்படவைம் பொறியையோம்பி, நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்தியோக நீண்முனிவர்க் கொளித்தமரர்க் கொளித்துமேலாஞ், சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்து ஞானத் திருவாள ருட்கலந்த தேவதேவே.

(பதவுரை.) கற்பங்கள் - தேவகற்பங்கள், பலகோடி - அனேககோடி, செல்ல - கழியாநிற்ப, தீய - கொடிய, கனல் இன் நடு - அக்கினியின் மத்தியிலே, ஊசியின்மேல் - இரும்பு ஊசியின்மீது, கால் ஐ ஊன்றி - அடிகளையூன்றி, மெய் பொற்பு அற - உடலின் அழகு நீங்க, உணவு இன்றி - ஆகாரங்கொள்ளாமலும், உறக்கம் இன்றி - நித்திரை செய்யாமலும், புலர்ந்து - வாடி, எலும்பு - எலும்புகள், புலப்பட - கண்ணிற்றோன்ற, ஐம்பொறி ஐ - ஐவகை ஞானேந்திரியங்களையும், ஓம்பி - தமக்குரிய சத்தமாதி விஷயங்களின்மேற் செல்லாமற் காத்து, நிற்பவர் உகு - தவநெறியினிற்கின்றவர்க்கு, ஒளித்து - கரந்தும், மறைக்கு - வேதங்களுக்கு, ஒளித்து - கரந்தும், யோகம் - யோகமார்க்கத்திற்பழகிய, நீள் - நெடுங்காலம் ஆயுளைப்பெருக்கிக் கொண்ட, முனிவர்க்கு - முனிவர்களுக்கு, ஒளித்து - கரந்தும், அமரர்க்கு - தேவர்களுக்கு, ஒளித்து - கரந்தும், மேல்ஆம் - உயர்வுடைத்தாகிய, சித்பதம் அத்து இல் - சித் எனப்படும் பதத்தினுள், சித்மயம் ஆய் - அர்த்தமாகிய ஞானமயமாகி, நிறைந்து - நிரம்பி, ஞானம் திருஆளர் உள் - ஞானமாகிய செல்வத்தையாளும் பெரியோர்களுள்ளத்திலே, கலந்த - புணர்ந்த, தேவர் தே எ - தேவர்கணங்களுக்கெல்லாம் அதிபனாகிய மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) காலங்கடந்த கடவுளைக்காண்டல்வேண்டுமெனவும், அதன்பொருட்டே இம்மானிடயாக்கை கொடுக்கப்பட்டதெனவும், அந்நெறியில் அதனைச்செலுத்தியடையவேண்டிய பயனை யடையாக்காற் சனனமரணத்துன்பம் ஒழியாதெனவும் கருதித் தமது சற்கருமமாகிய தவஞ்செய்தலை மேற்கொண்டு முயலுங்கால் முனிவோர் தமது வாழ்நாள் நீடிக்கப்பெறுவதேயன்றிப் பலகோடி கற்பங்கள் கணக்கின்றிக் கழிவதைக் காண்கின்றாரென்பார் "கற்பங்கள்பலகோடி செல்ல"எனவும்; கடுமையாகிய மாதவம் என்பது தோன்றத் "தீய கனனடுவில்" எனவும்; மனோலயமடையத் தமது கரணங்களை யசைவற நிறுத்தவேண்டுமென்பார் "ஊசியின்மேற் காலையூன்றி" எனவும்; செயற்கரிய கருமசித்தியை விரும்பி நித்திரையையும் பசியையு மொழித்தன ரென்பார் "பொற்பறமெய்யுணவின்றியுறக்கமின்றி" எனவும்; பிண்டஞ் சுருங்கிப் பிராணனிலைபமொதலால் சத்த தாதுக்களும் வற்றிய நிலைபெற்றதென்பார் "புலர்ந்தேலும்பு புலப்பட" எனவும்; அறிவென்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய மத்த கஜங்கள் ஐந்தையும் விஷயங்கண்மேற் செல்லாவகை தடுப்பவரென்பார் "ஐம்பொறியை யோம்பி" எனவும்; வைராக்கியத்திலே முதிர்ந்து நெறியிற்றிறம்பாத மகாதீரரென்பார் "நிற்பவருந்த" எனவும் கூறினார்.

"கடுந்தவர்களுக்கும், வேதங்களுக்கும், யோகசாத்தியர்களாகிய முனிவர்களுக்கும் தேவருக்கும் ஒளித்து" என்றதனால், தற்போதவொழிவு அன்னோர்கட்கு உண்டாகாமையும், "ஞானத்திருவாளருட்கலந்தருதேவ தேவே" என்றதனால் இன்னோர் தற்போத மாய்ந்தவரென்பதும் பெற்றாம்.

"தவஞ்செய்யும் மாதவ யோகியர்க்குந் தேவர் முதலாயினோர்க்கும் யாமன் ஒளித்துளன்"என்பதற்குப்பிரமாணம்:—

"ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
யருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டேபயிலொறு மின்றே பயிலொறும்
ஒளிக்குஞ் சோரன்." (திருவாசகம்.)

"அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம்." (திருவாசகம்.)

"முத்திக் குழன்று முனிவர்குழா ஙனிவாட
அத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு." (திருவாசகம்.)

"ஆணோ வலியோ வரிவையோ வென்றிருவர்
காணக் கடவுள்." (திருவாசகம்.)

"கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையன் பசும்பொன் னிறத்தன்
அருந்தவர்க் கல்லா லணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே." (திருமந்திரம்.)

"வினை வறியார் பண்டைமெய்த் தவஞ்செய்வார்." (திருமந்திரம்.)

"நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே." (திருமந்திரம்.)

"சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே." (திருமந்திரம்.)

"ஞானத்திருவாளருட்கலந்தவன்" என்பதற்குப்பிரமாணம்:—

"தத்துவ ஞானந் தலைப்பட்ட வர்கட்கே
தத்துவ ஞானந் தலைப்பட லாய்நிற்குந்
தத்துவ ஞானத்துத் தானவ னாகவே
தத்துவ ஞானாநந் தந்தான் றடங்குமே." (திருமந்திரம்.)

"முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகிலரி யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி றொறுமெழுந் தருளிய பரனே." (திருவாசகம்.)

"செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
யந்தண னாவதுங் காட்டிவந் தாண்டா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே." (திருவாசகம்.)

"ஊனாகி யுயிராகி யதனு ணின்ற
உணர்வாகிப் பிறவனைத்து நீயா நின்றாய்
நானேது மறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றியூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. (தேவாரம்.)

எனப் பேரறிவாளர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (ருரு)

**56.** மட்டகன்ற நெடுங்கால் மனத்தால் வாக்கான் மதித்திடினும் புலம்பிடினும் வாராதென்றே, கட்டகன்ற மெய்யறிவோர் கரணநீக்கிக்கலையகற்றிக் கருவியெலாங் கழற்றிமாயை, விட்டகன்று கருமமல போதம்யாவும் விடுத்தொழித்துச் சகசமல வீக்கநீக்கிச், சுட்டகன்று நிற்கவவர் தம்மைமுற்றுஞ் சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத்தேவே.

(பதவுரை.) மட்டு அகன்ற - அளவுகடந்த, நெடு காலம்- நீண்டகாலம், மனத்தால் - நெஞ்சினால், மதித்திடினும் - வரையறுத்தபோதிலும், வாக்கால்-வாக்கினாலே, புலம்பிடினும் - இரங்கிக் கதறியபோதிலும், வாராது என்று எ - எதிர்ப்படமாட்டாதென்று, கட்டு அகன்ற - பந்த நீங்கிய, மெய் அறிவோர் - மெய்யுணர்வுடையோர், கரணம் - அந்தக்கரணவிருத்தியை, நீக்கி - அகற்றி, கலை - பஞ்சகலைகளையும், அகற்றி - கைவிட்டு, கருவி எலாம்- தத்துவங்களையெல்லாம், கழற்றி-நிராகரித்து, மாயை - மாயாமலத்தை, விட்டு அகன்று - ஒழித்து நீங்கி, கருமம் மலம் கரும மலத்தாலுண்டாகின்ற, போதம் யாவும்-விடையஞானம் முழுதும், விடுத்து ஒழித்து - பற்றற விலக்கி, சகசமலம் - அனாதிதொட்டு உடன் தோன்றிய ஆணவமலத்தினது, வீக்கம் - தடிப்பை, நீக்கி - விலக்கி, சுட்டு-முன்னிலைச்சுட்டுகள், அகன்று நிற்க-நீங்கி நிற்க, அவர் தம்மை - அந்தப்பெரியோரை, முற்றும்-முழுதும், சூழ்ந்து-வியாபித்து, கலந்திடும்-புணர்கின்ற, சிவம் எ-சர்வமங்களாகார சுத்த சிவமே, துரியம் - துரியநிலையின்கணுள்ள, தே எ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) மனம் வாக்கு நசித்த விடத்தே தோன்றுவதென்பார் "மட்டகன்ற நெடுங்கால் மனத்தால் வாக்கான் மதித்திடினும் புலம்பிடினும் வாராதென்றே" எனவும்; பந்தமற்ற மெய்யுணர்வு கைவந்தோர் என்பார் "கட்டகன்ற

மேய்யுணர்வோர்" எனவும்; மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய உட்கரண விருத்தி தொலைத்தவரென்பார் "கரணநீக்கி" எனவும்; நிவிர்த்திகலை முதலிய பஞ்ச கலைகளையும் அல்லது அபரஞானக்கலைகளையு மறுத்தென்பார் "கலையகற்றி" எனவும்; கலைகளை அகற்றிய அந்நெறியின்கண்ணே அவற்றுள் வைக்கப்பட்ட தத்துவங்களும் அகன்று நிற்பனவென்பார் "கருவியெலாங்கழற்றி" எனவும்; இவை யனைத்தும் ஒடுங்கவே இவற்றிற்காதாரமாய் நின்ற மாயாமலமொழிவதென்பார் "மாயை விட்டகன்று" எனவும்; மாயாதநுவிலிருக்கப்பெற்றும், அதனுன் மயங்குதலற்றுப் பற்றறுதியொடு நிற்கப்பெற்ற வக்கணமே கருமங்களைச்செய்தலும் அச்செயல்களுக் கனுகுணமாகிய சீவபோதமுமொழிவனவென்பார் "கருமமலபோதம் யாவும் விடுத்தொழித்து" எனவும்; காரணகாரியங்களாகிய இவை ஒன்றன்பின் னொன்று யொழிய இவையனைத்துக்கு மூலகாரண மலமாகிய் ஆணவமலத்தையும்அதன்மோக ரூபவிருத்திகளான வீக்கத்தையும் ஒழித்தவரென்பார் "சகசமல வீக்கநீக்கி" எனவும்; சங்கற்ப விகற்பங்களுக்கேதுவாகிய இம்மலங்கள் மூன்று நீங்கிய விடத்தே பெறப்படுவதுமுன்னிலையற்றநிருவிகற்ப சமாதியென்பார் "சுட்டகன்றுநீங்க" எனவும்; சுட்டகன்று நிற்கும் பெரியோரை முழுவதும் வியாபித்துக் கலந்து தானாக்கி அத்துவிதானந்தத்தை யளிக்கவல்ல பதியென்பார் "அவர்தம்மை முற்றுஞ்சூழ்ந்து கலந்திடுஞ்சிவமே" எனவும்; அது தொடர்தற்கியையு நிலைக்கண்ணதென்பார் "துரியத்தேவே" எனவுங் கூறினர்.

"மனவாக்குகள் இறந்தவர்க்கே வெளிப்படுவான் இறைவன்" என்பதற்குப் பிரமாணம்:—

"வைத்தனன் றனக்கே தலையுமென்னாவு நெஞ்சமும் வஞ்சமொன்றின்றி
யுய்த்தனன் றனக்கே திருவடிக்கடிமை யுரைத்தக்கா லுவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத்தோடு பாச்சிலாச் சிராமத்தெம்பரமர்
பித்தரே யொத்தோர் நச்சிலராகி லிவரலாதில்லையோ பிரானர். (தேவாரம்.)

"சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க." (திருவாசகம்.)
"சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க." (திருவாசகம்.)

"வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்." (திருவாசகம்.)

"ஏதவனூ ரேதவன்பே ராருற்ற ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசு." (திருவாசகம்.)

"ஒருபூ தருமறியாத் தனிவீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டிலிராமலென்ற னிருகோட் டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாசமிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்ரேசுர குலாந்தகனே." (கந்தரலங்காரம்.)

"கரண நீக்குதல் சிவத்தைப்பெறுதற்குவழி"யென்பதற்குப்பிரமாணம்:—

"அந்தக் கரண மடக்கத் துறப்பதுவே
யெந்தத் துறவினுநன் றெந்தாய் பராபரமே." (தாயுமானவர்.)

"கலை ஞான மகற்றி" யென்பதற்குப்பிரமாணம்:—

"சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றைறயொக்கு
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே." (தாயுமானவர்.)

"வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்சொற்ற
புரையற்ற வேலவன் போதித்த வாபஞ்ச பூதமுமற்

றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக் [ரம்.)
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே." (கந்தரலங்கா

"கருவியெலாங் கழற்றி"யென்பதற்குப்பிரமாணம்:—

"எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவர்கோட் பாடுடைய
வத்தனையுஞ் சென்றங் களவாதே சித்தமெனும்
தூதுவனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதியைக்கும் பிடலாம் பார்." (திருக்களிற்றுப்படியார்.)

"மாயைகருமம் ஆணவம்என்னுமும்மலங்களையுநீக்குத" லென்பதற்குப்பிரமாணம்:-

"வித்தினைத்தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென்றுந் தீபற
பெறுவதங் கென் பெனே யுந்தீபற (திருவுந்தியார்.)

"ஆறாறு மாறதி லையைந் தவத்தையே
யீறு மதீதத் துரியத் திவனெய்தப்
பேறான வைவரும் போம் பிரகாசத்து
நீறார் பரஞ்சில மாதேய மாகுமே." (திருமந்திரம்.)

"ஆணவ மாகு மதீதமென் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்திப் பொய்க்காமியம்
பேணுங் கனவுமா மாயை திரோதாயி
காணு நனவின் மலக்கலப் பாகுமே." (திருமந்திரம்.)

"சென்றநெறி யெல்லாஞ் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற
நீசெயல் செய்யாதே யுந்தீபற." (திருவுந்தியார்.)

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயை யென்றுந்தீபற." (திருவுந்தியார்.)

"சொல்லு மிடமன்று சொல்லப்புகுமிட
மெல்லை சிவனுக் கென்றுந்தீபற
வென்றானு மென்செய்கோ முந்தீபற." (திருவுந்தியார்.)

"சுட்டகன்றவரைச் சூழ்ந்து கலந்திடுஞ் சிவம்" என்பதற்குப்பிரமாணம்:—

"தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழியே சென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே." (திருமந்திரம்.)

"தானென் றவனென் றிரண்டென்பார் தத்துவம்
தானென் றவனென் றிரண்டற்ற தன்மையை
தானென் றிரண்டுன்னார் கேவலத் தானவர்
தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே." (திருமந்திரம்.)

"அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த வன்பாற்
குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடியவைவர்
பராக்கறல் வேண்டு மனமும் பதைப்பறல் வேண்டுமென்று
விராப்பக லற்றவிடத்தே யிருக்கை யெளிதல்லவே."
(கந்தரலங்காரம்.)

எனப்பெரியோர் பலர்கூறியவாற்றான் உண்மையுணர்க. (௧௬)

**57.** உருநான்கு மருநான்கு நடுவேநின்ற வுருவருவ மொன்றுமிவை யுடன் மேலுற்ற, வொருநான்கு மிவைகடந்த வொன்றுமா யவ்வொன்றினடுவாய் நடுவுள் ளொன்ருய்நின்றே, யிருநான்கு மமைந்தவரை நான்கினோடு மெண்ணான்கின் மேலிருத்து மிறையேமாயைக், கருநான்கும் பொருணான்குங் காட்டுமுக்கட் கடவுளே கடவுளர்கள் கருதுந்தேவே.

(பதவுரை.) உரு நான்கு உம் - பிரமன் முதலாகிய உருவம் நான்கும், அரு நான்கு உம் - விந்து முதலாகிய அருவம் நான்கும், நடு ஏ நின்ற - மத்தியினிலை பெற்றுள்ள, உரு அருவம் ஒன்று உம் - சகள நிட்கள மொன்றும், இவை உடன் - இவற்றினோடு, மேல் உற்ற - மேலாகப்பொருந்திய, ஒரு நான்கு உம் - பரவிந்து முதலிய நான்கு நிலைகளும், இவை கடந்த ஒன்று உம் - இவற்றிற்கப்பாலுள்ள அருணிலையும், ஆய் - ஆகி, அ ஒன்று இன் நடு ஆய் - அந்த அருணிலையின் மத்தியாகி, நடு உள் ஒன்று ஆய் - அந்த அருணிலை மத்தியினுள்ளோங்கும் அருட்பெருஞ்சோதியாகி நின்று ஏ - நிலைபெற்று விளங்கி, இருநான்கு உம் - எட்டுக்குணங்களும், அமைந்தவர் ஐ - பொருந்திய நல்லவர்களை, நான்கு இன் ஒடு உம் - நாலுடனும், எண் நான்கு இன் மேல் - முப்பத்திரண்டு தத்துவங்களுக்கப்பால் (அதாவது முப்பத்தாறு தத்துவங்களுக்கப்பால்) இருத்தும் - வைக்கின்ற, இறை ஏ - தலைவனே, மாயை - மாயையினின்றுன்றுகிற, கரு நான்கு உம் - நால்வகை யோனிக்கருவும், பொருள் நான்கு உம் - தனுமுதலாகிய பொருள் நான்கும், காட்டும் - (உயிர்கட்கு) வெளியாக்கித் தருகின்ற, மு கண் - திரிநேத்திரமுடைய, கடவுள் ஏ - பகவனே, கடவுளர்கள் - தேவகணத்தோர், கருதும் - தியானிக்கின்ற, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) பிரமன் விண்டு உருத்திரன் மகேசன் ஆகிய நான்கு மூர்த்தங்கள், சிருட்டி திதி சங்கார திரோபவ கிருத்தியங்களைச் செய்யத் தோற்றுவித்துப் புவனங்களை நடாத்தும் சிவபெருமானது நவபேத வடிவங்களுள் முன்புள்ள சகளங்களென்பார் "உருநான்கும்" என்றும்; பின்னுள்ள சத்தி சிவம் விந்து நாதங்களென்பார் "அருநான்கு" என்றும்; இவ்விருநான்கும் முன்னும் பின்னும் மருவிநிற்க நடுவே நின்று ஞானுனுக்கிரக கிருத்தியத்தை யாவர்க்கும் செய்து, அவரவர் பாவாகார மூர்த்தியாகி விளங்கும் சதாசிவக்கடவுளென்பார் "நடுவேநின்ற வருவுருவம்" என்றும், இவற்றின் மேனிலையாகவுள்ள திக்கிராந்தம், அதிக்கிராந்தம், பரவிந்து, பரநாதம் என்பார் "இவையுடன்மேலுற்ற வொருநான்கும்" என்றும்; இவற்றின்மேல் விளங்குநிலை திருவருணிலையென்பார் "இவைகடந்தவொன்றுமா" யென்றும்; திருவருள் ஒளியின் நடுவும் அந்நடுவுள்ளோங்குபேரொளியுமாகியதென்பார் "அவ்வொன்றி னடுவாய் நடுவுள்ளொன்றாய் நின்றே"யென்றும் கூறினர்.

இருநான்கும் அமைந்தவர் - ஐயப்படாதமெய்யுணர்வும், விருப்பு வெறுப்பின்மையும், மயக்கமின்மையும், பழிநீக்கமும், அழிந்தோரை நிலைநிறுத்தலும், அறநெறியை விளக்கலும், பேரன்புடைமையுமாகிய எண்வகை அறத்துறுப்புகள் வாய்ந்தோர் என்க. அன்றியும் தன்வயத்தனுதல் முதலாகிய எண்வகைக் குணங்கள் நிறையப்பெற்றோரென்னினும் பொருந்தும். நான்கும் எண்ணான்கும் என்பது பிருதிவிமுதல் நாதம் ஈருகவுள்ள முப்பத்தாறு தத்துவநிலைகளாம். மாயைக்கரு நான்கு - அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பனவாம். பொருணான்காவன:— தநு, கரணம், புவனம், போகம் என்பன.

"உருநான்கு, அருநான்கு, உரு வருவநான்கு" என்பதற்குப்பிரமாணம்:—

"வேதா நெடுமா லுருத்திரன்மே லீசன்
மீதான வைம்முகன் விந்துவு நாதமும்

மாதாக சத்தியு மந்தச் சிவனெடுஞ்
சாதா ரணமாகுஞ் சதாசிவந் தானே." (திருமந்திரம்.)

"நவநிலைகளில் விந்து, நாதம், அபரவிந்து, அபரநாதம் என நான்கும், பரவிந்து, பரநாதம், திக்கிராந்தம், அதிக்கிராந்தம் என நான்கும்திருவருணிலை"என்பதற்குப் பிரமாணம்:—

"விந்துவு நாதமும் விரிபரா பரங்களும்
தந்ததிக் கிராந்தமுஞ் சாரதிக் கிராந்தமுஞ்
சிந்தைசெய் திடவரு திருவரு ணிலையுடன்
நந்தறு நவநிலை ஞானிக ளோர்வரே." (ஞானதரிசனம்..)

"எண்குண மமைந்தவர்" என்பதற்குப்பிரமாணம்:—

"கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத்தலை." (திருக்குறள்.)

"குணமென்னுங் குன்றேறிநின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது." (திருக்குறள்.)

"தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றனேவந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாகக் கொள்ளோமெண் குணத்துள்ளோமே."
(தேவாரம்.)

"முப்பத்தாறு தத்துவங்கள்" இவை யென்பதற்குப்பிரமாணம்:—

"இந்நிலையி லைந்துசுத்த மேழ்சுத்தா சுத்தம்
எண்மூன்று மசுத்தமெனு மிவைமுப்பத் தாறு
மன்னியதத் துவங்களிடை மயங்கநெடுந் துயர்தா
மருவுமுரு நிலையழிய வரும்பொழுது வரியார்
பன்னகமண் டசங்கனவு படர்வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பாவியருக் குமமாந்
தன்னுருவி னணைந்துபய னருந்தியா னருளாற்
றரையினிடை வருமென்று சாற்று நூலே." (சிவப்பிரகாசம்.)

"அறுநான் கசுத்த மதிசுத்தா சுத்த
முறுமேழு மாயையுட னைந்தே சுத்தம்
பெறுமா றிவைமூன்றுங் கண்டத்தாற் பேதித்
துறுமாயை மாமாயை யான்மாவி னோடே." (திருமந்திரம்.)

'யாயைக்கருநான்கு" என்பதற்குப் பிரமாணம்:—

"அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயுசங்கள்
எண்டருநா லெண்பத்து நான்குநூ றாயிரங்கள்."
(சிவஞானசித்தியார்.)

"உருவாதி சதுர்விதமா யொன்றொன் றுவ்வா
வுண்மையதாய் நித்தமா யொன்று யென்று
மருவாகிக் கன்மாந்த மணுக்களியார்க்கும்
ஆவாரமாய சித்தாய்." (சிவப்பிரகாசம்.)

"ஆதியோதிய மேதகு மாயை
கோதின்றேக நாசமதனையா
தளவில் வலியுற் — றுலகவை புரக்கும்

யோனி யெங்கணுந் தானினி தமரும்
கருமத் ததிகா ரார்தத் தளவும்
விதிமுறை கொடுக்கும் வியப்பிற் றஃதறி." (ஞானாமிர்தம்.)

எனப்பேரறிவாளர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (இ-ள)

**58.** பாங்குளநாந் தெரிதுமெனத் துணிந்துகோடிப் பழமறைக டனித் தனியே பாடிப்பாடி யீங்குளதென் றாங்குளதென் றோடியோடி யிளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந்தோறும் வாங்குபர வெளிமுழுது நீண்டுநீண்டு மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியேயெங்குந், தேங்குபர மானந்தவெள்ளமே சச்சிதானந்த வருட்சிவமே தேவதேவே.

(பதவுரை.) பாங்கு - பக்கத்தில், உள - இருக்கின்ற, நாம் - யாம், தெரிதும் - அறிவோம், என - என்று, துணிந்து - துணிவுகொண்டு, கோடி - கோடித்தொகையையுடைய, பழ மறைகள் - பழமையாகிய வேதங்கள், தனி தனி ஏ - ஒவ்வொன்றாக, பாடி பாடி - (இறைவன் மெய்ப்புகழ்க்கீதங்களைப்) பலகாற்பாடியும், ஈங்கு உளது என்று - இந்நிலையின்கண் உள்ளதென்றும், ஆங்கு உளது என்று - அந்நிலையின்கணுள்ளதென்றும், ஓடி ஓடி - பலகால் ஓடியும், இளைத்து இளைத்து - பலகால் வலிவு குன்றியும், தொடர்ந்து தொடர்ந்து - பலகாற் பின்பற்றியும் (இடைவிடாது), எட்டும் தோறும் - அணுகுந்தோறும், வாங்கு-எங்கும் சூழ்ந்துள்ள, பரம் வெளி முழுது உம் - பராகாசமுழுதும், நீண்டு நீண்டு - (அவ்வேதங்களறிதற்குக் கூடாதவண்ணம்) அதிதூரப்பொருளாக நிமிர்ந்து நிமிர்ந்து, மறைந்து மறைந்து - தன்றிருமேனி தோன்றுமற் பலகான் மறைந்து, ஒளிக்கின்ற- காக்கின்ற, மணி ஏ- தேவசிந்தாமணியே, எங்கும் - எவ்வுலகிலும், தேங்கு - நிறைந்த, பரம் ஆனந்தம் வெள்ளம் ஏ - மேலாகிய ஆனந்தப்பிரவாகமே, சத் சித் ஆனந்தம் - சத்தும் சித்தும் ஆனந்தமுமாகிய, அருள் சிவம் ஏ - காருணியமுடைய சிவமே, தேவர் தே ஏ - தேவர்களுக்கு அதிபனாகிய மஹாதேவனே. எ- று.

(விசேஷ உரை.) சொல்லும் பொருளுமாகிய இருவகைப்பிரபஞ்சங்களுள் சொற்பிரபஞ்சத்தின் முதன்மையடைந்து நிற்பனவும் பொருட்பிரபஞ்சத்தின் ஒழுக்கங்கட்டும் வழக்குகட்டும் பிரமாணங்களாகிய வேதங்களாகலினாலும், அவற்றினுட் புகலப்படும் மந்திரசொரூபியாகிய முதல்வன் இருத்தலானும், அவை அபரஞானத்தின் அடிநடுமுடிகளாகக்குலவியடுத்துள்ளனவாகலானும்,பரஞானத்துக்குச்சாதனமாகலானும்,இக்காரணங்களால் இறைவனை யாம் அறிதுமெனத்துணிந்து பாடினவாமென்பார் "பாங்குளநாந்தெரிதுமெனத்துணிந்துகோடிப்பழமறைகடனித்தனியேபாடிப்பாடி"எனவும்; இங்குள்ளது பரசிவம்அங்குள்ளதெனத்தேடியோடுதலால் வருந்திமெலிந்து கிட்டுந்தோறும் அவற்றின் சுட்டறிவுக்கெட்டாமல் நீண்டு பரவெளியிற்காத்து நிற்பவனென்பார் "ஈங்குளதென் றாங்குளதென் றோடியோடியிளைத்திளைத்துந் தொடர்ந்து தொடர்ந்தெட்டுந்தோறும், வாங்குபரவெளிமுழுது நீண்டுநீண்டு மறைந்துமறைந்தொளிக்கின்றமணியே" எனவுங் கூறினர்.

எங்கும் என்பது எழுவகைப்பிறவியுற்ற சராசரப்பொருள்களின் அகம்,புறம், அகப்புறம், புறப்புறம் என்னும் இடங்களையும் பத்துத்திசைகளையும், ஆங்காங்குள்ள உலகங்களையும், தத்துவங்களையும், சமயநெறிகள் பலவற்றையும் நோக்கியதென்க.

" தேங்குபரமானந்தவெள்ளமே" என வியந்ததனால், ஏனையபதமுத்தியின்பங்களனைத்தும் அசாசுவத வின்பங்களாய் வியக்கற்பாலன வல்லவென்பது பெற்றாம். "பழமறைகள் நாம் தெரிதுமெனத்துணிந்து, பாடிப்பாடி,யோடி

யோடி, யிளைத்திளைத்து, தொடர்ந்துதொடர்ந் தெட்டுந்தோறு நீண்டுநீண்டு மறைந்து மறைந்தொளிக்கின்ற மணியே" யென்றதனால் அஃது அபரஞானத்திற் புலப்படாமல், பரஞானத்துள் விளங்கும் தேவசிந்தாமணியென அதன் பெருமையை விரித்துரைத்தவாறாயிற்று.

"அபரஞானமாகிய வேதங்கள் பரஞான சாதனமாகிய பாங்குகள் கொண்டன" வென்பதற்குப்பிரமாணம்:—

> "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கியஞானம்
> உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்."

(பெரியபுராணம்.)

"தற்போத நீங்காமல்தேடும் அபக்குவ அபரஞானத்தோர் முதல்வனையடையா" ரென்பதற்குப்பிரமாணம்:—

> "விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
> கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
> எண்ணினைச் சென்றணு காமலெனப்படும்
> அண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே."  (திருமந்திரம்.)

"மறைகள் பரமனைத்தேடின வென்பதற்குப்பிரமாணம்:—

> "கண்டுகண் டுள்ளே கருத்துற வோங்கிடிற்
> கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
> பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
> யின்றுகண் டிங்கே யிருக்கலு மாமே."  (திருமந்திரம்.)

"மறைந்தொளிக்கின்ற மணி" யென்பதற்குப்பிரமாணம்:—

> "விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
> உறவு கோனட் டுணர்வுக் கயிற்றினுன்
> முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."  (தேவாரம்.)

"பழ மறை பாடி யோடி யெட்டுந்தோறும் பரமன் மறைந்தொளித்த பரவெளி" என்பதற்குப்பிரமாணம்:—

> "விதறு படா வண்ணம் வேறிருந் தாய்ந்து
> பதறு படாதே பழமறை பார்த்துக்
> கதறிய பாழைக் கடந்தந்தக் கற்பனை
> யுதறிய பாழி லொடுங்குகின் றேனே."  (திருமந்திரம்.)

"எங்குந் தேங்குபர மானந்தவெள்ள" மென்பதற்குப்பிரமாணம்:—

> "சத்தி வடிவு சகலவா னந்தமு
> மொத்த வானந்த முமையவன் மேனியாஞ்
> சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்
> டொத்தவா னந்த மொருநடமாமே."  (திருமந்திரம்.)

> "அல்லிக் கமலத் தயனு மாலு
> மல்லா தவரு மமரர் கோனுஞ்
> சொல்லிப் பரவு நாமத் தானைச்
> சொல்லும் பொருளு மிறந்த சுடரை

செல்விக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல்லோ வென்
பொல்லா மணியைப் புணர்ந்தே." (திருவாசகம்.)

என அறிஞர்கள் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (௫௮)

**59.** எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகருள்ளத் தியலறிவார் தருவினிலன் பெனுமோருச்சி, பழுத்தளிந்து மவுனநறுஞ் சுவைமேற்பொங்கிப் பதம்பொருந்த வனுபவிக்கும் பழமேமாயைக், கழுத்தரிந்து கருமமலத் தலையைவீசுங் கடுந் தொழிலோர் தமக்கேநற் கருணைகாட்டி, விழுத்துணையா யமர்ந்தருளும் பொருளே மோன வெளியினிறை யானந்த விளைவாந்தேவே.

(பதவுரை.) எழுத்து அறிந்து - (ஒடுங்குதற்குரிய) ஓர் எழுத்தைத் தெரிந்து, தம் ஐ - தமது ஆன்ம நிலையை, உணர்ந்த-தெரிந்த, யோகர் - சிவயோகியருடைய, உள்ளம் அத்து - மனமாகிய பூமியிலே, இயல் - பொருந்திய, அறிவு ஆம் - விவேக மாகிய, தரு இன் இல்-விருக்கத்தில், அன்பு எனும் - அன்பு அல்லது தயவெனப் பட்ட, ஓர் உச்சி-ஒரு உச்சிக்கிளையிலே, பழுத்து-பழுத்து, அளிந்து - மிகக்கனிந்து, மௌனம் நறு சுவை-மவுனமாகிய நல்ல விரசம், மேல்பொங்கி-வெளியிற்பொங்கி, பதம் பொருந்த - பக்குவமமைந்திருக்க, அனுபவிக்கும் - அனுபவிக்கப்பட்ட, பழம் ஏ - பழத்தையொப்பவனே, மாயை-மாயையினது, கழுத்து அரிந்து-கண்டத்தைக் கொய்து, கருமம் மலம்-காமியமலத்தினது, தலையை-சிரத்தை, வீசும் - அறுக்கும், கடு தொழிலோர்-கடுமையாகிய கொலைத்தொழிலைச் செய்வோர், தமக்கு ஏ - தங்களுக்கே, நல் - நல்ல, கருணை - காருணியத்தை, காட்டி - வழங்கி, விழு துணை ஆய் - சிறந்த துணையாகி, அமர்ந்து அருளும்-பொருந்தியருள்கின்ற, பொருள் ஏ - வத்துவே, மோனம் வெளி இல் - மவுனமாகிய வெளியிலே, நிறை - நிறைந்த, ஆனந்தம் விளைவு ஆம்-ஆனந்தபோகமாகிய, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) இரேசக பூரக கும்பகஞ் செய்யுஞ்சாதனத்திற்கனுகூல மானதும், கருவிகளொடுங்குதற்கேதுவானதும், மனோலயம் வாய்ப்பதற்கும் மவுன நிலை கூடுதற்கும் வாயு புறத்தே செல்லாமற் சுழிமுனை நாடியுட்சென்று சஞ்சரித்து நிலவுதற்கும் துணையாவதுமான எழுத்தை யறிதல் யோகிகளுக்கு முற்பட்ட கடமை யாதலின் "எழுந்தறிந்து தமையுணர்ந்தயோகர்" என்றார். அறிவார்தரு-ஞானவிருக்கம். இஃது ஞான யோகநிலை. ஞானத்வைதத்தருவாக வுருவகஞ்செய்து அதற்கேற்ப அத்தருவின் உச்சிக்கிளையை அன்பென்றனர். உச்சி-ஆகுபெயர். அன்பாம் உச்சிக்கிளையிற் பழுத்துக்கனிவுடையதாகி மௌனச்சுவை யதிகரிக்க யோகர் அனுபவிக்கும்பழமே எனச்சிவத்தை வியந்தனர். என்னை? சிவம் அன்பின்பயனாக இருத்தலின் என்க. பழம் - உவமையாகுபெயர். மாயையின் கழுத்தை யறிதலும், கரும மலத்தின் தலையைக்கொய்தலுமாகிய கொலைத்தொழிலாளர்க்கே நற்கருணை காட்டுதல் கருணைக்கடலாகிய சிவபிரானுக்குப் பொருந்துமோ வென்பார் வினா வினைக்கழிய, தமக்குப்பெரும்பகையும், கடத்தற்கரும் பெருந்தடையுமாய் ஆன்ம சிற்சத்தியையும், ஞானத்தையும், தம்மையும் மறைத்த மலங்களைக்கொன்றவர்க்கே "கருணைகாட்டி" யென்றனர். ஏகாரம்-தேற்றமும் பிரிநிலையுமாம். அவர்க்குக் கருணை காட்டுதலோடு சிறந்த துணையுமாயமர்ந்த பொருள் என்றதனால் மல நாசஞ்செய்யுமவர்க்கன்றி யேனையோர்க்குச்சிவப்பிரசாதம் எய்தற்கரிய தென்பது பெற்றும். சும்மாவிருக்கிற் சுகம் விளையுமென்ற பெரியோர் வாக்கை அனுபவித்தறிந்து "மோனவெளியினிறை யானந்தவிளைவாந்தேவே." என்றனர்.

"எழுத்தறிந்த யோகர்" என்பதற்குப் பிரமாணம் :—

"அங்கமு மாகம வேதம தோதினு
மெங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த வருங்கல மாமே." (திருமந்திரம்.)

"பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறி வாரில்லை
யெழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே." (திருமந்திரம்.)

"சத்தியு நானுஞ் சயம்புவு மல்லது
முத்தியை யாரு முதலறி வாரில்லை
யத்திமேல் வித்திடி லத்தி யழுந்தக்கான்
மத்திய லேறும் வழியது வாமே." (திருமந்திரம்.)

"ஊமை யெழுத்தொடு பேசு மெழுத்துறி
லாமை யகத்தினி லஞ்சு மடங்கிடு
மோமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே." (திருமந்திரம்.)

"தம்மையுணர்ந்த யோகர்" என்பதற்குப் பிரமாணம்:—

"நடவித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடவித்த வாணிக் கிருவிர லுள்ளே
கடவித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தார்களே." (திருமந்திரம்.)

"ஞானத்தருவில் அன்பாகிய வுச்சியிற் பழுத்த பழம்" என்பதற்குப் பிரமாணம்:—

"நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே." (திருமந்திரம்.)

"வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசுணை பூத்தது
தொழுதுகொண் டோடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே." (திருமந்திரம்.)

"மாயாமல கன்மமலங்களைக் கொய்தவர் யோகிகள்" என்பதற்குப் பிரமாணம்:—

"பிரிந்தேன் பிரமன் பிணித்ததொர் பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
அரிந்தேன் வல்வினை யயின்மன வாளான்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே." (திருமந்திரம்.)

"நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்
சிவன்வரி னானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராமே." (திருமந்திரம்.)

"சித்தஞ் சிவமாய் மலமூன்று முஞ் செற்றவர்
சுத்த சிவமாவர் தோயார் மலபந்தம்
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணார்
சுத்தம் பரவிந்து தானுமென் றெண்ணியே." (திருமந்திரம்.)

"மோன வெளியினிறை யானந்தவிளை" யென்பதற்குப் பிரமாணம்:—

"ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ரானந்தத்தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளியவிளக்கிய வாமுகமாறுடைத் தேசிகனே."(கந்தரலங்காரம்.)

எனப்பல அறிஞர்கள் கூறியவாற்றான் உண்மை யுணர்க. (ருகூ)

60. உருத்திரர்நாரணர் பிரமர்விண்ணோர் வேந்தருறுகருடர் காந்தருவ ரியக்கர்பூதர், மருத்துவர்யோகியர் சித்தர்முனிவர் மற்றை வானவர்கண் முதலோர்தம் மனத்தாற்றேடிக், கருத்தழிந்து தனித்தனியேசென்று வேதங்களை வினவ மற்றவையுங் காணேமென்று, வருத்தமுற்றங் கவரோடுபுலம்பநின்ற வஞ்ச வெளியே யின்பமயமாந்தேவே.

(பதவுரை.) உருத்திரர்-உருத்திரமூர்த்திகளும், நாரணர் - ஸ்ரீமந் நாராயணர் களும், பிரமர் - பிரமதேவர்களும், விண்ணோர் - சுரர்களும், வேந்தர் அரசராகிய இந்திரர்களும், உறு - மிக்க, கருடர் - கருடர்களும், காந்தருவர் - கந்தருவர்களும், இயக்கர் - இயக்கர்களும், பூதர் - பூத கணத்தவர்களும், மருத்துவர் - மருத்துவர் களும்,யோகியர்-யோக நெறியினின்றபேர்களும், சித்தர் - சித்தர்களும், முனிவர்- முனிவர்களும், மற்றை-பிற, வானவர்கள் முதலோர்-தேவகணத்தர் முதலாயினோர் களும், தம்-தமது, மனம் அத்து ஆல் - மனசினாலே, தேடி - தேடியும், கருத்து அழி ந்து-(காணாமையால்) நினைவுதடுமாறி, தனிதனி ஏ-ஒவ்வோரினத்தவராக, சென்று- போய், வேதங்கள் ஐ - மறைகளை, வினவ - (முதல்வனை நீவிர்கண்டதுண்டோ வெனக்) கேட்ப, மற்று அவை உம் - அவ்வேதங்களும், காணேம் என்று - தரிசித் திலேமென்று, வருத்தம் உற்று - வருத்தமடைந்து, ஆங்கு - அவ்விடத்தில், அவர் ஒடு-அத்தேவகணத்தாருடன், புலம்ப - வாய்விட்டு அரற்றும்படி, நின்ற - அவர்க்கு எட்டாமனின்ற, வஞ்சம் - வஞ்சமுடைய, வெளி ஏ - ஞானாகாச வடிவினையுடை யவனே, இன்பம் மயம் ஆம் - பேரின்ப மயமாகிய, தே ஏ - மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) சங்காரகருத்தர், திதிகருத்தர், சிருஷ்டி கருத்தர் என் பார் "உருத்திரர் நாரணர் பிரமர்" என்றும்; சுரர்களுக்கதிபதியாய்ச் சத்த மேகங்களுந் தன் ஆணையின்மழைபெய்ய வேவும் இந்திரர் என்பார் "விண்ணோர் வேந்தர்" என்றுங் கூறினர். "மற்றை வானவர்" என்பது மேசொல்லாதொழி ந்த அசுரர், தைத்தியர். கின்னரர், கிருதர், கிம்புருடர், வித்தையா, பைசாசர், அந்தரர், உரகர், ஆகாயவாசிகள், போக பூமியரை நோக்கி யுரைத்ததென்க. மனத்தால் தேடியபோது தேடப்பட்டசிவம் எதிர்ப்படாமையின் மனநொந்த வரா யுருத்திராதியோர் வேதங்களை வினவ, அவை, யாமு நம்மைப்போலப் பன் னெடுங்காலம் சிவபெருமானைக்காணத்தேடியு ், பாடியும், ஓடியும்,வாடியும் இளை த்துளோமென்று தமது சிந்தாகுலத்தை மொழிந்து, வினவிய தேவர்கணத்தோடுங் கூடிப் புலம்பினவென்று கூறுமுகத்தால், இன்னோர் தற்போத வெழுச்சியை யும், சுட்டுணர்வுக்கதீதமாகப் பரம்பொருள் விளங்குதலையும் விளக்குவார்" வான வர்கண் முதலோர்தம் மனத்தாற்றேடிக் கருத்தழிந்து தனித்தனியேசென்று வேதங்களை வினவ மற்றவையுங்காணேமென்று, வருத்தமுற்றங் கவரோடு புலம்பநின்ற வஞ்சவெளியே"என்றார். வஞ்சவெளி- உருபும் பயனு முடன்றொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை.

"வாக்குமனமுமுணராத வெளி"யென்பதற்குப் பிரமாணம்:—

"வாக்கு மனமு மறைந்த மறைப்பொரு
ளாக்குமி ளைக்கப் படும்பொரு ளுண்ணிது

போக்கொன்று மில்லை வில்லை கேடில்லை
யாக்கமு மத்தனை யாய்ந்துகொள் வார்க்கே." (திருமந்திரம்.)

"வஞ்சவெளி" யென்பதற்குப் பிரமாணம்:—

"காயம் பலகை கவறைந்து கண்மூன்று
யாயம் பொருவதோ ரைம்பத்தோ ரக்கர
மேய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே." (திருமந்திரம்.)

"இத்தனையா மாற்றையறிந் திலேனெம் பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவர் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடைநீ யன்றே." (தேவாரம்.)

"மறைகள் தேடிப்புலம்ப" வென்பதற்குப் பிரமாணம்:—

"ஆதியந்த மெனுமெழுவா யீறற் றோங்கி
யருமறை யின்னமுங்காணு தரற்ற நாளு
பேதமதங் களுமலைய மலைபோல் வாதப்
பெற்றியரும் வாய்வாதப் பேயராகச்
சாதகமோ னத்திலென்ன வடவானீழற்
றண்ணருட் சந்திரமௌலி தடக்கைக் கேற்க
வேதகசின் மாத்திரமா யெம்ம னோர்க்கும்
வெளியாக வந்தவொன்றே விமல வாழ்வே."

(தாயுமானவர் பாடல்.)

"இன்பமயமாம் தேவன்" என்பதற்குப் பிரமாணம்:—

"வரும்போமென் பனவுமின்றி யென்றுமொரு படித்தாய்
வானாதி தத்துவத்தை வளைந்தருந்தி வெளியாம்
இரும்போகல் லோமரமோ வென்னு நெஞ்சைக்கன்னமே
விட்டமெழு காவுருக்கு மின்பவெள்ள மாகிக்
கரும்போகண் டோசினிச் சருக்கரையோ தேனோ
கனியமிர்தோ வெனருசிக்கும் கருத்தவிழ்ந்தோ ருணர்வார்
அரும்போநன் மணங்காட்டுங் காமரசங் கன்னி
யறிவாளோ வபக்குவர்க்கோ வந்நலந்தான் விளங்கும்."

(தாயுமானவர்பாடல்.)

"வானோர் முதலாயினோருந் தேடிய பொருள்" என்பதற்குப் பிரமாணம்:—

"மாறெதிர் வானவர் தானவர் நாடொறுங்
கூறுதல் செய்து குறைகழ லுடுவர்
ஊறுவ ருள்ளத் தகத்தும் புறத்துளும்
வீறுசெய் தாங்கே விளக்கொளி யாமே." (திருமந்திரம்.)

எனப்பேரறிவாளர் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (சுo)

61. பாயிரமா மறையனந்த மனந்தமின்னும்பார்த்தளந்து காண்டுமெனப் பல்காண்மேவி, யாயிரமாயிர முகங்களாலும் பன்னாளளந்தளந்தோ ரணுத்துணையு மளவுகாணு, தேயிரங்கி யழுதுசிவ சிவவென்றேங்கித் திரும்பவருட் பரவெளிவாழ் சிவமேயென்ற, தாயிரங்கி வளர்ப்பதுபோ லெம்போல்வாரைத் தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்குந்தேவே.

(பதவுரை.) பாயிரம் - முகவுரையுடைய, மா - பெருமை பொருந்திய, மறை அனந்தம் அனந்தம் - பலகோடி வேதங்கள், இன்னும்-இனியும், பார்த்து அளந்து - பிரமாணங்களைக்கண்டு அவற்றாலாராய்ந்து, காண்டும் என - இறைவனளவைக் கண்டுணர்வோமென்று, பல்கால் - பலதரம், மேவி-விரும்பி, ஆயிரம் ஆயிரம் முகம் கள் ஆல் உம்-பலவாயிர வழிகளாலும், பல்நாள் - பல நாளளவும், அளந்து அளந்து-கருவிகளா லளந்தளந்து, ஓர் அணு துணை உம் - ஒரு அணுமாத்திரையும், அளவு - முதல்வன் அளவை, காணாது ஏ - காணமுடியாமல், இரங்கி - கூவி, அழுது - அழுது, சிவ சிவ என்று - சிவனே சிவனே யென்று, ஏங்கி - வாடி, திரும்ப-மீளும் படி, அருள் - விளக்கமுற்ற, பரம் வெளி-பரவெளியில், வாழ் - வாழ்கின்ற, சிவமே-சிவமே, ஈன்ற - பெற்ற, தாய் - அன்னை, இரங்கி - கருணைகூர்ந்து, வளர்ப்பது போல் - வளர்க்கு நீர்மை போல, எம்போல்வார் ஐ - எம்மையொத்த ஆதரவற்ற அடியாரை, தன் - குளிர்ந்த, அருள் ஆல்- காருணியத்தால், வளர்த்து-வளர்த்து, என்றும்-எக்காலத்தும், தாங்கும்-ஆதரிக்கின்ற, தேவ-மஹாதேவனே. எ-று.

(விசேஷ உரை.) "ஆயிரமுகத்தானகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே" என்பதிலக்கணமாகலான் "பாயிர மாமறை" யென்றார். அனந்தமறைகள் முன் அளந்தளந்து தேவதேவனைக் காணாமல் எய்த்தமையும், காண்டற்கரிய பொருளாயினு முயற்சி குன்றலின்றி யளந்து காணவேண்டுமெனப் பின்னுந்துணிந்தமையும் தோன்ற "இன்னும் பார்த்தளந்து காண்டுமெனப் பல்கான்மேவி" என்றார். பக்திகாண்டம் கர்மகாண்டம் ஞானகாண்டம் என்னு மூன்று காண்டங்களிலும் விரித்துரைக்கப்பட்ட பன்மார்க்கங்களாலும், சமயங்களாலும், வேதங்கள் பன்னாளளந்தன வென்பார் "ஆயிரமாயிரமுகங்களாலும் பன்னாள்அளந்தளந்து" எனவும்; அங்ஙனம் அளந்தகாலையினும் இறைவனை யோரணுவளவுங் காணாது உள்ளம்வருந்திப்புலம்பின வென்பார் "ஓரணுத்துணையுமளவுகாணாதே யிரங்கி யழுது" எனவும்; சிவனே உன் அருட்டுணையில்லையாயின் எங்ஙனம் யாம் நின்னைக் காணவல்லோமென வோலமிட்டு வாடித்தமது தற்போதமுயற்சி தடைபடத் திரும்பின வென்பார் "சிவசிவவென் றேங்கித்திரும்ப" எனவுங் கூறினார். தற்போதத்தை நீக்கி அருட்போதமொடு முயல்வார் சிவத்தைக் கண்டடைவர் என்பார் "அருட்பரவெளிவாழ்சிவமே" என்றார். மக்களிடத்தன்புகாட்டி, யின்னமுதூட்டிப் பிணிகளணுகாவண்ணம் ஒளடதாகார சிகிச்சைகளைச்செய்து துர்க்குணமுந்துர்ச் செயலுமருவாமல் நற்குணமு நற்செயலுமுற நன்னெறியினடத்திப்பாதுகாக்குந் தாய்போலத் திருவடிக்குத் தொண்டுபூண்டொழுகும் அடியவரைக்கருணைகாட்டி ஞானசன்மார்க்க நெறியிவிருத்தி வளர்த்துத்தாங்குமஹாதேவ னென்பார் "தாயிரங்கி வளர்ப்பதுபோ லெம்போல்வாரைத் தண்ணருளால் வளர்த்தென் றுந்தாங்குந்தேவே" என்றார்.

"எய்தற்கரிதாயினுமுயலுதல்பலகாற்செய்தல்வேண்டு" மென்பதற்குப் பிரமாணம்:-

"துன்ப மின்றித் துயரின்றி யென்றுநீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்
என்பொ னீச னிறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடு மானைக்கா வண்ணலே." (தேவாரம்.)

"நாவா னன்று நறுமலர்ச் சேவடி
யோவா தேத்தி யுளத்தடைத் தார்வினை
காவா யென்று கைதொழு வார்க்கெலா
மாவா வென்றிடு மானைக்கா வண்ணலே." (தேவாரம்.)

"அருமை யுடைத்தென்ற சாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்." (திருக்குறள்.)

"மறையனந்த" மென்பதற்குப்பிரமாணம்:—

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
னிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்."
(சிவஞானசித்தியார்.)

"இன்னவை யிரண்டு மிவனருள் வலியா
லீன்றநான் மறையை யந்நான்கும்
பின்னிவ னருளா லளவில வான
பிரணவ மாதிமந் திரமும்
அன்னவா றுன தாரகத் தகார
மாதியக் கரங்களு முதித்த
சொன்னவக் கரத்திற் சிவாகம நூலிச்
சுரவர னடுமுகத் துதித்த." (தாயுமானவர்பாடல்.)

"வேதமுடனாகம புராண மிதிகாசமுதல் வேறுமுளகலைகளெல்லாம்" (ஷை)

"வேதங்கள் பல்லாயிர முகங்களாலுமளந்தன" வென்பதற்குப்பிரமாணம்:—

"அன்னே யனேயெனுஞ் சிலசமய நின்னையே யையாவையா வென்னவே
யலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல வலறியே யொன்றுமிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றுவிட் டொன்றைப் பிதற்றிடுஞ் சிலசமயமேற்
பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி பிறவுமே நிலயமென்றும்
தன்னே ரிலாததோ ரணுவென்று மூலிதத் தன்மையாங் காலமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச் சதாஞான வானந்தமா
யென்னே யெனேகருணை விளையாட் டிருந்தவா றெம்மனோர் புகலவெளிதோ
விகபர மிரண்டினிலு முயிரினுக்குயிராகி யெங்குநிறை கின்றபொருளே."
(தாயுமானவர்பாடல்.)

"தாயிரங்கிவளர்ப்பதுபோலஅடியரையருளாற்பாதுகாப்பவன்" என்பதற்குப் பிரமாணம்:—

"தாயினு மினிய நின்னைச் சரணென வடைந்த நாயேன்."
"தாயினு நல்ல தயாளுவே நின்னையுன்னித்
தீயின்மெழு கொத்துருகுஞ் சிந்தைவரக் காண்பேனோ." (தாயுமானவர்.)

என அறிஞர்கள் பலர் கூறியவாற்றான் உண்மையுணர்க. (சுக)

**62.** அந்தரமிங்கறிவோ மற்றதனிலண்ட மடுக்கடுக்கா யமைந்தவுள வறிவோ மாங்கே, யுந்துறும்பல் பிண்டநிலை யறிவோஞ்சீவ னூற்றநிலை யறிவோமற் றனைத்து நாட்டு, மெந்தைநின தருள்விளையாட் டந்தோவந்தோ வெள்ளளவு மறிந்திலோ மென்னே யென்று, முந்தனந்த மறைகளெலாம் வழுத்துகின்ற முழுமுதலே யன்பர்குறை முடிக்குந்தேவே.

(பதவுரை.) அந்தரம் - ஆகாயத்தை, இங்கு - இவ்விடத்திலே, அறிவோம் - அறிந்துள்ளோம், மற்று அதனில் - அவ்வாகாயத்தில் உள்ள, அண்டம் - உலகங்கள்,

அடுக்கு அடுக்கு ஆய் - ஒன்றன்மேலொன்றாக அடுக்கப்பட்ட பல அடுக்குகளாய், அமைந்த - பொருந்திய, உளவு அறிவோம் - உளவினை யறிந்துள்ளோம், ஆங்கு ஏ- அவ்விடத்திலே, உந்து உறும் - செலுத்தப்பட்ட, பல் - பலவாகிய, பிண்டம் நிலை - பிண்டநிலைகளை, அறிவோம் - அறிந்துள்ளோம், சீவன் - சீவான்மா, உற்ற நிலை - பொருந்திய நிலையையும், அறிவோம்-அறிந்துள்ளோம், மற்று - வேறுள்ள, அனைத்தும்-எல்லாப்பொருள்களையும், நாட்டும்-நிலைநாட்டிய, எம் தந்தை(எந்தை)-எமது உயிர்த்தந்தையாகிய, நினது - உனது, அருள்விளையாட்டு - அருள்விளையாடல்களை, அந்தோ அந்தோ - அதிசயம் அதிசயம், எவ் அளவு உம் - எள்ளத்தனையும், அறிந்திலோம்-அறியகில்லோம், என் ஏ - இஃது என்னையோ, என்று - என்றுமுறையிட்டு, மூந்து-முதன்மைபெற்ற, அநந்தமறைகள் எலாம்-அளவற்ற வேதங்கள் யாவும், வழுத்தநின்ற-தோத்திரிக்கும் வண்ணம் அவைகளுக்கெட்டாமனின்ற, முழு முதல் ஏ- முழுதுமாகிய பதிப்பொருளே, அன்பர் - அன்புடைய அடியார்களுடைய, குறை - மனக்குறைவுகளை, முடிக்கும் - நிறைவேற்றவல்ல, தேவ ஏ - மஹாதேவனே. எ - று

(விசேஷ உரை.) எப்பொருளுக்கும் இடங்கொடுத்து நிற்கும் வெளியை யறிந்தனம்; அவ்வெளியிலடுக்கடுக்கா யமைந்துள்ள அண்டங்களையும் பிண்டங்களையும் அப்பிண்டங்களிற் சீவனுற்ற நிலைகளையும் அறிந்தனம் என வேதங்கள் கூறலான், இவையறியப்படும் பொருளென்பதும் அளவைக்குட்படுவன வென்பதும் பரமபதியாகிய சிவத்தின் உடைமைப்பொருள்களென்பதும் பெற்றாம்.

இப்பொருள்களை நிலைநாட்டிய தம்பிரானுடைய திருவருள்விளையாட்டெல்லாவும் யாமறிந்திலோமென வேதங்கண்முறையிடுதலால் முதல்வன் அப்பிரமேயனாக நிற்பதை யுணர்த்தின. 'எந்தை' என வேதங்கள் முதல்வனை யழைத்தலால் அவை தாமே தோற்றுவாரின்றித் தோன்றினவென்பார்மத மறுக்கப்பட்டவாறு காண்க.

"முழுமுதல்" என்றது பிரமர், நாரணர், உருத்திரர், மகேசர், சதாசிவர், இந்திரர் முதலிய தேவர்கள், புவனங்கடோறு முதன்மை யுடையவராய் விளங்கும் புவனேசுரர்களாகிய தேவர்களனைவருக்கும் சீவகோடிகளனைத்தினுக்கும் தன்னிகரில்லாத சர்வசுதந்திரமுடைய அகண்டபரிபூரண சச்சிதானந்த சிவத்தைக்குறித்ததாம் என்க.

"அன்பர் குறை முடிக்குந்தேவன்" என்றதனால் தன் சரணமடைந்த மெய்யடியார் மனக்குறையை முடிக்கும் அருளுடையனென்பதும், அவனைச்சரணடையார் குறைமுடிவதன்றென்பதும் விளக்குவன காண்க. அறிவோம் என்பது இயல்பினால் வந்த கால வழுவமைதி

"வேதங்கள் சிவத்தின் பூர்ணநிலையை யறியவில்லை" யென்பதற்குப் பிரமாணம்:—

"ஆரணமுங் காணு வகண்டிதா காரபரி
பூரணம்வந் தெம்மைப் பொருந்துநா ளெந்நாளோ."
"ஆயுங்கலையுஞ் சுருதியுங்காண்டற் கரியவுனைத்
தோயும் படிக்குக் கருணைசெய்வாய் சுகவான்பொருளே."
"சுருதியே சிவாகமங்களே யுங்களாற் சொல்லு
மொருதனிப் பொருளவை யீதென்ன வாயுண்டோ
பொருதிரைக் கடனுண்மணலெண்ணினும் புகலக்
கருதவெட்டிடா நிறைபொரு ளவை யார்காண்பார்."

என ஸ்ரீ தாயுமான சுவாமிகள் அருளிச்செய்தமை காண்க.

"வேதங்கள் இறைவன் அருள்விளையாடல் அறிந்திலோமென்று பேசியும் பேறெய்தில" வென்பதற்குப் பிரமாணம்:—

"ஒருமையால் வாய்க்குமுண்மைக் கோரனந்த நூல்கோடி
பேருரையாற் பேசிலென்ன பேறும் பராபரமே." (தாயுமானவர்.)

"பொய்க்காட்சியான புவனத்தை விட்டருளா
மெய்க்காட்சி யாம்புவன மேவுநா ளென்னாளோ." (ஷை)

"ஆதியந்தங் காட்டாம லம்பரம்போ லேநிறைந்த
நீதி லருட்கடலைச் சேருநா ளென்னாளோ." (ஷை)

"சூதான மென்று சுருதியெல்லா மோலமிடு
மீதான மானவெற்பை மேவுநா ளென்னாளோ." (ஷை)

☞ அண்டநிலை பிண்டநிலை சிவநிலை முதலியவை முதற்கவியின் விருத்தியுரையிற் காட்டிய பிரமாணங்களாலுணர்க. (கஉ)

**63.** தோன்றுபர சாக்கிரமுங் கண்டோமந்தச் சொப்பனமுங் கண்டோமேற் சுழுத்திகண்டோ, மான்றபர துரியநிலை கண்டோமப்பா லதுகண்டோ மப்பாலா மதுவுங்கண்டோ, மேன்றவுப சாந்தநிலை கண்டோமப்பா லிருந்தநினைக் காண் கிலோ மென்னேயென்று, சான்றவுப நிடங்களெல்லாம் வழுத்தநின்ற தன்மயமே சின்மயமே சகசத்தேவே.

(பதவுரை.) தோன்று - தோன்றுகின்ற, பரம் சாக்கிரம் உம் - பரத்தின் சாக்கிராவத்தையும், கண்டோம் - தரிசித்தோம், அந்த - அந்த, சொப்பனம் உம் - பரசொப்பனவத்தையும், கண்டோம் - தரிசித்தோம், மேல் - மேலாகிய சுழுத்தி - பரசுழுத்தியவத்தையும், கண்டோம் - தரிசித்தோம், ஆன்ற - பெருமையுள்ள, பரம் துரியம் நிலை - பரதுரியாவத்தையும், கண்டோம் - தரிசித்தோம், அ பால் அது - பரதுரிய நிலைமேலுள்ள சிவ சாக்கிரத்தையும், கண்டோம் - தரிசித்தோம், அ பால் ஆம் அது உம் - சிவசாக்கிரங்கடந்த சிவசொப்பனத்தையும், கண்டோம் - தரிசித்தோம், ஏன்ற - பொருந்திய, உபசாந்தம் நிலை - சிவ சுழுத்தியும், கண்டோம் - தரிசித்தோம், அ பால் - அந்நிலையின்மேல், இருந்த - துரிய நிலையிலுள்ள, நினை - உன்னை, காண்கிலோம் - தரிசிக்கிலோம், என் ஏ என்று - என்னையோ விதுவென்று, சான்ற-சால்பு மிக்க, உபநிடங்கள் எல்லாம்-உபநிடத முழுதும், வழுத்த நின்ற-தோத்திரிக்கும்படி நிலைபெற்ற, தன் மயம் ஏ - தன்மயமானபொருளே, சித் மயம் ஏ - சின்மயமான பொருளே, சகசம் - இயற்கை யுண்மையுடைய, தே ஏ - மஹாதேவனே. எ - று.

(விசேஷ உரை.) சர்வ தத்துவங்களின் செயல்களைத் தான் அறிவதாகிய சர்வஞ்ஞத்துவமும், சர்வதத்துவங்களு மொடுங்குங்காலத்திலுந் தான் ஒடுங்காது நிற்றலாகிய சர்வகாரணத்துவமும், சர்வேந்திரியங்களிலும் வியாபித்திருத்தலாகிய சர்வேந்திரியாமித்வமும், சர்வ இந்திரியங்களுக்குந் தலைவனாக இருப்பதாகிய சர்வேஸ்வரத்வமும், சர்வ பிரபஞ்சங்களையுந் தோற்றுவிப்பதாகிய சர்வசிருஷ்டிகர்த்ருத்வமும், சிருஷ்டிகளையெல்லாம் பாலிப்பதாகிய திதிகர்த்ருத்வமும், சர்வதத்வங்களையுஞ் சங்கரிப்பதாகியசங்காரகர்த்ருத்வமுமாகிய பரோபாதிகண்மருவியவிராட் புருஷதரிசனமென்பார் "தோன்றுபர சாக்கிரமுங்கண்டோம்" என்றார். சர்வசிருஷ்டி, சர்வதிதி, சருவசங்காரோபாதிகளுடன் கூடின கால பரதரிசன மென்பார் "அந்தச் சொப்பனமுங் கண்டோம்" என்றார். சர்வ சங்காரோபாதி யொன்றொடு கூடிய அவ்யாகிருததரிசன வியோமநிலை யென்பார் "மேற்சுழுத்தி கண்டோம்" என்றனர். சர்வமுந் தன்மயமாய்த் தனக்கன்னியமின்றி யெப்பொருளுக்தானாக விளங்கும் சுத்த பரரூப தரிசனமென்பார் "ஆன்றபர துரியநிலை கண்டோம்" என்றனர். சிவசாக்கிரம், சிவசொப்பன தரிசனமென்பார் "அப்பாலது கண்

டோம் அப்பாலா மதுவுங் கண்டோம்'' எனவும்; சிவசுழுத்தி தரிசன மென்பார். ''ஏன்ற வுபசாந்த நிலை கண்டோம்'' எனவும்; இந்நிலைகளின் மிக்க சிவதுரியநிலை காணரி தென்பார். ''அப்பாலிருந்த நினைக் காண்கிலோம்'' எனவும் கூறினர். வேதசிரசுகளாகிய உபநிடதங்களால் தொடர்தற்கரியனுய்த் துரியனுய்த் துரியாதீதனுய் நின்ற பொருளென்பார். ''சான்றவுப நிடதங்களெலாம் வழுத்தநின்ற தன்மயமே சின்மயமே சகசத்தேவே'' என்று அருளினர்.

---

**64.** பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோ மேலைப் பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாச, மெரிக்குமியற் பராத நிலைக்கண் மெல்ல வெய்தினே மப்பாலு மெட்டிப் போனுந், தெரிக்கரிய வெளிமூன்றுந் தெரிந்தோ மெங்குஞ் சிவமேநின் சின்மயமோர் சிறிதுந் தேறேந், தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத் தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே.

(பதவுரை.) பரிக்கிரகம் நிலை - சுத்தமாயையினிலையை, முழுதுஉம் - முற்றிலும், தொடர்ந்தோம் - ஆராய்ந்திருந்தோம், மேலை - அதற்கப்பாலுள்ளதாகிய, பரம் விந்து நிலை - பரவிந்துநிலையை, அனைத்தும் - முழுவதும், பார்த்தோம் - கண்டறிந்தோம், பாசம் - பந்தத்தை, எரிக்கும் - தபிக்கவல்ல, இயல் - இயல்புடைய, பரம்நாதம் நிலை கண் - பராத நிலையினிடத்து, மெல்ல - மெதுவாக, எய்தினேம் - அடைந்தோம், அ பால் உம் - அந்நிலையின்மேலும், எட்டி - தொடர்ந்து, போனேம் - சென்றேம், தெரிக்க அரிய - தெரிவிப்பதற்கரிய, வெளி மூன்று உம் - மூன்று வெளிகளையும், தெரிந்தோம் - உணர்ந்தோம், எங்கும் - எவ்விடத்திலும், சிவம் ஏ - சிவமான பொருளே, நின் - நினது, சித்மயம் - சிதாகாச மயத்தை, ஓர் சிறிது உம் - ஒரு சிற்றளவும், தேறேம் - தெளிகிலோம், தரிக்க அரிது என்று - உம்மை அறியாமல் உயிர் வாழ்தல் சகிக்கரிதென்று, ஆகமங்கள் எல்லாம் - தந்திரங்களாகிய ஆகமங்கள் முழுவதும், போற்ற - துதி செய்ய, தனி - ஏகாந்தமாக, நின்ற - நிலைபெற்றிருக்கின்ற, பரம் பொருள் ஏ - மேலாகிய பொருளே, சாந்தம் - உபசாந்தமுடைய, தே ஏ - மஹாதேவனே; (எ - று.)

(விசேஷவுரை.) அபர விந்து ஞான நிலை கண்டறிந்தோ மென்பார் ''பரிக்கிரக நிலை முழுதுந் தொடர்ந்தோம்'' எனவும்; அபரவிந்துவின் மேற்பட்ட பரவிந்து வியாக நிலைகள் கண்டன மென்பார், ''மேலைப் பாவிந்து நிலையனைத்துப் பார்த்தோம்'' எனவும்; பிருதிவி முதல் அபரநாத ஈறாக வுள்ள பாச ஜாலத்தைக் கடந்த பரநாத நிலையைத் தரிசித்தோ மென்பார், ''பாச மெரிக்கு மியற் பரநாத நிலைநகண் மெல்ல வெய்தினேம்'' எனவும்; திக்கிராந்த அதிக்கிராந்த நிலைகளைத் தொடர்ந்தோ மென்பார், ''அப்பாலு மெட்டிப் போனேம்'' எனவும் கூறினர். தெரிக்கரிய வெளிமூன் றென்றது :—பரவெளி, பரம்பரவெளி, பராபரவெளி. சர்வபரிபூரண வகண்டாகார ஞான நிலை, தற்போத மொழிந்த விடத்தல்லது காணற் கரியதாக விருத்தலின் ''எங்குஞ் சிவமேநின் சின்மயமோர் சிறிதுந்தேறேம் தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத் தனி நின்ற பரம் பொருளே'' எனக் கூறினர்: எவ்வகைத் தேவர்க்கும், யோகிகள் ஞானிகள் முதலாயினோர்க்கும் சாந்தியைத்தரும் நிலைதானுக விளங்குவதென்பார் ''சாந்தத்தேவே'' எனக் கூறினர். ''மெல்ல'' என்பது-குறிப்பு வினை வினையெச்சம். ''தனிநின்ற பரம் பொருள்'' இரண்டற்ற சுத்தாத்துவித சமரச ஞானநிலையை யுடைய மேற்படுபொருள்.

---

**65.** மணக்குமலர்த் தேனுண்ட வண்டேபோல வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோ ரெல்லா, மிணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற் கியற்கைநிலை யாத துதா னெம்மாற் கூறுங், கணக்குவழக் கனைத்தினையுங் கடந்த தந்தோ காண்பரிதிங் கெவர்க்குமெனக் கலைக ளெல்லாம், பிணக்கறநின் றேலமிடத் தனித்து நின்ற பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே.

(பதவுரை.) மணக்கும் - கமழ்கின்ற, மலர் - மலர்களிலுள்ள, தேன் உண்ட - தேனையுண்ட, வண்டு ஏ போல - வண்டைப்போல, வளர் - மேன்மேலாகப் பெருகு கின்ற, பரம் ஆனந்தம் - பரமானந்தத்தை, உண்டு - அனுபவித்து, மகிழ்ந்தோர் எல்லாம் - களிப்படைந்தவர் யாவரும், இணக்கம் உற - பொருத்த முண்டாக, கலந்து கலந்து - கூடிக் கூடி, அதீதம் ஆதல் கு - துரியாதீதப் பொருளாவதற்கு, இயற்கை நிலை - சுபாவநிலை, யாது - எது, அது தான் - அந்த நிலை தான், எம்மால் - எங்களால், கூறும் - சொல்லப்படும், கணக்கு - கணித அளவு, வழக்கு - வழக்கின் அளவு, அனைத்தினையும் - முழுதையும், கடந்தது - அதிக்கிரமித்தது, அந்தோ - ஐயோ ! காண்பு அரிது - காண வரியது, இங்கு - இவ்வுலகில், எவர்க்கு உம் - எவ் வகைப் பெரியோர்க்கும், என - என்று, கலைகள் எல்லாம் - ஞான நூல்கள் முழுதும், பிணக்கு அற - விரோதமில்லாது, நின்று - சந்நிதியினின்று, ஓலம் இட - முறையிட, தனித்து நின்ற - ஒன்றினுக்கு மெட்டாமனின்ற, பெரும்பதம் ஏ - அகண்ட பதப் பொருளே, மதம் அதீதம் - மதங்களுக் கெட்டாத தாகிய, பெரிய தே வ - மகா தேவனே; (எ - று.)

(விசேஷவுரை.) பரிமளமிக்க மலர்த்தேனை நுகர்வதன்றிப் பிறிதொன்றையு நுகரச் செல்லாத வண்டுகள்போலப் பிரபஞ்சத்தில் அநித்தியபோக நுகர்ச்சியை நாடா மற் சதாகாலமும் தங்கள் இதயாம்புயத்திலூறுஞ் சிற்சுகமாகிய பேரின்பத்தேனைப் பருகி மகிழுஞ் சீவன் முத்தர்களாகிய பெரியோ ரென்பார்; "மணக்கு மலர்த் தேனுண்ட வண்டேபோல வளர் பரமானந்த முண்டு மகிழ்ந்தோ ரெல்லாம்" என்றார். வளர் பரமானந்தம் - வினைத்தொகை. பருகுந்தோறும் சுரந்து குறைவு படா வியற்கையுடைய வானந்த மாகலின் 'வளர்' என அடைமொழி கொடுத் தோதினார். மலத்தோடிரண்டறக் கலந்து நின்ற நிலைமையினின்று நீங்கித் தம்மை மறந்து சகத்தை மறந்து நினையாது மறவாது கலந்து கலந்து தற்போத மிழந்து திருவருள்வலத்தாற் சாக்கிராதீதம் புரிகின்ற சுபாவ அத்துவித மௌனநிலை யென்பார், "இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற் கியற்கை நிலை" என்றார். அந் நிலைதான் யாதென நாடியும், அது வாக்கு மனமுங் தாக்கரிய நிலையென வாடியும், எத் தகைய தீரர்க்குங் காண்டற் கரியதென வேதாகமாதி நூல்களெல்லாம் ஒத்துநின்று முறையிடும் பெரும்பதமாக விளங்குதலின், "யாது அதுதானெம்மாற் கூறுங் கணக்கு வழக்கனைத் தினையுங் கடந்ததந்தோ காண்பரிதிங் கெவர்க்கு மெனக் கலைக ளெல்லாம், பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற பெரும்பதமே" என்றார். பிணக்கற என்றதனாற் கலைஞானங்கள் தம்மில் உயர்வு தாழ்வற வொருங்கு கூடிநின்று சமரசநிலை சுட்டியவாறாயிற்று. சமயாதீத மகாதேவனாக விளங்குதலான் மதாதீதப் பெரியதேவே எனப்பட்டது.

66. பொதுவென்றும் பொதுவினடம் புரியா நின்ற பூரணசிற் சிவமென் றும் போதானந்த, மதுவென்றும் பிரமமென்றும் பரம மென்றும் வகுக்கின்றோர் வகுத்திடுக வதுதா னென்று, மிதுவென்றுஞ் சுட்டவொணா ததனாற் சும்மா விருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின் றோரை, விதுவென்ற தண்ணளியாற் கலந்து கொண்டு விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே.

(பதவுரை.) பொது என்று உம் - அம்பலமென்றும், பொது இல் - அம்பலத் தில், நடம் - நடனத்தை, புரி ஆ நின்ற - செய்கின்ற, பூரணம் - நிறைவாகிய, சித் - சிற் சொரூபமுடைய, சிவம் என்று உம் - சிவமென்றும், போதம் ஆனந்தம் - அறி வானந்தம், அது என்று உம் - அந்தப்பொருள் என்றும், பிரமம் என்று உம் - பிரம மென்றும், பரமம் என்று உம் - சிரேஷ்டமான பொருளென்றும், வகுக்கின்றோர் - வகுத்துக் கூறுவோர், வகுத்திடுக - வகுத்துக்கூறுக, (அங்ஙனம் வகுத்துக் கூறினு லும்) அதுதான் என்று உம் - அது வென்றும், இது என்று உம் - இது வென்றும், சுட்ட ஒண்ணாது-சுட்டியறிய வொண்ணாது, அதனால்-அக்காரணத்தால், சும்மா இருப்

பது ஏ - மௌனமாக இருப்பதுதானே, துணிவு என - துணிந்துணரும் பொருள் என்று, கொண்டு - திடமாக நிச்சயித்துக் கொண்டு, இருக்கின்றோர் ஐ - மௌன நிட்டை கூடியிருப்பவர்களை, விது என்ற - சந்திரன்போன்ற, தண் அளி ஆல் - குளிர்ந்த கிருபையினால், கலந்துகொண்டு - ஞானானுபூதியிற் கூடிக்கொண்டு, விளங்குகின்ற - பிரகாசிக்கின்ற, பெரு வெளி ஏ - அகண்ட வெளியான பொருளே, விமலம் - மலமில்லாத அல்லது இயற்கைப் பரிசுத்தமுடைய, தே ஏ - மஹா தேவனே; (எ-று.)

(விசேஷவுரை.) இலங்கை நோக்கிச் செல்லும் இடை நாடிக்கும் இமயமலை நோக்கிச் செல்லும் பிங்கல நாடிக்கும் மத்தியிலுள்ள சுழிமுனை நாடி நேரே நோக்கிச் செல்லுமிடமாயுள்ள அம்பலமென்பார், "பொதுவென்றும்" எனவும்; பொதுவாகிய திருவம்பலத்திலே சோதிக்குட் சோதியாக விளங்கிப் புவன கோடிகளெல்லா முய்யும் பொருட்டுப் பஞ்ச கிருத்தியத் திருத்தாண்டவம் புரிந்தருளு நடராஜமூர்த்தி யென்பார், "பொதுவினடம் புரியாநின்ற பூரண சிற் சிவமென்றும்" எனவும்; அறிவுக் கறிவாகி யானந்தம் விளைக்கின்ற பொருளென்பார், "போதானந்த மது வென்றும்" எனவும்; துவிதமற்றதாயும், சர்வ வியாபியாயும், சகல சொரூபமுந் தன்னுடையதாக் கொண்ட விசுவ சொரூபியாயுமுள்ள பொருளென்பார், "பிரம மென்றும்" எனவும்; மனவாக்குக் கெட்டாத சிரேஷ்டமுடைய துரியப்பொரு ளென்பார், "பரம மென்றும்" எனவும்; இவ்வகை யனைத்தும் கடந்த தென்பார், "வதுக்கின்றோர் வதுத்திடுக" எனவும்; சுட்டிறந்த பொருள், மோன சமாதியாற் சித்திக்கும் பொருளெனத் துணிந்து நிற்கு மௌனிகளென்பார், "அதுதானென்று மிது வென்றுஞ் சுட்டவொணாததனுஞ் சும்மா விருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின்றோரை" எனவும் கூறினர். விதுவென்ற தண்ணளியாற் கலத்தல் - அருளொளியாற் கலப்பதாம் என்றும்; அதாவது சிருட்டிக்கு முன்னும் பின்னும் தனக் கென்றும் நாசமில்லாத ஞான மஹாகாச மாதலின், "விளங்குகின்ற பெருவெளி" என்றார். விமலம் - இயற்கைப் பரிசுத்த முடைமை.

67. அருமறையா கமங்கண்முத னடுவீ றெல்லா மமைந்தமைந்து மற்ற வைக்கு மப்பா லாகிக், கருமறைந்த வுயிர்கடொறுங் கலந்து மேவிக் கலவாமற் பன்னெறியுங் கடந்து ஞானத், திருமணிமன் றகத்தின்ப வுருவா யென்றுந் திகழ் கருணை நடம்புரியுஞ் சிவமே மோனப், பெருமலையே பரமவின்ப நிலையே முக்கட் பெருமானே யெத்திறத்தும் பெரிய தேவே.

(பதவுரை.) அருமறை - அருமையாகிய வேதங்களினுடையவும், ஆகமங்கள் - ஆகம நூல்களினுடையவும், முதல் - ஆதியிலும், நடு - மத்தியிலும், ஈறு - முடிவிலும், எல்லாம் - முழுதும், அமைந்து அமைந்து - அவைதாம் ஆகியாகி, மற்று அவைக்கு உம் - அவ்வேத ஆகம ஆதிமத்தியாந்தத்திற்கு, அ பால் ஆகி - கடந்ததாகியும், கரு - பிறவிகளில், மறைந்த - தம்மை யறியாமல் மறைந்திருக்கின்ற, உயிர்கள்தொறு உம் - எல்லா ஆன்மாக்களிடத்தும், கலந்து - கூடி, மேவி - அவை தானாகப் பொருந்தி, கலவாமல் பல் நெறி உம் - பல மார்க்கங்களையுங் கூடாமல், கடந்து - தாண்டியும், ஞானம் திரு மணி மன்று அகத்து - சிறந்த அழகிய ஞானாகாரத்தின் கண், இன்பம் உரு ஆய் - ஆனந்த சொரூபியாகியும், என்று உம் - எக்காலத்தும், திகழ் - விளங்குகின்ற, கருணை நடம் - திருவருணடனத்தை, புரி உம் - செய்தருள்கின்ற, சிவம் ஏ - சிவமே, மோனம் பெருமலை ஏ - மோனமலையான பொருளே, பரமம் இன்பம் நிலை ஏ - சிரேஷ்ட ஆனந்த நிலைக்களமே, மு கண் - மூன்று கண்களையுடைய, பெருமான் ஏ - தலைவனே, எ திறம் அத்து உம் - எல்லாத்திறத் தினாலும், பெரிய - பெருமையுடைய, தே ஏ - மஹாதேவனே; (எ - று.)

(விசேஷவுரை.) வேதம் வேதாந்தம் ஆகமம் இதிகாசம் புராணம் மிருதி முதலிய கலை நூல்களாகிய சொற் பிரபஞ்சம் என்பார், "அருமறை யாகமங்கள்" எனவும்;

அவற்றின் ஆதிமத்தி யந்தங்களிலும், கர்மகாண்டம் உபாசனா காண்டம், ஞான காண்டங்களிலும் கலந்ததென்பார், "முதனடு வீறெல்லா மமைந்தமைந்து" எனவும்; அச்சொல்லுல காலறிதற்கரியவ னென்பார். "மற்றவைகடந்த மப்பாலாகி" எனவும்; கருப்பவறையில் தங்கியுருத்தோன்றாத வண்ண மறைந்து கிடக்கும் உயிர்கட் குயிராகினா னென்பார், "கருமறைந்த வுயிர்கடோறுங் கலந்து மேவி" எனவும்; சமய நெறிகளிற் கூடாமற் சமயாதீத நெறியிற் றிருச்சிற்றம்பலத்துள் பேரின்பவுருவாகி அருணடம் புரியு மங்கள சொரூபி யென்பார், "கலவாமற் பன்னெறியுங் கடந்து ஞானத் திருமணி மன் றகத்தின்ப வுருவா யென்றுந் திகழ் கருணை நடம்புரியுஞ் சிவமே" எனவுங் கூறினார். ஒரு சிறிதுஞ் சலிப்படையாத மேருவரை யொப்பான மோன சமாதி நிலையுடைய பொருளாயினா னென்பார், "மோனப் பெருமலையே" என்றார். எத்தேவர் பதங்களிலுங் கிடையாத பூரணானந்தம் தானா யமர்தலின் "பரமவின்ப நிலையே" எனவும் கூறினார். எத்தகைய திறத்தாலும் தன்னிகரில்லாத மஹாதேவ னென்பார், "எத்திறத்தும் பெரிய தேவே" என்றார்.

**68.** என்னுயிர்நீ யென்னுயிர்க்கோ ருயிரு நீயென் னின்னுயிர்க்குத் துணைவனீ யென்னை யீன்ற, அன்னைநீ யென்னுடைய வப்பனீ யென் னரும்பொருணீ யென்னிதயத் தன்பு நீயென், நன்னெறிநீ யெனக்குரிய வுறவு நீயென் னற்குருநீ யெனைக்கலந்த நட்பு நீயென், றன்னுடைய வாழ்வுநீ யென்னைக் காக்குந் தலைவனீ கண்மூன்று தழைத்த தேவே.

(பதவுரை.) என் உயிர் நீ - என் ஆன்மாநீ, என் உயிர்க்கு - என் ஆன்மாவினுக்கு, ஓர் - ஒன்றாகிய, உயிர் உம் - பரமான்மாவும், நீ - நீ, என் - எனது, இன் உயிர்க்கு - இனிய ஆன்மாவினுக்கு, துணைவன் நீ - சகாயனாயுள்ளவனுநீ, என்னை ஈன்ற - என்னைப் பெற்றருளிய, அன்னை நீ - தாயுநீ, என் உடைய - அடியேனுடைய, அப்பன் நீ - பிதாவுநீ, என் - எனது, அரு பொருள் நீ - பெறுதற்கரிய செல்வமுநீ, என் இதயத்து - என் மனத்திலுள்ள, அன்பு நீ - ஆன்மவுருக்கமுநீ, என் நல்நெறி நீ - என்னுடைய சன்மார்க்க நெறியுநீ, எனக்கு உரிய - என்பால் உரிமையுடைய, உறவு நீ - பந்துவுநீ, என் நல்குருநீ - எனது சற்குருநீ, எனை கலந்த - என்னோடு கூடியுள்ள, நட்பு நீ - சிநேகனுநீ, என் தன் உடைய - அடியேனுடைய, வாழ்வு நீ - பேரின்ப வீட்டிலுள்ள வாழ்வாயுள்ளவனீ, என்னை - அடியேனை, காக்கும் - பாதுகாக்கின்ற, தலைவன் நீ - பதிப்பொருளானவனுநீ, கண் மூன்று - மூன்று நேத்திரங்களும், தழைத்த - செழிக்கப்பெற்ற, தேவ - மஹாதேவனே; (எ - று.)

(விசேஷவுரை.) இறைவன் "அவையே தானேயா யிருவினையிற், போக்குவரவு புரியவாணையினீக்க மின்றி நிற்பவ" னாதலால், "என்னுயிர்நீ" எனவும்; உயிர் அங்கமாகவும் இறைவன் அங்கியாகவு மிருத்தலால், "என்னுயிர்க்கோருயிருநீ" எனவும்; பெத்தத்திசையிலும் முத்தித்திசையிலும் இனிய சகாயனாயிருத்தலால், "என்னின்னுயிர்க்குத் துணைவனீ" எனவும்; கேவலாவத்தை யினின்ற வுயிரைச் சகலாவத்தைக்குக் கொணர்ந்து கருணையினால் மாயா தநு விளக்கை யளித்து இருண்மல கர்மமலபரிபாகங்கண்டு அருளவத்தையுற நிறுவிப்பரிபாலிக்கும் அருளையுடையனாதலின், "என்னை யீன்ற அன்னைநீ" எனவும்; அன்னையுடனகலாமல் வீற்றிருக்கும் அப்பனாகலின் "என்னுடைய வப்பனீ" எனவும்; பெறுதற்கரிய பெரிய நித்தியப்பொருளாகலின் "என் அரும் பொருணீ" எனவும்; எவ்வுயிரினிதயத்தும் அன்பே வடிவா யெழுந்தருளியிருக்கும் காருணிய சொரூபியாகலின், "என்னிதயத் தன்புநீ" எனவும்; சகத்தவர் ஒழுகுதற்குரிய சமயசன்மார்க்க நெறியாக விருத்தலின், "என்னன்னெறிநீ" எனவும்; வறுமையுற்ற போதிற் பிரிந்தும் செல்வமுற்றபோதிற் கூடியு நிற்கும் பொய் யுலகவுறவினர் போலாகாமல், எப்போதும் அகத்துப் பிரிவறக் கூடியிருக்கும் சுற்ற ஆத்மபந்து வாகலின், "எனக்குரிய வுறவுநீ" எனவும்; ஆன்மாவின் பக்குவங்கண்டனுக் கிரகம்புரியும் அருட் குருமூர்த்தியாகலின் "என்னற்குருநீ" எனவும்;

சீவான்மாவின் சிறுமையும் தன் பெருமையு நோக்கிப்பேதம் பாராட்டாமல் அபேதமாக நின்று தாங்குந் தன்மையுடைய அருணேசனாகலின் "எனைக்கலந்த நட்பு நீ" எனவும்; பேரின்ப வாழ்வைப் பிரசாதித்தலின் "என்னுடைய வாழ்" வெனவும்; எப்பிறப்பிலும், எவ்வுலகிலும் காத்தருளும் பரமபதியாதலின், "என்னைக் காக்குந் தலைவனீ" எனவும்; உலகுக்கெல்லாம் அகக்கண் முகக்கண்கள் விளங்க விளக்கும் முச்சுடர் விழிகள் தழையப்பெற்றவனாதலிற் "கண் மூன்று தழைத்த தேவே" எனவுங் கூறினர்.

69. தானாகித்தானல்ல தொன்று மில்லாத் தன்மையனா யெவ்வெவைக்குந்தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி மலர்தலைய வுலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனினறுஞ் சுவைய தாகித்தீஞ்சுவையின் பயனாகித் தேடுகின்ற
நானாகியென்னிறையாய் நின்றோய் நின்னை நாயடியே னெவ்வாறு நவிற்றுமாறே.

(பதவுரை.) தான் ஆகி - தான் என்னும் பொதுப்பொருளாகியும், தான் அல்லது - தன்னை யல்லாதது, ஒன்று உம் - ஒரு பொருளும், இல்லா - இல்லாத, தன்மையன் ஆய் - இயல்புடையனாகியும், எ எவை கு உம் - எவ்வெப் பொருளுக்கும்; தலைவன் ஆகி - முதல்வனாகியும், வான் ஆகி - ஆகாசமாகியும், வளி (ஆய்) - காற்றாகியும், அனல் ஆய் - நெருப்பாகியும், நீர் உம் ஆகி - புனலாகியும், மலர்-விளங்குகின்ற, தலைய - இடத்தையுடைய, உலகு ஆகி - மண்ணுலகமாகியும், மற்று உம் ஆகி - உள்ளனவாய பிறபொருளனைத்துமாகியும், தேன் ஆகி - தேனாகியும், தேன் இன் - தேனினுடைய, நறு சுவை அது ஆகி - இனிய சுவையாகியும், தீஞ்சுவை இன்-இனிய சுவையினுடைய, பயன் ஆகி - பலனாகியும், தேடுகின்ற - ஆராய்கின்ற, நான் ஆகி-அடியேனாகியும், என் இறை ஆய் - என் ஆண்டானாகியும், நின்றோய் - நின்றருளு மகாதேவனே ! நின் ஐ - உன் பெருமையை, நாய் அடியேன் - நாயியல்புடைய தொண்டனேன், எ ஆறு - எவ்வண்ணம், நவிற்றும் ஆறு - துதிக்கின்ற முறையை உரைத்தருள்; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) இருதிணை ஐம்பால் மூவிடங்களையுடைய சராசரப் பொருள்களுக்கெல்லாம் இறைவன் பொதுவாயினா னென்பார், "தானாகி" எனவும்; சத்தாகிய முதல்வன் கலப்பின்றாயின் அவனால் தோற்றியொடுங்கும் யாவும் அசத்தா மென்பார், "தானன்றி யொன்றுமில்லாத் தன்மையனா" யெனவும்; அவனின் மிக்கார் பிறர் யாண்டும் இல்லாமையால், "எவ்வெவைக்குந் தலைவனாகி" எனவும்; உலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாகிய பரிணாமங்களாகிய பஞ்சமகா பூதங்களும் உலகங்களும், அவற்றுள்ள சராசரங்களு மென்பார், "வானாகி வளியனலாய் நீருமாகி, மலர் தலைய வுலகாகி மற்றுமாகி" எனவும்; இனிய பொருளும் அதன் குணமும், அதனாலுறும் பயனுமாகினான் என்பார், "தேனாகித் தேனினறுஞ் சுவையதாகித் தீஞ்சுவையின் பயனாகி" எனவும்; தன்னைத்தேடி யடையமுயலும் பக்குவமுடைய சீவனாகினானென்பார், "தேடுகின்ற நானாகி" எனவும்; தன்னை யாண்டவனாக வுடைத்தாயிருத்தலின், "என்னிறையாய் நின்றோய்!" எனவும்; பொருட்பிர பஞ்சமுழுதும் அவனாயிருத்தலானும், அவனையன்றித் தானென வேறாகத்தனித்த சுதந்தரப் பொருளாய் நிகழ்தல் கூடாமையினாலும்; அவன் பெருமையை அனந்த நாவுடைய ஆதிசேடனும் பிரமனாதி கடவுளரும் இனைத்தெனவறிந்துகொள முடியாதவராய் நின்றேங்கு நிலைமையராயிருத்தலினால், ஒரு வாற்றானும் சேதனப்பொருளென வெளிப்படும் தகுதியுடையேனல்லாத சிறியேன் எவ்வாறுணர்ந்து, எவ்வாறு வழுத்தவல்லே னென்பார் "நின்னை நாயடியே னெவ்வாறு நவிற்று மாறே" எனவுங் கூறினர்.

70. ஆனேறும் பெருமானே யரசே யென்ற னாருயிருக் கொருதுணையே
யமுதே கொன்றைத், தேனேறு மலர்ச்சடையெஞ் சிவனே தில்லைச் செழுஞ்சுடரே
யானந்தத் தெய்வமே யென், னூனேறு முயிர்க்குணிறை யொளியே யெல்லா முடை

யானே நின்னடிச்சீ ருன்னி யன்பர், வானேறு கின்றூர்நா னொருவன் பாவி மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே.

(பதவுரை.) ஆன் ஏறும் - இடபவாகனத்தி லேறுகின்ற, பெருமான் ஏ - பெருமையுடையானே! அரசு ஏ - தலைவனே, என் தன் - எனது, அரு உயிர் உகு - அரிய வுயிருக்கு, ஒரு - ஒன்றாகிய, துணை ஏ - சகாயனே, அமுது ஏ - அமிர்தமே, தேன் ஏறு - வண்டுகளேறப்பெற்ற, கொன்றை மலர் சடை - கொன்றை மலர் மாலையணிந்த சடையையுடைய, எம் சிவன் ஏ - எமது சிவபெருமானே; தில்லை - சிதம்பரத்திலுள்ள, செழு சுடர் ஏ - செழிய ஞான தீபமே, ஆனந்தம் தெய்வம் ஏ - ஆனந்த சொரூபியாகிய மகாதேவனே!, என் - எனது, ஊன் - ஊனுடம்பிலே, ஏறு - குடிபுக்கிருந்த, உயிர் கு உள் - சீவான்மா விற்குள், நிறை - நிறைந்த, ஒளி ஏ - பிரகாசமா யிருப்பவனே, எல்லாம் - சராசரப்பொருண் முழுவதும், உடையான் ஏ - படைத்தவனே, நின் அடி சீர் - உனது திருவடிப் புகழ்ச்சியை, உன்னி - சிந்தித்து, அன்பர் - அடியவர்கள், வான் ஏறுகின்றூர் - மோக்க வுலகிற் செல்கின்றூர்கள், நான் ஒருவன் பாவி - ஒருவனாகிய பாவி யடியேன், மண் ஏறி - மண்ணுலகிற் சென்று, மயக்கு ஏறி - மயக்கமடைந்து, வருந்த உற்றேன் - வருந்துகின்றேன்; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) தரும சொரூபமாகிய வெள்விடை மேலூர்ந்து மெய்யடியார்க்குக் காட்சியருளும் பெருமான் மகாதேவராதலின், "ஆனேறும் பெருமான்" என்றூர். எல்லாவுலகுக்கும் ஒப்பற்ற முதன்மையுடையவரும், அளவில்லாத சீவ கோடிகளும் தன் ஆளுகையில் அமைந்து வாழ அருட் செங்கோல் செலுத்துபவரும், இம்மை மறுமை யின்பங்களை யளிப்பவரும், நித்தியரும், சனனமரண அச்சங்களை யடியார்க்கு விலக்குபவரும், உயிர்களை இரவும் பகலும் எப்போதும் காவல் செய்பவரும், திருவடி நிழலளிப்பவரும் மகாதேவராதலின் "அரசே" என்றூர். ஒரு துணை என்பது - உயிர்க்கு உள்ளத்தும் புறத்துந்தோன்றாத் துணையாயும், தோன்றுந் துணையாயும், நின்றருளுவோன், "முதல்வன்" என்பதை விளக்குவதாம்.

71. செஞ்சடையெம் பெருமானே சிறுமா னேற்ற செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து, மஞ்சடையு மதிற்றில்லை மணியே யொற்றி வளர்மருந்தே யென்னுடைய வாழ்வே வேட்கை, யஞ்சடைய வஞ்சியர்மா லடைய வஞ்ச மடைய நெடுந் துயரடைய வகன்ற பாவி, நெஞ்சடைய நினைதியோ நினைதி யேன்மெய்ந் நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே.

(பதவுரை.) செம் சடை-செவந்த சடையுடைய, எம்பெருமான் ஏ - எமதுதலைவனே,சிறுமான் ஏற்ற - சிறியமான் கன்றைத்தாங்கிய, செழு கமலம் கரத்தவன் ஏ - செழித்த தாமரை மலர்போன்ற திருக்கையுடையவனே, சிவன் ஏ - சிவன் என்னுந் திருப்பேர் பூண்டவனே, சூழ்ந்து மஞ்சு அடையும் - மேகங்கள் சூழ்ந்தடைகின்ற, மதில் தில்லை - மதிலாற் சூழப்பட்ட திருத்தில்லை நகரத்தில் வசிக்கும், மணி ஏ - நடராச மாணிக்கமே, ஒற்றி - திருவொற்றியூரில், வளர் - வாழ்கின்ற, மருந்து ஏ - அமிர்தம் போன்றவனே, என் உடைய - அடியேனுடைய, வாழ்வு ஏ - வாழ்வாகிய மகாதேவனே, வேட்கை அஞ்சு அடைய - ஆசைகள் ஐந்தும் அடைய, வஞ்சியர் - வஞ்சிக்கொம்பு நிகர்த்த மாதர்கள், மால் அடைய - மோக மடையவும், வஞ்சம் அடைய - மாயாமல மடையவும், நெடு துயர் அடைய - நீண்ட துன்பமடையவும், அகன்ற பாவி - விலகி நின்ற பாவியேனுடைய, நெஞ்சு அடைய - மனத்தில் எழுந்தருள, நினைதி ஓ - நினைவாயோ, நினைதியேல் - நினைவாயாயின், மெய் நெறி உடையார் - சன்மார்க்க நெறி நிற்பவர்களுடைய, நெஞ்சு அமர்ந்த - நெஞ்சகத்து வீற்றிருக்கின்ற, நீதன் அன்று - நியமமுடையவனல்லை; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) கங்கையின் பிரவாகத்தைத் தன்னுளடக்கி யருளும் பெருமையும் மா தவ யோகச்சிறப்பும் விளங்கப்பெற்றவ னென்பார், "செஞ்சடை யெம்பெருமானே" எனவும்; உருவிற் சிறியதாகியும் அண்டமும் அதிர முழக்கும் முழக்கத்தைச் செய்ததுமாகிய தாருகாவனத்து முனிவர்கள் விடுத்த சிறுமானைத்தாங்கிய தவ வல்லமைதோன்ற "சிறுமானேற்ற செழுங்கமலக் கரத்தவனே" எனவும் கூறினர். சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐந்து ஆசைகளடையவும், மாதர்மயலடையவும், அதனால் மாயை யடையவும், அதனால் பிறவித்துக்க மடையவு நின்ற நெஞ்சத்தை யடையாமல், இவையனைத்து நீங்கிய சுத்த மனத்தின் கண் எழுந்தருள்வோன் பெருமான், ஆதலின் "வேட்கை யஞ்சடைய வஞ்சியர்மா லடைய வஞ்சமடைய நெடுந் துயரடைய வகன்ற பாவி, நெஞ்சடைய நினைதியோ" என்றார். மெய்ந் நெறியாவது:— "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்க. இஃது சமயாதீதமாகிய சுத்த சமரச சன்மார்க்க நெறியாம். நெஞ்சமர்ந்தநீதன் - அடியார் உள்ளப் பெருங்கோயிலை யுகந்தருளும் இறையோன் என்க.

72. அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டு மாரமுதே யென்னுறவே யரசே யிந்த, மன்னுலகி லடியேனை யென்னே துன்ப வலையிலகப் படவியற்றி மறைந்தா யந்தோ, பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றேன், என்னையுளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ வென்செய்வே னென்செய்வே னென்செய் வேனே.

(பதவுரை) அன்னை இன் உம் - தாயைப் பார்க்கிலும், பெரிது - மிகவும், இனிய - இனிதான, கருணை - திருவருளமுதை, ஊட்டும் - புகட்டுகின்ற, ஆர் அமுது ஏ - நிறைந்த அமிர்த சொரூபனே, என் உறவு ஏ - என் உயிர்ச்சுற்றமானவனே, அரசு ஏ - எனக்கு இறைவனுகிய மகாதேவனே!, இந்த மன் உலகு இல் - இந்த அனாதியாக நிலைத்துள்ள வுலகத்தில், அடியேன் ஐ - அடிமையாளாகிய என்னை, என் ஏ - என்ன காரணத்தால், துன்பம் வலை இல் - துன்பந்தரும் பாசவலையில், அகம் பட - உட்படும்படி, இயற்றி - செய்து, மறைந்தாய் - ஒளித்தாய், அந்தோ - ஐயோ!, பொன் ஐ - பொன்னுகிய பொய்ப்பொருளை, மதித்திடுகின்றோர் - மெய்ப்பொருளாக வெண்ணுகின்ற மனிதர்கள், மருங்கு ஏ - பக்கத்திலே, சூழ்ந்து - சுற்றியிருந்து, போனகம் உம் - அவர்கள் அளிக்கும் உண்டியையும், பொய் உறவு உம் - அவர்கள் செய்யும் பொய்யுறவையும், பொருந்தல் ஆற்றேன், உண்டு அமர்தலைச் சகியேன், என் ஐ - அடியேனை, உளம் திருவுளத்தில் கொள்ளுதி ஒ - தொண்டனுக விரும்பிக் கொள்வாயோ, கொள்கிலாய் ஓ - கொள்ளமாட்டாயோ, என் செய்வேன் என் செய்வேன் என் செய்வேன் - யான் யாதுசெய்வேன் யாதுசெய்வேன் யாது செய்வேன்; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) உலகிலே தம்மக்கள் செய்யுந்தவறுகளை நோக்கி அவர்களைக் கோபித்தலும் அச்சமுறுத்தலுந் தண்டித்திலும் சகியாமற் செய்த பிழைகளைத்திருத்த முயலுந்தாயர் பல்லாயிரவர் புரியும் கருணையினும் அடியவர் செய்யும் பிழைகளையுங் குணமாகக்கொண்டு முனிதலும் பயப்படுத்தலும் கொடுமையாக தண்டித்தலு மின்றி அளவிறந்த பெருங்கருணையைக் காட்டுதலால் இறைவனை "அன்னையினும் பெரிதினிய கருணையூட்டு மாரமுதே" என்றனர். எப்பிறப்பிலும், எவ்வவத்தையிலும் எந்நிலையினும் ஆன்மாக்களைப் பிரிதலின்றியுடனுகி மன்னும் அத்துவித பாந்தவ்யமுடைமை மகாதேவர்க்கே யுரித்தாகலின், "என்னுறவே" என்றும் சீவர்களை அருட் செங்கோ னெறியிற் செலுத்தியாளுந் தன்மையனுகலின் "என்னரசே" என்றும்; பெத்த நிலை பந்தவியல் பாகலினுலும் அந்நிலையிற் சீவர்கள் உணர்வு கெடாமற் சிவம் அவ்வியக்தமாக நிற்றலினுலும் அநித்திய சுகதுக்க வலையிலகப்பட்டுழலும் சீவர்களுக்குச் சிவம் விளங்காமையாலும் "இந்த மன்னுலகிலடியேனை யென்னே துன்பவலையிலகப்படவியற்றி மறைந்தா" யென்றும் கூறினர், பொன்னையே மதிக்கும்பொருட்

செல்வரோடுறவுகொள்ளுதலும் அவரில்லத்து உண்டு சுகித்தலும் சகிக்கிலேன் என்றமையால் நித்திய அருட் செல்வம் பெற்றவர் உறவையும், அருளமுத நுகர்ச்சியையும், விரும்பினேன் என்றும் தன்னுள்ளக்கருத்தை வள்ளலுக்கு விண்ணப்பித்தமையால் என்னை ஆண்டருள விசைதியோ, இசையாயோ வென்பார், "என்னையுளங் கொள்ளுதியோ கோள்கிலாயோ" என்றார்.

73. படித்தேன்பொய் யுலகியனூ லெந்தாய் நீயே படிப்பித்தா யன்றியுமப் படிப்பி லிச்சை, யொடித்தேனு னொடித்தேனே வொடிப்பித் தாய்பின் னுன்னடியே துணையெனநா னுறுதி யாகப், பிடித்தேன்மற் றதுவுநீ பிடிப்பித் தாயிப் பேதையே னின்னருளைப் பெற்றோர் போல, நடித்தேனெம் பெருமானீ தொன்று நானே நடித்தேனோ வல்லதுநீ நடிப்பித் தாயோ.

(பதவுரை.) படித்தேன்பொய் உலகு இயல் நூல் - பொய்யாகிய உலக வியற்கை யுணர்த்து நூல்களை வாசித்தேன், எந்தாய் - என் தந்தையே, நீ ஏ - நீ தானே, படிப்பித்தாய் - யான் படிக்கச் செய்தனை, அன்றி உம் - அல்லாமலும் அ படிப்பு இல் - அந்தக் கல்வியில், இச்சை - ஆசையை, ஒடித்தேன் - அறுத்தேன்; நான் - அடியேன், ஒடித்தேன் ஓ - அறுத்தேனே!, ஒடிப்பித்தாய் - (நீயே) அறுவித்தாய், பின் - அவ்வாசை நீங்கிய பின்பு, உன் அடி ஏ - உன் திருவடிகளையே, துணை என - உயிர்த்துணை யென்று, நான் - அடியேன், உறுதியாக - திடமாக, பிடித்தேன்- பற்றினேன், மற்று அது உம் - அவ்வண்ணம் பற்றியதும், நீ - நீயே, பிடிப்பித்தாய்- பற்றும் வண்ணம் செய்வித்தாய், இ - இந்த, பேதையேன் - அறிவில்லேன், நின் அருள் ஐ - உன்னுடைய திருக்கருணையை, பெற்றோர்போல - அடைந்தவர்போல, நடித்தேன் - நடித்து நின்றேன், எம் - எமது, பெருமான் - மகாதேவனே, ஈது ஒன்று உம் - இந்த வொரு நடப்பும், நான் ஏ - அடியேனே, நடித்தேன் ஓ - நடித்து நின்றேனோ, அல்லது - அலது, நீ - நீ தான், நடிப்பித்தாய் ஓ - நான் நடிக்கும் வண்ணம் செய்வித்தாயோ (அருளுக); (எ - று.)

(விசேஷவுரை.) உலகவிடைய ஞான நூல்கள் யான் படித்தேனென்றதிற் சீவச் செயலும், நீயே படிப்பித்தா யென்றதில் சிவச்செயலும் உணர்தலும், உணர்த்துதலும்; கிஞ்சிக்ஞுத்துவமும், சர்வஞ்ஞுத்துவமும்; சுதந்தரமின்மையும் சுதந்தரமுண்மையும் விளங்கின. படித்தேன் - தன்வினை, படிப்பித்தாய் - பிறவினை இது பிரவிர்த்தி மார்க்கம் படிப்பிலிச்சை யொடித்தேனு னொடித்தேனே என்றது - தன் செயலறுதியை விளக்குகின்றது, ஒடித்தேனே - இதில் ஈற்றிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது - உன்னடியே துணையெனநா னுறுதியாகப் பிடித்தேனென்பதும், மற்றதுவு நீயே பிடிப்பித்தாய் என்பதும் நிவர்த்தி மார்க்கம். உன்னடியே துணையென நான் உறுதியாகப் பிடித்தேனென்றதனால்;

"ஈட்டியவொண் பொருளுமில் லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டும்
எரியினுடம் பொழியு மீர்ங்குன்ற நாட
தெரியி னறமே துணை."

என்றாங்கு இவ்வுலகத்துப் பல்வகைப் பொருள்களி னிலையாமையையும், வீடருள்வதாகிய மெய்த்துணை யென்னும் திருவடியினித்திய வியல்பையும் விளக்கினர். "பேதையேன் (இது பெத்த நிலையுற்ற சீவநிலை) நின்னருளைப் பெற்றோர்போல நடித்தேன் எம்பெருமான் ஈதொன்று நானே நடித்தேனோ வல்லது நீ நடிப்பித்தாயோ" என்றது அருட்பேற்றின் பூரணாநுபவ வபேட்சையை விளக்கி, தற்போத வெழுச்சியை வெறுத்ததென்க, படித்தேன் படிப்பித்தாய், ஒடித்தேன் ஒடிப்பித்தாய், பிடித்தேன் பிடிப்பித்தாய், நடித்தேன் நடிப்பித்தாய்—என்னுந் தன்வினைப் பிறவினை முற்றுக்கள் பசுக்களுக்குப் பெத்தத்தசை முத்தித்தசை இரண்டிலும் பசுபதி செய்யும் உபகார முணர்த்துகின்றன.

**74.** மத்தேறி யலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை மயலேறி விருப்பேறி மதத்தி ளுேடு, பித்தேறி யுழல்கின்ற மனத்தா லந்தோ பேயேறி நலிகின்ற பேதை யானேன், வித்தேறி விளைவேறி மகிழ்கின் ரோர்போன் மேலேறி யன்பரெலாம் விளங்கு கின்றார், ஒத்தேறி யுயிர்க்குயிராய் நிறைந்த வெங்க ளுடையானே யிது தகுமோ வுணர்கி லேனே.

(பதவுரை.) மத்து ஏறி - (குடையும்போது) மத்து மேலேறுதலால், அலை - சத்திகெட்டலைகின்ற, தயிர்போல் - தயிரைப்போல, வஞ்சம் வாழ்க்கை - மாயப் பிரபஞ்ச வாழ்க்கையின், மயல் ஏறி - மயக்கமடைதலாலும், விருப்பு ஏறி - விருப்ப மடைதலாலும், மதத்திஞேடு - மதத்திஞேடு, பித்து ஏறி - பித்த மடைதலாலும், உழல்கின்ற - சுழல்கின்ற, மனத்தால் - மனத்திஞலே, அந்தோ - ஐயோ, பேய் ஏறி - பேயாற் பிடிக்கப்பட்டு, நலிகின்ற - துன்புறுகின்ற, பேதை ஆனேன் - அறிவிலியா யினேன் அடியேன், அன்பர் எலாம் - உன் அடியாரானோர் யாவரும், வித்து ஏறி - வித்தினிடந் தோன்றும், விளைவு ஏறி-பயிர் விளைவு மிகுதலால், மகிழ்கின்றோர்போல்- மகிழும் உழுநர்போல, மேல் ஏறி - மேலாகிய ஞானபூமியை அடைந்து, விளங்கு கின்றார் - பிரகாசிக்கின்றார்கள், உயிர்க்கு உயிர் ஆய் - உயிர்க்கு உயிராக, ஒத்து ஏறி- சமமாக (ச் சராசரப் பொருள்களுட்) பொருந்தி, நிறைந்த - பூரணவியாபகமுடைய, எங்கள் - எம்முடைய, உடையானே - முதல்வனுகிய மகாதேவனே, இது தகும் ஓ - இந்தக் கீழ்த்தரமான வென் அபக்குவநிலை தக்கதாகுமோ, உணர்கிலேன் - அடியேன் அறிகிலேன்; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) மனம் அறிவின் வயப்பட்டு நில்லாமல் ஓடியுழல்வதற்குக் காரணம் பிரபஞ்ச வஞ்ச வாழ்வின் மயக்கமும், விருப்பமும், மதமும், பித்தமுமாத லால், "வஞ்ச வாழ்க்கை மயலேறி விருப்பேறி மதத்திஞேடு பித்தேறி யுழல் கின்ற மனம்" என்றார். பேயேறி நலிகின்ற பேதை என்பது - பேய்க்கோட்பட்டு நலியும் மகள் அல்லது பெண். "மனத்தாலந்தோ பேயேறி நலிகின்ற பேதை யானேன்," என்றது - மனப்பேயாற் பிடிக்கப்பட்டு, மத்தேறலால் சத்தி கெட்டலை கின்ற தயிர்போல், விவேகத்தின் வன்மையும் சுதந்தரமும் ஆன்மா விழந்தமையை விளக்கிய வாறுயிற்று. இது பெத்தநிலை. "வித்தேறி விளைவேறி மகிழ்கின்றோர் போல்," என்றதஞல், "இன் சொல் விளைநிலஞ ஈதலே வித்தாக, வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி, அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீனவோர், பைங்கூழ் சிறுகாலைச் செய்." என்பதிற்போலப் புண்ணியப்பயிர் செய்தோரையும், அவர் மகிழ்நிலையும்; "மேலேறி யன்பரெலாம் விளங்குகின்றார்" என்றதஞல், சிவனடி யார் ஞானப்பயிர் செய்து சிவபோகப் பெரும்பயனை யனுபவித்து விளங்குநிலையும் விதந்தனர். இது முத்தநிலை. யான் பேதையேனுய் வருந்த, அன்பரெலா மேலேறி விளங்கச்செய்தல் சமரச நோக்குடைய தேவரீருக்குப் பொருந்தியதொரு போருட் பெற்றிக்குத் தகுவதோ வென்பார், "ஒத்தேறி யுயிர்க்குயிராய் நிறைந்த வெங்கள் உடையானே யிது தகுமோ வுணர்கிலேனே" என்றார்.

---

**75.** மதியணிந்த முடிக்கனியே மணியே யெல்லாம் வல்லவருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக், கதியணிந்தா ரன்பரெலா மடியே ஞென்றுங் கண்டறி யேன் கருமத்தாற் கலங்கி யந்தோ, பொதியணிந்து திரிந்துழலு மேறு போலப் பொய்யுலகிற் பொய்சுமந்து புலம்பா நின்றேன், றுதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ வின்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே.

(பதவுரை.) மதி - சந்திரகண்டத்தை, அணிந்த - தரித்த, முடி - திருமுடியை, கனி ஏ - கற்பகக்கனி யொப்பவனே, மணி ஏ - மாணிக்கம் போல்பவனே, எல்லாம் வல்ல - சித்தெல்லாம் விளையாடவல்ல, அருள் - கருணைத்திருமேனி தரித்த, குரு ஏ - பரமகாரண குருவாக வந்த மகாதேவனே, நின் - உன்னுடைய, மலர் தாள் - மலர்

போலுந் திருவடிகளை, வாழ்த்தி - வந்தித்து நின்று, அன்பர் எலாம் - அடியார் எல்லாரும், கதி அணிந்தார் - கதியை யடைந்தார்கள், அடியேன் - அடிமைத்திறம் பூண்ட யான், ஒன்று உம் - அத்தகைய பரிசு ஒரு சிறிதும், கண்டு அறியேன் - அனுபவித்தறியேன், கருமத்தால் - கன்ம மலத்தாலே, கலங்கி - கலக்கமடைந்து, அந்தோ - ஐயோ, பொதி அணிந்து - பொதியைச் சுமந்து, திரிந்து உழலும் - பலவிடங்களிலுஞ் சஞ்சரித் துழல்கின்ற, எறுபோல - எருதைப்போல, பொய் உலகு இல் - அநித்திய வுலகினிடத்து, பொய் - பொய்யாகிய பாசச்சுமையை, சுமந்து - சுமந்துகொண்டு, புலம்பா நின்றேன் - துக்கியா நின்றேன், துதி அணிந்த - பக்தகோடிகள் செய்யும் துதியைப் பூண்ட, நின் அருள் - உன் கருணை, எனக்கு உம் - அடியேனுக்கும், உண்டு ஒ - அளிக்கத் தகுந்ததுதானோ, இன்று எனில் - அளிக்கத்தக்கதில்லை யென அருளிச் செய்வாயாயின், பாவியேன் - தீவினையேன், சொல்வது என் - சொல்லத் தக்கது யாது உள்ளது; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை) "மதியணிந்த முடிக்கனி" யென்றது ஞானகலாமதி தரித்து மாதேவர் ஞானாமிர்த நறுஞ்சுவை மிகுந்த ஞானப்பழமாய் விளங்குதலை நோக்கி யென்க. நவநிலையுடைய முதல்வ னென்பார், "மணியே" யென்றார். மணியும் ஒன்பது வகையினதாக விருத்தலின்: பந்தபாசக்கொத்தின் வன்மை முழுதும் ஒருங்கே சிதைத்துப் பேரின்ப வாழ்வென்றும் அடிமை பூண்டவர்க்கு வழங்கவல்ல காரண ஞானகுரு வென்பார், "எல்லாம்வல்ல அருட்குருவே" என்றனர். இறைவர் திருவடிவாழ்த்துந் தொண்டர்க்கே பெறும் பேறென்பார், "நின்மலர்த்தாள் வாழ்த்திக் கதியணிந்தா ரன்பரெலாம்" என்றார். திருவடி வந்தனை செய்யாதவர்கள் ஒரு பயனும் பெறாமையால், "அடியே னொன்றுங் கண்டறியேன்" என்றும், அது செய்யாமையாலே கன்ம மலத்தாற் பிறந்து பிறந்து பொய்யுலகிற் பொய்ப்பாசச் சுமையைப் பொதி யெருதுபோலச் சுமந்து அழிகின்றமையால், "கருமத்தாற் கலங்கியந்தோ பொதியணிந்து திரிந்துழலு மேறுபோலப் பொய்யுலகிற் பொய்சுமந்து புலம்பா நின்றேன்" என்றும், இத்தன்மை யுடையோர்க்குத் திருவருள் வாய்ப்பதரிதென்பார், "துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ" வென்றுங் கூறினர். திருவடியை யடையப்பெறாத மானிடம் பாவிகளென்பதனால், "இன்றெனிலிப் பாவியேன்" என்றும், பெறுதற்கரிய மானிடப்பிறவி அவலயமாய்க் கழிதலிலுள்ளதாகிய கேட்டை யார் பான் முறையிடினும் பயனில்லை யென்பார், "சொல்வ தென்னே" என்றும் கூறினர்.

76. என்னரசே யென்னுயிரே யென்னை யீன்ற வென்றாயே யென்குருவே யெளியே னிங்கே, தன்னரசே செலுத்தியெங்கு முழலா நின்ற சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி யந்தோ, மின்னரசே பெண்ணமுதே யென்று மாதர் வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே யெண்ணிக், கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே.

(பதவுரை.) என் அரசு ஏ - எனது தலைமைப்பதியே, என் உயிர் ஏ - எனது பிராணனே, என்னை - என்னை, ஈன்ற - பெற்ற, தாய் ஏ - அன்னையே, என் குரு ஏ - எனது ஆசாரியனே, எளியேன் - ஏழையேன், இங்கு ஏ - இவ்வுலகிலே, தன் - தனது, அரசு ஏ - அரசியலையே, செலுத்தி - நடத்தி, எங்கும் - எவ்விடத்தும், உழல் ஆநின்ற அ - திரிகின்ற, சஞ்சலம் - அசைவினையுடைய, நெஞ்சு அகம் அத்து ஆல் - மனசினாலே, தயங்கி - சலனமுற்று, மின் அரசு ஏ - மாதரசே, பெண் அமுது ஏ - பெண்களில் அமுத மொத்தவளே, என்று - எனப் புகழ்ந்து, மாதர் - மங்கையருடைய, வெய்ய - வெம்மையுடைய, சிறுநீர் குழி கண் - சிறுநீர் பாயும் அல்குலாகிய குழியிலே, விழ ஏ - விழும்பொருட்டு, எண்ணி - நினைந்து, கொன் - பயனில்லாத, நரைசேர் - நரையையுடைய, கிழம் குருடன் - கிழவனாகிய குருடனது, கோல்போல் - கையிற் பிடித்த கோலைப்போல, வீண் ஏ - வீணாக, மயல் இல் - விடைய இச்சையில்,

கொடியனேன் - தூர்த்தனேன், குப்புறுகின்றேன் - கவிழ்கின்றேன், (என்செய்வேன் அருள்செய்); (எ - று.)

(விசேஷவுரை.) சேதன அசேதன வுலகங்களுக்கெல்லாம் தானே தன் அருளால் பஞ்ச கிருத்தியமுஞ் செய்து தன்னருட் செங்கோல் செலுத்தியாளு முதன்மையுடையனாதலான் மாதேவனை, "என்னரசே" என்றும், சீவாதாரனாகியிருத்தலான் "என்னுயிரே" என்றும், கேவலாவத்தையினின்றும் சகலாவத்தைக்குச் சீவர்களைத் தனுகரணாதி கொடுத்துக் கொணர்தலால், "என்னை யீன்ற வென்றாயே" என்றும், அஞ்ஞானவிருளை யொழித்து ஞானப் பிரகாசத்தைத் தந்தருளிச் செய்தலால், "என் குருவே" என்றும், கூறினார். விவேகமாகிய அறிவின் வழிச்செல்லாமல், அறிவைத் தன் வசப்படுத்தி, ஆண்டு தன் இச்சையின்படி சத்த பரிச ரூப ரச கந்தமாகிய ஐம்புலனுகர்ச்சியை விரும்பி எவ்விடத்திலும் சஞ்சரித்துக் காற்றைப்போல மனசு உழல்கின்றமையால், "தன்னரசே செலுத்தி யெங்கு முழலா நின்ற சஞ்சல நெஞ்சகம்" என்றார். சன்னமரணாதிகளாலும் பல நோய்களாலும் விளைகின்ற தாபங்களுக்கெல்லாம் மூலமான குழியாதலால், "மாதர் வெய்ய சிறுநீர்க்குழி" என்னப்பட்டது, "கோனுரை சேர் கிழக்குருடன்" என்றதனால் நரைதிரை மூப்பு முதலியவற்றோடுங் கூடி நிற்கும் அந்தகன் என்பது சித்தித்தது. அத்தகைய குருடன் கைக்கோல் ஊன்று நிலத்தின் இயல் பறியாமல் தடுமாறிக் கீழ்வீழுமாறு போலத்தானும் அகக்கண்ணிழந்த மனத்தினாலே வீழுங்குழியின் தன்மையறியாமல் கவிழ்ந்து வீழ்கின்ற கொடியேன் என்பார், "கிழக்குருடன் கோல்போல் வீணே குப்புறுகின்றேன் கொடியனேன்" என்றார். அந்தோ - வியப்பிடைச் சொல்.

—௦—

**77.** அல்விலங்கு செழுஞ்சுடரா யடியா ருள்ளத் தமர்ந்தருளுஞ் சிவகுருவே யடியே னிங்கே, இல்விலங்கு மடந்தையென்றே யெந்தா யந்த இருப்புவிலங் கினையொழித்து மென்னே பின்னும், மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை யென்னும் வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன், புல்விலங்கு மிதுசெய்யா வோகோ விந்தப் புலைநாயேன் பிழைபொறுக்கிற் புதிதே யன்றே.

(பதவுரை.) அல் - அஞ்ஞானவிருள், விலங்கு - நீங்குகின்ற, செழும் சுடர் ஆ - செழிய ஞானபானுவாக, அடியார் - அன்பரது, உள்ளத்து - இருதயத்தில், அமர்ந்து அருளும் - வீற்றிருந்தருளும், சிவம் குரு ஏ - சிவமாகிய குருமூர்த்தியே, அடியேன் - அடிமை பூண்ட சிறியேன், இங்கு ஏ - இவ்வுலகிலே, மடந்தை - மனைவி, இல் விலங்கு என்று ஏ - இல்லறத்துக்குரிய பாசத்தளையென நினைந்து, எந்தாய் - என் தந்தையே, அந்த இருப்பு விலங்கு இன் ஐ-அந்த இரும்பாற் செய்த தளையை அல்லது பந்தத்தை, ஒழித்தும் - நீக்கியும், என் ஏ - யாது காரணத்தால், பின் உம் - பிறகும், மல் விலங்கு - கன விலங்காகிய, பரத்தையர்தம் - வேசையர்தம், ஆசை என்னும் - ஆசையென்கிற, வல்விலங்கு - வலிதாகிய விலங்கினை, பூண்டு - தரித்துக்கொண்டு, அந்தோ - அந்தோ, மயங்கி நின்றேன் - அறிவு மயங்கியிருக்கின்றேன், புல் விலங்கு உம் - அற்பக்குணமுடைய மிருகமும், இது செய்யா - இக்காரியஞ் செய்யமாட்டா, இந்த புலை நாயேன் - இந்தப் புலைத்தன்மையுடைய நாயேனுடைய, பிழை - அபராதத்தை, பொறுக்கில் - மன்னிக்கில், ஓஓ - ஓஓ, புதிது ஏ - புதுமையுடையதேயாம் அல்லவோ; (எ - று.) அன்று - ஓ - அசைகள்.

(விசேஷவுரை.) "இன்றெனக்கருளியிருள் கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தேன்" என்றாங்கு அடியவருள்ளத் தஞ்ஞான திமிரமறுத்தலால் "அல்விலங்கு செழுஞ்சுடரா யடியாருள்ளத் தமர்ந்தருளுஞ் சிவகுருவே" என்றார். தன் பாசத்தளையாய் இல்லறத்தானைப் பந்தநெறியிலழுத்தலால் மனைவியை, "இல்விலங்கு மடந்தை" என்றார். "ஒழிந்தேன் பிறவியுறவென்னும் பாசங்கழிந்தேன் கடவுளு நானு மொன்றானேன்" எனவும்; "வைய

கத்தே மடவாரொடுங் கூடியென், மெய்யகத் தோருழவைத்த விதியது, கையகத்தே கரும்பாலையின் சாறுகொண், மொய்யகத்தே பொரும் பாம்பதுவாமே" என்றார் திருமூலர். மனைவி மையலை யொழித்தும் பரத்தையர் மையலாகிய வல்விலங்கு பூண்டு மயங்கி நின்றேன். ஆதலின் மயறீர்த்தும் பிழை பொறுத்தருளுமென இறைவர் திருவருளை வேண்டி யிரந்தனர்: "மந்திர மொன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன், சுந்தர வேடங்களாற் றுரிசேசெயுந் தொண்டனேனை, அந்தர மால்விசும்பி லழகானை யருள்புரிந்த துந்தரமோ நெஞ்சமே" என வன்றொண்டப் பெருந்தகையார் தம்மயலின் றுரிசை யெல்லாம் பொறுத்துச் சிவபிரான் அருளிச்செய்த திறம் வியந்தமை பழைய தொன்றாதலில் "பிழை பொறுக்கிற் புதிதே" என்றனர். ஏ - ஓ. வினாப்பொருளது.

---

78. வன்கொடுமை மலநீக்கி யடியார் தம்மை வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தா ளெண்ண, முன்கொடுசென் றிடுமடியேன் றன்னை யிந்த மூடமன மிவ்வுலக முயற்சி நாடிப், பின்கொடுசென் றலைத்திழுக்கு தந்தோ நாயேன் பேய்பிடித்த பித்தனைப்போற் பிதற்றா நின்றேன், என்கொடுமை யென்பாவ மெந்தா யெந்தா யென்னுரைப்பே னெங்குறுவே னென் செய்வேனே.

(பதவுரை.) வல் கொடுமை - வலியகொடுமையுடைய, மலம் - பஞ்சமலங்களையும், நீக்கி - அகற்றி, அடியார் தம்மை - அடிமைபூண்ட தொண்டர்களை, வாழ்விக்கும் - வாழ்வடையச் செய்யும், குருவே - குருமூர்த்தியே, நின் - தேவரீருடைய, மலர் தாள் - திருவடிமலர்களின் மேலிருத்தும், எண்ணம் - தியானத்தை, முன்கொடு - முன்னே விடுத்துக்கொண்டு, சென்றிடும் - அதன் பின்னே போகின்ற, அடியேன் தன்னை - அடியேனாகிய வென்னை, இந்த - இந்த, மூடம் மனம் - அவிவேகமுடைய மனமானது, இவ் உலகம் முயற்சி - இந்த வுலகவிடைய சம்பந்தமான முயற்சியை, நாடி - ஆராய்ந்தறிந்து, பின்கொடு - அந்த லௌகிக முயற்சியின் பின் என்னைக் கொண்டு, சென்று - போய், அலைத்து - தன்னோடு அலைவித்து, இழுக்குது - இழுக்கின்றது, அந்தோ - அந்தோ, நாயேன் - நாய்போன்ற கடையேன், பேய்பிடித்த - பேயாற் பிடிக்கப்பட்ட, பித்தன் ஐ போல் - உன்மத்தனைப்போல, பிதற்றா நின்றேன் - வாயில் வந்தபடி புலம்புகின்றேன், எந்தாய் எந்தாய் - எந்தையே எந்தையே, என் கொடுமை - என் கொடுமைத் தன்மையும், என் பாவம் - எனது பாவச்செயல்களும், என் உரைப்பேன் - என்னென்று சொல்வேன், எங்கு - எவ்விடத்தில், உறுவேன் - சென்றடைவேன், என் செய்வேன் - என்ன செய்வேன்; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) தன்னையும் தன் தலைவனையும் அறியவொட்டாது நல்லறிவை முழுது மறைக்குங் கொடிய சத்திகளுடையதாய்ச் செம்பிற் களிம்புபோல நிற்றலின், "வன் கொடுமை மலம்" என்றனர். என்னை "எண்ணரிய சத்தியதாயிரு ளொளிர விருண்ட, மேகமாய்ச் செம்பிலுறுகளிம் பேய்ந்து நித்த, மூலமலமாயறிவு முழுதினையு மறைக்கும்" என்றார், சிவப்பிரகாச நாலுடையார் ஆகலின் என்க. மலமாகிய பாசத்தடையையும் பசுத்வத்தையும் அகற்றாதவிடின் அடியார் தமது சுதந்தரத்தால் இறைவனை அடைதலரிதாகலின், "அடியார் தம்மை வாழ்விக்குங் குருவே" என்றார்: "விண்ணினைச் சென்றணுகாவியன் மேகங்கள், கண்ணினைச் சென்றணுகாப்பல காட்சிகள், எண்ணினைச் சென்றணுகாம லெனப்படும், அண்ணலைச் சென்றணுகாப் பசுபாசமே" என்றது திருமந்திரம். அடியவர் எண்ணிய வெண்ணங்களை முடித்தருளுந் துணையடித் தாமரையுடையவன் மாதேவனாகலின் அத்திருவடிகளை முன்னிறுத்தித் தாம் அவ்வுயர் துணையின்பின் சென்று சற்கருமஞ்செய முயறல் அடியார் மரபெனக் கொண்டு, "நின் மலர்த்தாளெண்ண முன்கொடு சென்றிடு மடியேன்" என்றனர். என்னை? "போற்றுந்தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை, யாற்றுந் தகையனவாறு சமயத்த வரவரைத், தேற்றுந்தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே, யேற்றுந்தகையன வின்னம்பரான்ற னிணையடியே" எனத் தேவாரத்

தமிழ் மறை—மு முழக்கலின் என்க: "உயர்ந்தா ன்றலைவனென்றுெப் புடைத்தானேக்கி, உயர்ந்தானூலோதி யொடுங்கி—உயர்ந்தான் அருந்தவ மாற்றச்செயின் வீடாமென்றார், பெருந்தவஞ் செய்தார் பெரிது" என வேதநெறிகடைப் பிடித்தொழுகித் தவநெறிக்குச் செல்லும் அறிவினை மனமானது உலகமுயற்சியை நாடித் தான்முன்செல்ல, அதன்பின் அறிவு ஊசியு மிழையும்போற் செல்வதைச் சகியாதவராய் "அடியேன் றன்னை மூடமனமிவ் வுலக முயற்சி நாடிப்பின்கோடு சென்றலைத்திழுக்கு தந்தோ" வென்றனர்.

79. உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லா முண்மைநிலை பெறவருளு முடையா யிங்கே, மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கி லாழ்ந்து வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தா ளெண்ணிக், கைகுவித்துக் கண்களினீர் பொழிந்து நானோர் கணமேனுங் கருதிநினைக் கலந்த துணடோ, செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ, திருவுளத்தை யறியேனென் செய்கு வேனே.

(பதவுரை.) மெய் அடியார் தம்மை எல்லாம் - உண்மையாக அடிமைபூண்டொழுகுந் திருத்தொண்டரனைவரையும், உண்மை நிலை-சத்தியஞானமோன நிலையை, பெற - அடையும்படி, உய்குவித்து அருளும் - தேசிகரால் உய்யச்செய்தருளும், உடையாய் - எம்மையுடைய மகாதேவனே, இங்கு ஏ - இவ்வுலகிலே, மைகுவித்த - அஞ்சனத்தைக் குவித்த, நெடு கண்ணார் - நீண்ட கண்களையுடைய மகளிரது, மயக்கு இல் - மையலில், ஆழ்ந்து - அமிழ்ந்து, வருந்துகின்றேன் - வருந்தா நிற்கின்றேன், அல்லால் - அன்றி, உன் - உனது, மலர் தாள் - மலர்போன்ற திருவடிகளை, எண்ணி - தியானித்து, கை குவித்து - கைகளைக்கூப்பி, கண்கள் இல் - விழிகளினின்று, நீர் பொழிந்து - நீரைச்சொரிந்து, நான் - அடியேன், ஓர் கணம் எனும் - ஒருகணப் பொழுதாயினும், கருதி - எண்ணி, நின் ஐ - உன்னை, கலந்தது உண்டோ - கூடிய யனுபவித்ததுண்டோ? செய்குவித்துக் கொள்ளுதியோ - என்னை அடியவனுக்கிக் கொள்வாயோ, கொள்கிலாயோ - கொள்ளமாட்டாயோ, திரு உளம் அத்து ஐ - திருவுள்ளக் கருத்தை, அறியேன் - உணர்கிலேன், என் செய்குவேன் - பிழைப்பதனுக்கியாது செய்வேன்; (எ - று.) ஏ - ஈற்றசை, திருவுளம் - அகத்தே நிகழுங்கருத்தினுக்காதலால், ஆகுபெயர், கில் - ஆற்றலை யுணர்த்தும் சொல்.

(விசேஷவுரை.) ஆன்மவர்க்கத்துள் மகாதேவர் தம் அடியார்களைப் பாசபந்தத்தினின்று, அவர் முன்னைத் தவத்தினுக்கேற்ப, தேசிகரால் உபதேசம்புரிவித்து உய்குவித்தல் கடமையாகக் கோடலான், "உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லாம்" என்றும், என்றும் நிர் விகாரமாயுள்ள சத்தியஞானமோனநிலை பெற வருளுதலால், "உண்மைநிலை பெற வருளும்" எனவும் கூறினார். "வறிதேகாமத் தீயிற்சிக்கியுள்வான் பொருடோற்கவோ வந்தேனென்றோழி" எனவும், "வாளாருங் கணணியர் மோகம்—யம வாதைக்கனலை வளர்க்கு மெய்யென்றேவேளானவனு மெய்விட்டா—னென்னின் மிக்கோர் துறக்கை விதியன்றோ" எனவும் தாயுமானவடிகள் கூறிய வண்ணம், "மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கிலாழ்ந்து வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தாளெண்ணிக் கைகுவித்துக் கண்களினீர் பொழிந்து நானோர் கணமேனுங் கருதி நினைக்கலந்த துண்டோ" என்றார். உண்டோ - ஓ எதிர்மறை. இங்ஙன மாதர் மயக்கிலாழ்ந்து வருந்திய தன்றித்திருவடித் தியானஞ்செய்து மனமுருகக்கண்களில் நீர்பொழிந்து ஒரு கணப்பொழுதிலேனும் இறைவனோடைக்கியத்தை யடைந்திலாமையால் அதனை விரும்பித் தன்னைத் திருத்தியாட் கொள்ள வேண்டுமென விரந்து நிற்றலின் "செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கிலாயோ" என்றார். மலத்தடையுற்றுச் சுதந்தரவீனராக நிற்றலின், "திருவுளத்தை யறியேனென் செய்குவேனே" என்று தமக்குப் பிறிது புகல் இன்மையை வெளியிட்டனர். உய்குவித்து என்றது முதல்வனருள் குருவாய், வெளிப்பட்டுப் பக்குவிகளுக் கனுக்கிரகிக்கு முறைமை தோற்றுவதாயுள்ளது. "ஆறிவாரெல்லாமகன்ற

நெறியருளும் பேரறிவான் வாராதபின்'' ஞானமிவனுேழிய நண்ணியிடு நற்தலன்ற பானு வொழியப்படின்'' எனத் திருவருட்பயன் கூறுவதுங்காண்க.

**80.** அருள்வெளியி லானந்த வடிவி னுனின் ருடுகின்ற பெருவாழ்வே யரசே யிந்த, மருள்வலையி லகப்பட்ட மனத்தா லந்தோ மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகாணுதே, இருணெறியிற் கோலிழந்த குருட்டு மன்போ லெண்ணுதெல் லாமெண்ணி யேங்கியேங்கி, உருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றே னுய்யும்வகை யறியே னிவ்வொதிய னேனே.

(பதவுரை.) ஆனந்தம் வடிவு இன் ஆல் - சொரூபானந்தத்தினுலே, அருள் வெளி இல் - அருள்வெளியிலுள்ளே, நின்று ஆடுகின்ற - நிலைபெற்றிருந்து நடனஞ் செய்கின்ற, பெரு வாழ்வு ஏ - பெரிய வாழ்வானவனே, அரசு ஏ - எனது தலைவனே, இந்த - இந்த) மருள் வலை இல் - மருளுலகப் பாசவலையிலே, அகம் பட்ட - உட்பட்ட, மனத்தால் - மனசினுலே, அந்தோ - அந்தோ, மதி கலங்கி - புத்தி தெளிவடையாமல், மெய் நிலைக்கு ஓர் வழி - உண்மைச் சன்மார்க்க நிலையடைதற்கு ஒன்ருகிய வழியை, காணுது ஏ - காணுமல், இருள் நெறி இல் - இருட்டு வழியில், கோல் இழந்த - ஊன்று கோலையிழந்த, குருடு ஊமன் போல் - அந்தகனுகிய வொருவூமையைப்போல, எண்ணுதது எல்லாம் - நினையாத விஷயங்களை யெல்லாம், எண்ணி - நினைத்து, ஏங்கி யேங்கி - வாடிவாடி, உருள் - உருள்கின்ற, சகடம் கால் போலும் - சகடத்தின் காலைப்போலும், சுழலா நின்றேன் - சுழலுகின்றேன், உய்யும் வகை - ஈடேறுகின்ற நெறியை, இ - இந்த, ஓதியனேன் - ஓதிபோன்ற அடியேன், இங்கு - இவ்விடத்தில், அறியேன் - அறிகின்றிலேன்; (எ - று.) ஏ இரண்டும் - ஈற்றசைகள்.

(விசேஷவுரை.) அல்லும் பகலும் அனவரதம் இடையருத பரிபூரணுனந்த சொருபராக அருள் வெளியிற்றுண்டவஞ் செய்தலினுலே பிரமன்மால் முதலிய கடவுளர், இருடிகள், முனிவர்கட்கும் பேரின்ப போகப் பெருவாழ்வு வழங்கு மகாதேவனென்பார், ''அருள் வெளியிலானந்த வடிவினுனின்றுடுகின்ற பெருவாழ்வே'' என்றும், ''ஆதிபகவன் முதற்றேயுலகு'' என்ருற்போல எல்லா வுலகங்களுக்கும் முதல்வனுக நிற்றலின் ''அரசே'' என்றும், மாயா காரியமாகிய மருளுலகின் பாசமானது வலை யொத்திருத்தலின், ''இந்த மருள்வலையில்'' என்றும், தம்மை யகப்படுத்திப் பிடித்தலின் பொருட்டு வேடர் பரப்பிய வலையை வலையென்றறியாது வீழ்ந்து பிழைத்தோடும் வழியின்றி யகப்பட்ட விலங்காதிபோல விஷயவிச்சை பாற்பட்டு நீங்குதலின்றித் திகைக்கின்ற மனத்தினுல் கலங்கி யென்பார், ''அகப்பட்ட மனத்தாலந்தோ மதிகலங்கி'' என்றும், பொய்ந் நெறிப்பாசவலை யிலகப்பட்டுத் தியங்குவார்க்கு மெய்ந்நிலை சேரும் வழிகிடைப்பதரி தென்பார், ''மெய்ந்நிலைக்கோர் வழி காணுதே'' என்றும், அகக்கண் ஒளி மழுங்கியதனுல் அஞ்ஞான விருணெறியைக் கடத்துவதற்குத் துணையான அருளுணர்வாகிய கோலையிழந்து துன்பத்தை வெளியிட மாட்டாமை வருந்துகின்ற நிலையா மென்பார், ''இருணெறியிற் கோலிழந்த குருட்டூமன்போல்'' என்றும், அந்நிலையில் பலபலவகை நினைவுகள் தோன்ற உருளுஞ் சகடத்தின் சக்கரக்கால்போலச் சுழன்று தடுமாறி நிற்க நேரிடுவ தென்பார் ''உருள் சகடக்கால் போலுஞ் சுழலா நின்றேன்'' என்றும், பாசவலையினின்று விடுபடும் நெறியை உணரும் உணர்வின்மையும், உணர்த்திவிடு விப்பாரின்மையும் தோன்ற ''உய்யும் வகையறியேன்'' என்றும், மானிட வுருவடைந்தும் இதனிற் பெறும்பேறு பெருமல் வீணுயிருப் பதாயினேன், அருள் கூர்தல் வேண்டு மென்பார், ''ஓதியனேன்'' என்றும் கூறினர். மேற்கோளாக, ''அறிவரு ஞானத் தெவருமறியார் பொறிவழி தேடிப்புலம்பு கின்ருர்கள் நெறிமனையுள்ளே நிலைபெற நோக்கில் எறிமணியுள்ளே யிருக்காது மாமே'' என்ற திருமந்திரக் கருத்தையு முணர்க.

**81.** கற்றவளை தனக்குமுணை வளிக்கு மூன்றன் கருணைநிலை தனையறியேன் கடையே னிங்கே, எற்றவளை யெறும்பேபோற் றிரிந்து நாளு மிளைத்துநின தருள் காணு தெந்தா யந்தோ, பெற்றவளைக் காணுத பிள்ளை போலப் பேதுறுகின் றேன் செய்யும் பிழையை நோக்கி, யிற்றவளைக் கேள்விடல்போல் விடுதி யேல்யா னென் செய்வே னெங்குறுவே னென்சொல் வேனே.

(பதவுரை. கல் தவளை தனக்கு உம் - கல்லினுள்ளே யுதித்திருக்கும் தவளைக் கும், உணவு - ஆகாரத்தை, அளிக்கும் - கொடுக்கின்ற, உன் தன் - உனது, கருணை நிலை தனை - காருணியத்தின் நிலைமையை, அறியேன் - உணரேன், இங்கு எ - இவ் வுலகிலே, கடையேன் - (மக்களுட்) கீழ்மையேன், அ . அந்த, வளை எற்று - வளைகள் எறிந்த, எறும்பு எ போல் - எறும்புகளைப்போல, நாளும் - தினந்தோறும், திரிந்து - அலைந்து, இளைத்து - சரீரமெலிவடைந்து, நினது அருள் காணுது - உன்னுடைய கிருபையை யடையாமல், எந்தாய் - எமது தந்தையே, அந்தோ - ஐயோ, பெற்றவள் ஐ - ஈன்ற தாயை, காணுத - பார்க்கப்பெறுத, பிள்ளைபோல - மகவைப்போல, பேதுறுகின்றேன் - மயங்குகின்றேன், செய்யும் - செய்கின்ற, பிழையை - குற்றங் களை, நோக்கி - ஆராய்ந்து, இல் தவள் ஐ - இல்லறத்துக்குரிய மனையாளை, கேள் - நாயகன், விடல்போல் - நீக்குதல்போல், விடுதியேல் - கை விடுவாயெனில், யான் - நான், என் செய்வேன் - யாது புரிவேன், எங்கு உறுவேன் - எவ்விடத்திற் புகுவேன், என் சொல்வேன் - யாது கூறுவேன்; (எ - று.) எ - ஈற்றசை.

(விசேஷவுரை.) "கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட்டேரைக்கும், விருப்புற்ற முதளிக்கு மெய்யன்"—உருப்பெற்றால், ஊட்டிவளர்க்கானோவோ கெடு வாயன்னுய்கேள், வாட்ட முனக்கேன் மகிழ்" என்றபடி, பெருமான் கருணைநிலையை யறியாத தன்னை முனிந்தவராய், "கற்றவளை தனக்கு முணவளிக்குங் கருணைநிலை தனையறியேன் கடையேன்" என்றார். வளையெற்றும் எறும்புகள் ஆகாரந்தேடத்திரி வதுபோலத் திரிந்து இளைத்த தன்றித்திருவருள் கிடைக்கப்பெறுமையால் தாயைக் காணுத மகவைப்போல வருந்தினேன் என்பார், "எற்றவளை யெறும்பே போற்றி ரிந்து நாளுமிளைத்து நினதருள்காணுதெந் தாயந்தோ பெற்றவளைக்காணுத பிள்ளை போலப் பேதுறுகின்றேன்" என்றார். மனையவள் செய்யும் பிழையைக்கண்டு மகிழ் நன் அவளை நீக்குதல்போல அடிமை பூண்ட தன் பிழையைப் பொறுத்தருளலின்றிக் கைவிடின் உய்வதற்கு யாது செய்தல் கூடும், புகலிடம் எங்குள்ளது, என்ன சொல்ல மாட்டுவேன் என்று திருவருளை யிரந்தபடி, "செய்யும்பிழையை நோக்கி, யிற்றவளைக் கேள்விடல்போல் விடுதியேல் யான் என் செய்வேன் எங் குறுவேன் என் சொல் வேன்" என்றார்:—(மேற்கோள்) ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம், "குழைத்து வந்தோடிக் கூடுதிநெஞ்சே குற்றேவலு டொறுஞ்செய்வான், இழைத்த நாள்கடவாரன் பிலரேனு மெம்பெருமா னென்றெப் போது, மழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகடாமியாது சொன்னலும், பிழைத்தது பொறுத்தொன் றீகிலராகி லிவரலா தில்லையோ பிரானுர்," எனத் திருவருளுக் கிரந்தேத்தினமை காண்க.

---

**82.** அடிமைசெயப் புகுந்திடுமெம் போல்வார் குற்ற மாயிரமும் பொறுத் தருளு மரசே நாயேன், கொடுமைசெயு மனத்தாலே வருந்தி யந்தோ குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன், கடுமைசெயப் பிறர்துணிந்தா லடிமை தன்னைக் கண்டிருத்த லழகன்றே கருணைக் கெந்தாய், செடிமையுளப் பாதகனே னென்செய் வேனின் திருவுளத்தை யறிந்திலேன் திகைக்கின் றேனே.

(பதவுரை.) அடிமை செய - தொண்டுசெய்தற்காக, புகுந்திடும் - அடிமை பூண்டு கொள்ளும், எம்போல்வார் - எம்மையொத்த அடியார்கள் செய்யும், குற்றம் ஆயிரம் உம் - ஆயிரம் பிழைகளையும், பொறுத்து அருளும் - மன்னித்து அருள் செய்கின்ற, அரசு எ - எங்கள் பதியே, நாயேன் - இழிவால் நாய்போன்ற யான்,

கொடுமை செயும் - பொல்லாங்கு செய்கின்ற, மனத்தால் ஏ - மனதினாலே, வருந்தி- துன்புற்று, அந்தோ - ஐயோ, குரங்கு இன் கை - குரங்கினது கையிலுற்ற, மாலை என - பூ மாலைபோல, குலையா நின்றேன் - சீர்குன்றி நிற்கின்றேன், அடிமைதன்னை- அடியேனுக்கு, பிறர் - அயலோர், கடுமை செய துணிந்தால் - கொடுமை செய்யும்படி துணிவாராயின், கண்டு இருத்தல் - பார்த்துக்கொண்டிருத்தல், அழகு அன்று கருணைக்கு - திருவருளுக்கு இது அழகல்ல, எந்தாய் - என் உயிர்த் தந்தையே, செடிமை - பாவமும் அஞ்ஞான இருளும் உடைய, உளம் பாதகனேன் - மனசை யுடைய பாவியேன், என் செய்வேன் - (உய்தற்கு) யாது செய்வேன், நின் திரு உளத்தை - நின் திருவுள்ளக் கருத்தை, அறிந்திலேன் - அறியாமல், திகைக்கின் றேன் - மயங்குகின்றேன்; (எ - று.) ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்றபடி அடியவர் செய்யுங்குற்றங்களை ஆண்டவர் பொருத் தருளலால், "எம்போல்வார் குற்றம் ஆயிரமும் பொறுத் தருளுமரசே" என்றார். அறிவின் மேன்மை யெல்லாம் அது மனத்தின் வசப்பட்டுப் பிரபஞ்சமயக்கிற் சுழலும் போது கெடுதலையும் சிறுமை யுறுதலையு நோக்கி, "கொடுமை செயு மனத்தாலே வருந்தியந்தோ குரங்கின் கை மாலையெனக் குலையா நின்றேன்" என்றார். ஆண்டவன் தன் அடியவர்க்குப் பிறர்தீமை செயப் பார்த்திருத்தல் அருளுக்கழகாகா தென்பார், "கடுமை செயப் பிறர் துணிந்தால் அடிமை தன்னைக் கண்டிருத்தலழகன்றே கருணைக்கு" என்றார். மனத்தை வெல்லுவதற்குத் திருவருட்டுணை யெய்தாமை யின், "செடிமை யுளப்பாதகனே னென்செய்வேன்" என்றும், பெருமான் தன் னைக்குறிக்கொண்டரு ளாமையின், "திருவுளத்தை யறிந்திலேன் றிகைக்கின்றேன்" என்றும் கூறினார். "குற்றமாயிரமும் பொறுத்தருள்வான் பெருமான்" எனற்கு மேற்கோள்: சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், "மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக், குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கை யான் மிகைபல செய்தேன், செற்றமீ தோடுந் திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலா யடியேன், பற்றிலே னுற்ற படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே."

---

83. கூம்பாத மெய்ந்நெறியோ ருளத்தே யென்றுங் குறையாத வின்பளிக்குங் குருவே யாசைத், தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன் தையலார் மையலெனுஞ் சலதி யாழ்ந்து, ஓம்பாம லுவர்நீருண் டுயங்குகின்றே னுன்னடியா ரக்கரைமே லுவந்து நின்றே, தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனு நெய்யுந் தேக்குகின்றா ரிதுதகுமோ தேவ தேவே.

(பதவுரை.) கூம்பாத - குவியாத, மெய் நெறியோர் - உண்மை நெறியின ராகிய சன்மார்க்கிகள், உளத்து ஏ - மனத்தின் கண்ணே, என்றும் - எப்போதும், குறையாத - எஞ்சாத, இன்பு - இன்பத்தை, அளிக்கும் - கொடுக்கின்ற, குரு ஏ - குரு மூர்த்தியே, ஆசை - ஆசையாகிய, தாம்பால் ஏ - கயிற்றினாலே, ஆப்பு உண்டு - கட்டுப்பட்டு, வருந்தி - இடருற்று, நாயேன் - நாய்போல் இழிவுடையேன், தையலார்- மாதர்களுடைய, மையல் எனும் - மோகமென்னப்பட்ட, சலதி - சமுத்திரத்தில், ஆழ்ந்து - மூழ்கி, ஓம்பாமல் - (நன்னீரை) விரும்பாமல், உவர்நீர் - உப்பு நீரை, உண்டு - பருகி, உயங்குகின்றேன் - வருந்துகின்றேன், உன் அடியார் - உன்னடிய ராயினோர், அ கரைமேல் - முத்திக்கரையின்மேல், உவந்து நின்று - விரும்பிநின்று, தீம்பாலும் - இனியபாலும், சருக்கரையும் - பஞ்சதாரையும், தேனும் - மதுவும், நெய் யும் - நெய்யும் போன்ற பேரின்பமாகிய அமுதத்தை, தேக்குகின்றார் - நிரம்ப அனுப விக்கின்றார், தேவதேவே - மஹாதேவே, இது தகுமோ - இது நின்கருணை நீதிக்குப் பொருந்துவதோ; (எ - று.)

(விசேஷவுரை.) என்றுங் சுருங்குதலில்லாது விரிந்துள்ளது சனாதன தரும மாகிய சன்மார்க்க மாதலின் "கூம்பாத மெய்ந்நெறி" எனவும், பல்லண்ட கோடிகட்

குள்வாழும் சீவகோடி முழுதும் ஒருங்கே அனுபவிக்க நேரிடினுங் குறையாது மேன் மேலும் பெருகுகின்ற பேரின்பம் ஆகலின் "குறையாத வின்பம்" எனவும் கூறினர். பாசத்தாலே பந்திக்கப் படுதலின் - ஆசையைத் "தாம்பு" என்றார். தையலார் மையற் கடலி லமிழ்ந்தினோர் உண்டு சுகிக்கும் போகங்களெல்லாம் அறிஞர்கள் வெறுக்குஞ் சிற்றின்பங் களாகலினானும், அவற்றால் விளைவன துன்பமே யாகலினானும், "ஓம்பாம லுவர் நீருண் டுயங்குகின்றேன்" என்றார். அக்கரையாவது - சனனமரணங்களாகிற இக்கரையைத் தாண்டினோர் அடைகின்ற முத்தி நிலையாம். அக்கரைமேல் நிற்கின்ற முத்தர் அனுபவமாகிய பேரின்பம் மிகவும் இனிப்ப தாகலினானும், உவமித்தற்கரிய தாதலினானும், "தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனு நெய்யுந் தேக்குகின்றார்" எனக் கூறினர். அடியராயினோர் அனுபவிக்கும் இன்பம் யானும் அனுபவிக்கற் பாலதாக வும், அதனை யருந்தாது, உவர் நீருண்ணப் பெற்றேன், என்னளவிற் பெருமான் கருணை பிறவாமையினா லென்பார் "இது தகுமோ" என்றார். மேற்கோள்:—அக்கரை மேல் நின்ற அடியார் ஆனந்தானுபவராய் விளங்குதற்குப் பிரமாணம்:—"வெற்றவெறு மானந்த மேவீடே கேவலத்தி னிற்பதுபோலந்த நிலை கழன்றோர்—சிற்போத அண் டங்கடந்த வமுதத்தி னேடுலவும் வெண்டிங்களுங் கிரணமும். "எனக் கண்ணுவுடைய வள்ளலார் அருளியது உம், "அந்த மொன்றில்லா வானந்தம் பெற்றேன்" என மணி வாசகப் பிரபு அருளியது உம் காண்க.

84. வெள்ளமணி சடைக்கனியே மூவ ராகி விரிந்தருளு மொருதனியே விழல னேனைக், கள்ளமனக் குரங்காட்டு மாட்ட மெல்லாங் கண்டிருந்து மிரங்கிலையேற் கவலை யாலே, உள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்ன ருய்யும்வகை யெவ்வகையீ துன்னுந் தோறும், பொள்ளெனமெய் வியர்க்கவுளம் பதைக்கச் சோபம் பொங்கிவழி கின்றதுநான் பொறுக்கி லேனே.

(பதவுரை.) வெள்ளம் - கங்கையின் பிரவாகத்தை, அணி - தரித்த, சடை கனி ஏ - சடையையுடைய பேரின்பப் பழமே, மூவர் ஆகி விரிந்து - பிரமவிட்டுணு ருத்திரர் என்னு முத்தேவர்களாகி விரிந்து, அருளும் - எல்லாச் சீவர்களுக்கும் கருணை யூட்டுகின்ற, ஒரு - ஒன்றாகிய, தனியே - ஏகவஸ்துவே, விழலனேன் ஐ - விழல்போலப் பயனிலியாகிய என்னை, கள்ளம் மனம் குரங்கு - களவுடைய மனமாகிய குரங்கானது, ஆட்டும் - ஆட்டுகின்ற, ஆட்டம் எல்லாம் - எல்லாச் சேட்டை விளை யாட்டுக்களையும், கண்டு இருந்தும் - பார்த்திருந்தும், இரங்க இலை எல் - கருணை கூராதிருப்பா யெனில், கவலையால் ஏ - துன்பத்தாலே, உள்ளம் - அகத்தே, மெலிந்து- மெலிவடைந்து, உழல்கின்ற - சுழலா நின்ற, சிறியேன் - சிறியனாகிய அடியேன், பின்னர் - பின்பு, உய்யும் வகை - சனன மரணங்களைக் கடந்து பிழைக்கும் வகை, எ வகை - எந்த வகையினாலோ (அறிகிலேன்), ஈது - இதனை, உன்னும் தோறும் - எண்ணுந் தோறும், பொள் என - விரைவாக, மெய் வியர்க்க - தேகம் வேர்க்கவும், உளம் பதைக்க - புந்தி துடிக்கவும், சோபம் - தாபமானது, பொங்கி - அதிகரித்து, வழிகின்றது - பெருகிப்பாய்கின்றது, நான் பொறுக்கிலேன் - நான் சகிக்கமுடியாத வனாக விருக்கின்றேன்; (எ.- று.)—ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) "சடைக்கனி" என்றதனால் முடியையுடைய மாதவவேட முதிர்வும், அந்நிலையின்கண் பொருந்திய வேதாந்த வுச்சியிற் சைவ சித்தாந்த நறுங் கனியாய்ப்பழுத்து நிற்கும் இயல்பும், பிறருக்கெய்துதற்கரிய பெற்றியுமுடையதெனத் தானே விளங்குகின்றது. ஏகனாகி நின்றருளும் பெருமான் தனது பெருங்கருணை யாலே மன்னுயிர்களின் வினைக்கீடாகத் தோற்றுவித்தும் காத்தும் சங்கரித்தும் இரட் சித்தல் காரணமாகப் பிரமவிட்டுணு ருத்திரர்களாகத் தோன்றித் தனது முத்தொழில் களும் காணுந்தோறும் அளவு கடந்த புதுமைக் காட்சியைப் பயந்து, காண்பார்க்கு இன்பத்தைத் தருதலினால் "மூவராகி விரிந்தருளு மொருதனியே" என்றார். "மனக் குரங்காட்டு மாட்ட மெல்லாங் கண்டிருந்தும் இரங்கிலையேல்" என்றதனால் - தற்

போதச் சேட்டைகள் அளவு கடந்தன வென்பதும், அவற்றையுடைய மனக் குரங்கு ஆட்ட சிவன் ஆடுகின்ற ஆட்டம் அளவு கடந்தன வென்பதும், அவற்றால் விளைவன பலவகைத் துன்பங்களென்பதும், துன்புறும் சீவனைச் சுகானுபவியாக்கப் பெருமான் அருள் கூர்தல் வேண்டுமென்பதும் பெற்றாம். பெருமான் இரங்கா தொழியில் உய்தி பெறுதலரி தென்பார், "உய்யும் வகை யெவ்வகை" என்றார். மேற்கோள்:—திருவாசகம். "ஈசா பொன்னம்பலத்தாடு மெந்தாயினித்தா னிரங்காயே" எனவும், "இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை, யருங்கற்பனை கற்பித் தாண்டாய்" எனவும், "ஒல்கா நிற்கு முயிர்க் கிரங்கி யருளா யென்னை யுடையானே" எனவும் மணிவாசகப் பிரபு திருவருட் கிரங்கி நின்றிரந்தமை காண்க.

85. எனையறியாப் பருவத்தே யாண்டு கொண்ட வென்னரசே யென்குருவே யிறையே யின்று, மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல மதியறியேன் செய் பிழையை மனத்துட் கொண்டே, தனையறியா முகத்தவர்போ லிருந்தா யெந்தாய் தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய், அனையறியாச் சிறுகுழவி யாகி யிங்கே யடிநாயே னரற்றுகின்றே னந்தோ வந்தோ.

(பதவுரை.) எனை - ஆன்மாவாகிய என்னை, அறியா - அறியாத, பருவத்தே - பருவத்திலே, ஆண்டுகொண்ட - அடிமை யாக்கிக்கொண்ட, என் அரசு ஏ - என் அரசனே, என் குரு ஏ - என்னுடைய தேசிகனே, இறை ஏ - என் தலைவனே, இன்று - இந்நாளில், மனை - மனையாள், அறியாப்பிழை - அறிவின்றிச் செய்த பிழையை, கருதும் - எண்ணுகின்ற, மகிழ்நன்போல - நாயகனைப்போல, மதியறியேன் - அறிவில்லாதேன், செய் பிழையை - செய்த குற்றத்தை, மனத்துள் - திருவுளத்தில், கொண்டு - எண்ணிக்கொண்டு, தனையறியா முகத்தவர் போல் - அறிமுகமில்லாதவர்போல, இருந்தாய் - இருந்தனை, எந்தாய் - என் தந்தையே!, தடம் கருணை பெரு கடல் கு - பெரிய கடல்போன்ற உனது பெரிய கருணைக்கு, தகுமோ கண்டாய் - இது பொருந்துவதாமோ நீ காண்பாயாக; இங்கு ஏ - இவ்வுலகிலே, அடி நாயேன் - நாயனைய அடியேன், அனையறியா-தாயையறியாத, சிறு குழவிஆகி - சிறிய சிசுவையொத்து, அந்தோ அந்தோ - ஐயோ ஐயோ, அரற்றுகின்றேன் - அழுகின்றேன்; (எ - று.)—ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) எனையறியாப் பருவமென்றது - உடலுடனொற்றுமை யுற்ற உயிர் வேறு, உடல்வேறு எனப்பிரித் தறியாத இளம்பருவம்: இளம் பருவத்தில் தன் உடல் பொருளாவியுங் கைக்கொண்டு தனையடிமைகொண்டு, அருணெறியிலே நின்று பயில நிறுவி யாண்டமையால், "ஆண்டுகொண்ட என்னரசே" என்றும், அஞ்ஞான இருளை ஞானவொளியாற் போக்கியருளினமையால், "என்குருவே" என்றும், தனது பெருந்தலைவனாக விளங்குதலின் "இறையே" என்றும் கூறினார். தன்னை இளம் பருவத்தில் ஆண்டு கொண்டிருந்தும், அறியாமையாற் செய்த பிழையைக் கருதி அருளாதிருத்தல் அறிமுகமில்லாதவ ரிடத்துக் கண்ணோட்ட மின்மைபோலத் தோன்றுதலின், "தனையறியா முகத்தவர்போ லிருந்தா யெந்தாய் தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்" என்றார். கண்ணோட்டம் வேண்டுமெனற்கு மேற்கோள்: "கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை யுண்மை யானுண் டிவ் வுலகு" திருக்குறள். பழமை பாராட்டிப் பிழை பொறுத்தலுக்கு மேற்கோள்: "அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின் வழிவந்த கேண்மை யவர்." திருக்குறள்.

86. தீவினைநல் வினையெனும்வன் கயிற்றா லிந்தச் சீவர்களை யாட்டுகின்ற தேவே நாயேன், ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயா லிடருழந்துஞ் சலிப்பின்றி யென்னே பின்னும், நாவினையென் பால்வருந்திக் கறண்டுகின்ற நாய்க்குவமை தோன்ற நின்று மயக்கின் றேனுன், ஆவினைவிட் டெருதுகறந் திடுவோன் செல்லு மறிவிலிக்கு மறிவிலியே னான வாறே.

(பதவுரை.) தீவினை - பாவமும், நல்வினை - புண்ணியமும், எனும் - என்னப் பட்ட, வன் கயிற்றால் - வலிய கயிற்றினாலே, இந்த சீவர்களை - இங்குள்ள மன்னுயிர்த் திரள்களை, ஆட்டுகின்ற - வினைப்பயன்களை நுகர்வதன் பொருட்டு அசைக்கின்ற, தேவே - தேவனே, நாயேன் - இழிந்த நாயனையேன், ஏவினை - அம்பை, நேர் - ஒக்கும், கண் - விழிகளையுடைய, மடவார் - மாதர்கள்மேல் வைத்த, மையல் பேயால் - ஆசையாகிய பேயினால், இடர் உழந்தும் - துன்பமுற்றும், சலிப்பு இன்றி - சலித்த தில்லாமல், என்னே - இஃது என்னை, பின்னும் - மேலும், என்பை - எலும்பினை, நாவால் - நாவினால், வருந்தி - பிரயாசைப் பட்டு, கறண்டுகின்ற - பற்களிற் கறண்டு கின்ற, நாய்க்கு உம் - நாயினுக்கும், நகைதோன்ற நின்று - சிரிப்புத் தோன்றும்படி நின்று, நயக்கின்றேன் - (சாரமற்ற துன்பத்துக்கிடமான மாதர் போகத்தை) விரும்பு கின்றேன், நான் - யான், ஆவினை - பசுவை, விட்டு - கறவாது விடுத்து, எருது - எருதினை, கறந்திடுவான் - பால் கறக்கும்பொருட்டு, செல்லும் - போகின்ற, அறிவு இலிக்கு உம் - அறிவற்ற மூடனிலும் சிறந்த, அறிவிலியேன் - அவிவேகி, ஆன ஆறு - ஆயின வண்ணம்; (எ - று.)—ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) பிரபஞ்சமாகிய நாடகத்தில் இருவினைக் கயிற்றாற் சீவர்களைக் கட்டியாட்டுகின்ற சூத்திரதாரி யென்பார், "தீவினை நல்வினை யெனும் வன் கயிற்ற லிந்தச் சீவர்களை யாட்டுகின்ற தேவே," என்றார். மாதர்கண் மோகத்தினால் சிறி தளவுஞ் சுகமில தென்பார், "மடவார் கண்மையற் பேயால் இடருழந்தும்" எனவும், நாவினால் வருந்தி என்பைக்கடித்துச் சுவைத்துச் சாரத்தை நுகர்ந்ததுபோல நினைந்து மகிழும் நாய்க்குஞ் சிரிப்புண்டாக, அம்மாதர் போகத்திற் சிறிதும் வெறுப் பின்றி மீட்டும் விரும்புகின்ற என் செய்கை யிருந்தவாறென்ன புதுமையுடைத் தென்பார், "சலிப்பின்றி யென்னே பின்னு, நாவினை யென்பால் வருந்திக் கறண்டுகின்ற நாய்க்கு நகை தோன்ற நின்று நயக்கின்றேன்" எனவும், கூறினார். பாலைச் சுரந்து கறந்துகொள்ளத் தரும் பசுவைப்போன்று ஞானமிர்தத்தை யெமக்கருள நீ இருக் கவும், நின்னிடத்திற் பெறுவதொழிந்து, காளை யெருதைப் பால் கறக்கப் புகுவார் போன்று துன்ப நிரம்பிய சிற்றின்ப போகத்துக் கிடனாகிய மாதர்மேல் மையலடைந்த மூடசிகாமணியாகினேன் என்பார், "நான் ஆவினை விட்டெருது கறந் திடுவான் செல்லு மறிவிலிக்கு மறிவிலியே னனவாறே" என்றாற் போலத் திரு நாவுக் கரையரும் அடியில் வருமாறு (தேவாரச் சுருதியில்), "பப்போகிப் பவண னாய்ப் பறித்ததொரு தலையோடே திரிதர்வேனை, யொப்போட வோதுவித்தென் னுள்ளத்தினுள் விருந்தக்குறி காட்டி, யப்போதைக் கப்போது மடியவர்கட் காரமுதா மாரூரை, யெப்போது நினையாதே யிருட்டறையின் மலடுகறந் தெய்த்தவாறே. "மதிதந்த வாரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகியுய்யும், விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே—ஆவியைப், போகாமே தவிர்த்தென்னை யாட்கொண்ட வாரூரரைப், பாவியே னறியாதே பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்த வாறே". எனக் கூறியுள்ளமை காண்க.

87. எம்பெருமா னின்விளையாட் டென்சொல் கேனா னேதுமறி யாச்சிறியே னெனைத்தா னிங்கே, செம்புனலாற் குழைத்தபுலாற் சுவர்சூழ் பொத்தைச் சிறுவீட்டி லிருட்டறையிற் சிறைசெய் தந்தோ, கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த வந்தக் கரண முதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து, வம்பியற்றக் காமாதி யரட்ட ரெல்லா மடி பிடித்து வருத்தவென்றோ வளர்த்தா யெந்தாய்.

(பதவுரை.) எம்பெருமான் - எமது பெருமானே, நின் - நினது, விளையாட்டு - விளையாடலை, என் சொல்கேன் - என்னென வியந்துரைப்பேன், நான் - அடியேன், ஏதும் - அறியத்தக்கதொரு பொருளும், அறியா - தெரியாத, சிறியேன் - சிறிய னேன், எனைத்தான் - அடியேனை, இங்கே - இவ்வுலகிலே, செம் புனலால் - இரத் தத்தால், குழைத்த - ஒன்று படும்படி குழைத்து, புலால் சுவர் - புலாலினாலாகிய

சுவரால், சூழ் - சூழப்பெற்ற, பொத்தை - நவத்துவார முடைய, சிறு வீடு இல் - சிறிய வீட்டிலே, இருட்டு அறையில் - இருண்ட அறைக்குள், சிறை செய்து - அடைத்து வைத்து, அந்தோ - ஐயோ, கம்பம் உற - நடுக்கமுற, பசி தழல் உம் - பசியாகிய தீயும், கொளுந்த - சுட, அந்தக் கரண முதல் - அந்தக் கரண முதலாக உள்ள, பொறி - ஐம் பொறிகளும், புலன் - ஐம்புலன்களுமாகிய, பேய் - பேய்கள், கவர்ந்து - என்போதப் பொருளைக் கிரகித்துக்கொண்டு, சூழ்ந்து - என்னைச் சூழ்ந்திருந்து, வம்பு இயற்ற - இடர்களைச் செய்ய, காமம் ஆதி - காம முதலாவுள்ள, அரட்டர் எல்லாம் - குறுநில மன்னரெல்லாம், மடிபிடித்து - மடியைப் பிடித்துக் கொண்டு, வருத்த என்று ஓ - வருத்தும் பொருட்டோ, எந்தாய் - என் தந்தையே, வளர்த்தாய் - என்னை வளர்த்தனை (சொல்லியருள்); (எ - று.)—தான் - அசை.

(விசேஷவுரை.) சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமாகிய பெரிய ஐந்து கிருத்தியங்களையும் புவன கோடிகளிலுள்ள எண்ணிறந்த சீவகோடிகளின் பொருட்டுச் செய்யுங்கால் சிறிதும் உழைப்பின்றிச் சங்கற்பத்தினால் எளிதாகச் செய்யவல்ல பெருமான் மகாதேவனென்பார், "எம்பெருமானின் விளையாட்டேன் சொல்கேனுன்" என்றார். இச்சரீரம் இல்லிக்குடம்போலச் சிறிய மூன்றரைக் கோடி புரோமத் துவாரத்துடன் நவத்துவாரமு முடையதாய் குருதியும் புலாலும் பிறதாதுக்களும் நிரம்பிய சிறுகுடில் போன்றிருத்தலின், "செம்புனலால் துழைத்த புலாற் சுவர் சூழ் பொத்தைச் சிறுவீடு" என்றார். அஞ்ஞான விருணிரம்பிய அறையாகலின், "இருட்டறை" என்னப்பட்டது. குற்றவாளிகள் சுதந்தர வீனராய்க் காவலராணையின் கீழமைந்து நடக்கச்சிறையில் வைக்கப்படுதல்போல இருவினைக்கீடான இருவகைப் போகங்களையுந் துய்க்கும் வண்ணம் சிவன் த்ரோதான சத்தியின் ஆணையின் கீழமைந்து நடக்க விடுத்துப் புன்மலக் கூரம்பையிலடைத்து வைத்தலின், "சிறை செய்து" எனக் கூறினர். பசித்தழல் - சடராக்கினி: அந்தக்கரணம்—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; பொறிகள்—மெய், வாய், கண், மூக்கு, செவி; புலன்—சத்த, பரிச, ரூப, ரச, கந்தம், இவை சீவான்மாவைத் தம் வசப்படுத்தி, மதியிழந்து திரிந்து சுழலுமாறு செய்யும் பேயியல்புடையன வாதலின், "அந்தக் கரண முதற் பொறி புலப்பேய்" என்றார். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய இக் குணங்களாலும் குறுநில மன்னர்களைப்போல அங்கதேசத்திற் சிற்றரசு செய்து சீவான்மாவை வருத்தி நிற்றலின், "காமாதி யரட்ட ரெல்லாம் மடிபிடித்து வருந்த" என்றார். இக்கருவிகள் என்னை வருத்தித் திருவடிக்கு நான் ஆளாகா வண்ணந் தடுக்கும்பொருட்டு என்னை வளர்ப்பது நின் கருணைக்கழகன் றென்பார், "அரட்ட ரெல்லாம் மடிபிடித்து வருந்த வென்றே வளர்த்தா யெந்தாய்" எனக் கூறினர். மேற்கோள் தேவாரத்தில்: "என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டென்னையோ ருருவமாக்கி, யின்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்டென் னுள்ளங் கோயிலாக்கி, யன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த வாரூரர்தம், முன் பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே" எனத் திருநாவுக்கரையர் திருவாய் மலர்ந்தருளியது ஒப்பு நோக்கத்தக்கது.

88. அம்பரத்தே யானந்த வடிவா லென்று மாடுகின்ற மாமணியே யரசே நாயேன், இம்பரத்த மெனுமுலக நடையி லந்தோ விடருழந்தேன் பன்னெறியி லலையிழுத்தே, பம்பரத்தி லுழலுநிலைப் படுத்து மிந்தப் பாவிமன மெனக்குவயப் படுவ தில்லை, கொம்பரற்ற விளங்கொடிபோற் றளர்ந்தே னென்னைக் குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ.

(பதவுரை.) அம்பரத்து ஏ - சிதாகாசத்திலே, ஆனந்தம் வடிவு ஆல் - பேரின்ப வுருவத்தினை யுடைமையால், என்றும் - அனவரதம், ஆடுகின்ற - நடமிடுகின்ற, மா மணி ஏ - அழகிய நடராச மாணிக்கமே, அரசு ஏ - எமது தலைவனே, நாயேன் - நாயை யனையேன், இம்பர் - இப் பூதலத்தார், அத்தம் எனும் - அரு நெறியல்லது

வழி யெனப்படும், உலகம் நடை இல் - கு மார்க்கத்தில், அந்தோ - ஐயோ, இடர் உழந்தேன் - துன்புற்றேன், எனை - என்னை, பல் நெறி இல் - பல துறைகளில், இழுத்து ஏ - இழுத்துச் சென்றே, பம்பரத்தின் - சிறுவர் கைப் பம்பரத்தைப்போல, ஆடி - ஆடலுற்று, அலை படுத்தும் - அலையச் செய்கிற, இந்த பாவி மனம் - இந்த மனமாகிய பாவி, எனக்கு வயம் படுவது இல்லை - எனக்கு வசமாதலில்லை (அதனால்), கொம்பர் அற்ற - கொழு கொம்பு அல்லது பற்றுக்கோடு இழந்த, இளங்கொடிபோல் - இளைய கொடியைப்போல, தளர்ந்தேன் - தளர்ச்சி யுற்றேன், என்னை - அடியேனை, குறி கொள்ள - உன் அடியானென்று இலக்குவைக்க, கருதுதியோ - எண்ணுவாயோ, குறித்திடாயோ - அல்லது குறிக்கொள்ளக் கருதமாட்டாயோ (கூறியருள்); (எ - று.) —ஏ - தேற்றம் பொருளது.

(விசேஷவுரை.) தேவரும் முனிவரும் இருடிகளும் சித்தரும், முத்தரும், ஏனைச் சீவரும் யாவரும் இருவினைப் போகங்களை நுகருமாறு புரிந்தருளும் பஞ்சகிருத்திய நாடகத்தை யனுதிதொட்டு உடையனாகலான், "என்று மாடுகின்ற மணியே" என்றார். இறத்தல் பிறத்தல்களுக் கேதுவான பாசாடவியாக வுலக நடை தோன்றுதலால், "இம்பர் அத்தம்" எனப்பட்டது. அத்தம் - காடு எனினும் பொருந்தும் பன்னெறி - பஞ்சேந்திரிய வீதிகளினுஞ் சென்று ஐம்புல வேடருடன் கூடி யாடி யுழல்கின்ற பலவகைச் சிற்றின்ப நெறிகளென்க: மனம் பலவகைச் சிற்றின்ப நெறிகளிற் செல்லும்போது பம்பரத்தைப்போல ஆடி அறிவைத் தன் பின்னர் தொடர விழுத்துப் போந்து அலையச்செய்வதனால், "எனையிழுத்தே பம்பரத்தி னாடியலைப் படுத்து மிந்தப் பாவி மனம்" என்றார். சிந்தையை யடக்கிச் சும்மாவிருக்குந் திறமரிய தென்பார் "பாவிமனம் எனக்கு வயப்படுவதில்லை" எனக்கு ஆதாரமாகிய திருவருள் பெறாது அலமருதனோக்கி, "கொம்பரற்ற விளங்கொடி போற் றளர்ந்தேன்" எனவும், பெருமான் தன் அடியனாகத் தன்னைக் குறிக்கொள்ளாத வழி யுய்யும் வகையின்றென்பது தெளிந்தமையின், "என்னைக் குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்திடாயோ" எனவும் கூறினார். மேற்கோள்: திருநாவுக்கரையரும் தேவாரத்தில்: "கண்டியிற் பட்ட கழுத்துடையீர் கரிகாட்டி விட்ட, பண்டியிற் பட்ட பரிகலத் தீர்பதி வீழி கொண்டீர், உண்டியிற் பட்டினி நோயி லுறக்கத்தி லும்மை யையவர், கொண்டியிற்பட்டு மறக்கினு மென்னைக் குறிக்கொண்மினே" என்றும், "செறிவிலேன் சிந்தை யுள்ளே சிவனடி தெரிய மாட்டேன், குறியிலேன் குணமொன் றில்லேன் கூறுமா கூற மாட்டேன் நெறிபடு மதியொன் றில்லே னினையுமா நினைய மாட்டேன், அறிவிலே னயர்த்தும் போனே னுவடு துறையு ளானே" என்று சிவபெருமான் தம்மைக் குறிக்கொள்ளும் வண்ணம் துதித்தமை காண்க.

---

**89.** கண்ணுடைய நுதற்கரும்பே மன்றி லாடுங் காரணகா ரியங்கடந்த கடவுளே நின், றண்ணுடைய மலரடிக்கோர் சிறிது மன்பு சார்ந்தேனோ செம்மரம் போற் றணிந்த நெஞ்சேன், பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேனென் பேதைமையை யென்புகல்வேன் பேய னேனைப், புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளொன் கேனோ புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே.

(பதவுரை.) கண்ணுடைய - கண் படைத்த, நுதல் - நெற்றியை யுடைய, கரும்பு ஏ - கரும்பை யொப்பவனே, மன்று இல் - சிற்சபையில், ஆடும் - நடமிடுகின்ற, காரணம் காரியம் - காரணகாரிய மிரண்டையும், கடந்த - நீத்த, கடவுள் ஏ - தெய்வமே, நின் - உனது, தண் உடைய - குளிர்ச்சியுடைய, மலர் அடிக்கு - மலர் போலுந் திருவடிக்கு, ஓர் சிறிதும் - ஒரு சிற்றளவும், அன்பு சார்ந்தேன் ஓ - அன்பு பொருந்தினேனோ, செம் மரம் போல் - செம் மரத்தைப்போல, தணிந்த - தழைத்த அல்லது பருத்துள்ள, நெஞ்சேன் - மனத்தினனாகி யுள்ளேன், பெண்ணுடைய மயல் ஆல் ஏ - பெண்ணாசையாலே, சுழல்கின்றேன் - உழல்கின்றேன், என் - எனது பேதைமையை - அறிவின்மையை, என் புகல்வேன் - யாதென்று கூறுவேன், பேய்

அனையை - பேய் அனைய என்னை, புண் உடைய புழு - புறத்தே இரணமுடைய கிருமியை, விரும்பும் - தின்ன விச்சிக்கின்ற, புள் என்கேனோ - பறவை யென்று சொல்லுகேனோ, புலை - புலைத்தன்மையை, விழைந்து-வேண்டி, நிலை - நிற்கு நிலையை, வெறுத்தேன் - இகழ்ந்தேன், புலையனேன் - புலைத்தொழிலுடையேன்; (எ - று.) —ஈ - ஈற்றசை.

(விசேஷவுரை.) பிரபஞ்சமாகிய காரியத்தையும், அதன் காரணத்தையுங் கடந்தவன் கடவுள் ஆதலாற், "காரண காரியங் கடநத கடவுள்" என்றார். திருவடிக்குச் சிறிது மன்பு செய்யாமை கருதித் தன்னைத் தானிகழுமரபால் ஓரறிவுடைய மரமெனப் பருத்த மனத்தே னென்பார், "தண்ணுடைய மலரடிக் கோர் சிறிது மன்பு சார்ந்தேனோ செம் மரம் போற் றணிந்த நெஞ்சேன்" என்றார். மாதர் மையலைக் கடக்க வறியே னென்பார், "பெண்ணுடைய மயலாலே சுழல் கின்றேன்" எனவும், இங்ஙனஞ் சுழல் வார்க்குப் பேதைமை அதிகரிக்கு மென்பார், "என் பேதைமையை என் புகல்வேன்" எனவும், அல்குற் புண்ணுடைய புழுவனைய மடவாரை விரும்பும் பறவையனையே னென்பார், "புண்ணுடைய புழு விரும்பும் புள்ளென் கேனோ" எனவும், நிற்கத்தக்க நிலையினிழிந்த புலையேன் என்பார், "புலை விழைந்து நிலை வெறுத்தேன் புலையனேனே" யெனவும் கூறினார். தனது நல்லொழுக்கத்துக் காகாதவொன்றைக் காதலிப்பதும் தனக்குக் கேடு தருவதனைக் கைக்கொண்டு, பெறுதற்கரிய சிவப்பிரசாதமாகிய ஆக்கந் தருவதனைக் கைவிடுதலும் பேதைமை யுண்மிக்கதாகலின், "என் பேதைமையை யென் புகல்வேன்" எனப் பொருள் கூறலு மொன்று. என்னை, பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண் டூதியம் போக விடல்: "பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல்" எனப் பொய்யாமொழித் திருக்குறள் ஓதலாலென்க." நிலையினிழிந்தார் மேன்மை குன்றுவர் எனற்கு மேற்கோள்: "குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ குன்றி யனைய செயின். தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையி னிழிந்தக் கடை." திருக்குறள்.

90. பொன்னுடையா ரிடம்புகவோ வவர்கட் கேற்கப் பொய்மொழிகள் புகன்றிடவோ பொதிபோ லிந்தக், கொன்னுடையா வுடல்பருக்கப் பசிக்குச் சோறு கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச, மின்னிடையார் மூடைச்சிறுநீர்க் குழிக்கணந்தோ வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான், என்னுடையா யென்னுடையா யென்னை யிங்கே யெடுத்துவளர்த் தனையறியே னென்சொல் வேனே.

(பதவுரை.) பொன் உடையார் இடம் - செல்வ முடையார் வசிக்கு மாளிகையுள், புகவோ - செல்லவோ, அவர்கள் கு - அச்செல்வர்கட்கு, ஏற்க - பொருந்தும்படி, பொய் மொழிகள் - பொய்ப் புகழ்மொழிகளை, புகன்றிடவோ - சொல்லவோ, பொதிபோல் - பொதிபோலவும், இந்த - இந்த, கொன் - பயனில்லா, உடல் - உடலானது, உடையா - வேலமரம்போலவும், பருக்க - தூலிக்க, பசிக்கு - பசிநோயாற்றுதற்கு, சோறு - உணவை, கொடுக்கவோ - ஊட்டவோ, குளிர்க்கு - குளிரை நீக்குதற்கு, ஆடைகொளவோ - வஸ்திர முடுக்கவோ, வஞ்சம் - கொடுமையுடைய, மின் இடையார் - மின்னுப்போலும் இடையுடைய மடவார்கள், மூடை - நாற்றமுடைய, சிறு நீர் - சிறு நீர்பாயும், குழிக்கண் - அல்குற் குழியில், அந்தோ - ஐயோ, வீழ்ந்திடவோ - வீழவோ, தாழ்ந்து - (அதனால்) தாழ்மையடைந்து, இளைத்து - மெலிந்து, விழிக்கவோ - மயங்கித் தியங்கவோ, என் உடையாய் - என்னை யுடையவனே, என்னை - அடியேனை, இங்கு ஏ - இவ்வுலகிலே, எடுத்து - ஆணவக் கருவறையினின்றும் தூக்கிவெளிவிட்டு, வளர்த்தனை - வளர்த்தாய், அறியேன் - திருவுள்ளக் கருத்தை யறிகிலேன், என் சொல்கேன் - ஏழையேன் என்னிசைக்கவல்லேன்; (எ - று.) —தான் - அசைமொழி.

(விசேஷவுரை.) நம்பனடியார்க்கு அவர் குறிப்புணர்ந்து உதவாது பிறநெறிகளிற் போக்கித் தாம் பெற்ற செல்வத்தை நன்றியில் செல்வமாக்குந் திருவுடையார் மனைக்குச் செல்லுதலை வெறுத்தமையான், "பொன்னுடை யாரிடம் புகவோ" எனவும், அத்திருவாளர் அவர் பொருள்கொடா வழியுங் கொடுப்பாரென மனம் பொருந்தப் புகழ்ந்து வாழ்த்துதலின் மானிடம் பாடியிழிவுறுங் கேடுள்ளதாகலான், "அவர்கட் கேற்கப் பொய்ம் மொழிகள் புகன்றிடவோ," எனவும், செவிக்கினியதும் அறிவு விருத்தி யுறவினியதுமான ஞானமிர்த உணவு விரும்பிக்கொள்ளத் தக்கதாகலான், "பொ-றிபோலிந்தக் கோன்னுடையா வுடல் பருக்கப் பசித்துச்சோறு கொடுக்கவோ" எனவும், நித்தியத்துவமாகிய ஆடையை யுடுத்துச் சனன மரணக் குளிரையும் வெப்பத்தையும் மாற்ற விரும்புதலான், "துளிர்க்கீகாடை கொளவோ" எனவும், முத்தித் திருவொடு முயங்கிச் சிற் சுகோதயவாரியுண் மூழ்கி யிருமாந்து மெலிவனைத்து நீங்கி மயங்கா வழியாகிய சன்மார்க்கத்தினின்று மெய்ஞ்ஞான வாழ்விற் சிறந்து வாழ விரும்பினமையான், "வஞ்ச மின்னிடையார் மூடைச் சிறுநீர்க் குழிக்கணர்தோ வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்கவோ" எனவும் கூறினார். கேவலாவத்தையி னின்ற சீவனை அணுவைத் தனது பேரருளாற் சகலாவத்தைக்குக் கொணர்ந்து தநுகரண புவன போகங்களைத் தந்து வளர்க்குந் தலைவர் மகாதேவராகலான், "என்னுடையா யென்னுடையா யென்னையிங்கே யெடுத்து வளர்த்தனை" என்றார். அறியேன் - என்பது பண்டை யூழ்வலியினைத்தெனை வறியாமையையும், என் சொல்கேன் என்பது சுதந்தா வீனத்தையும் விளக்குகின்றன. என்னுடையாய் பொன்னுடையா ரிடம்புகவோ யென்னை யிங்கே யெடுத்து வளர்த்தனை யென்றதனால், பொன்னுடையாரிடம் புகவன்று சித்திமுத்திகளாகு மகதைஸ்வரியங்களை வழங்கவல்ல நின் திருச் சமுகத்தை யடைவதற்காக எனவும், பொய்ம் மொழிகள் புகன்றிடவோ என்றதனால் நின்னை யடைந்து நின் மெய்ப்புகழைப் பாடுதற்காக எனவும், பொருள் பயந்து, ஒன்றனை யொழித்து மற்றொன்றை விளக்குதலால்—புகவோ புகன்றிடவோ என்பவற்றீற்று ஓகாரங்களோடு மற்றைய ஓகாரங்களும் ஒழியிசைப் பொருளில் வந்தனவாம். மேற்கோள்: நன்றியில் செல்வம் எனற்கு:—"நச்சம் படாத வன் செல்வ நடுவூருள் நச்சு மரம் பழுத்தற்று". "அற்றார்க் கொன்றற்றாதான் செல்வ மிக நலம் பெற்றாடமியன்ற தற்று. (திருக்குறள்). உலோபியாகிய செல்வரைப் புகழ்தல் கூடாதெனற்கு, "மிடுக்கிலாதானை வீமனே விறல் விசையனே வில்லுக்கிவனென்று, கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை, பொடிக்கொண்மேனி யெம் புண்ணிய னெந்தைபுகலூர் பாடுமின் புலவீர்காள், அடுக்குமேலமருலக மாள்வதற் கியாது மையுற வில்லையே.—(தேவாரம்). கேள்வி யுணவே சிறந்ததென்பதற்கு:—செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினுமென்" செவிக்குண வில்லாத போழ்து சிறிது, வயிற்றுக்குமீயப் படும்". திருக்குறள். "எப்பிறப் பாயினு மேமாப் பொருவற்கு, மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பிற் கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண் நிற்றலுங் கூடப்பெறின். (அறநெறிச்சாரம்).

---

91. வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ விந்த மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டு, மருகணைத்துக் கொளப்பெண்பே யெங்கே மேட்டுக் கடைத்திடவெண் சோறெங்கே யாடையெங்கே, யிருகணுக்கு வியப்பெங்கே வசதி யான விடமெங்கே யென்றுதிரிந் திளைத்தே னல்லா, லொருகணத்து முனைநினைத்த துண்டோ வென்னை யுடையானே யெவ்வகைநா னுய்யு மாறே.

(பதவுரை.) வருகணத்து - அடுத்த கணப்போதில், இந்த - இந்த, மலம் கூடு - மல நிரம்பிய சரீரம், வாழ்ந்திடுமோ - வாழா நிற்குமோ, விழுமோ - இறக்குமோ, என்று - என்று, அறிஞர் எலாம் - அறிவுடையோ ரெல்லாரும், வருந்த-விசனமுற்றழ, கேட்டும் - கேட்டிருந்தும், அருகு - பக்கத்தில், அணைத்துகொள - ஆலிங்கனஞ் செய்வதற்கு, பெண்பேய் எங்கே (என்று) - பெண்ணாகிய பேய் எங்குள்ள தெனவும்,

மேட்டுக்கு - வயிற்றினுக்கு, அடைத்திட - நிறுத்தற்கு, வெண்சோறு - வெண்மையாகிய அன்னம், எங்கே (என்று) - எங்கு கிடைக்கும் எனவும், ஆடை யெங்கே (என்று) - உடுத்திக்கொள்ள வத்திரம் எங்குகிடைக்கு மெனவும், இருகணுக்கு - இரண்டு நேத்திரங்களுக்கும், வியப்பு - அதிசயக் காட்சிகள், எங்கே (என்று) - எவ்விடத்து நிகழ்வன எனவும், வசதியான - வசிப்பதற்கு இரமியமான, இடம் எங்கே என்று - தலம் எங்குள்ள தெனவும், திரிந்து - தேடி யலைந்து, இளைத்தேன் அல்லால் - மெலிந்தேன் அல்லது, ஒரு கணத்தும் - ஒரு கணப்போதிலேனும், உனை நினைந்தது உண்டோ - உன்னைத் தியானித்த துண்டோ, என்னை - அடியேனை, உடையானே - அடிமையாக வுடைய பெருமானே, நான் - அடியேன், உய்யும் - ஆறுகதியடையுமாறு, எவ்வகை - எவ்வாறு (கூறுக); (எ - று.)

(விசேஷவுரை.) அநித்திய வுலக போகங்களை விரும்பாது நித்தியமான சிவபோக மொன்றையே விரும்பி முயலும் பெரியாரனைவரும் இம்மல தேகத்தின் நிலையாமையை நினைந்து வழுத்துவ ரென்பார், "வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ விந்த மலக்கூடடென்றறிஞ ரெலாம் வருந்த" எனவும், யான் அவ்வறிஞரைப்போல நித்தியமான சிவபோக வேட்கையுற்று முயலாமல் பெண் பேயெங்குள்ள தெனவும், சோறு ஆடை கட்கினிய காட்சி, வாச ரம்யமான மாளிகை யெங்குள வெனவுந் தேடித்திரிந்திளைத்த அவிவேகியாயினேன் என்பார், "அருகணைத்துக் கோளப்பெண்பே யெங்கே மேட்டுக் கடைத்திடவெண் சோறெங்கே யாடை யெங்கே, இருகணுக்கு வியப்பெங்கே வசதியான விடமெங்கே, யென்று திரிந் திளைத்தேன்" எனவும், நித்திய வீட்டை வழங்கு முதல்வனைச் சிறிது நினையாதவர் எங்ஙனமுய்வ தென்பார், "ஒரு கணத்தும் உனை நினைந்ததுண்டோ வென்னையுடையானே யெவ்வகை நானுய்யுமாறே" எனவும் கூறினர். வாழ்ந்திடுமோ விழுமோ - இவ்வெதிர் காலவினை முற்றுக்களின் ஈற்றிலுள்ள ஓகாரங்கள் இரண்டும் சரீரத்தின் அநித்திய மிகுதியை விளக்குதலால் இழிவு சிறப்புப் பொருளில் வந்தன. கேட்டும்: இதில் உம் இழிவு சிறப்பு. எங்கே: எகாரம் வினாப் பொருளது. உண்டோ : ஓகாரம் - எதிர்மறை. ஒரு கணத்தும்: உம் முற்று. மேற்கோள். "சரீர நிலையாமை யுடைத்தெனற்கு:—ஒரு பொழுதும் வாழ்வததியார் கருதுப கோடியு மல்ல பல" "குடம்பை தனித்தொழியப்புட் பறந்தற்றே யுடம்போடுயிரிடை நட்பு. இறைவன் வழி படார்க்கு அருள் இலன் எனற்கு மேற்கோள்,—குணகுந் தென்றிசைக் கண்ணுங் குடபாலும் வடபாலும், கணக்கென்ன வருள் செய்வார் கழிந்தோர்க்கு மொழிந்தோர்க்கும், வணக்கஞ்செய் மனத்தராய் வணங்காதார் தமக்கென்றும், பிணக்கஞ் செய் பெருமானூர் பெருவேளூர் பிரியாரே":—தேவாரம். ஈசனை நினையார் உய்வகை யடையார் எனற்கு:—"வாடிவாழ்வ தென்னுவது மாதர்பால் ஓடிவாழ் வினையுள் கிறீர் நாடொறுங், கோடி காவனைக் கூறிரேற் கூறீனேன் பாடி காவலிற் பட்டுக் கழிதிரே, நாடி நாரணனுஞ் முகன் வானவர் தேடி யேசற வுந்தெரியாத தோர், கோடி காவனைக் கூறாத நாளெலாம் பாடி காவலிற் பட்டுக் கழியுமே. தேவாரம்.

92. பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப் புவிநடையிற் பற்பலகாற் போந்துபோந்து, நென்மலையோ நிதிமலையோ வென்று தேடி நிலைகுலைந்த தன்றியுனை நினைந்து நேடி, மன்மலையோ மாமணியோ மருந்தோ வென்று வழுத்தியதேயில்லையிந்த வஞ்ச நெஞ்சங், கன்மலையோ விரும்போசெம் மரமோ பாறைக் கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ.

(பதவுரை.) பொன்மலையோ - மகாமேருவோ, சிறிது என - (அகல நீளங்களாற்) சிறிய தென்னுமாறு, பேராசை பொங்கி - பேராசை யதிகரிக்கப் பெற்று, புவி நடையில் - உலக நடையில், பல்பலகால் - அனந்தந்தரம், போந்து போந்து - சென்று சென்று, நெல் மலையோ - நெல் மலையளவினதோ (என்றும்), நிதிமலையோ வென்று - திரவியம் மலையளவினதோ வென்றும், தேடி - சம்பாதித்து, நிலை குலைந்

தது அன்றி - நிற்கும் தவநிலை குலையப் பெற்றதல்லது, உனை - உன்னை, நினைந்து - (அடையுமாறு) தியானித்து, நேடி - (இறைவன் எங்குளானென்று) தேடி, மன் மலையோ - நிலை பெற்ற அசலப்பொருளோ, மா மணியோ - பெறுதற்கரிய மாணிக்கமோ, மருந்தோ என்று - பிணிதீர்க்கவல்ல மருந்தோ வென்று, வாழ்த்தியதே இல்லை - துதித்தது சிறிதும் இல்லை, இந்த - (இத்தன்மையுடைய) இந்த, வஞ்சம் - வஞ்சத்தையுடைய, நெஞ்சம் - என் மனமானது, கல் மலையோ - (உருகாதவயிரத்தினால்) கல்லினாலாகிய மலையொப்பதோ, இரும்போ - இரும்பை யொப்பதோ, செம் மரமோ - திண்ணிய செம்மர மொப்பதோ, பாறை கரு கல்லோ - கற்சாரங்கத்துள் வலிய கருங்கல்லை யொப்பதோ, (அல்லது) முருடு கட்டையேயோ - விறகுக்காவதொரு கட்டையன்னதோ, பராய் - நீ பார்த்தருளுக; (எ - று.)

(விசேஷவுரை.) ஆசைக்கோ ரளவில்லை யென்பார், "பொன்மலையோ நிறைதெனப் பேராசை பொங்கி" எனவும், பொருளீட்டு முயற்சியில் அடிக்கடி சஞ்சரித்தே னென்பார், "புவி நடையிற் பற்பலகாற் போந்து போந்து" எனவும் உணவும் பொருளுமிகத் தேடினே னென்பார், "நென்மலையோ நிதிமலையோ வென்று தேடி" எனவும்; பகிர்முக நோக்கினால் அகமுகத் தவநிலைகெட்ட தென்பார், "நிலைகுலைந்த தன்றி" எனவும், உன்னை நினைந்து வாழ்த்த மறந்தே னென்பார், "உனை நினைந்து நேடி மன்பமலையோ மாமணியோ மருந்தோ வென்று வாழ்த்தியதே யில்லை" எனவுங் கூறினார். மலையும், இரும்பும், மரமும், பாறைக் கருங்கல்லும் முருட்டுக்கட்டையு மன்ன நெஞ்சத்தை யெனக்கு வழங்கியது நின் கருணைக்கழகோ இதனைத்திருத்தி நன் மனமாம்படி கண்ணோக்கஞ் செய்தருள் என மகாதேவர் திருவருளிரக்கத்தை யாசித்தமையினாற் "பராய்" என்றார். பராய் குறுக்கல் 'விகாரம்: மேற்கோள் தேவாரம்: படுகுழிப் பவ்வத்தன்ன பண்டியைப் பெய்தவாற்றாற், கெடுவதிம் மனிதர்வாழ்க்கை காண்டொறுங்கேது கின்றேன், முடுகுவரிருந் துணைவர் மூர்க்கரே யிவர்களோடு, மடியனேன் வாழமாட்டேனாரூர் மூலட்டனீரே—உயிர் நிலையுடம் பேகாலா வுள்ளமே தாழியாகத், துயரமே யேற்றமாகத் துன்பக்கோ லதனைப் பற்றிப், பயிர்தனைச் சுழியவிட்டுப் பார்க்குநீ ரிறைத்துமிக்க, அயர்விலா லவர்க்காற்றேனாரூர் மூலட்டனீரே—முன்னெஞ்ச மின்றி மூர்க்கராய்ச் சாகின்றார், தன்னெஞ்சந் தமக்குத் தாமிலாதவர், வன்னெஞ்சம் மதுநீக்குதல் வல்லீரே, யென்னெஞ்சி லீசனைக் கண்ட துள்ளமே—வென்றானைப் புலனைந்து மென்றீவினைக், கொன்றாளைக் குணத்தாலேவணங்கிட, நன்றாநன் மனம் வைத்திடு ஞானமா, மொன்றானைக் கண்டுகொண்ட தென்னுள்ளமே. இத்திரு விருத்தங்கள் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கவையாம்.

93. தம்மைமறந் தருளமுத முண்டு தேக்குந் தகையுடையார் திருக்கூட்டஞ் சார்ந்து நாயேன், வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டி லென்றுஞ், செம்மையெலாந் தருமௌன வணைமேற் கொண்டு செறியிரவு பகலொன்றுந் தெரியா வண்ணம், இம்மையிலே யெம்மையினுங் காணாச் சுத்த வின்பநிலை யடைவேனோ வேழை யேனே.

(பதவுரை.) தம்மை மறந்து - அறிவாகிய தம்மை நினைப்ப தொழிந்து, அருள் அமுதம் உண்டு - அருளாகிய அமுதத்தைப் பருகி, தேக்கும் - உள்ள நிறைவுள்ள, தகை உடையார் - பெருமையுடைய சாதுக்கள், திருக்கூட்டம் சார்ந்து - சிறந்த சங்கத்தையடைந்து, நாயேன் - நாயை யனையேன், வெம்மை எலாம் - சனன மரணத் துன்பக் கொதிப்பு முழுதும், தவிர்ந்து, மனம் - உள்ளம், குளிர - சாந்தமுற, கேள்வி - ஞானநூற் சிரவணமாகிய, விருந்து அருந்தி - செவியினுணவைப் புசித்து, மெய் அறிவு ஆம் - மெய்யுணர்வாகிய, வீட்டில் - மோக்க வீட்டின்கண், என்றும் - எப்போதும், செம்மை எலாம் தரும் - பெருமை முழுதும் தரவல்ல, மவுனம் அணை - மவுனமாகிய அமளியின், மேல்கொண்டு - சயனித்து, செறி - நெருங்கிய, இரவு - கேவலமாகிய இரவும், பகல்-சகலமாகிய பகலும், ஒன்றும் தெரியாவண்ணம்-ஒரு சிறிதுந்தோன்றாத வண்ணம், இம்மையில் ஏ - இப்பிறப்பிலே, எம்மையின் உம் - முன்னர்க்கழிந்த

பிறவிகளுளொன்றன் கண்ணும், காணா - கண்டறியாத, சுத்தம் - பந்த நீங்கிய முத்திக்குரிய, இன்பம் நிலை - பேரின்ப அனுபவமுள்ள சாக்கிராதீத நிலையை, ஏழையேன் - எளியேன், அடைவேனோ - பெறுவேனோ; (எ - று.)

(விசேஷவுரை.) சர்வ பரிபூரண வகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமொன்றையே நினைந்து, தம்மை அச்சிவத்தின் வேறானதொரு முதலென வெண்ணியிருந்த போதத்தை யொழித்தலால், "தம்மை மறந்து" எனவும், தங்கள் ஐயறிவாலும் நுகரும் விடயங்களாகின்ற சுத்த பரிச ரூப ரச கந்தங்களிலும், அகத்தும் புறத்தும், தன்மை முன்னிலை படர்க்கையிலும் அருள்விளக்கத்தையே கண்டு அவ்வருளமுதத்தையே பானம் செய்தலால், "அருளமுத முண்டு" எனவும், அவ்வருட் பூரணத்தினோடு தாம் நிறைதலினால், "தேக்கிய" எனவும், அருட் பெருமை யடைந்துள்ளமையால் "தகையுடையார்" எனவும், அன்னோர் சங்கமே சாதுக்கள் சங்கமாதலால் "திருக்கூட்டம்" எனவும், அச்சங்கத்தைச் சார்தலால் துர்ச்சங்க நிவர்த்தியுண்டா மென்பது தோற்ற "சார்ந்து" எனவும், அங்ஙனஞ் சார்ந்தவர் பவக்கோடை வெப்பத்தினீங்கலால் "நாயேன் வெம்மையெலா நீங்கி" எனவும், அவ்வளவில் சாந்தி உண்டாவதனால், "மனங்குளிர" எனவும், சாதுக்களோடு உசாவுதலானும் ஆன்ம விசாரம் செய்தலானும் நிகழும் சிரவணமாகிய விருந்து செவிக்கமுதமாதலால், "கேள்விவிருந் தருந்தி" எனவும், அவ்வுணவை உண்ட பின்னர் சாஸ்வத சொர்க்கவீட்டிலே மௌனமாகிய மலரணைமேற் சயனித்தலால், "மெய்யுணர்வாம் வீட்டிலென்றுஞ் செம்மையெலாந் தரு மவுன வணைமேற்கொண்டு" எனவும், நினைப்பு மறப்பாகிய சகல கேவலங்கள் அங்குதாக்கற் றிருத்தலின், "இரவு பகலொன்றும் தெரியாவண்ணம்" எனவும், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ வென்னுமைய வுணர்வால் இம்மானிட சனனத்திலடைந் தனுபவிக்க வேண்டுதலால், "இம்மையிலே" எனவும்; கழிந்த பல கீழ் பிறவிகளின் எய்தவொண்ணாத சுத்தவின் பத்தின் அனுபவநிலை யடைதல் உட்கோளாதலால், "எம்மை யினுங்காணாச் சுத்தவின்ப நிலை அடைவேனோ" எனவும், இந்நிலையாகிய அழிவற்ற மகதைசுவரியத்தைப் பெறாது நிற்றலால் "ஏழையேனோ" எனவும் கூறினர். இம்மகோ உன்னத நிலையை ஏழையேன் அடைவேனோ மகாதேவனே நீ திருவாய் மலர்ந்தருள்க என்பது கருத்து. மேற்கோள்: தம்மை மறந்து என்பதற்கு: "நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார், வஞ்சம தறுத்தருளு மற்றவனை வானோர், அஞ்சமுது காகியவர் கைதொழ வெழுந்த, நஞ்சமுது செய்தவ னிருப்பிட நள்ளாறே—தேவாரம். அருளமுத முண்டு என்றற்கு: "உன்னி வானவ ரோதிய சிந்தையிற் கன்னறேன் கடவூரின் மயானத்தார்". "பாசமான களைவார் பரிவார்க்க முதமனையார் ஆசைதீரக் கொடுப்பா ரலங்கல் விடைமேல் வருவார்"—தேவாரம். "அருளை நுகர முதான துந்தேறார்"—திருமந்திரம், "ஊனினுள்ளுயிரை வாட்டி யுணர்வினார்க் கெளியராகி, வானினுள் வானவர்க்கு மறியலாகாதவஞ்சர், நானெனிற் றானேயென்னு ஞானத்தார் பத்தர்நெஞ்சுட், டேனுமின்னமுதுமானார் திருச்செம்பொன் பள்ளியாரே"—தேவாரம்.

94. அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட வருட்கடலே மன்றோங்கு மரசே யிந்நாள், கொடியனேன் செய்பிழையைத் திருவுள் ளத்தே கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ, நெடியனே முதற்கடவுட் சமுகத்தோர்தன் னெடும்பிழைக ளாயிரமும் பொறுத்து மாயை, ஒடியநேர் நின்றபெருங் கருணைவள்ள லெனமறைக ளோதுவதிங் குனைத்தா னன்றே.

(பதவுரை.) அடியனேன் - அடியேனுடைய, பிழையனைத்தும் - தவறுகண் முழுவதும், பொறுத்து - மன்னித்து, ஆள் கொண்ட - அடிமை யாக்கிக்கொண்ட, அருள் கடலே - கிருபா சமுத்திரமே, மன்று ஞானவெளியில், ஓங்கும் - மாட்சிமை பெற்றுள்ள, அரசே - தலைவனே, இ நாள் - இக்காலத்தில், கொடியனேன் - கொடியேன், செய்பிழையை - செய்தகுற்றங்களை, திருவுள்ளத்து ஏ - மனத்தின்கண், கொள்ளுதியோ - தவறாக மதித்திடுவாயோ, கொண்டு - ஒரு பெண்ணை மனைவியாக மணந்த பின்பு, குலம் குறிப்பது உண்டோ - அவள் குலத்தின் தாழ்வைக் குறிப்பது

உலகர் ஆசாரத்தினுள்ளதோ, நெடியன் ஏ முதல் - மாயவன் முதலாகிய, கடவுள் சமுகத்தோர் தம் - தேவர் கணத்தாருடைய, நெடு பிழைகள் - பெரிய குற்றங்கள், ஆயிரமும் - ஆயிரக்கணக்கான பலவற்றையும், பொறுத்து - பொறுத்தருளி, மாயை - மாயையானது, ஓடிய - அற்றப்போன வளவில், நேர் நின்ற - பிரத்தியக்ஷ தரிசனந் தந்த, பெரு கருணை வள்ளல் - பெருமையையுடைய அருள் வள்ளல், என - என்று, மறைகள் - வேதங்கள், ஓதுவது - புகழ்ந்து சொல்வது, இங்கு - இப்புவியில், உனை தான் அன்று ஏ - உன்னை யன்றோ; (எ - று.)—தான் - அசை, அன்றே, ஏ - வினா.

(விசேஷவுரை.) உயிர்கண் மாட்டுப் பேரருளுடையவர் மகாதேவராகலின், "பிழையனைத்தும் பொறுத்தாட்கொண்ட வருட் கடலே" என்றார். அன்று என் பிழை பொறுத்தாண்டநீ இன்று என் பிழையைக்கருதி முனிதல் உலக வழக்கிற்கு மாறுபட்டு முரணுவதென்பார். "இந்நாள் கொடியனேன் செய்பிழையைத் திரு வுள்ளத்தே கொள்ளுதியோ கொண்டுதலங் கூறிப்ப துண்டோ" என்றார். அறிவாலும், அதிகாரத்தாலும், வல்லபத்தாலும், பதவிகளாலும் உயர்ந்த தேவ சமுகத்தோர் பிழைகளெல்லாம் பொறுத்தருளி அவரை மயக்கிய மாயா மயக்கநீங்க காட்சி தந்தருளிய கருணை வள்ளலென வேதங்கள் புகழ்ந்து பேசுவதுன்னையே யன்றோ. என வினவியவினாவால், அறிவிலியும், உன் அதிகாரத்தமைந்து நடப்பவனும், வலியொன்றில்லானும், எளியானுமாகிய என்பிழையை மன்னித்து என்னை மயக்கும் ஆணவ காமிய மாயாமல மயக்கங்களறச்சேவை தந்தருளலாகாதோ என மற்றோர் வினாவை யெழுப்பி அருட் பிரசாதத்தின் அபேட்சையை விளக்குவதெனக் காண்க. மேற்கோள்:—அடியார் பிழை பொறுத்தருளும் பெருமான் எனற்கு: "மறந்தான் கருதிவலியை நினைந்துமாறு யெடுத்தான்றே, னிறந்தான் முரிய னெரியவூன்றி நிறைய வருள் செய்தார், திறந்தான்காட்டி யருளாயென்று தேவரவர்வேண்ட, அறந்தான்காட்டி யருளிச் செய்தா ரண்ணாமலையாரே"—"ஞானத்திரளாய் நின்றபெருமா னல்லடியார்மே, லூனத்திரளை நீக்குமதுவு முண்மைப்பொருள்போலு, மேனத்திரளோ டினமான்கரடி யிழியு மிரவின்கண், ஞானைத்திரள்வந் தணையுஞ்சார லண்ணாமலையாரே" தேவாரம்.

---

95. கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதிற் கருத்தறியாச் சிறுவனையோர் கடுங்கா னத்தே, உண்மயக்கங் கொளவிடுத்தே யொருவன் பின்போ மொருதாய் போன் மாயையிரு ளோங்கும் போதின், மண்மயக்கம் பெறும்விடயக் காட்டி லந்தோ மதியிலேன் மாழாந்து மயங்க நீதான், வண்மையுற்ற நியதியின்பின் னென்னைவிட்டே மறைந்தனையே பரமேநின் வண்மை யென்னே.

(பதவுரை.) கண் மயக்கும் - கண்களை மயக்குகின்ற, பேர் இருட்டு - மிக்க விருளையுடைய, கங்குல் போது இல் - இராப்பொழுதில், கருத்து அறியா - எண்ண மற்ற, சிறுவனை - பாலனை, ஓர் - ஒரு, கடுகானம் அத்து ஏ - கொடிய ஆரணியத்திலே, உள் மயக்கம் கொள - மனந்தடுமாற, விடுத்து ஏ - தனியனாகவிட்டே, ஒருவன் பின்போம் - ஒரு புருடன் பின்னே சென்ற, ஒரு தாய்போல் - ஒரு மாதாவைப்போல, மாயை இருள் ஓங்கும்போது இல் - மாயாமல விருண்மிக்க காலத்தில், மண் மயக்கம் பெறும் - பிரபஞ்ச மயக்கத்தைப் பெற்ற, விடயம் காடு இல் - விடயங்கள் நிரம்பிய பாசாடவியிலே, அந்தோ - ஐயோ, மதியிலேன் - அறிவிலியாகிய அடியேன், மாழாந்து மயங்க - திகைத்து மயங்கும்படி, வண்மையுற்ற - வளமை பொருந்திய, நியதியின் பின் - ஊழ்வினையின் பின், என்னை விட்டு ஏ - என்னை விடுத்தே, மறைந்தனையே - மறைந்தாயே, பரமே - மகாதேவனே, நின் - உன்னுடைய, வண்மை - அருட்பண்பு, என் - யாதோ (அறிகிலேன்); (எ - று.)—ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) பேரிருள் படர்ந்து கண் மயங்கச்செய்யும் இரவிலே தானீன்ற சிறுவனைத் தனியனாக விட்டுப் பரபுருடன் பின்சென்ற தாயின் செய்கையொப்ப, பரமே! நின் தனயனாகிய அறிவில்லாச் சிறியேனைப் பிரபஞ்ச மயக்கம்பெற்ற விடய நிரம்பிய பாசாடவியிலே, மாயை யிருளோங்கும் பொழுதிலே, ஊழ்வினையின் பின்

என்னை விடுத்து மறைந்தனையே நின் அருள் வண்மை இருந்தவா றென்னையோ, என்றித் திருவிருத்தத்தில் வினவிய வினாவினால், கானகத்துக் கைவிடப்பட்ட சிறுவன் தாய் சென்ற நெறியையும், சிங்கம் புலி யானை கரடி முதலிய துட்ட மிருகங்கட்கு விலகியுய்யு நெறியையும், காட்டை விட்டு நாட்டிற்சேரு நெறியையும் அறியாதவனாகி யுள்ளந் தடுமாறு நிற்பன்; அதுபோல மாயை யிருளோங்கிய இரவிற் பாசாடவியிலே மனம் புத்தி சித்தம் அகங்காரங்களாகிய அந்தக் கரணங்களும், சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிற விடயங்களும், என்னைத் தாக்கி வருத்த ஊழ்வினையின்பின் என்னை விடுத்து யான் பாசாடவியையும் மாயையிருளையும் ஊழ்வினையின் பெருவலியையுங் கடந்து நின்னைச் சேர்ந்துய்யு நெறியறியாது தியங்கி மயங்க விட்டுமறைவது தகுமோ, நின் அருளின் வண்மையீதோ, இஃது அருணீதிக்குப் பொருந்துவ தன்றாகும். மறைந்த நீயே நின்னை வெளிப்படுத்தி அருட்சேவை யளித்துப் புரத்தல் வேண்டும். இன்றென்னில் அடியேன் உய்யும்வகை எங்ஙனம் எனத்தன் மாட்டாமையையும் சுதந்தா வீனத்தையும், நூலாசிரியர் வெளியிட்டு முறையிட்டவாறு ஊகித்துணரக் கிடந்தமை காண்க. (மேற்கோள்) "ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர், தானங் காட்டுவர் தம்மடைந்தார்க் கெலாம், தானங் காட்டித் தன்றாளடைந்தார் கட்கு, வானங் காட்டுவர்போய் வன்னி யூரரே". "வரைகிலேன் புலன்களைந்தும் வரைகிலாப் பிறவி மாயப், புரையிலே யடங்கி நின்று புறப்படு வழியுங் காணேன், அரையிலே மிளிருநாகத் தண்ணலே யஞ்சலென்னாய், திரையுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சுரத்துளானே." "தொண்டனேன் பிறந்து வாளா தொல்வினைக் குழியில் வீழ்ந்து, பிண்டமே சுமந்து நைந்து போவதோர் வழியுங்காணேன், தெண்டிரைப் பழனஞ்சூழ்ந்த திருக்கொண்டீச் சுரத்துளானே."—தேவாரம். "இங்ஙனம்வந் திடர்ப் பிறவிப் பிறந்தயர்வே னயராமே, அங்ஙனம் வந்தெனையாண் டருமருந் தெனாரமுதை, வெங்கனையா மேனியனை மான்மருவுங் கையானை, யெங்ஙனநான் பிரிந்திருக்கேன் னென்னுடைய ரிறைவனையே"—தேவாரம். "ஊழிற் பெருவலியா வுளமற்றொன் றசூழினுந் தான் முந்துறும்". "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"—திருக்குறள். இத்திரு விருத்தங்களும் பிறவும், மண் மயக்கம் பெறும் விடயக் காட்டிலந்தோ மதியிலேன் மாழாந்து மயங்க நீதான் வண்மையுற்ற நியதியின்பின் என்னைவிட்டே மறைந்தனையே பரமேநின் வண்மை என்னே" என்னும் இரண்டடிகளினுட் பொருளுடன் ஒப்பு நோக்கத்தக்கவை யாம்.

96. நற்றாயும் பிழை குறிக்கக் கண்டோ மிந்த நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே, பற்றாயு மவர்தமைநாம் பற்றோம் பற்றிற் பற்றாத பற்றுடையார் பற்றியுள்ளே, உற்றாயுஞ் சிவபெருமான் கருணை யொன்றே யுறுபிழைக ளெத்துணையும் பொறுப்ப தென்றுன், பொற்றாளை விரும்பியது மன்று ளாடும் பொருளேயென் பிழையனைத்தும் பொறுக்க வன்றே.

(பதவுரை.) நல் தாய் உம்-ஈன்றெடுத்தமாதாவும், இந்த நால் நிலத்தில் - இந்த வுலகின்கண், பிழை குறிக்க கண்டோம், மக்கள் செய்யும் பிழைகளைக் கவனிக்கப் பார்த்தோம் (அங்ஙனமாயின்), மற்றவர்யார் - யாவர் பிறர், நாடார் - பிழைகளைக் குறியாதவர், வீணே - வீணாக, அவர்தமை - அத்தகையோரை, பற்றாயும் - பற்றுக் கோடாகவும், நாம் - யாம், பற்றோம் - பிடிக்கமாட்டோம், பற்றில் - பிரபஞ்சப் பற்றினுள் கூடியிருந்தும், பற்றாத - அவை தம்மைத் தாக்காத, பற்று உடையார் - பற்றினையுடையார், பற்றி - உயிர்களைப்பற்றி நின்றே, உள்ளே - உள்ளங்க டோறும், உற்று - பொருந்தி, ஆயும் - அன்பாது குணங்களையாய்கின்ற, சிவபெருமான் கருணை ஒன்றே - சிவபதியின் திருவருள் ஒன்றே, உறு பிழைகள் - மிக்க குற்றங்கள், எத்துணையும் - எவ்வளவும், பொறுப்பது என்று - மன்னித் தருள்வதென்று, உன் - உனது, பொன் தாளை - பொன் போலுந் திருவடிகளை, விரும்பியது - நேசித்தவாறு, மன்று உள் - சிற்சபையுள், ஆடும் - நிருத்தம்புரிகின்ற, பொருளே - நடராச குருமணியே, என்பிழை அனைத்தும் - என்பிழைகள் முழுதும், பொறுக்க என்று ஏ - மன்னித்தருளவன்றோ; (எ - று.)

(விசேஷவுரை.) தாயேயாயினும் மக்கள் பிழையை அளவு கடக்கக்காணின் சகிப்பதின்றி அருவருத்துத் தண்டஞ்செய்வள் எனிற்பிழையைப் பொறுக்கும் பொறுமையுடையவர் உலகத்தில் யாருளர் என்பார், "நற்றாயும் பிழை குறிக்கக்கண்டோ மிந்த நானிலத்தே மற்றவர் யார் நாடார்" என்றார்; எல்லாப் பொருள்களையும் பற்றி நின்ற போதிலும் ஆகாசம்போலச் சிறிதுந் தாக்கற்றிருத்தலால், "பற்றிற் பற்றாத பற்றுடையார்" என்றார். உயிருடன் பிரிவின்றிக் கலந்து நிற்கும் ஆதாரப் பொருளாகவும், உள்ளந்தோறுந் தாக்கற நின்று நிகழும் சங்கற்பங்கள் முழுவதுங் காணுஞ் சர்வ சாட்சியாயுமிருத்தலிற் "பற்றுடையார் பற்றியுள்ளே யுற்றாயுஞ் சிவபெருமான்" என்று கூறினார். உலகத்தவர் நற்றாய் முதலாகவுள்ள நரர்பால் எவ்வளவு அன்பு செயினும் அவர் பிழைகாணு மியல்பினராகி வெறுப்பர், உயிர்க்குயிராகிய சிவபிரான் திருவருளை அன்பர் செய்யும் பிழையைப் பாராட்டாத பெருங்கருணையுடையதெனத் திருவடிக்கு யான் அன்பு செய்யப்புகுந்தனன், பிழைகளை மன்னித்தருள்வதன் பொருட்டல்லவோ வென விண்ணப்பஞ்செய்தும் மன்றுளாடு நடனநாயகனைப் பிரார்த்தித்தமை தோன்ற, "உன் பொற்றாளை விரும்பியது மன்றுளாடும் பொருளே யென் பிழை யனைத்தும் பொறுக்கவன்றோ" என்றார். சிவபெருமான் உயிர்களின் உட்பற்றாயுள்ளவ ரென்பதற்கு மேற்கோள்: "பற்றியது தானும்படிக்கீ பற்றைவிட, பற்றை யெதிரிட்டுப் பார்த்தாலென்—சற்றும், பிரியாச்சிவனைப் பதித்தறியத் தேடும், அறியாமை காணுணவும்"—(ஒழுவி லொடுக்கம்.) அடியார்பிழை பொறுத்தற்கு மேற்கோள். "அகத்தடிமை செய்யுமந் தணன்றான் அரிசிற் புனல்கொண்டு வந்தாட்டுகின்றான், மிகத்தளர் வெய்திக்குடத்தை யுநம்முடி மேல் விழுத்திட்டு நடுங்குதலும், வருத்தவனுக்கு நித்தற்படியும் வருமென்றொரு காசினைநின்ற நன்றிப், புகழ்த்துணை கைப்புகச் செய்து கந்நீர் பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே"—(தேவாரம்.)

—o—

97 எண்ணியநம் மெண்ணமெலா முடிப்பான் மன்று ளெம்பெருமா னென்று மகிழ்ந் திறுமாந் திங்கே, நண்ணியமற் றையர்தம்மை யுறாமை பேசி நன்குமதி யாதிருந்த நாயி னேனைத், தண்ணியநல் லருட்கடலே மன்றி லின்பத் தாண்டவஞ் செய் கின்றபெருந் தகையே யெங்கள், புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயிற் பொய்யனே னெங்குற்றென் புரிவே னந்தோ.

(பதவுரை.) மன்றுள் - சிற்சபையின் மேவும், எம்பெருமான் - எமது கடவுள்; எண்ணிய - கருதிய, நம் எண்ணம் எல்லாம் - நமது கருத்து முற்றும், முடிப்பான் என்று - முடித்தருள்வானென்று, மகிழ்ந்து - களித்து, இறுமாந்து - தருக்குற்று, இங்கு ஏ - இப்புவியிலே, நண்ணிய - பொருந்திவாழ்கிற, மற்றையர் தம்மை - பிற மனிதர்களை, உறாமைபேசி - இழிவு கூறி, நன்கு மதியாது - நன்றாக மதித்தலின்றி, இருந்த - இருந்த, நாயினேனை - நாய் அனைய என்னை, தண்ணிய - குளிர்ந்த, அருள் கடல் ஏ - நல்ல கருணாம்பதியே, மன்று இல் - வெளியில், தாண்டவம் செய் - திருக்கூத்தாடுகின்ற, பெருந்தகையே - பெருமைக் குணமுடைய நடராச மூர்த்தியே, எங்கள் - எம்முடைய, புண்ணியனே - தரும சொரூபியே, பிழை குறித்து - என் பிழையை நோக்கி, விடுத்தி ஆயில் - கை விடுவாயெனில், பொய்யனேன் - பொய்ந்நடையுடையேன், எங்கு உற்று - எவ்விடஞ் சென்று, என் புரிவேன் - யாது செய்வேன்; (எ - று.)—அந்தோ - அந்தோ.

(விசேஷவுரை.) எல்லாஞ் செய்யவல்ல முடிவில் ஆற்றலுடையானாகலான், "எண்ணிய நம் மெண்ணமெலா முடிப்பான் மன்று ளெம்பெருமான்" என்றதென்க. சிவபெருமானொருவர் நீங்க ஏனையவரைப் பொருளாக மதியாதிகழ்ந்த என் பிழையைக் குறித்துக் கைவிடுதி யென்னில், எங்குச்சென்று பொய்யனேன் என் செய்வேன் என்றவாற்றாற் பிழைகளனைத்தும் பொறுத்தருளிக் கைவிடாமல் ஆண்டுகொண்டு என் எண்ணங்களை முடித்தருள வேண்டுமென மகாதேவருக்கு விண்ணப்பஞ்செய்து பிரார்த்தித் தாராயினார். பிறரைமதியா தவமதித்தமைக்கு: மேற்கோள் "திருவுமெய்ப் பொருளுஞ்செல்வ முமெனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி,

யொருவரை மதியா தருமைகள் செய்து மூடியு மூறைப்பனும்த் திரிவேன், முருகமர் சோலைசூழ் திருமுல்லை வாயிலாய் வாயினு லுன்னைப், பரவிடுமடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே". பிழை பொருத்தருளற்கு மேற்கோள்: "மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக், குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையான் மிகைபல செய்தேன், செற்றுமீ தோடு திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலா யடியேன், பற்றிலே னுற்ற படுதுயர் களையாய் பாசுபதா பரஞ் சுடரே.

98. அன்பர்திரு வுளங்கோயி லாகக் கொண்டே யற்புதச்சிற் சபையோங்கு மரசே யிங்கு, வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து மறைந்தனையே யானந்த வடிவோய் நின்னைத் துன்பவடி வுடைப்பிறரிற் பிரித்து மேலோர் துரியவடி வினனென்று சொன்ன வெல்லாம், இன்பவடி வடைந்தன்றே யெந்தா யந்தோ வென்னள வென் சொல்கேனிவ் வேழை யேனே.

(பதவுரை.) அன்பர் திரு உளம் - அடியாருடைய அழகிய மனத்தை, கோயில் ஆக கொண்டு - ஆலயமாக்கிக் கொண்டு, அற்புதம் - அதிசயமுடைய, சிற்சபை ஓங்கும் - சிற் சபையினுள் விளங்குகின்ற, அரசே - நடராசனே, ஆனந்தம் வடிவோய் - ஆனந்த சொரூபமுடையவனே, இங்கு - இவ்வுலகில், வன்பர் இடை - மனக்கடுமை யுடையோரிடத்தில், மயங்க - மயங்கும்படி, சிறியேனை - சிறியேனை, வைத்து - தங்கியிருக்கவிட்டு, மறைந்தனையே - திருவுருவங் கரந்தாயே, நின்னை - உன்னை, துன்பம் வடிவு உடை - துக்கத்துக்கேதுவான சகல வடிவுடைய, பிறர் இல் - மற்றைத் தேவர்களினின்று, பிரித்து - வேறு படுத்தி, மேலோர் - பெரியோர், துரிய வடிவினன் என்று - துரிய மூர்த்தியென்று, சொன்ன எல்லாம் - சொன்ன சொற்கள் முழுவதும், இன்பம் வடிவு அடைந்து அன்று ஏ - ஆனந்த சொரூபத்தை யடைந்த போதல்லவோ, எந்தாய் அந்தோ இ ஏழையேன் - இந்த வெளியேன், என் அளவு - என்னனுபவ வளவிற்கு, என் சொல்கேன் - யாது சொல்வேன்; (எ - று.)—ஏ - தேற்றம், ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) திருச்சிற்றம்பலத்தரசாகி யெவ்விடத்தும் அடியாருள்ளத்துக் கோயில்கொண்டவ னென்பார், "அன்பர் திருவுளங் கோயிலாகக்கொண்டே யற்புதச் சிற்சபை யோங்குமரசே" எனவும், உண்மை அடியர் திருக்கூட்டத்திற் சேர்த்து வைத்துத் தெளிவடையச் செய்யாது ஒளித்தாய் என்பர், "இங்கு வன்பரிடைச் சிறியேனை மயங்கவைத்து மறைந்தனையே" எனவும் கூறினர். பிரமன் விட்டுணு முதலிய தேவர்கள் துன்ப வடிவுடைய தேவரென மேலோர் கருதி அவர்களினின்று நின்னைத் துரிய சொரூபி யெனப் பிரித்தது தம் அனுபவத்தில் இன்ப வடிவமடைந்த போதன்றோ, எனக்கு அவ்வின்பவனுபவம் அருளுவையாயின் யானும் அன்னோர்போலக் கூறுகிற்பன், அவ்வனுபவம் இன்னும் கைகூடாதிருத்தலின் என்னென்று யான் கூறுவன் என்று உயர் ஞானனுபவ அபேட்சையுடன் பிரார்த்தித்தார். அன்பர் திருவுளங் கோயிலாக்கொண்டவன் என்றதற்கு:—"சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கணோக்கிற் றுளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப், பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே"—தேவாரம். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும், இலங்கு முயிருடலனைத்து மீசன்கோயில்" என்றார் பிறரும். "கடியேன் காதன்மையாற் கழற்போ தறியாதவென்னுட், குடியாக்கோயில் கொண்ட குளிர்வார் சடையெங் குழகா, முடியால் வானவர்கண் முயங்குந் திருக்காளத்தியாய், அடியேனுன்னை யல்லா லறியேன் மற்றொரு வரையே"—தேவாரம்.

99. புற்றேங்கு மரவமெல்லாம் பணியாக் கொண்டு பொன்மேனி தனிலணிந்த பொருளே மாயை, உற்றோங்கும் வஞ்சமனக் கள்வ னேனை யுளங்கொண்டு பணி கொள்வ துனக்கே யொக்கும், மற்றோங்கு மலரெல்லாம் பெருமை வேண்டும் வன்மனத்த ரெனைவேண்டார் வள்ளலே நான், கற்றோங்கு மறிவறியேன் பலவாச் சொல்லுங் கருத்தறியே னெனக்கருளக் கருது வாயே.

(பதவுரை.) புற்று ஓங்கும் - புற்றிலுள்ள, அரவம் எல்லாம் - பாம்புகள் எல்லாவற்றையும், பணி ஆ கொண்டு - ஆபரணமாகக் கொண்டு, பொன் மேனி தனில் - பொன்னொக்குந் திருமேனிமேல், அணிந்த - தரித்த, பொருளே - கடவுளே, மாயை உற்று ஓங்கும் - மாயை பொருந்தி வளர்கின்ற, வஞ்சம் - கொடுமை யுடைய மனம் கள்வனேனை - கள்ள மனத்தையுடைய வென்னை, உளம் கொண்டு - திருவுள்ளத் திரக்கமுற்று, பணி கொள்வது - அடிமை கொள்வது உனக்கு ஏ ஒக்கும் - உனக்கே பொருந்துவதாம், மற்று ஓங்கும் அவர் எல்லாம் - உயர்வுடைய மற்றத் தேவர்களாயினோர், பெருமை வேண்டும் வல் மனத்தர் - பெருமையை விரும்புகின்ற வலிய மனசுடையவர்கள், எனை வேண்டார் - அடியேனை விரும்பார்கள், வள்ளலே - வரையாது கொடுக்கும் கொடையாளனே, நான் - யான், கற்று ஓங்கும் - பல கல்வி நூல்களைப் படித்துயர்ந்த, அறிவு அறியேன் - ஞானமில்லேன், பலவா - பல விதங்களாக, சொல்லும் - எடுத்துக் கூறும், கருத்து அறியேன் - கருத்தமைந் துரைக்கும்வல்லபமில்லேன், எனக்கு அருள - எனக்குக் கிருபை செய்யும் வண்ணம், கருதுவாய் - திருவுள்ளங் கொண்டருளுக; (எ - று.)—ஏ - ஈற்றசை.

(விசேஷவுரை.) நஞ்சுடைமை தானறிந்து நாகங்கரந்துறைவ தென்பார், "புற்றேங்கும் அரவமெல்லாம்" எனவும், நாகத்தின் நஞ்சு தன்னைக்கொல்ல வல்ல தன்றாகலான் அணிகலனாக விரும்பிப்புனைந்தா யென்பார், "பணியாக்கொண்டு பொன்மேனி தனிலணிந்த பொருளே" எனவும், யானு நாகம்போலத் தனித்துக் கரந்துறையும் கொடியேன், அது நஞ்சமுடைமைபோல யானும் அகத்து வஞ்சமாகிய தீக்குணமுடையேன், அது பிறருக்குத் தீங்கியற்ற வல்லது, யானும் அவ்வாறே தீ திழைக்க வல்லவன், ஆயினும் தீயகுணமும் நஞ்சமும் உடைய நாகத்தை யணிகலமாக நீ தரித்துக்கொண்டருளும் தன்மையால் என்னை யாளத்தக்கவன் நீயே யாவன் நினக்கே யென்னைப் பணிகொள்வது தகும் என்பார், "மாயையுற்றோங்கு வஞ்ச மனக்கள்வனேனை யுளங்கொண்டு பணிகொள்வ துனக்கே யொக்கும்" எனவும் கூறினார். இந்திரன், பிரமன் மால் முதலியோ ரென்பார், "மற்றோங்கு மவரெல் லாம்" என்றார். அவரது பெருமைக் கோலத்துக்கேற்றபடி அடியாரது பெருமை பாராட்டி விரும்பி யாளவல்லவர், என் சிறுமைகண்டு என்னை விரும்பார் என்பார், "பெருமை வேண்டும் வன் மனத்தரெனை வேண்டார்" என்றார். 'வள்ளலே' என விளித்தது, பெருமான் எல்லா வுயிர்மாட்டும் வரையா தருள் வைத்தருளும் வண்மை மிக்கவன் என்பது நோக்கி யென்க, வஞ்சமுதலிய தீக்குணங்க ளொன்னிடத் துண்மையான் ஞான நூல்களைக் கற்ற அறிவில்லே னென்பார், "கற்றோங்கு மறிவறி யேன்" எனவும் அதனால், "பலவாச் சொல்லுங் கருத்தறியேன்" எனவும், என்னைப் பணிகொண்டருளல் வேண்டு மென்பார், "எனக்கருளக் கருதுவாயே" எனவுங் கூறினார்: மேற்கோள் "புற்றாடரவ மரையார்த் துகந்தாய் புனிதா பொருவெள் விடையூர் தியினை, யெற்றே யொருகண்ணில னின்னை யல்லா னெல்வாயி லரத்துறை நின்மலனே, மற்றேயொரு பற்றிலனெம் பெருமான் வண்டார் குழலாள் மங்கை பங்கினனே, அற்றார்பிறவிக் கடனீந்தியேறி யடியேனுய்யப் போவதோர் சூழல் சொல்லே—(தேவாரம்). இத்திருவிருத்தம் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாம்.

---

**100.** அருளுடைய பரம்பொருளே மன்றி லாடு மானந்தப் பெருவாழ்வே யன்பு ளோர்தந், தெருளுடைய வுளமுழுதுங் கோயில் கொண்ட சிவமேமெய் யறிவுருவாந் தெய்வ மேயிம், மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய் வன்பிழையைச் சிறிதேனு மதித்தி யாயில், இருளுடைய பவக்கடல்விட் டேறே னென்னை யேற்றுவதற் கெண்ணுகவென் னின்பத் தேவே.

(பதவுரை.) அருள் உடைய - எல்லார்க்கும் பாசத்தளையை யறுக்க அருளை(ப் பொதுவாக) உடைய, பரம் பொருள் ஏ - மேலாகிய பொருளே, மன்று இல் - சிதம்பரத்தில், ஆடும் - நடம்புரியும், ஆனந்தம் - பேரின்பத்தையுடைய, பெரு வாழ்வு ஏ - அகண்டவாழ் வுடையவனே, அன்பு உளோர் தம் - அன்பு உள்ளவர்களுடைய,

தெருள் உடைய - தெளிவு படைத்த, உளம் முழுதும் - இருதயமுழுதும், கோயில் கொண்ட - ஆலயமாகக் கொண்ட, சிவமே - சிவமே, மெய் அறிவு உருவு ஆம் - சத்திய ஞான ரூபி யாகின்ற, தெய்வம் ஏ - கடவுளே, இ - இந்த, மருள் உடைய - பிரபஞ்சமருளையுடைய, மனம் பேதை - மனத்தையுடைய அறிவற்ற, நாயினேன் - நாயனையேன், செய் - செய்கின்ற, வல் பிழையை - கொடிய குற்றத்தை, சிறிது எனும் - சிறிய அளவாயினும், மதித்தி ஆயில் - நோக்குவா யென்னில், இருள் உடைய பவம் கடல்விட்டு ஏறேன் - அஞ்ஞானமுடைய பிறவியாகிய சமுத்திரத் தினின்று கரையேற மாட்டேன், என் - எனது, இன்பம் தேவே - பேரின்ப சொரூபி யாகிய மகாதேவனே, என்னை - அடியேனை, ஏற்றுவதற்கு - முத்திக்கரையிலேற்று வதற்கு, எண்ணுக - திருவுள்ளஞ் செய்வாயாக; (எ - று.)

(விசேஷவுரை.) சூரிய கிரணம்போல எல்லா வுலகிலும் விளங்கி விளக்கும் திருவருளை யுடையான் ஆகலான், "அருளுடைய பரம்பொருளே" எனவும், எல்லா வுயிர்களும் தனது பஞ்சகிர்த்திய நாடகத்தின் வழி நின்று ஆடும்படி ஆட்டுவிக்கும் அம்பலத்தி லாடுகின்ற ஞான நடனானந்த, அகண்ட நித்திய வாழ்வாயுள்ள வனாதலின், "மன்றிலாடு மானந்தப் பெருவாழ்வே" என்றும், அன்பில்லா ரதிருண்ட மனத்தி லெழுந்தருளா னாகலான், "அன்புளோர் தந் தெருளுடைய வுளமுழுதுங் கோயில் கொண்ட சிவமே" என்றும், அறிவல்லது பிறிதொரு வடிவில்லா னாதலின், "மெய் யறிவுருவாந் தெய்வமே" எனவும், என் பிழையைக் குறிப்பதுண்டேல் யான் பிறவிக்கரை நீந்தி முத்திக்கரை யேற வழியிலே னென்பார், "மருளுடைய மனப் பேதை நாயினேன் செய் வன் பிழையைச் சிறிதேனு மதித்தியாயி லிருளுடைய பவக் கடல்விட் டேறேன்" என்றும், உய்விக்கத் திருவுளம் புரிக வென்பார், "ஏற்று வதற் கெண்ணுகவென் னின்பத் தேவே" எனவுங் கூறினார். (மேற்கோள்.) பாசத்தளையை யறுக்கும் அருளுடையான் என்பதற்கு:—"விளையாத தோர் பரிசில் வரு பசுபாசவேதனையொண், டளையாயின தவிரவ் வருள் தலைவன்னது சார்பாம் களையார்தரு கதிரா யிரம் உடையவ் வவனோடு, முளைமாமதி தவழும் உயர் முதுகுன் றடைவோமே". அன்புள்ளோர் திருவுள்ளங்கோயில் கொண்டதற்கு: "முன்னேயெம் பெருமானை மறந்தென் கொல் மறவா தொழிந்தென் கொல் மறவாத சிந்தையால் வாழ்வேன், பொன்னே நன்மணியே வெண்முத்தே செம்பவளக் குன்றமே யீசனென் றுன்னையே புகழ்வேன், அன்னே யென்னத்தா வென்றமரரா லமரப்படுவானை யதிகைமா நகருள் வாழ்பவனை, என்னே யென்னெறி கெடில வடவீரட்டானத் துறை வானை யிறைபோது மிகழ்வன் போலியானே"—(தேவாரம்). "தன்மையினா லடி யேனைத் தாமாட் கொண்ட நாட்சபை முன், வன்மைகள்பேசிட வன்றொண்ட னென்பதோர் வாழ்வு தந்தார், புன்மைகள்பேசவும் பொன்னைத்தந் தென்னைப் போகம் புணர்த்த, நன்மையினார்க் கிடமாவது நந்திரு நாவலூரே"—(தேவாரம்) "அறிவுரு வாந் தெய்வம்" என்பதற்கு: "அறிவித்தாலன்றி யறியாய்நீ யென்றுன், மறவைக் கதுவே மருந்தா—மறியவெனில், ஆகாய மெய்யவைத்த வம்பா மறிவெனிறு, மாகாய வாக்கா மது." "காணுமறிவுநீ காட்டறிவு நாம்" ஒழுவிலொடுக்கம்: "நெறியே நின் றடியார் நினைக்குந் திருக்காளத்தியாய் அறிவே யுன்னை யல்லாலறிந் தேத்த மாட் டேனே."

திருச்சிற்றம்பலம்.

மகாதேவர் மலரடிவாழ்க.

அருட்பெருஞ்ஜோதி—தனிப்பெருங்கருணை.

சுக்லகலா பிரஸ், 8, முதலிகிருஷ்ணன் தெரு, சென்னை.

உ

அருட்பெருஞ்ஜோதி

# சங்கப்பதிப்புகளின்

## அடக்கவிலை விவரம்

# திரு அருட்பா முழுப்புத்தகம்

2-வால்யும் காலிகோ பைண்ட் உயர்ந்த கடிதத்தில் சுத்தப் பதிப்பாக எளியநடையில் அச்சிட்டுவருகிறோம். புரட்டாசி சித்திரை நக்ஷத்திரத்தில் புத்தகம் வெளிவரும். இதற்குள்சேருவோருக்கு விலை ரூ-5. அதன் பிறகு விலை ரூ-10 ஆகும்.

## திரு அருட்பா மூலமும் - உரையும்

ஸ்ரீமத் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளியற்றிய திருவருட்பாவின் முதற்றிருமுறையில் வேதாந்த சித்தாந்த உபநிஷத்துக்களின் பொருளடங்கிய ஜீவகாருண்ய ஒழுக்கம், திருவடிப்புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மகாதேவமாலை இவற்றிற்கு மகாவித்வான் சித்தாந்த ரத்நாகரம் - ஸ்ரீலஸ்ரீ அரன்வாயல்-வேங்கடசுப்புப்பிள்ளை அவர்களைக்கொண்டு எழுதிய விருத்தியுரை. இதற்கு திருமந்திரம், தேவார திருவாசகங்கள், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருக்களிற்றுப்படியார், வேதோபநிஷத்துக்கள் முதலிய சாஸ்திரங்கள் பிரமாணமாகக் காட்டியுள்ளது. அன்பர்கள் எல்லோரும் மகிழும்படியான அருமையான உரை. 384-பக்கம் .... .... .... .... விலை ரூ. 1.

மகாதேவமாலை மூலமும் ஷையார் எழுதிய விருத்தியுரையும் ... அணா. 8.

1. ஜீவகாருண்ய ஒழுக்கம், 2. திருவடிப்புகழ்ச்சி, 3. விண்ணப்பக் கலிவெண்பா, 4. நெஞ்சறிவுறுத்தல், 5. சிவநேசவெண்பா இவற்றிற்கு ஷையார் எழுதிய விருத்தியுரை. ... ... ... ... ... அணா. 8

திரு அருட்பா நெஞ்சறிவுறுத்தல் மூலமும் ஷையார் எழுதிய விருத்தியுரையும் ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டிய நூல்.... ... ... அணா. 4.

சிவநேச வெண்பா மூலமும் ஷையார் எழுதிய உரையும். ... ... அணா. 2.

இங்கிதமாலை மூலமும் மகாவித்வான் காஞ்சீபுரம் இராமசாமி நாயுடு அவர்கள் எழுதிய உரையும் வாசிக்க வாசிக்க மனோத்ஸாகத்தைத் தரும்படியான அருமையான உரை.... ... ... ... ... .... ... அணா. 4.

திரு அருட்பா திரு ஆயிரம் இரண்டாம்பதிப்பு.... ... ... அணா. 2.

மகாதேவமாலை மூலம். ... ... ... ... ... அணா. 1.

விலாசம்:— சென்னைச் சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,
36. சாமிப்பிள்ளை தெரு, சூளை, சென்னை.

---

குறிப்பு:—சங்கநிலயத்தில் பிரதி குருவாரமும் காலையில் ஏழைகளுக்கு ஆகாரமளித்தலும், மாலையில்திருவருட்பா பாராயணமும், பிரதி சுக்ரவாரந்தோறும் இரவில் திரு ஒற்றியூரில் திருவருட்பா பாராயணமும், பிரதி சோமவாரந்தோறும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சபாமண்டபத்தில் பாராயணமும் நடந்துக்கொண்டு வருகிறது. இத்துடன் ஜீவகாருண்ய பிரசாரங்களும், திருவருட்பாத்திரட்டுப் புத்தகங்களும் சிறுசிறு பாகங்களாக அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இப்புத்தகங்களின் விற்பனையில்வரும் பணம் முழுதும் ஏழைகளுக்கு ஆகாரமிடவும், திருவருட்பாவைப் பதிப்பிக்கவும் உபயோகப்படுவது அன்பர்கள் அறிந்ததே. சகோதரர்கள் முன்வந்து உழைக்கவேண்டுகிறோம்.

உமாபதி பிரஸ், மதராஸ்.